# ஆண்டறிக்கையும், கணக்குகளும்

# 2007

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி,
அபிவிருத்தி முகாமை
காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15.

RA-045

# ஆண்டறிக்கையும், கணக்குகளும்

# 2007

LIBRARY
&
INFORMATION DIVISION
18 FEB 2010
NARA

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி,
அபிவிருத்தி முகாமை
காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15.

# 2007ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையும், கணக்குகளும்

## பொருளடக்கம்

**பிரிவு** **பக்க இல.**

பொது நிருவாகம்........................................................................................................ 01

சூழல் ஆய்வுகள் பிரிவு........................................................................................................ 13

மீன்பிடித்தொழில்நுட்பப் பிரிவு........................................................................................................ 18

நீர்நிலையவியல் பிரிவு - தேசிய நீர்நிலையவியல் அலுவலகம் ........................................ 20

உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல் விருத்திப் பிரிவு........................................................ 22

தகவல் தொழில்நுட்பப் பிரிவு........................................................................................................ 44

நூலக, தகவல் பிரிவு........................................................................................................ 47

கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு........................................................................................ 49

சமுத்திரவியல் பிரிவு........................................................................................................ 56

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவு........................................................................ 64

சமூக-பொருளாதார, சந்தை ஆராய்ச்சிப் பிரிவு........................................................................ 71

சேவை, தொழிற்பாடுகள் பிரிவு........................................................................................ 74

கொள்வனவு, விநியோகங்கள் பிரிவு........................................................................................ 79

வருடாந்த நிதிசார் கூற்றுக்கள்........................................................................................ 80

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் பதில்........................................

## பொது நிருவாகம்

இலங்கையில் நீரியல் வளங்களின் விடயம் பற்றி ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள பிரதான தேசிய நிறுவனமாக தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை ('நாரா') விளங்குகின்றது. மீன்பிடி திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவை மீள்சீரமைப்பதன் மூலம் 1981இல் 'நாரா' தாபிக்கப்பட்டது. ஒன்றிணைப்பு நடைமுறையின் போது 1981இன் 54ஆம் இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமைச் சட்டம் மற்றும் பின்னர் திருத்தப்பட்ட 1996இன் 32இலக்க தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமைச் சட்டம் ஆகிய பாராளுமன்றச் சட்டத்தின் கீழ், முழுமையான ஆராய்ச்சி முகாமையாக மட்டக்குளிய, காக்கைதீவில் 'நாரா'வின் தற்போதைய இடப்பரப்பில் நிலவும் மீன் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றிணைக்கப்பட்டது. மீன்பிடி, சமுத்திர வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியதியாக்க உறுப்பொன்றாக 'நாரா' தொழிற்படுகின்றது.

## எமது நோக்கு

பிராந்தியத்தில் நீரியல் வளங்களின் பேணல், முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றில் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான பிரதான நிறுவனமாக விளங்குதல்

## எமது செயற்பணி

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வள தளத்தைப் பயன்படுத்தி நீரியல் துறையில் தேசிய அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கு புதுமாற்றத்திலான தீர்வுகளை வழங்குதல்

முகாமையின் பிரதான நோக்கங்களும், தொழிற்பாடுகளும் வருமாறு:

- தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் அமுலாக்கத்திற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் பிரயோகத்தையும், பயன்படுத்தலையும் உறுதிப்படுத்தல்
- நீரியல் வளங்களின் இனங்காட்டல், மதிப்பீடு, முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நோக்கிய ஆராய்ச்சிச் செயற்பாடுகளை மேம்படுத்தலும், நடத்துதலும்
- வாழும் மற்றும் வாழாத சுரண்டல், முகாமைத்துவம், மற்றும் அபிவிருத்தி ஆகியன தொடர்பிலான விடயங்கள் மீது ஆலோசனை மற்றும் உசாவுகைச் சேவைகளை ஒன்றிணைத்தலும், வழங்குதலும்
- தகவலைச் சேகரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றைப் பொறுப்பேற்றல்
- பயிற்சியை வழங்குதல்

## 1. தாபனரீதியான கட்டமைப்பு



## 2. பொதுவான செயற்றிறன்

2007ஆம் ஆண்டு 'நாரா'வுக்கு கஷ்டமான ஆண்டாகக் கருதப்பட முடியும். சுனாமியின் அழிவினதும், அதன் பின்னர் இடம்பெற்ற பெருமளவு சூறாவளியினதும் பின்னர் மீள்நிருமாணங்களைக் கொண்ட ஆண்டாகவே இது விளங்கியது. சமுத்திரத்திற்கு கிட்டியதாக அமைந்துள்ளதனால், இக் காலத்தின் போது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு கணிசமானளவு சேதமொன்று விளைந்தது. எனவே, 2007ஆம் ஆண்டிலும் கூட செயற்றிறன் இதன் பிரகாரம் நோக்கப்பட வேண்டும்.

இத்தகைய சகல கஷ்டங்கள் இருந்த போதிலும், 2007ஆம் ஆண்டின் போது நிதிசார் மற்றும் பௌதீக செயற்றிறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று இருந்தது.

எடுக்கப்பட்ட கடுமையான முகாமைத்துவ நடவடிக்கைகளினால் அனுகூலமான முடிவுகளை வழங்க இயலுமாகவிருந்தது. இறுதிக் கணக்குகளின்படி மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டின் போது நிதிசார் முடிவில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலொன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டுக்கான நிதிசார் பற்றாக்குறை முன்னைய ஆண்டுக்கான ரூபா 95,402,909.00க்கு எதிராக ரூபா 106,748,390.03 மட்டுமேயாகும். இது பெரிதுமே சகல உள்ளீடுகளிலும் ஆகுசெலவுகளின் துரிதமான அதிகரிப்பையும், தனிப்பட்ட வேதனாதிகளின் 105% அதிகரிப்பு இருந்த போதிலும் 1.4% கொண்ட சிறிய அதிகரிப்பையும் மட்டுமே கொண்டிருந்தது. ஆண்டுக்கான சுய வருமானத்தில் குறிப்பிடத்தக்க மேம்படுத்தல்கள் இருந்திருக்காவிட்டால் பற்றாக்குறை இன்னும் உயர்வாகவே இருந்திருக்கும். ரூபா 8 மில்லியன் கொண்ட இலக்குக்கு எதிராக சுய வருமானமாக ரூபா 20.4 மில்லியனை எம்மால் தோற்றுவிக்கக்கூடியதாகவிருந்தது.

மதிப்பாய்வின் கீழுள்ள காலத்தின் போது நிதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகளும், நிதிசார் ஒழுக்காறின் பராமரிப்புமே மேம்படுத்தலுக்கான காரணமாகும். நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

அ) கொள்வனவை மையப்படுத்தியமையும், ஒளிவுமறைவற்ற கொள்வனவு வழிகாட்டல்களை ஏற்றுக்கொண்டமையும்
ஆ) வாகனக் கேள்வு முறைமையை இடைநிறுத்தியமையும், அதன் சொந்த வாகனங்களின் உபயோகத்தை உச்சமாக்கியமையும்.
இ) ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிக்கு எழுந்தமான முற்பணங்களை வழங்கும் முறைமையைக் கைவிட்டமை.
ஈ) மேலதிக நேரக் கொடுப்பனவுகளை நியாயப்படுத்தியமை
உ) எரிபொருளுக்கு பண முற்பணங்களை வழங்குவதை நிறுத்தியமையும், வாகனங்களுக்கான எரிபொருளின் கொள்வனவை மாற்றியமைத்தமையும்.
ஊ) சுய வருமானத்தையும், வருமதிகளின் சேகரிப்பையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
எ) விரயத்தைக் குறைந்தபட்சமாக்கியமை.
ஏ) செலவினத்தையும், முன்னேற்றத்தையும் தொடர்ச்சியாகக் கண்காணித்தமை
ஐ) அவதானிப்புக்குப் பிந்திய குழுவுடன் தொடர்ச்சியான கலந்தாய்வும், பணியாளரிடமிருந்து ஆதரவும்.
ஒ) ஒழுக்காறு வழக்குகளை விரைவாகவும், சாதுரியமாகவும் கையாண்டமை.

கஷ்டமான நிலைமைகளின் கீழ் மேற்படி இலக்குகளைச் சாதிப்பதில் கௌரவ அமைச்சர், பிரதி அமைச்சர் செயலாளர், ஆளுனர் சபை, தொழிற்சங்கத்தினர், மீன்பிடிக் கைத்தொழிலில் உள்ள பங்காளர்கள் மற்றும் சகல எமது பணியாளர் ஆகியோரினால் அளிக்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவைப் பதிவு செய்ய முகாமைத்துவம் விரும்புகின்றது.

## 3. ஆளுனர் சபை

சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏழு (07) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும், எட்டு (08) உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களையும் ஆளுனர் சபை அடக்குகின்றது. 2004 ஜூன் 15இலிருந்து 2005 செப்ரெம்பர் 1 வரை பின்வருவோர் சேவையாற்றினர்.

### நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

1. திரு.கே. ஹபுதந்திரி
2. திரு.ஜே.என்.லியனகே
3. கலாநிதி (திருமதி) பி.எஸ்.ஆர்.அமரதுங்க
4. திரு.எம்.என்.டி.பீரிஸ்
5. கலாநிதி எஸ்.எச்.கே.சமரவீர
6. திரு.பிரியந்த ஆர்.மொரபிட்டிய
7. திரு.ஆர்.டி.பிரதீப் சஞ்ஜீவ
8. திரு.எச்.எ.டபிள்யு.எம்.ஜே.செனவிரத்ன

### உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.எ.ஹெட்டிஆரச்சி<br>திரு.எச்.எஸ்.சி.பெர்னாண்டோ | } பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) MFARD |
| 2. | திரு.எ.குமரசிறி | - நிதியமைச்சு செயலாளருக்கான பிரதிநிதி |
| 3. | திரு.கே.வி.பி.ரஞ்சித் டீ சில்வா | - துறைமுக கப்பற்தொழில் அமைச்சுப் பிரதிநிதி |
| 4. | றியர் அட்மிரல் எஸ்.எம்.பீ.வீரசேகர<br>றியர் அட்மிரல் ஜே.எஸ்.கே.கொலம்பகே | } பணிப்பாளர் நாயகம் (தொழிற்பாடுகள்) கடற்படை |
| 5. | திரு.பீ.ஜே.பி.மென்டிஸ் | - நில அளவையாளர் நாயகம் |
| 6. | திருமதி எ.எம்.என்.விஜேரத்ன | - SAS - விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு |
| 7. | திரு.ஜி.பியசேன<br>திரு.எஸ்.பத்திரன | } மீன்பிடித்தொழில் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் |
| 8. | திருமதி கே.ரி.ஆர்.பிரதாபசிங்க | - பணிப்பாளர் நாயகம்/'நாரா' |

## 4. தாபனம்

தலைவராக திரு.கே.ஹபுதந்திரி தொடர்ந்தார். பணிப்பாளர் நாயகமாக திருமதி கே.ரி.ஆர்.பிரதாபசிங்க தொடர்ந்தும் பணியாற்றினார்.

முகவராண்மையின் கடப்பாட்டிலான பணிகளை நிறைவேற்றுமுகமாக பின்வரும் பதினொரு ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளை அடக்குவதற்காக தாபனம் வடிவமைக்கப்பட்டது: சூழல் ஆய்வுகள், மீன்பிடித் தொழில்நுட்பம், நீர்நிலையவியல் அலுவலகம், தகவல் தொழில்நுட்பப் பிரிவு, உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல் விருத்தி, நூலக, தகவல், கடல்சார் உயிரியல் வளங்கள், சமுத்திரவியல், சமூக-பொருளாதார, மற்றும் சந்தை ஆராய்ச்சி, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம். இவற்றுக்கு நிருவாகம், சேவைகள் மற்றும் தொழிற்பாடுகள் மற்றும் நிதிப் பிரிவு மற்றும் கொள்வனவு, விநியோகங்கள் பிரிவு ஆகிய பிரிவுகளினால் ஆதரவளிக்கப்பட்டன.

## 5. பிரிவுகளின் தலைவர்கள்

ஆண்டின் போது பிரிவுகளின் தலைவர்களாகப் பின்வரும் உத்தியோகத்தர்கள் பணியாற்றினார்கள்.

### ஆராய்ச்சிப் பிரிவுகள்

| | |
|---|---|
| திரு.என்.சுரேஷ்குமார்<br>திரு.எஸ்.எ.எம்.அஸ்மி | } சூழல் ஆய்வுகள் |
| திரு.என்.பீ.பி.புண்யதேவ | - மீன்பிடித்தல் தொழில்நுட்பம் |
| திரு.எம்.ஏ.ஆரியவன்ச | - நீர்நிலையவியல் அலுவலகம் |
| திரு.ஏ.பீ.எ.கே.குணரத்ன | - தகவல் தொழில்நுட்பம் |
| செல்வி. எம்.எச்.எஸ்.ஆரியரத்ன | - உள்நாட்டு நீரியல் வளங்கள் மற்றும் நீரியல் விருத்தி |
| திருமதி வி.ரூபசிங்க (பதில்) | - நூலகம் மற்றும் தகவல் |
| கலாநிதி (திருமதி) சி.அமரசிறி | - கடல்சார் உயரியல் வளங்கள் |
| கலாநிதி கே.அருளானந்தன் | - சமுத்திரவியல் |
| கலாநிதி இ.எம்.பீ.ஆர்.கே.எதிரிசிங்க | - அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் |
| கலாநிதி (திருமதி) எஸ்.சி.ஜயமன்ன (பதில்) | - சமூக பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி |

### ஆதரவுச் சேவைகள் பிரிவுகள்

| | |
|---|---|
| திரு.சுமேதா ஜயசிங்க | - நிருவாகம் |
| திருமதி எல்.ஜி.என்.பெரேரா | - நிதி |
| திரு.டி.எ.கருணாசேன | - சேவைகள் மற்றும் தொழிற்படுத்தல் |
| திரு. ஆனந்த அமரசிங்க | - கொள்வன்வு மற்றும் விநியோகம் |

## 2007 - ஆண்டில் ஆட்சேர்ப்புக்கள்

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திரு.எஸ்.எ.ரஞ்சித் ரசங்க | எழுதுவினைஞர் – VIII | 09.01.2007 |
| செல்வி சி.ஹெட்டிஆரச்சி | ஆராய்ச்சி உத்தியோகத்தர் - IV | 01.03.2007 |
| திருமதி கே.எ.டபிள்யு.எஸ்.வீரசேகர | ஆராய்ச்சி உத்தியோகத்தர் – IV | 01.03.2007 |
| செல்வி கே.எம்.பீ.சி.கருணாதிலக்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் – IV | 01.03.2007 |
| திரு.ஆர்.பி.பி.கே.ஜயசிங்க | ஆராய்ச்சி உத்தியோகத்தர் – IV | 01.03.2007 |
| செல்வி ஆர்.ஆர்.எ.ஆர்.ஷிரந்த | ஆராய்ச்சி உத்தியோகத்தர் – IV | 01.03.2007 |
| திருமதி ஆர்.எச்.எஸ்.பி.ரணசிங்க | கணக்காளர் | 03.05.2007 |
| திரு.எம்.ருச்சித பெரேரா | ஆராய்ச்சி உதவியாளர் | 05.06.2007 |
| செல்வி எம்.ரி.என்.கே.ஆனந்த | எழுதுவினைஞர் | 09.07.2007 |
| செல்வி கே.எஸ்.கே.தஹநாயக்க | சொற்பதித்தல் இயக்குனர் – VIII | 09.07.2007 |
| செல்வி ஜி.என்.எஸ்.பிரியங்கிகா | வேலை எழுதுவினைஞர் - VII | 01.11.2007 |
| செல்வி டபிள்யு.எ.எச்.பி.வெத்தசிங்க | ஆய்வுகூடச் சிப்பந்தி – VIII | 01.11.2007 |
| திரு.எச்.டி.சுனில் சாந்த | தகைமையற்ற தொழிலாளி - X | 22.11.2007 |
| திருமதி ஜி.எல்.அனுஷா நில்மினி | எழுதுவினைஞர் – VIII | 29.11.2007 |

## 2007 - ஆண்டில் சேவையிலிருந்து வெளியேறியோர்

| பெயர் | பதவி | செயற்படும் திகதி | வெளியேறுவதற்கான காரணம் |
|---|---|---|---|
| கலாநிதி டி.எஸ். ஜயக்கொடி | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 02.01.2007 | இராஜினாமா |
| திரு.டபிள்யு.ஜி.அனுரா | ஆராய்ச்சி உதவியாளர் | 03.04.2007 | இராஜினாமா |
| திரு.அருணா பிரியசாந்த | W.P.O. | 15.05.2007 | பதவியிலிருந்து வெளியேற்றம் |
| செல்வி எம்.ரி.என்.கே. ஆனந்த | எழுதுவினைஞர் | 13.11.2007 | இராஜினாமா |
| திருமதி எம்.ஜி.ஐ.யு. காரியவாசம் | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 26.11.2007 | பதவியிலிருந்து வெளியேற்றம் |
| திரு.எம்.எஸ்.ஜுனைதீன் | மாதிரிப்படுத்துனர் | 31.12.2007 | இராஜினாமா |

## 31/12/2007இல் உள்ளவாறு வெற்றிடங்கள்

| பதவி | வெற்றிடம் |
|---|---|
| படகுப் பொறுப்பாளர்/சமுத்ரமாரு | 1 |
| பொறுப்பாளர் | 1 |
| பிரதம நிருவாக உத்தியோகத்தர் | 1 |
| பிரதம படவரை கலைஞர் | 1 |
| பிரதம நீர்நிலையவியல் அளவையாளர் | 1 |
| பிரதம நில அளவையாளர் | 1 |
| பிரதம நூலகர் | 1 |
| பிரதம உத்தியோகத்தர்/சமுத்ரமாரு | 1 |
| சமையலாள் - சமுத்ரமாரு | 1 |

| | |
|---|---|
| படகோட்டி | 1 |
| படவரை கலைஞர் | 2 |
| சாரதி | 5 |
| பிரதி பிரதம படவரை கலைஞர் | 1 |
| பிரதிப் பணிப்பாளர்/நீர்நிலையவியலாளர் | 1 |
| பொருளியலாளர் | 1 |
| EDP உதவியாளர் | 1 |
| மின்னியலாளர் | 1 |
| இலத்திரனியல் எந்திரவியலாளர் | 1 |
| ERA/சமுத்ரமாரு | 2 |
| நீர்நிலையவியல் அளவையாளர் | 4 |
| உபகரண தொழில்நுட்பவியலாளர் | 1 |
| நில அளவையாளர் | 2 |
| பராமரிப்பு எந்திரவியலாளர் | 1 |
| மேசன் | 1 |
| பொறிமுறை எந்திரவியலாளர் | 1 |
| திட்ட உதவியாளர் (தரவுத் தளம்) | 1 |
| திட்ட உதவியாளர் (GIS/RS) | 1 |
| ஆராய்ச்சி உதவியாளா | 5 |
| ஆராய்ச்சி உத்தியோகத்தா | 13 |
| மாதிரிப்படுத்துனர் | 2 |
| சுகாதாரத் தொழிலாளி | 2 |
| G.B.க்கான செயலாளர்/சட்ட உத்தியோகத்தர் | 1 |
| சிரேஷ்ட படவரை கலைஞர் | 1 |
| தலைவர்/FTD | 1 |
| தலைவர்/சமுத்ரமாரு | 1 |
| **மொத்தம்** | **79** |

## 2007- பதவியேற்றங்கள்

| பெயர் | திகதி | தரம் (முதல்) | தரம் (வரை) |
|---|---|---|---|
| திரு. எ.ஜே.ஜயதிஸ்ஸ | 16.05.2007 | VI | V |
| திரு. ஜி.எச்.கே.கொடகெதர | 16.05.2007 | VI | V |
| திரு. எ.பி.உபாலி தர்மசிறி | 03.10.2007 | VII | VI |
| செல்வி கே.சி.டீ சில்வா | 16.09.2007 | VII | VI |
| திரு. கே.யு.டி.அனுர பிரியசாந்த | 05.12.2007 | VII | VI |
| திரு. ரி.எஸ்.மடபாத்த | 05.12.2007 | VII | VI |
| திரு. டபிள்யு.டி.எம்.டீ மெல் | 15.10.2007 | VI | V |
| திரு.. ஆர்.எ.டி.பியதாச | 06.12.2007 | VII | VI |
| திரு. கே.எம்.முதித்தசேன | 02.05.2007 | IX | VIII |

| | | | |
|---|---|---|---|
| திரு. ஜே.எ.சி.பிரசாத் (ஆராய்ச்சி உதவியாளராகப் பதவியேற்றம்) | 01.07.2007 | VI | VI |
| திரு. ஏ.எம்.ரத்னபால | 21.09.2007 | IX | VIII |
| திரு. டீ.எச்.ரி.அஜித்வன்ச | 23.10.2007 | IX | VIII |
| திரு. ஏ.கே.விக்ரமரத்ன (அலுவலக சிப்பந்தியாகப் பதவியேற்றம) | 18.12.2007 | IX | VIII |
| செல்வி டி.ஆர்.ஹேரத் (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) | 30.10.2007 | IV | III |
| திரு.ஜே.கே.ராஜபக்ஷ | 15.08.2006 2007இல் அமுல்படுத்தப்பட்டது | III | II |

## 2007- வெளிநாட்டுப் பிரயாணம்

| காலம் | நாடு | நோக்கம் | பெயர் |
|---|---|---|---|
| 22/01/2007-08/02/2007 | இத்தாலி | இயற்கை அழிவுகளின் தணிப்புக்கான பயிற்சித் திட்டம் | கலாநிதி கே.அருளானந்தன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/02/2007-02/03/2007 | கென்யா | இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை மற்றும் தணிப்பு முறைமைக்கான அரசாங்கங்களுக்கிடையான இணைப்புக் குழுவின் 4ஆவது அமர்வு | கலாநிதி இ.எம்.எஸ்.விஜேரத்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 28/06/2007-06/07/2007 | தாய்லாந்து | சுனாமி இலக்கரீதியான மாதிரிப்படுத்தல் நெறி II – சுனாமி வெள்ளத்தில் மூழ்குதல் மாதிரிப்படுத்தல் மீதான UNESCO-IOC பயிற்சி நெறி | |
| 15/[illegible]9/2007-15/[illegible]2/2007 | இங்கிலாந்து | கடல் மட்ட விஞ்ஞானத்திலும், பிரயோகத்திலும் இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை முறைமை இணையுரிமைத் திட்டம் | |
| 28/02/2007-02/03/2007 | தாய்லாந்து | 7ஆவது வட இந்திய சமுத்திர நீர்நிலையியல் ஆணைக்குழு (NIOHC) | திரு.எ.என்.டி.பெரேரா சிரேஷ்ட நீர்நிலையவியல் அளவையாளர் |
| 12-17/03/2007 | நோர்வே | 44ஆவது சமுத்திர வரைபடமிடல் குழு - பல் அலைவரிசை நெறி | |
| 28/02/2007-02/03/2007 | தாய்லாந்து | 7ஆவது வட இந்திய சமுத்திர நீர்நிலையியல் ஆணைக்குழு (NIOHC) | திரு.எம்.எ.ஆரியவன்ச நீர்நிலையவியலாளர் |
| 13-14/03/2007 | ஜப்பான் | ENC அடக்கத்தினதும், கிட்டுந்தன்மையினதும் மேம்படுத்தல் மீதான சர்வதேச கருத்துக் கோர்வை | |
| 24-26/09/2007 | தாய்லாந்து | கரையோர தேசப்பட ஆரம்பக் கூட்டம் | |
| 07-11/05/2007 | மொனாக்கோ | 17ஆவது சர்வதேச நீர்நிலையவியல் மகாநாடு (IHC) | |
| 15-16/03/2007 | தாய்லாந்து | தாய்லாந்துக்கும், இலங்கைக்கும் இடையிலான JFWGஇன் 1ஆவது கூட்டம் | கலாநிதி எஸ்.சி.ஜயமன்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 16/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | |
| 17-29/03/2007 | ஐஸ்லாந்து | ICE/SL/FIS/2007/01 அரசாங்க மீன்பிடித்துறையில் உள்ள முகாமையாளர்களுக்கு கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீதான குறுகிய பயிற்சி நெறி | திரு.என்.சுரேஷ்குமார் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 17-29/03/2007 | ஐஸ்லாந்து | ICE/SL/FIS/2007/01 அரசாங்க மீன்பிடித்துறையில் உள்ள முகாமையாளர்களுக்கு கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீதான குறுகிய பயிற்சி நெறி | திரு.எ.பி.எ.கே.குணரத்ன தகவல் உத்தியோகத்தர் |

| | | | |
|---|---|---|---|
| 09-14/12/2007 | ஜப்பான் | மீன் எதிர்வுகூறலுக்கு கடலக ஆராய்ச்சி GIS மீதான பயிற்சி | |
| 19-23/03/2007 | பெல்ஜியம் | IODE/MarBEF உயிரக பன்னிலையாக்கல் தரவு முகாமைத்துவ நெறி | செல்வி இ.கே.வி.சமரவீர ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 16/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | செல்வி எம்.எச்.எஸ்.ஆரியரத்ன ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 01/09/2007-04/03/2007 | ஐஸ்லாந்து | மீன்பிடித் தொழில் கொள்கை, திட்டமிடல் நிபுணத்துவ பயிற்சி | |
| 16/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | திரு.யு.எஸ்.பி.கே.லியனகே ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | கலாநிதி இ.எம்.ஆர்.கே.பீ.எதிரிசிங்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | செல்வி ஜி.ஜே.கனேகம ஆரச்சி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | செல்வி எம்.ஜி.ஐ.யு.காரியவாசம் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | திரு.பீ.கே.கே.கே.ஜினதாச ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/-4/2007-05/05/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | செல்வி கே.எஸ்.ஹெட்டிஆரச்சி ஆராய்ச்சி உதவியாளர் |
| 05-16/11/2007 | ஐஸ்லாந்து | ஐஸ்லாந்தில் தொழிலின் போதிலான பயிற்சித் திட்டம் (ICEIDA) | |
| 22/-4/2007-05[illegible]5/2007 | ஸ்பெயின் | NARA மற்றும் NAQDAஇன் தொழில்நுட்ப, பயிற்சி ஆற்றலளவுகளை மேம்படுத்துதல் | செல்வி ஜே.எப்.நிஸ்ரினா ஆராய்ச்சி உதவியாளர் |
| 0[illegible]0/05/2007 | தாய்லாந்து | மீன்பிடித் தொழில் ஒத்துழைப்பு மீதான BIMSTEC செயலமர்வு | கலாநிதி எஸ்.எஸ்.கே.ஹபுதந்திரி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 01/09/2007-04/03/2007 | ஐஸ்லாந்து | மீன்பிடித் தொழில் கொள்கை, திட்டமிடல் நிபுணத்துவப் பயிற்சி | |
| 04-09/06/2007 | பெல்ஜியம் | இளம் விஞ்ஞானிகள் தரவு முகாமைத்துவப் பயிற்சி | செல்வி கே.எம்.பீ.சி.கருணாதிலக்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 17-28/06/2007 | பிரான்ஸ் | அரசாங்கங்களுக்கிடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழுவின் 24ஆவது பொதுச் சபை மற்றும் 14ஆவது நிறைவேற்று சபை அமர்வு | திருமதி கே.ரி.ஆர்.பிரதாபசிங்க பணிப்பாளர் நாயகம் |
| 17-28/06/2007 | பிரான்ஸ் | அரசாங்கங்களுக்கிடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழுவின் 24ஆவது பொதுச் சபை மற்றும் 14ஆவது நிறைவேற்று சபை அமர்வு | கலாநிதி ரி.கே.டி.தென்னக்கோன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 30/11/2007-03/12/2007 | தாய்லாந்து | IOGOOS செயலமர்வு மற்றும் இந்து சமுத்திர குழாமின் 5ஆவது வருடாந்தக் கூட்டம் மற்றும் 2ஆவது உயர் மட்டக் கூட்டம் | |
| 09/07/2007-10/08/2007 | ஐ.இ. | கடலக படம்வரைகலை நெறி | செல்வி பீ.எச்.பீ.ஜயமாலி சில்வா படம்வரைகலை படவரைஞர் |
| 18-23/06/2007 | மொரீசியஸ் | இந்து சமுத்திரத்தில் பகுதி அரசாங்க நடவடிக்கைகள் மீதான IOC/FAO IOTC சர்வதேச கருத்துக்கோர்வை மற்றும் செயலமர்வு | கலாநிதி சம்பா அமரசிறி ஆராய்ச்சி உத்தியோகத்தர் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி) |
| 05-09/11/2007 | சீசெல்ஸ் | IOTC இன் 10ஆவது விஞ்ஞான அமர்வு | |
| 11-13/12/2007 | சீசெல்ஸ் | புலம்பெயர் இனங்கள் மீதான சமவாயத்தின் கீழ் புலம்பெயர் சுறாக்கள் மீதான சர்வதேச ஒத்துழைப்புக்கான விருப்பினை அடையாளம் காண்பதற்கும், விஸ்தரிப்பதற்குமான கூட்டம் | |

| | | | |
|---|---|---|---|
| 16-24/06/2007 | பிலிப்பைன்ஸ் | நிலைத்திருத்தல் அபிவிருத்தியை சாதிப்பதற்காக கரையோர உல்லாசப் பயண அமைவிடங்களின் புத்துயிரளித்தலுக்கான பல்-முகவராண்மை ஒருங்கிணைப்பு | செல்வி டி.சி.ரி.திசாநாயக்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/09/2007-13/10/2007 | ஐஸ்லாந்து | பி.எச்டி கற்கைகளுக்கு | |
| 24-29/06/2007 | ஜேர்மனி | துணை அடிப்புற பக்கவரைகள் மீதான பயிற்சி SES 2007. | திரு.எஸ்.யு.பி.ஜினதாச ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 22/08/2007-29/08/2008 | ஐ.இ. | சமுத்திர காலவளவில் பட்டபின்படிப்பு சான்றுப்பத்திரம் | |
| 24-29/06/2007 | ஜேர்மனி | துணை அடிப்புற பக்கவரைகள் மீதான பயிற்சி SES 2007. | திரு.டபிள்யு.கே.செனிவிரத்ன இலத்திரனியல் உதவியாளர் |
| 09-20/07/2007 (சம்பளமற்ற லீவு) | போர்த்துக்கல் | இறுதிப் பரீட்சையில் (எம்.எஸ்சி) பங்குபற்றுவதற்காக | திரு.ஆர்.பி.பி.கே.ஜயசிங்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 25/10/2007-16/12/2007 | தாய்லாந்து | BIMSTEC இன் வரைச்சட்டத்தின் கீழ் வங்காள விரிகுடாவில் சூழலியல்முறைமை அடிப்படையிலான மீன்பிடித்தல் முகாமைத்துவம் | |
| 08/07/2007-26/08/2007 | சீனா | கடலக அங்கி விருத்தி தொழில்நுட்பம் மீதான பயிற்சி | திரு.என்.டபிள்யு.ஜனக புஸ்பகுமார ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 12/09/2007-31/12/2008 (சம்பளமற்ற லீவு) | ஐ.இ. | எம்.எஸ்சி கற்கைகளுக்காக | செல்வி டி.என்.எ.ரண்மதுகல ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 25/10/2007-16/12/2007 | தாய்லாந்து | BIMSTEC இன் வரைச்சட்டத்தின் கீழ் வங்காள விரிகுடாவில் சூழலியல்முறைமை அடிப்படையிலான மீன்பிடித்தல் முகாமைத்துவம் | திரு.கே.எஸ்.டி.சிந்தக்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 19/10/2007-06/11/2007 | கோவா - இந்தியா மற்றும் மகே சீசெல்ஸ் | R/V Revelle – ஆராய்ச்சி கப்பற் பயணம் | திரு.எ.ராஜசூரிய ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 07-09/11/2007 | தாய்லாந்து | TELRA 2007- கட்டுரையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு | திரு.எச்.பீ.ஜயசிறி ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 21-23/11/2007 | இந்தியா | ஊயிரகப் பன்னிலையாக்கம் மீதான சர்வதேச மகாநாடு – கட்டுரையொன்றை சமர்ப்பிப்பதற்கு | |
| 05-16/11/2007 | ஐஸ்லாந்து | ஐஸ்லாந்தில் தொழிலின் போதிலான பயிற்சித் திட்டம் (ICEIDA) | செல்வி ரி.எஸ்.தசநாயக்க ஆராய்ச்சி உதவியாளர் |
| 12-26/11/2007 | இந்தியா | நீர்த்தாழைச் சூழலியல்முறைமைகளில் உயிரக பன்னிலையாக்கம் மீதான பயிற்சி | திரு.டி.டி.ஜி.எல்.தகநாயக்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 20-23/11/2007 | இந்தியா | 08ஆவது மீன்பிடித்தொழில் அரங்கு - கட்டுரையொன்றை சமர்ப்பிப்பதற்கு | செல்வி பி.எஸ்.ஜயசிங்க ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| 09-14/12/2007 | ஜப்பான் | மீன் எதிர்வுகூறலுக்கு கடலக ஆராய்ச்சி GIS மீதான பயிற்சி | திரு.ஜே.கே.ராஜபக்ஷ ஆராய்ச்சி உத்தியோகத்தர் |

**நீதிமன்ற வழக்குகள் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள்**

**தொழில்மன்று வழக்குகள்**

(i) தொழில் மன்றில் திரு.ஜே.கே.பாலபட்டபெந்தியின் நீதிமன்ற வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

(ii) கடோல்கலே பிராந்திய ஆராய்ச்சி நிலையக் காணி தொடர்பான நீதிமன்ற வழக்கு (6137/L) நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது.

(iii) மீஉயர் நீதிமன்றில் திரு.டி.எ.கருணாசேனவின் நீதிமன்ற வழக்கு (SC/FR/57/04) முடிவடைந்து ள்ளதுடன், சகல தொடர்பான சிறப்புரிமைகளுடன் பிரதம எந்திரவியலாளராகவும், சேவை, தொழிற்பாடுகள் பிரிவுத் தலைவராகவும் மீள்நியமிக்கப்பட்டார்.

(iv) மேலதிக தொழில் நீதிமன்றில் திரு.ஜி.லமாஹேவ மற்றும் திரு ஜே.பி.எ.மக்கம்மான ஆகியோரின் மேன்முறையீடுகளின் பிரகாரம் இரு வழக்குகள் புறம்பாக நடந்து கொண்டிருக்கின்றன.

**நீதிமன்ற வழக்குகள்**

1. பட்டபின்படிப்பு கற்கைகளுக்காக கல்விக்கான லீவு மீது வெளிநாட்டுக்குச் சென்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு.என்.எச்.தசநாயக்க அங்கீகரிக்கப்பட்ட லீவு காலத்தின் இறுதியில் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்பதுடன், அவருக்கெதிராக அவசியமான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அது குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2. சம்பளமற்ற லீவில் வெளிநாடு சென்ற பிரதம நூலகர் திருமதி எஸ்.தலகட அங்கீகரிக்கப்பட்ட லீவு காலத்தின் இறுதியில் கடமைக்கு சமூகமளிக்கவில்லை என்பதுடன், அவருக்கெதிராக அவசியமான சட்ட நடவடிக்கையை எடுப்பதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அது குறித்துரைக்கப்பட்டுள்ளது.

3. 'நாரா'வுக்கு ஒப்பந்தத்திலான பெறுமதியைக் கொடுப்பனவு செய்யாமல் ஒப்பந்தப்படுத்தப்பட்ட காலத்திற்கு 'நாரா'வுக்கு சேவை செய்யாமல் தனது இராஜினாமாவை முன்வைத்துவிட்டு தனது கலாநிதி பட்டத்தை தொடர்வதற்காக 'நாரா'வுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை மீறியமைக்காக கலாநிதி சி.வி.எல்.ஜயசிங்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**முறைமையான ஒழுக்காற்று விசாரணைகள்**

(i) கலாநிதி (திருமதி) ஆர்.ஆர்.பி.மல்தெனிய, திரு.எச்.எம்.வசந்த பண்டார மற்றும் திரு.டபிள்யு.ஜி.அநுர ஆகியோருக்கு எதிரான முறைமையான ஒழுக்காற்று விசாரணைகளின் முடிவின் பிரகாரம் அவர்கள் மேன்முறையீடு செய்துள்ளதுடன், 322 சபை தீர்மானங்களின் பிரகாரம் தண்டனைகள் குறைக்கப்பட்டுள்ளன.

(ii) சில 'நாரா' நிருமாணச் செயற்பாடுகள் தொடர்பில் திரு.டி.எ.கருணாசேனவுக்கு எதிரான முறைமையான ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடைந்துள்ளன. அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கப்பால் நிருபிக்கப்படாததினால் அவர் சகல குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார்.

(iii) உதவிக் கணக்காளர் திரு.எம்.டி.சேனாரத்ன மற்றும் நூலகர் திருமதி எஸ்.ஆர்.வி.ருபசிங்க ஆகியோருக்கு எதிராக 25.04.2007 திகதியில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை மீதான முறைமையான ஒழுக்காற்று விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

(iv) ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு.என்.பீ.பி.புண்ணியதேவ மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர் திரு.பீ.எல்.எஸ்.விமலசிங்க ஆகியோருக்கு எதிராக 27.07.2007 திகதியில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை மீதான முறைமையான ஒழுக்காற்று விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**நலன்புரி செயற்பாடுகள்**

நாரா நலன்புரி சங்கத்தின் கூட்டுமுயற்சியுடன் பின்வரும் நலன்புரிச் செயற்பாடுகள் நடத்தப்பட்டன:

**பின்வரும் இடங்களுக்கு போக்குவரத்து வசதிகள்:**

'நாரா' - கோட்டை
'நாரா' - பொரளை
'நாரா' - மஹரகம
'நாரா' - நீர்கொழும்பு
'நாரா' - கம்பஹா
'நாரா' - கொட்டாவ
'நாரா' - களனி

2007 – ஆண்டில் உள்ளூர் பயிற்சிகள்/கருத்தரங்குகளில்/செயலமர்வுகளில் பங்கெடுப்பு

| பெயர் | உள்ளூர் பயிற்சிகள்/கருத்தரங்குகளில்/செயலமர்வுகளில் பங்கெடுப்பு | நிறுவனம் | கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| திரு.பீ.எல்.ஜே.பெரேரா/சாரதி<br>திரு.டபிள்யு.எ.ரத்னசிறி/சாரதி | முதலியக்கி நெறி | இலங்கை துறைமுக அதிகாரசபை மகாபொல பயிற்சி நிறுவனம் | தலைக்கு 8,000/= |
| கலாநிதி கே.அருளானந்தன்/ஆ.உ.<br>கலாநிதி இ.எம்.எஸ்.விஜேரத்ன/ஆ.உ.<br>திரு.என்.சுரேஷ்குமார்/ஆ.உ. | காலநிலை மாற்றத்திற்கு அனுசரிப்பு மீதான பொருத்தமான தலையீடுகளின் நோக்கெல்லையை வசதிப்படுத்தல் | தென் ஆசிய ஒத்துழைப்பு சூழல் திட்டம் | - |
| கலாநிதி ரி.டி.கே.தென்னக்கோன்/ஆ.உ. | அறிக்கை எழுதுதல்<br>திறன்களை முன்வைத்தல் | பிரிட்டிஷ் கவுன்சில் | 6,500/=<br>18,500/= |
| திரு.பி.ஜயசூரிய/ஆராய்ச்சி உதவியாளர் | டிஜிட்டல் அனிமேசனில் டிப்ளோமா<br>கிரபிக் டிசைனில் டிப்ளோமா | ரேலி வியூ ரெக்னோலஜி அக்கடமி | 31,920/= |
| செல்வி எ.எம்.எஸ்.எ.எஸ்.கே.விஜேசிங்க/தலைவருக்கான தனிப்பட்ட உதவியாளர், ஆளுனர் சபைக்கான பதில் செயலாளர் | புதிய கம்பனிகள் சட்டத்தின் கீழ் பணிப்பாளர்களின் கடமை – சட்டம் மற்றும் நிதிசார் தாக்கங்கள் மீதான கருத்தரங்கு | பட்டய செயலாளர்கள் நிறுவனம் | 1,500/= |
| செல்வி எஸ்.ஆர்.வி.ரூபசிங்க/நூலகர்<br>செல்வி எஸ்.லியனஆரச்சி/நூலகர்<br>திரு.ஒ.கே.பி.நந்தன/நூலகர் | SCOPUS மற்றும் விஞ்ஞான நேரடி தரவுத்தளம் மீதான பயிற்சி அமர்வு | தேசிய விஞ்ஞான மன்றம் | - |
| செல்வி எல்.ஜி.என்.பெரேரா /கணக்காளர் | வியாபார மற்றும் நிதிசார் நிறுவனத்தில் பட்டபின் படிப்பு டிப்ளோமா | பட்டயக் கணக்காளர் நிறுவனம் | நெறிக் கட்டணம் 50,000/= 'நாரா'வினால் 25,000/= மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட்டது |
| திரு.எம்.கம்மன்பில/ஆ.உ.<br>திரு.டபிள்யு.எ.சுமணதாச/ஆராய்ச்சி உதவியாளர் | இயற்கை பேணல் மற்றும் சூழலியல் உல்லாசபிரயாண செயலமர்வு | சூழலியல் உல்லாசப்பிரயாணத்தில் முன்னணியாளர்கள் | தலைக்கு US $ 60 |
| திரு.எச்.டி.விமலசேன/ஆ.உ. (சமூகவியல்) | வர்த்தகமயப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்புக்கான பெருமளவு நடவடிக்கைகள் மீதான கருத்தரங்கு | தேசிய விஞ்ஞான மன்றம் | - |
| திரு.பி.எஸ்.ரணவீர/வேலை உதவியாளர் | வர்த்தக காற்றுச்சீராக்கல், குளிரூட்டல் முறைமை மற்றும் சக்தியை சேமிக்கும் முறைகள் மீதான பயிற்சி | இன்ஸ்ரிரியூட் ஒ∴ப் இன்டஸ்ரியல் ரெக்னோ – மனேஜ்மென்ட் - பிறைவேற் லிமிற்றெற் | 5,200/= + 15% பெ.சே.வ. |
| செல்வி எஸ்.லியனஆரச்சி/நூலகர்<br>திரு.ஒ.கே.பி.நந்தன/நூலகர் | நூலக தன்னியக்கம் மீதான நெறி (COLA) | இலங்கை நூலகச் சங்கம் | தலைக்கு 15,000/= |
| கலாநிதி இ.எம்.ஆர்.கே.பீ.எதிரிசிங்க/ஆ.உ. | அரசாங்க மீன்பிடித்தொழில் துறையிலுள்ள முகாமையாளர்களுக்கு கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீதான குறுகிய பயிற்சிநெறி | ICEIDA | - |

| | | | |
|---|---|---|---|
| கலாநிதி சி.அமரசிறி/ஆ.உ. திரு.ரி.எ.ராஜபக்ஷ/ ஆ. உதவியாளர் திரு.எ.பீ.ஏ.கே.குணரத்ன/ தகவல் உத்தியோகத்தர் திரு.எம்.எ.ஆரியவன்ச/ நீர்நிலையவியலாளர் கலாநிதி எஸ்.சி.ஜயமன்ன/ஆ.உ. திரு.டபிள்யு.எ.எம்.டீ மெல்/ ஆராய்ச்சி உதவியாளர் கலாநிதி கே.அருளானந்தன் /ஆ.உ. திரு.டி.ரி.மென்டிஸ்/ஆராய்ச்சி உதவியாளர் திரு.என்.சுரேஷ்குமார்/ஆ.உ. திரு.ஆர்.டபிள்யு.பெர்னாண்டோ /ஆராய்ச்சி உதவியாளர் செல்வி எம்.எச்.எஸ். ஆரியரத்ன/ஆ.உ. திரு.என்.என்.இ.குரே/ ஆராய்ச்சி உதவியாளர் கலாநிதி இ.எம்.ஆர்.கே.பீ. எதிரிசிங்க/ஆ.உ. செல்வி கே.எஸ்.ஹெட்டிஆரச்சி/ ஆராய்ச்சி உதவியாளர் திரு.என்.பீ.பி.புண்யதேவ/ஆ.உ திரு.எஸ்.எஸ்.எஸ்.சி.பீரிஸ்/ ஆராய்ச்சி உதவியாளர் திரு.ஆனந்த அமரசிங்க/கொள்வனவு உத்தியோகத்தர் திரு.ஒ.கே.பி.நந்தன/நூலகர் திரு.எஸ்.பி.விஜேசிங்க/ றோனியோ -புகைப்படப் பிரதியெடுத்தல் பொறி இயக்குனர் திரு.எம்.எச்.எஸ்.கே.அபேரத்ன /ஆ.உதவியாளர் | மீன்பிடித்தொழில் நிறுவனரீதியான பகுப்பாய்வினதும், ஆற்றலளவு மதிப்பீட்டினதும் மீதான செயலமர்வு. | FAO | |
| திரு.எ.எ.டி.அமரதுங்க/ஆ.உ. செல்வி எ.எஸ்.எல்.இ. கொரயா/ஆ.உ. | இலங்கையில் முக்கியமான தாவரப் பகுதிகளை அடையாளம் காண்பதற்கும், பாதுகாப்பதற்குமான கருத்திட்டம் | IUCN/சூழல், இயற்கை வளங்கள் அமைச்சு | - |
| செல்வி எஸ்.லியனஆரச்சி/ நூலகர் | இலங்கையில் ஆவணப்படுத்தல் மரபுரிமை பேணுதல் மீதான கருத்தரங்கு | தேசிய நூலக, ஆவணப்படுத்தல் சேவைகள் சபை | 2,500/= |
| திரு.எ.பீ.எ.கே.குணரத்ன/ தகவல் உத்தியோகத்தர் | கணனி கருவியைப் பயன்படுத்தி கருத்திட்டத்தின் ஆகுசெலவு, நேர முகாமைத்துவம் | மொரட்டுவைப் பல்கலைக்கழகம் | 18,000/= + பெ.சே.வ. |
| திரு.ஜே.பி.லொக்குகமகே/ உதவி வலைப்பின்னல் நிருவாகி திரு.யு.டபிள்யு.எஸ்.அதிகாரி/ தரவு பதித்தல் இயக்குனர்/ W.P.O. | தரவு முகாமைத்துவத்திற்கான ஒராக்கிள் பயிற்சி | DMS | தலைக்கு 62,000/= + பெ.சே.வ. |
| திரு.ஜே.பி.லொக்குகமகே/ உதவி வலைப்பின்னல் நிருவாகி | ஒராக்கிள் 10 g | DO | 28,750/= (இரண்டும்) |

| | | | |
|---|---|---|---|
| திரு.யு.டபிள்யு.எஸ்.அதிகாரி/ தரவு பதித்தல் இயக்குனர் /W.P.O. | | | |
| கலாநிதி எச்.எம்.பி.கித்சிறி/ஆ.உ செல்வி கே.டபிள்யு.எஸ்.ஆரியவன்ச/ ஆ.உ. | அரசாங்க மீன்பிடித்தொழில் துறையிலுள்ள முகாமையாளர்களுக்கு கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீதான 3ஆவது குறுகிய பயிற்சிநெறி | மீன்பிடித்தொழில் அமைச்சு , ICEIDA & UNU-FTP | - |
| திரு.டி.எ.அத்துகோறள/ஆ.உ. செல்வி கே.எ.டபிள்யு.எஸ்.வீரசேகர/ ஆ.உ. திரு.பி.கே.கே.கே.ஜினதாச/ ஆ.உ. | உயர்ந்த முடிவிலான பகுப்பாய்வு உபகரணங்களின் தோதான உபயோகத்தினதும் முகாமைத்துவத்தினதும் மீதான செயலமர்வு | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் | தலைக்கு 20,000/= + பெ.சே.வ. |
| கலாநிதி இ.எம்.ஆர்.கே.பீ.எதிரிசிங்க/ ஆ.உ. | இலங்கையில் இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் அமுலாக்கம் மீதான செயலமர்வு | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | - |
| திரு.டி.எம்.என்.திஸநாயக்க/ தேர்ச்சித் தொழிலாளி | நவீன வாகன தொழில்நுட்பம் மீதான செயலமர்வு | ICTAD | 2,000/= |
| செல்வி எல்.ஜி.என்.பெரேரா/ கணக்காளர் செல்வி ஆர்.எச்.எஸ்.பி.ரணசிங்க/ கணக்காளர் | நிதிசார் அறிக்கையிடல் மீதான செயலமர்வு | பொதுத் தாளாண்மைகள் திணைக்களம் | தலைக்கு 2,000/= |
| செல்வி சி.ஹெட்டிஆரச்சி/ஆ.உ. தி[illegible].டபிள்யு.எ.லலித் [illegible]க்ரமசிங்க/ஆ.உதவியாளர் | PCR தொழில்நுட்பத்தில் உயர்தர நெறி | GEENTEC | தலைக்கு 25,000/= + பெ.சே.வ. |
| த[illegible]ரு.ஜி.எ.எ.ரத்நாயக்க/ஆய்வு கூட சிப்பந்தி | கணனி வலைப்பின்னலிலும், நிருவாகத்திலும் சான்றுப்பத்திர நெறி | NIBM | 23,350/= |
| திரு.டபிள்யு.எ.எல்.விக்ரமசிங்க/ ஆ.உதவியாளர் | மூலக்கூறு உயிரியலிலும், உயிரியல் தொழில்நுட்பத்திலும் எம்.எஸ்சி பட்டம் | ருகுணு பல்கலைக்கழகம் | 50,000/= கொண்ட பகுதியளவிலான கொடுப்பனவு |

# சூழல் ஆய்வுகள் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திரு.என்.சுரேஷ்குமார்/திரு.எஸ்.எ.எம்.அஸ்மி

## ஆண்டின் கண்ணோட்டம்

நீர் மாசுபடுத்தலுக்கு விசேட மேற்கோளுடன் நீரியல் வளங்களின் சூழல் அம்சங்கள் தொடர்பான ஆய்வுகளையும், சூழல் தாக்கங்கள் மீதான மதிப்பீட்டினையும் நடத்துவதும் மற்றும் சூழல் முகாமைத்துவ அம்சங்கள் மீது அரசாங்கத்திற்கும் மற்றும் வேறு தாபனங்களுக்கும் தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குவதுமே பிரிவின் பிரதான பணியாகும். ஐந்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்களையும், இரு ஆராய்ச்சி உதவியாளர்களையும், ஒரு சொற்பதித்தல் இயக்குனரையும் மற்றும் மூன்று தொழிலாளர்களையும் ஆண்டின் போது பணியாளர் பலம் உள்ளடக்குகின்றது. இக்காலத்தின் போது மாசுபடுத்தல் ஆய்வுகள் தொடர்பான இரு கருத்திட்டங்களையும், மீன் பலியாதல் மற்றும் மாசுபடுத்தல் போன்ற அவசரகால நிலைமைகளுக்கு ஈடுகொடுப்பதற்கான ஆய்வுத் திட்டமொன்றையும், ஆய்வுகூடத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றையும் பிரிவு அமுல்படுத்தியது. பிரிவின் தலைவராக தனது காலத்தை ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு.என்.சுரேஷ்குமார் முடித்துக் கொண்டதனால், பிரிவின் புதிய தலைவராக ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு.எஸ்.எ.எம்.அஸ்மி ஆண்டின் பிற்பகுதியில் கடமைகளை ஏற்றுக்கொண்டார்.

## பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| திட்டம் | | கருத்திட்டம் | | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முதல் | வரை |
| 1 | சூழல் | 4.4.1. | மகாவலி கங்கையின் மேல் நீரேந்து பரப்புகளில் தெரிவுசெய்யப்பட்ட நீர்நிலைகளினதும், அருவிகளினதும் சூழல் தாக்கங்களின் மதிப்பீடு | 0.7 | எஸ்.எ.எம்.அஸ்மி / எ.எ.டி.அமரதுங்க/ கே.எ.டபிள்யு.சியாமலி வீரசேகர/என்.சுரேஷ்குமார் | ஜன. 2007 | டிச. 2007 |
| 2 | சூழல் | 4.6.1. | ஹிக்கடுவை NP தொடர்பான தற்போதைய மாசுபடுத்தல் மட்டங்களினதும், முகாமைத்துவ அம்சங்களினதும் மதிப்பீடு. | 0.2 | டபிள்யு.டி.என்.விக்ரமஆரச்சி/ என்.சுரேஷ்குமார் | ஜன. 2007 | டிச. 2007 |
| 3 | நீர் நிலையவியல், சமுத்திரவியல், அழிவு முகாமைத்துவம், முன்கூட்டிய பதிலிறுப்பு | 5.4.2. | நீர் மாசுபடுத்தல், எண்ணெய் சிந்துதல்கள் மற்றும் மீன்பலியாதல் சம்பவங்கள் | | எஸ்.எ.எம்.அஸ்மி/ என்.சுரேஷ்குமார்/ டபிள்யு.டி.என்.விக்ரமஆரச்சி/ எ.எ.டி.அமரதுங்க/ கே.எ.டபிள்யு.சியாமலி வீரசேகர | ஜன. 2007 | டிச. 2007 |
| 4 | ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித மூலவள அபிவிருத்தி | 7.3.2. | சூ.ஆ.பிரிவு ஆய்வுகூடத்தின் தரத்தை மேம்படுத்துதல் | 0.75 | எஸ்.எ.எம்.அஸ்மி/ என்.சுரேஷ்குமார்/ டபிள்யு.டி.என்.விக்ரமஆரச்சி/ எ.எ.டி.அமரதுங்க/ கே.எ.டபிள்யு.சியாமலி வீரசேகர | ஜன. 2007 | டிச. 2007 |
| 5 | சாதனங்களின் கொள்வனவு | 4.1 | சாதனங்களின் கொள்வனவு | 1.2 | | | |

## முன்னேற்றம்

### கருத்திட்டம் 1

மகாவலி கங்கை மேல்நீரேந்து பரப்பினுள் அருவிகளினதும், நீர்நிலைகளினதும் நீரியல் ஆரோக்கியத்தை மதிப்பிடுவதே ஆய்வின் நோக்கமாகும். இலங்கை மகாவலி அதிகார சபையின் வேண்டுகோளின் மீதான அடிப்படையிலும், மகாவலி கங்கையின் மேற்புறங்களை மதிப்பிடுவதற்கான முக்கியத்துவத்தைக் கருத்திற்கெடுத்தும் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப ஆய்வொன்றாக மகாவலிப் பகுதியின் மேல்நீரேந்து பரப்புக்களினுள் தெரிவு செய்யப்பட்ட அருவிகளில் நீரியல் மாசுபடுத்தல் மட்டங்கள் மதிப்பிடப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்கு ஈடுகொடுக்குமுகமாக அந்திரோபொஜினிக் செயற்பாடுகளின் தீவிரத்தன்மை மீதான அடிப்படையில் மூன்று துணை நீரேந்துபரப்புக்கள் தெரிவுசெய்யப்பட்டன. இது தொடர்பில் நீர் மாசுபடுத்தல் மட்டங்களையும், போக்குகளையும் ஆய்வதற்காக ஹற்றன் துணை நீரேந்துபரப்பு (அட்டபாகே ஓய, கொரக்கா ஓய, கடியன் எல, மகாவத்துர கங்கை, மற்றும் மகாவலி கங்கையின் பிரதான அருவி ஆகியவற்றை அடக்கும்), கொத்மலை துணை நீரேந்துபரப்பு (புன ஓய, நானு ஓய, தபகஸ்தலாவ ஓய, அகர ஓய, கொத்மலை ஓய, கரண்டி எல மற்றும் புந்தலு ஓய ஆகியவற்றை கொண்டுள்ள) மற்றும் உமா ஓய, பதுலு ஓய துணை நீரேந்து பரப்பு (குடா ஓய, மகாதொட்டில ஓய ஆகியவற்றைக் கொண்டுள்ள) ஆகியன தெரிவுசெய்யப்பட்டன.

ஏப்ரலிலிருந்து நொவம்பர் வரையிலான எட்டு மாதங்களைக் கொண்ட காலமொன்றுக்கு மேற்படி அருவிகளில் மாதாந்த அடிப்படையின் மீது மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. மாசுபடுத்தல் மட்டங்களை மதிப்பிடுவதற்காக மேற்பரப்பு நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்காக எல்லாமாக 35 மாதிரி அமைவிடங்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் பகுப்பாய்வுக்கு 12 நீர் தர சாராமாறிகள் தொழிற்படுத்தப்பட்டன. தீவிரமான வருடாந்தப் பயிர்ச்செய்கை, தேயிலைச் செய்கை மற்றும் பரவலான வன ஒட்டுப்பகுதிகளுடன் அடர்த்தியான வீட்டுத் தோட்டங்கள் ஆகியவற்றை கொத்மலை ஓய துணை நீரேந்து பரப்பு கொண்டிருந்தது. நடுத்தரத்திலான சனத்தொகை அடர்த்தியுடனும், வனப்போர்வையுடனும் பதுள்ளை ஓயா துணை நீரேந்து பரப்பு அவதானிக்கப்பட்டது. எனினும், பிரதான காணி உபயோக முறையானது வருடாந்தப் பயிர்களுடன் சிறிய தொகையிலான தேயிலைப் பெருந்தோட்டங்களாகும். கட்டியனெல்ல, கொரக ஓய, கஹவத்துர கங்கை, அட்டபே ஓய, மல்லியப்பூ வத்தை, வட்டவளை, ரொசல்லா மற்றும் ரம்புக்பிட்டிய ஆகியனவற்றை ஹற்றன் துணை நீரேந்துபரப்பு கொண்டுள்ளது.

மீன்சருக்கும் மற்றும் நீரியல் வாழ்வுக்குமான ஏற்றுக்கொள்ளத்தக்க எல்லைகளுக்கு பெருமளவு மேற்பரப்பு நீர் தர சாராமாறிகளின் முடிவுகள் கட்டுப்பட்டிருந்தன. எனினும், நானு ஓயவில் போஷாக்கு மட்டங்கள் அக்கர ஓய மற்றும் தபகஸ்தலாவ ஓய ஆகியனவற்றை விட சற்று உயர்வானதாகக் காணப்பட்டது. அயல்புறங்களிலுள்ள காணிகளிலிருந்து கமத்தொழில் நடைமுறைகளின் விளைவொன்றாக ஆயப்பட்ட சில அருவிகளின் அமைவிடங்களில் மொத்த இடைநிறுத்தப்பட்ட திண்மங்களினதும் மற்றும் மின்சார கடத்துதிறனினதும் செறிவுகள் உயர்வானவை என கண்டறியப்பட்டது.

கொத்மலை உப நீரேந்துபரப்பில் நைத்ரேற் நைதரசன், நைத்ரைற் நைதரசன், அமோனிக்கல் நைதரசன் மற்றும் கரைந்த பொஸ்பேற் ஆகியனவற்றின் பெறுமதிகள் 0.0019 மி.கி./லீ முதல் 3.0792 மி.கி./லீ., 0.0006 மி.கி./லீ. முதல் 1.0056 மி.கி./லீ., 0.0003 மி.கி./லீ. வரை 1.1776 மி.கி./லீ., மற்றும் 0.0033 மி.கி./லீ. முதல் 0.3298 மி.கி./லீ. என விளங்கின. மேற்படி துணை நீரேந்து பரப்பில் மொத்த இடைநிறுத்தப்பட்ட அடைதல் 1.0 மி.கி./லீ. முதல் 810.0 மி.கி./லீ. வரையும், கலங்கற்றன்மை மட்டங்கள் 3.49 NTU முதல் 1126 NTU வரையும் வேறுபட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. இரசாயன ஒட்சிசன் கிராக்கியும், உயிரக இரசாயன ஒட்சிசன் கிராக்கியும் 9.0 மி.கி./லீ. முதல் 54.0 மி.கி./லீ. மற்றும் 1.0 முதல் 24.0 மி.கி./லீ. ஆகியனவற்றுக்கு இடையில் வேறுபட்டிருந்தது. கொத்மலை துணை நீரேந்து பரப்பில் pH, கரைந்த ஒட்சிசன் மற்றும் மின்சாரக் கடத்துதிறன் ஆகியன 5.75 முதல் 7.95, 1.67 மி.கி./லீ. முதல் 11.38 மி.கி./லீ, மற்றும் 7.3 µS வரை 155 µS என விளங்கின. மேற்படி அருவிகளில் பச்சிலைய அடக்கம் 0.008 மி.கி./மீ$^3$ முதல் 52.403 மி.கி./மீ$^3$ இடையில் வேறுபட்டிருந்தது.

உமா ஓயா மற்றும் பதுள்ளு ஓள துணை நீரேந்து பரப்புக்களாகப் பெறப்பட்ட நைத்ரேற், நைத்திரைற், பொஸ்பேற் மற்றும் அமோனியா பெறுமதிகள் முறையே 0.030 முதல் 2.634 மி.கி./லீ., 0.0003 – 0.421 மி.கி./லீ., 0.003 – 0.122 மி.கி./லீ. மற்றும் 0.005 – 2.586 மி.கி./லீ. என விளங்கின. மின்சார கடத்துதிறன் பெறுமதிகள் 61.4µS – 318 µS வரை வேறுபட்டிருந்தது. எனினும், சாராமாறிகள், பிரதானமாக கலங்கற்றன்மை மற்றும் TSS ஆண்டின் சில காலங்களின் போது, விசேடமாக மழைக் காலத்தின் போது உயர்ந்த பெறுமதிகளைப் பதிவு செய்தன. கலங்கற்றன்மை பெறுமதிகள் 1.46 – 706 NTU வரை வேறுபட்டிருந்ததுடன், TSS பெறுமதிகள் 1.50 1025 மி.கி./லீ. வரை வேறுபட்டிருந்தன. கரைந்த ஒட்சிசன் மட்டங்கள் 2.80 – 10.40 மி.கி./லீ. 1025 மி.கி./லீ. வரை வேறுபட்டிருந்தன. துணை நீரேந்துபரப்பில் பெறப்பட்ட பச்சிலைப் பெறுமதிகள் 1.18 – 42.07 மி.கி./மீ $^3$ வரை வேறுபட்டிருந்ததுடன், மேற்பரப்பு நீர் வெப்பநிலைப் பெறுமதிகள் 15.7 – 30.0$^o$C வரை வேறுபட்டிருந்தன.

அடுத்த வருடத்தை நோக்கி ஆய்வு தொடரப்படவுள்ளதாலும், DPSIR வரைசட்டத்துடன் நீரின் தரத்தையும், மற்றும் உயிரியல் கூட்டங்களினதும் தொடர்பில் அவற்றை வரிசைப்படுத்துவதன் மூலம் அருவிகளின் இறுதி மதிப்பீடு முயற்சிக்கப்படும். மேலும் தெரிவுசெய்யப்பட்ட பொதுவான சூழல் தாக்கங்களுக்கான காரணமும், தாக்க உறவும் அடுத்து வரும் ஆண்டில் ஆயப்படும்.

முன்னேற்றம் (%) :-

| | | | | |
|---|---|---|---|---|
| பௌதிக:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 97% |
| நிதிசார்:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 98% |

**கருத்திட்டம் 2**

ஹிக்கடுவை தேசிய பூங்காவினுள் மாசுபடுத்தல் மட்டங்களை ஆய்வதும், முகாமைத்துவ நடைமுறைகள் ஊடாக உருவாக்கப்பட்ட விதந்துரைப்புக்களின் அமுலாக்கத்தில் தாக்கத்தை கொண்டிருந்த மட்டுப்படுத்தல்களையும் மற்றும் அடிப்படையிலான காரணங்களையும் புரிந்துகொள்வதற்காக கடந்த காலத்தில் ஹிக்கடுவை தேசிய பூங்காவுக்காக அமுல்படுத்தப்பட்ட சூழல் முகாமைத்துவ நடைமுறையை மதிப்பாய்வதுமே கருத்திட்டத்தின் நோக்கமாகும். சமுத்திரவியல் பிரிவினதும் மற்றும் முருகை அலகினதும் கூட்டுமுயற்சியுடன் இவ்வாய்வு அமுல்படுத்தப்பட்டது.

ஹிக்கடுவை தேசிய பூங்காவினதும், பூங்காவினுள் வருகின்ற பாரிய வெளிவாயில்களினதும் மேற்பரப்பு நீரின் தரத்தைக் கண்காணித்தல் வட கிழக்கு பருவமழைக் காலத்தை அடக்குவதற்காக 2007 ஜனவரியிலிருந்து மார்ச் வரை 25 மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் மேற்கொள்ளப்பட்டது. மாசுபடுத்தல் முனையின் மூலங்களை மதிப்பிடுவதற்காக ஹிக்கடுவை தேசிய பூங்காவினுள் சட்டவிரோதமான வெளியேற்றங்களின் அளவீடு நடத்தப்பட்டது. ஹிக்கடுவை தேசிய பூங்காவின் அயல்புறத்தில் கழிவு ஒழிப்பினைப் புரிந்துகொள்வதற்காகவும் உல்லாசப்பயண தாபனங்களினுள் கிட்டுகின்ற பரிகரிப்பு வசதிகளையும் புரிந்து கொள்வதற்காகவும் கேள்விக்கொத்து அளவீடொன்று நடத்தப்பட்டது. தமது ஜீவனோபாயத்திற்கு ஹிக்கடுவை தேசிய பூங்கா மீது தங்கியுள்ள சனசமூக உறுப்பினர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக பங்கெடுப்பிலான சனசமூக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. கடந்த காலத்தில் அமுல்படுத்தப்பட்ட விசேட பகுதி முகாமைத்துவ் நடைமுறைகளைப் புரிந்துகொள்வதற்காக இலக்கிய அளவீடு மேற்கொள்ளப்பட்டது. இலக்கிய அளவீட்டின் மீதான அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட முகாமைத்துவ நடைமுறை மீதான மதிப்பாய்வொன்று தயாரிக்கப்பட்டது.

கள மாதிரிப்படுத்தலின் போது முருகை கடல் ஏரியினுள் மணல் படிவின் காரணமாக கடுமையான அடையல் உள்ளதாக அவதானிக்கப்பட்டது. மொத்த இடைநிறுத்தப்பட்ட திண்மங்களும், கலங்கற்றன்மை மட்டங்களும் முருகை கடலேரியினுள்ளும், ஆண்டின் சில மாதங்களின் போது ஹிக்கடுவை தேசிய 'பூங்காவின் அலை உடைவு வலயத்தினுள்ளும் குறிப்பிடத்தக்க விதத்தில் உயர்வானவை என கண்டறியப்பட்டது. இது முருகை கறபார்த் தொடர்களுக்கு அழுத்தமான நிலைமையொன்றாகும். மேலும் அளவீட்டின் போது ஹிக்கடுவை தேசிய பூங்காவினுள் கடந்த தசாப்தத்தில் கடற்கரை கணிசமானளவு விஸ்தரித்துள்ளதாக உள்ளூர் மக்கள் குறிப்பிட்டனர். இது அதிகரித்துள்ள TSS மற்றும் கலங்கற்றன்மை மட்டங்களை உறுதிப்படுத்துகின்றது.

நீரின் தரத்தின் பகுப்பாய்வு முடிவுகளின் பிரகாரம் மேற்பரப்பு நீர் வெப்பநிலை 27.6க்கும் 31.2 $^{o}$Cக்கும் இடையில் வேறுபடுகின்றது. ஆய்வுக்காலத்தின் போது pH மற்றும் கரைந்த ஒட்சிசன் ஆகியவற்றின் மட்டங்கள் முறையே 4.22 முதல் 8.41 மற்றும் 3.07 மி.கி./லீ. முதல் 8.33 மி.கி./லீ. ஆகும். தேசிய பூங்காவில் கலங்கற்றன்மையும் மற்றும் மொத்த இடைநிறுத்தப்பட்ட திண்மங்களும் 0.8 NTU முதல் 17.4 NTU மற்றும் 0.8 மி.கி./லீ. முதல் 148 மி.கி./லீ. வரையாகும். இவை முருகைகளின் உச்சமான வளர்ச்சிக்கான மிகவும் முக்கியமான சாராமாறிகளாகும். உயிரக இரசாயன ஒட்சிசன் கிராக்கி போன்ற மாசுபடுத்தல் சாராமாறிகள் எண்ணெய் மற்றும் கொழுப்பு மற்றும் பச்சிலையப் பெறுமதிகள் முறையே 0.64 மி.கி./லீ. முதல் 54 மி.கி./லீ. வரை, 5 மி.கி./லீ. முதல் 20.5 மி.கி./லீ. வரை மற்றும் 0 (மி.கி./மீ $^3$) முதல் 30.57 (மி.கி./மீ $^3$) வரை என அடையாளம் காணப்பட்டுள்ளது. கண்டறியப்பட்டுள்ள போஷாக்குகளின் மட்டம் மிகவும் குறைந்தபட்சமாகும். நைதரசன் மட்டங்கள் நைரேற்று நைதரசனாகவும் ($NO_3$) 0 மி.கி./லீ. முதல் 0.61 மி.கி./லீ. வரை, நைதரற்று நைதரசனாகவும் ($NO_2$) 0 மி.கி./லீ. முதல் 0.044 மி.கி./லீ. வரை மற்றும் அமோனிய நைதரசனாகவும் ($NH_4$) 0.002 மி.கி./லீ. முதல் 0.477 மி.கி./லீ. வரை எனக் கண்டறியப்பட்டது. பொஸ்பேற்றின் மட்டம் 0.001 மி.கி./லீ. முதல் 0.177 மி.கி./லீ. இடையில் வேறுபட்டிருந்தது.

பிரதானமாக மொத்த இடைநிறுத்தப்பட்ட திண்மங்களினதும், கலங்கற்றன்மை மட்டங்களினதும் மேற்பரப்பு நீர் மாசுபடுத்தலினால் ஹிக்கடுவை தேசிய பூங்கா குறிப்பிடத்தக்களவில் பாதிப்படைந்துள்ளதாக ஆய்வு முடிக்கின்றது. எனவே, ஹிக்கடுவை தேசிய பூங்கா விசேடமாக முருகை கடலேரியினுள் திரண்டுள்ள மணல் துணிக்கைகளை அகற்றுவதில் விசேட கவனம் அவசியமாகும். கருத்திட்ட முடிவுறுத்தல் அறிக்கை வரையப்படுகின்றது.

முன்னேற்றம் (%) :-

| | | | | |
|---|---|---|---|---|
| பௌதிக:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 97% |
| நிதிசார்:- % | திரண்ட இல்க்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 98% |

**கருத்திட்டம் 3**

அவசியமான ஆய்வுக்காக ‘நாரா’வுக்கு அறிக்கையிடப்பட்ட மீன் பலியாதல்கள் மற்றும் மாசுபடுத்தல் போன்ற நீரின் தரத்தின் சம்பவங்கள் தொடர்பில் அவசரகாலச் சூழ்நிலைக்கு ஈடுகொடுப்பதற்காகவும், ஆலோசனை செயற்பாடுகளுக்கும், சோதனைச் சேவைகளுக்கும் வசதிப்படுத்தலை ஏற்படுத்துவதற்காகவும் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. சமுத்திரவியல் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட அழிவு முகாமைத்துவ, முன்கூட்டிய பதிலிறுப்புக் கருத்திட்டத்தின் அங்கமொன்றே இக் கருத்திட்டமாகும்.

ஆண்டின் போது குடிநீரின் தரத்திற்கும், வெளியேற்றப்படும் நீரின் தரத்திற்கும் நீர் மாதிரிகளைச் சோதிப்பதற்காக 7 வாடிக்கையாளர்களுக்கு சோதனைச் சேவை வழங்கப்பட்டதுடன், ரூபா 53,229.00 கொண்ட திரண்ட மொத்தம் ஈட்டப்பட்டது.

இக்காலத்தின் போது கரந்துவ கடலேரியிலும், மொறகல்ல கடற்கரையிலும் பெருந்திரளான மீன் பலியாதலின் இரு சம்பவங்கள் ஆய்வுகளுக்காக முன்வைக்கப்பட்டன. மாத்தறை, கரந்துவ கடலேரியில் நீர் மாசுபடுத்தல் சம்பவங்களும், அடிக்கடி மீன் பலியாதல் சம்பவங்களும் முறையிடப்பட்டுள்ளதாக 2007 மே மாதத்தில் NAQDA பணிப்பாளர் நாயகம் அறிவித்தார். பூர்வாங்க ஆய்வு நடத்தப்பட்டதுடன், அதிகரிக்கப்பட்ட போஷாக்கு மட்டங்கள் அவதானிக்கப்பட்டன. நீரியல் வாழ்க்கையை நிலைத்திருக்க வைப்பதற்கு நீரின் தரம் உகந்தது என பூர்வாங்க ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், முறையிடப்பட்ட அடிக்கடியிலான மீன் பலியாதல்களை ஆய்வதற்கு விபரமான ஆய்வொன்று முன்மொழியப்பட்டது. பேருவளை, மொறகல்ல கடற்கரையில் மீன்பலியாதல் பற்றி மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு 2007 ஜூனில் ஏனைய சம்பவம் முன்வைக்கப்பட்டது. குறைந்த கரைந்த ஒட்சிசன் மட்டங்களின் காரணமாக களுவாமோதர கால்வாயிலேயே மீன் பலியாதல் உண்மையாக இடம்பெற்றதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வெளிப்படுத்தியது. ஹோட்டேல்களிலிருந்தும் வடித்தல் பொறிகளிலிருந்தும் கழிவு நீரின் வெளியேற்றங்களிலிருந்து பலதரப்பட்ட சூழல் அழுத்தங்களுக்கு களுவாமோதர கால்வாயும், மொறகொல்ல கடற்கரையும் உட்படுவதாக ஆய்வு வெளிப்படுத்தியது. இது முறையிடப்பட்ட மீன் பலியாதல் சம்பவத்திற்கு காரணம் கற்பித்திருக்க முடியும்.

**கருத்திட்டம் 4**

பிரிவின் ஆய்வுகூட வசதிகளின் மேம்படுத்தலுக்கு ஈடுகொடுப்பதே கருத்திட்டத்தின் நோக்கமாகும். பாரிய செயற்பாடொன்றாக நிதியங்களின் ஒதுக்கீட்டின் பிரகாரம் 2004 டிசம்பரில் சுனாமியின் விளைவொன்றாக பாழான நிலைமைக்காளாகிய பிரிவின் ஆய்வுகூட உட்கட்டமைப்பு நிலைமையை அடைந்தமையினால் ஆய்வுகூட அலுமாரிகளை மீள்கட்டுவதெனத் திட்டமிடப்பட்டது. இது தொடர்பில் கேள்வி நடைமுறை தொடர்பிலான சகல செயற்பாடுகளும் முடிக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வுகூட அலுமாரிகளை விநியோகிப்பதற்கு கொள்வனவுக் கட்டளை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், ஆண்டின் இறுதிக்கு முன்னர் ஆய்வுகூட அலுமாரிகள் விநியோகிக்கப்பட வில்லை.

முன்னேற்றம் (%) :-

| | | | | |
|---|---|---|---|---|
| பௌதிக:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 70% |
| நிதிசார்:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | |

**கருத்திட்டம் 5**

ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்களை வசதிப்படுத்துமுகமாகவும், ஆய்வுகூடத்தை நிருவகிக்குமுகமாகவும் கொள்வனவுக்காக பெருமளவு உபகரணங்களும், கருவிகளும் அடையாளம் காணப்பட்டன. அவை வருமாறு: காவிச் செல்லக்கூடிய கலங்கற்றன்மை மானி, காவிச்செல்லக்கூடிய நிறமாலை ஒளிப்பட மானி, காவிச்செல்லக்கூடிய கடத்துதிறன் மானி, ஓட்ட மானி, உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமை. இது தொடர்பில் கொள்வனவுக்காக அவசியப்பட்ட கேள்வி நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முன்னேற்றம் (%) :-

| | | | | |
|---|---|---|---|---|
| பௌதிக:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | 70% |
| நிதிசார்:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதிக்கப்பட்ட | |

**வேறு செயற்பாடுகள்:**

இக் காலத்தின் போது நீரியல் வளங்களின் முகாமைத்துவத்தினதும் பேணலினதும் மீது ஆலோசனை வழங்குவதற்காக மத்திய சூழல் அதிகாரசபை மற்றும் கரையோர பேணல் திணைக்களம் ஆகியவற்றினால் நடத்தப்பட்ட EIA மற்றும் IEE கருத்திட்டங்கள் தொடர்பிலான பெருமளவு நோக்கெல்லைக் கூட்டங்களில் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தார்கள்.

- மத்திய சூழல் அதிகாரசபையில் குறுக்கு நாட்டு தயார்நிலை கருத்திட்டம் மீதான கூட்டம்
- சூரிய சக்தி உப்பின் தயாரிப்புக்கான உத்தேசமான கருத்திட்ட முன்மொழிவை கருத்திற்கெடுப்பதற்கான பூர்வாங்க கருத்துப் பரிமாறல் கூட்டம் - புத்தளத்திலும், வனாத்தவிலுவவிலும் வயம்ப சோல்ற்றன்ஸ் (பிறைவேற்) லிமிற்றெற்
- பெரிய தீவில் புழுதிவாசலில் சட்டவிரோதமான உப்பு உற்பத்தி (உப்பளம்) மீதான களச் சோதனை
- கரையோர நீரின் தரத்தைக் கண்காணிக்கும் திட்டம் மீதான கூட்டம்
- காலி துறைமுக EIA கண்காணித்தலின் முன்னேற்றம்
- திருகோணமலை, பிறீமா சிலோன் லிமிற்றெற்றில் உத்தேசமான நில மீட்சிக் கருத்திட்டம்
- சிலாபம் கருக்குப்பாணியில் உத்தேசமான சிறிய சொகுசு ஹொட்டேல் கருத்திட்டம் மீதான சூழல் தாக்க மதிப்பீடு மீதான நோக்கெல்லைக் குழுக்கூட்டம்
- சீதுவையில் உத்தேசமன சொகுசு ஹொட்டேல் கருத்திட்டம் மீது TEC கூட்டம் (கருத்திட்ட இல. 1250)
- உத்தேசமான சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல் லிமிற்றெற் (CPSTL) மீதான களச் சோதனை குறுக்கு – நாட்டு தயார்நிலைக் கருத்திட்டம்
- அம்பலாந்தோட்டையில் மோதரகொடவிலிருந்து பெலிபத்தன்வில கரையோர நெடுகிலும் கார்னெட் மற்றும் இல்மலைனட்டு ஆகியவற்றை அகழ்தல் மற்றும் கனிப்பொருள் பதப்படுத்தல் மீதான EIA
- கரந்துவ கடலேரியில் மீன் பலியாதல் சம்பவத்தின் ஆய்வு
- களுத்துறை மாவட்டத்தில் களுவாமோதர கால்வாயில் மீன் பலியாதல் சம்பவத்தின் ஆய்வு.
- ஓசன் வியூ ரவர்ஸ்சுக்காக கொழும்பு 4, காலி வீதி 602, 606 இலக்கத்தில் உத்தேசமான தொடர்மாடி தொகுதி மீதான நோக்கெல்லைக் குழுக் கூட்டம்
- பிராந்திய துறைமுகமாக காலித் துறைமுகத்தை முன்னேற்றுவது மீதான நோக்கெல்லைக் குழுக் கூட்டம்.
- களுத்துறையில் சொகுசு ஹொட்டேல் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவு மீதான EIA கூட்டம்
- அம்பலாந்தோட்டையில் மோதரகொடவிலிருந்து பெலிபத்தன்வில் கரையோர நெடுகிலும் கார்னெட் மற்றும் இல்மலைனட்டு ஆகியவற்றை அகழ்தல் மற்றும் கனிப்பொருள் பதப்படுத்தல் மீதான EIA கூட்டம்
- நீர்கொழும்பு நீர் கருத்திட்டம் மீதான நோக்கெல்லைக் குழுக் கூட்டம்
- திஸ்ஸமஹரகமவில் சூழலியல் உல்லாசப்பயண ஹொட்டேல் கருத்திட்டம்

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகால திட்டத்தை மீளாய்வு செய்தல் மீதான தேசிய செயலமர்வொன்றிலும், கடலக தீழ்ப்பு தடுப்பு அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களிலும் உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தனர்.

மீன்பிடித்தொழில் துறைக்கான கருத்திட்டங்களை வடிவமைப்பதில் தரத்தை மேம்படுத்துவதற்காக கருத்திட்ட சுற்று முகாமைத்துவத்தில் மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களிலுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சினதும், ஐஸ்லாந்து சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையினதும் கூட்டு முயற்சியுடன் 2007 மே, ஜுன் மற்றும் செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் நடத்தப்பட்ட மூன்று செயலமர்வுகளில் வள நபராக ஆராய்ச்சி உத்தியோத்தர் திரு.என்.சுரேஷ்குமார் பங்கெடுத்தார்.

**வெளியீடுகள்:**

- திருகோணமலையில் கன்னியாவில் சுடுநீர் ஊற்றுக்கள் மீதான கள ஆய்வுகள் மீது உள்ளக அறிக்கை எஸ்.எ.எம்.அஸ்மி, டபிள்யு.டி.என்.விக்ரமஆராச்சி (2007 ஏப்ரல்)

- கரந்துவ கடலேரியில் மீன் பலியாதல் சம்பவம் மீதான கள ஆய்வுகள் மீது உள்ளக அறிக்கை எஸ்.எ.எம்.அஸ்மி, டபிள்யு.டி.என்.விக்ரமஆராச்சி (2007 மே)

# மீன்பிடித் தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திரு.என்.பீ.பி.புண்யதேவ

## 1. 2007ஆம் ஆண்டின் கண்ணோட்டம்

இலங்கையின் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் பாரிய பிறநாட்டுக்குரிய சைபிரினிட்டைச் சுரண்டுவதற்காக பரிசோதனைரீதியிலான மீன்பிடித்தல் உபகரணமொன்றை விருத்தி செய்வதே மீன்பிடித் தொழில்நுட்பப் பிரிவின் உத்தேசமான கருத்திட்டமாகும். சில காலங்களுக்கு முன்னர் பாரிய பல்லாண்டு நீர்த்தேக்கங்களில் MOFARஇனால் பிறநாட்டுக்குரிய பாரிய சைபிரினிட் மீன் இனங்கள் (*Catla catla*) இருப்புச் செய்யப்பட்டன. எனினும், ஆண்டின் குறிப்பிட்ட காலமொன்றின் போது மட்டுமே இம் மீனினங்கள் பிடிக்கப்பட முடியும். மீனவர்களினால் நீர்த்தேக்கங்களில் பயன்படுத்தப்படும் நடைமுறையிலான மீன்பிடித்தல் கருவிகளின் வலைக்கண் அளவுகளும், தொங்குதல் வீதங்களும் நிலைத்திருக்கத்தக்க அறுவடையொன்றுக்கு பொருத்தமானவையல்ல என அவதானிக்கப்பட்டது. மேலும், நடைமுறையிலான வலைகளின் பிடித்தல் செயற்றிறன் போதுமானதல்ல என்பதுடன், இவ் வலைகளிலிருந்து பிடிக்கப்பட்ட மீன்கள் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே, ஆண்டு முழுவதும் இம் மீன் இனங்களைப் பிடிப்பதற்கான தோதான மீன்பிடித்தல் கருவியொன்றை விருத்தி செய்தல் மீனவர்களுக்கு நன்மையானதாக விளங்கும்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

மீன்பிடித்தல் சனசமூகத்தின் பங்கெடுப்புடன் *Catla catla*இன் சுரண்டலுக்காக பரிசோதனைரீதியான மீன்பிடித்தல் கருவியை நிருமாணித்தல். பரிசோதனைரீதியான மீன்பிடித்தல் சோதனைகளினதும், வேறு வர்த்தகப் பிடிகளின் மாதிரிப் பிடித்தலினதும் ஊடாக தரவைச் சேகரித்தல். தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை எழுதுதல்.

| திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் |
|---|---|---|---|---|
| புதிய மீன்பிடித்தல் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் | இலங்கையின் உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் பாரிய வெளிநாட்டுக்குரிய சைபிரினிட்ஸைப் பிடிப்பதற்காக செயற்றிறனான மீன்பிடி உபகரணங்களை விருத்தி செய்தல் | 0.85 மில்லியன | என்.பீ.பி.புண்யதேவ கே.எஸ்.டி.சிந்தக | 2007 ஜனவரி முதல் டிசம்பர் வரை |

## 3. செயற்றிறன்

2007 மே மாதத்தில் கருத்திட்டச் செயற்பாடுகள் (பரிசோதனைரீதியான மீன்பிடித்தல்) ஆரம்பமாகின. இக் கருத்திட்டத்தின் கீழ், பரிசோதனையிலான மீன்பிடித்தல் கருவிகள் நிருமாணிக்கப்பட்டதுடன், சனசமூகப் பங்கெடுப்புடன் மீன்பிடிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனையிலான வலைகளிலிருந்து நீர்த்தேக்கத்தில் பாரிய அளவிலான *Catla Catla* மீன்கள் நிலவியதாக மீன்பிடி அடக்கத்திலிருந்து அவதானிக்கப்பட்டது. பரிசோதனையிலான மீன்பிடித்தல் செயற்பாடுகளிலிருந்து மீன்பிடிக் கருவியிலிருந்து பாரிய *Catla Catla* மீன்களைப் பிடிப்பது போதுமானதல்ல என அவதானிக்கப்பட்டது.

பரிசோதனைரீதியான மீன்பிடித்தல் பகுதியில் *Catla Catla* மீன்களின் கிட்டுந்தன்மை சில காலங்களில் நீர்த்தேக்கத்தின் சூழல் நிலைமையின் காரணமாக மாற்றப்பட்டது. எனவே, பரிசோதனைரீதியான கருவிகளின் பிடித்தல் செயற்றிறன் மோசமானதாகும். எனினும், அதன் செயற்றிறனை உயர்த்துவதற்காக பரிசோதனைக் கருவிக்கான மேலும் திருத்தங்கள் அவசியமானவையாகும்.

முன்னேற்றம் (%) :-

| | | | | |
|---|---|---|---|---|
| பௌதிக:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதனை | 92% |
| நிதிசார்:- % | திரண்ட இலக்கு | 100 % | திரண்ட சாதனை | 108% |

## 4. வெளியீடுகள்

4.1 ஆராய்ச்சி அறிக்கைகள்: ஒன்றுமில்லை
4.2 ஆராய்ச்சிக் கட்டுரைகள்: தயாரிப்பின் கீழ்
4.3 நூலேடுகள்/துண்டுப் பிரசுரங்கள்: ஒன்றுமில்லை

## 5. நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் திட்டங்கள்

சம்பந்தப்பட்ட பகுதிகளின் மீன்பிடித்தொழில் பரிசோதகர்களுடனும், மீனவர்களுடனும் கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. சிலாபத்தில் மீன்பிடித்தல் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக மீன்பிடி சனசமூகத்தின் பங்கெடுப்புடன் பரிசோதனைரீதியான மீன்பிடித்தல் சோதனைகள் நடத்தப்பட்டன.

## நீர்நிலையவியல் பிரிவு- தேசிய நீர்நிலையவியல் அலுவலகம்

**பிரிவுத் தலைவர்:** திரு.எம்.எ.ஆரியவன்ஸ

### 1. ஆண்டின் கண்ணோட்டம்

கப்பல்களின் பாதுகாப்பானதும், செயற்றிறனானதுமான பயணத்திற்கு உதவியளிப்பதற்கான சேவைகளை தேசிய நீர்நிலையவியல் அலுவலகம் வழங்குகின்றது. கடல் அட்டவணைகள், கரையோர வலய முகாமைத்துவத்திற்கான தரவு, சூழல் பாதுகாப்பு மற்றும் வேறு தொடர்பான உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் ஏற்பாடே பிரதான சேவையாகும். கடல்சார் வர்த்தகத்தினதும், வேறு கடல்சார் செயற்பாடுகளினதும் வசதிப்படுத்தல் ஊடாக குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் வர்த்தக நன்மைகளை செம்மையானதும், புதுப்பிக்கப்பட்டதுமான அட்டவணைகளின் ஏற்பாடு வழங்குகின்றது.

2007ஆம் ஆண்டுக்கான தேசிய கோட்டுப்படமிடல் செயல்திட்டத்தின் கீழ், பின்வரும் அளவீடுகள் நடத்தப்பட்டன.

1. சம்பந்தப்பட்ட கரையோரம் நெடுகிலும் காணி அளவீடு உட்பட தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை ஆழவளவிற்குரிய அளவீடு

### 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

**தேசிய கோட்டுப்படமிடல் திட்டம்**

| திட்டம் | கருத்திட்டம் | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் |
|---|---|---|---|
| 1. தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை ஆழவளவிற்குரிய அளவீடு | 1.1 தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை தரவை கையகப்படுத்தல் | எஸ்.ஆர்.சி.ரணவீர ஆர்.எச்.பி.வெலிகொடபிட்டிய (நீர்நிலையவியல் அளவீட்டாளர்) | ஜன. டிச. |
| 2. காணி அளவீடு | 2.1 தங்காலையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை சம்பந்தப்பட்ட காணி அளவீடுகள் | சி.கே.அமரசிங்க (பிரதம காணி அளவையாளர்) | ஜன. டிச. |

### மேலதிகமான திட்டம்

| திட்டம் | கருத்திட்டம் | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் முதல் - வரை |
|---|---|---|---|
| 3. கடற்கரையினீங்குகின்ற புவிநடுக்கத்திற்கான அட்டவணைகளின் தயாரிப்பு மற்றும் ஜனாதிபதியின் குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துப் பரிமாறல்களிலும், கூட்டங்களிலும் பங்கெடுப்பு | DEOCOM கருத்திட்டம் | எம்.எ.ஆரியவன்ஸ எஸ்.டபிள்யு.எஸ்.வீரசிங்க | ஜன. டிச. |

### 3. செயற்றிறன்

**முன்னேற்றம்**

**தேசிய கோட்டுப்படமிடல் திட்டம்**

பௌதீக: 95 நிதிசார்: 100

**கருத்திட்டம் 1.1**

**தரவைக் கையகப்படுத்தல்**

முன்னேற்றம்: (%) பௌதீக: 95

**கருத்திட்டம் 2.1**

**காணி அளவீடுகள்**

முன்னேற்றம்: (%) பௌதீக: 95

## 4. பெறப்பட்ட பயிற்சி/ நடத்தப்பட்ட விழிப்பியல் திட்டங்கள்

**வெளிநாட்டுப் பயிற்சி**

43ஆவது மல்ரிபீம் சொனார் பயிற்சி நெறி, நோர்வே – 01 உத்தியோகத்தர்
45ஆவது மல்ரிபீம் சொனார் பயிற்சி நெறி, அவுஸ்திரேலியா – 01 உத்தியோகத்தர்
நீர்நிலையவியல் தரவு படிநிலைப்படுத்தல் மற்றும் கடலக படம்வரைகலை நெறி, ஐக்கிய இராச்சிய நீர்நிலையவியல் அலுவலகம் - 01 உத்தியோகத்தர்

**விழிப்பியல் திட்டங்கள்**

கடற்படை உத்தியோகத்தர்களுக்கும், மாலுமிகளுக்கும் நீர்நிலையவியல் அளவீட்டிலும் கோட்டுப்பட தயாரிப்பிலும் கிரமமான விழிப்பியல் திட்டங்கள்

## 5. உசாவுகைப் பணியாக பொறுப்பேற்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத செயற்பாடுகள்

(அ) ஹிக்கடுவை மற்றும் புராணவெல மீன்பிடித் துறைமுகத்திற்கான நீர்நிலையவியல் அளவீடு (சேறு வாரலுக்கு முன்னரும், சேறு வாரலுக்கு பின்னரும்)
(ஆ) கெரவலபிட்டியவில் லங்கா ட்ரான்ஸ்போமெஸுக்கு ஆழவளவியலுக்குரிய அளவீடு
(இ) களனி ஆற்றுவாயில் CCDக்கு ஆழவளவியலுக்குரிய அளவீடு
(ஈ) CRMP – கொடவாயவிலும், வெலிபத்தனவிலவிலும் உள்ள இறங்குதுறைக்கு ஆழவளவியலுக்குரிய அளவீடு
(உ) வென்னப்புவவிலிருந்து சிலாபம் வரை CCDக்கு ஆழவளவியலுக்குரிய அளவீடு
(ஊ) திருகோணமலை, கிண்ணியாவில் CCDக்கு ஆழவளவியலுக்குரிய அளவீடு
(எ) ஹிக்கடுவை, பார் கற்பார்த்தொடரில் CRMPக்கு குறிப்பான மிதவைகளை நிறுவுதல்

# உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல்விருத்திப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திருமதி எம்.எச்.எஸ்.ஆரியரத்ன

## 1. ஆண்டின் கண்ணோட்டம்:

சகல நீரியல் செயற்பாடுகள் மீது ஆராய்ச்சியையும் மற்றும் உள்நாட்டு நீரியல் மூலவளங்களின் முகாமைத்துவத்தையும் மேற்கொள்வதற்கான பொறுப்பை உள்ளூர் நீரியல் வளங்கள், நீரியல்விருத்திப் பிரிவு கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டின் போது நீரியல் வள முகாமைத்துவம் மற்றும் நிலைத்திருத்தல் பயன்பாடு ஆகியன மீது 06 கருத்திட்டங்களையும் மற்றும் நீரியல்விருத்தி மற்றும் நீரியல்விருத்தி முகாமைத்துவ அம்சங்கள் மீது 10 கருத்திட்டத்தையும் இப் பிரிவு பொறுப்பேற்றது. பெருமளவு மட்டுப்படுத்தல்கள் இருந்த போதிலும்கூட, பொறுப்பேற்கப்பட்ட சகல செயற்பாடுகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சிப் பணிக்கு வாகனங்கள் இன்மையே மட்டுப்படுத்தலாகும். அடைமழைகளின் காரணமாக இப்பிரிவின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடமும், பொது ஆய்வுகூடமும் பாரதூரமாக சேதமடைந்ததினால் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு பணிகளில் சில முடிக்கப்பட முடியவில்லை. இவ்விரு ஆய்வுகூடங்களின் புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டுள்ளதுடன், ஆண்டின் போது PCR ஆய்வுகூடத்தின் புதுப்பித்தல் முடிக்கப்பட்டது. எனினும், அவசியமான இரசாயனங்களை வழங்குவதில் கொள்வனவு தாமதங்களின் காரணமாக PCR ஆய்வுகூடத்தை தொழிற்படுத்த முடியவில்லை.

இறால் வளர்ப்பு தொழில்நுட்பக் குழு, நீரியல் விருத்தி தொழில்நுட்பக் குழு, முக்கியமான தாவரப் பகுதிகளினதும், அவற்றின் பேணலினதும் மீதான தேசியக் குழு, அலங்கார மீன் உசாவுகைக் குழு ஆகியன உட்பட பெருமளவு முக்கியமான தொழில்நுட்பக் குழுக்களில் பிரிவு பங்கெடுத்ததுடன், பெறுமதியான உள்ளீடுகளை வழங்கக்கூடியதாகவும் விளங்கியது. கரையோரப் பகுதியிலுள்ள நீரியல்விருத்தி விசேடமாக இறால்களைத் தவிர இனங்களின் விருத்தி மீது மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சுக்கு அவசியமான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

ஆராய்ச்சியைப் பொறுப்பேற்பதில் தமது திறன்களை விருத்தி செய்வதற்காக உள்ளூரிலும், ' வெளிநாடுகளிலும் பெருமளவு உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். தனது பிஎச்.டி. ஐ முடித்த பின்னர் உத்தியோகத்தர் ஒருவர் நாடு திரும்பியிருந்தார்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| | கருத்திட்டங்கள் | ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | பொறுப்பான உத்தியோகத்தர் |
|---|---|---|---|
| 3.1.2 | உடவளவை நீர்த்தேக்கத்தில் *Catla catla* மற்றும் வேறு முதன்மையான இனங்களின் இனப்பெருக்க உயிரியலை ஆய்தல் | 0.550 | என்.பீ.பி.புண்யதேவ (கருத்திட்டத் தலைவர்)<br>டி.எ.அத்துகோறள |
| 3.2 | மீன்பிடித்தலுக்கு உச்சமான சுரண்டல் மட்டங்களின் இருப்பினை மதிப்பிடுதலும் நிர்ணயித்தலும் | 0.30 | டி.எ.அத்துகோறள |
| 3.3. | பூர்வீக மீன் இனங்களின் (*Clarias clarias* மற்றும் *Opheocephalus sp.)* தூண்டப்பட்ட வளர்ப்பு | 0.65 | எம்.எச்.எஸ்.ஆரியரத்ன |
| 3.4.1 | இலங்கையில் ஏற்றுமதி முனைப்பிலான அலங்கார மீன் கைத்தொழிலின் உயர்தரத்திலானதும், உயர் கிராக்கியிலுமான கரு இருப்புக்களை விருத்தி செய்தல் | 0.965 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்)<br>கலாநிதி பாலித கித்சிறி<br>பி.பி.எம்.ஹீனட்டிகல<br>ஆர்.ஆர்.எ.ஆர்.ஷிராந்த |
| 3.4.2. | இலங்கையில் ஏற்றுமதி முனைப்பிலான அலங்கார மீன் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உயிர்தீவனத்தின் அதிகரிக்கப்பட்ட பன்னிலையாக்கம் (கடோல்கலெ RRC இல் அடிப்படையிலானது) | 0.320 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்)<br>எம்.கம்மன்பில |
| 3.4.3 | வர்த்தக அலங்கார மீன் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனச்சிகிச்சையளிப்புக்களின் அளவீடும் மற்றும் அவற்றின் செயற்திறனின் தரவுத்தளமொன்றை வகுத்தமைத்தலும். | 0.765 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்)<br>பி.கே.எம்.விஜயகுணவர்தன<br>சி.ஹெட்டிஆரச்சி |
| 3.5 | அலங்கார நீரியல் தாவரங்களின் சூழலியலினதும், இனப்பெருக்க தொழில்நுட்பங்களினதும் மீதான ஆய்வுகள் | 0.25 | எ.எஸ்.எல்.இ.கொரயா |

| | | | |
|---|---|---|---|
| 3.6 | நற்சிரமுள்ள வளர்ச்சிக்கு புத்தளம் கடலேரியின் பொருத்தத் தன்மையை பரிசீலித்தல் (கற்பிட்டி RRCஇல் அடிப்படையிலானது) | 0.55 | பி.எ.டி.அஜித்குமார |
| 3.7.3 | கரு இருப்பு உணவாக கடலக நண்டுகளை பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற உத்தேசமான ஆபத்து மீது விசேட வலியுறுத்தலுடன் *P.mondon*இன் வைரல் பன்னிலையாக் கத்தினதும் WSSVஇன் கிடையானதும் நெடுங்குத்தானதுமான செலுத்துகையின் விஸ்தீரணத்தினதும் மீதான ஆய்வு | 4.5 | பி.கே.எம்.எ. விஜேகுணவர்தன |
| 3.7.4 | இறால் ஆரோக்கியம் மற்றும் சூழல் கண்காணித்தல் | 1.0 | பி.கே.எம்.எ. விஜேகுணவர்தன (கருத்திட்டத் தலைவர்) எ.எஸ்.எல்.இ.கொரயா |
| 3.7.5 | இறால் அடைகாக்குமிடங்களில் இறால் பக்டீரியா நோய் மீதான ஆய்வு மற்றும் தெரிவு செய்யப்பட்ட பக்டீரியா நோய்க்காவிகளுக்கு நோயெதிரி கூருணர்வு சோதனைகள் | 1.45 | பி.கே.எம்.எ. விஜேகுணவர்தன (கருத்திட்டத் தலைவர்) பி.பி.எம்.ஹீனட்டிகல |
| 3.7.6 | பண்ணையிலான இறால் நோய்க்காவிகளை அடையாளம் காணுதல் மற்றும் இழைய நோயியல் ஆய்வு | 1.0 | பி.கே.எம்.எ. விஜேகுணவர்தன (கருத்திட்டத் தலைவர்) சி.ஹெட்டிஆரச்சி |
| 4.4.2 | அருவிகளில் பூர்வீக/பிறநாட்டுக்குரிய/பயமுறுத்தப்படுகின்ற மீன் இனங்களின் அபரிதமானதன்மையையும் நீர் தரத்துடனும், சூழல் காரணிகளுடனும் இனங்களின் இணை உறவினையும் ஆய்தல் | 0.2 | என்.சுரேஷ்குமார் (கருத்திட்டத் தலைவர்) எம்.எச்.எஸ்.ஆரியரத்ன ஆர்.ஆர்.எ.ஆர்.ஷிராந்த |
| 4.5.1 | கரையோர சனசமூகங்களின் வாழ்வாதாரத்தின் மேம்படுத்தலுக்காக நீர்த்தாழை சூழலியல்முறைமைகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியவளம் | 0.65 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்) டி.டி.ஜி.எல்.தஹநாயக்க |
| 4.5.2 | கடல் வனப்பு முகாமைத்துவத்திற்கு மூலோபாயங்களை விருத்தி செய்தல் | 4.46 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்) டி.டி.ஜி.எல்.தஹநாயக்க எ.ராஜசூரிய, எ.பீ.எ.கே.குணரத்ன |
| 4.5.3 | கடோல்கலேயில் நீர்த்தாழை ஒதுக்கின் முகாமைத்துவத்திற்கான மூலோபாயங்களை விருத்தி செய்தல் | 1.04 | கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (கருத்திட்டத் தலைவர்) டி.டி.ஜி.எல்.தஹநாயக்க எம்.கம்மன்பில |

## 1. கூறு 3.1.2: உடவளவை நீர்த்தேக்கத்தில் *Catla catla* மற்றும் வேறு முதன்மையான இனங்களின் இனப்பெருக்க உயிரியலை ஆய்தல்

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- *Catla catla* மற்றும் *Labeo rohita*இன் இனப்பெருக்க உயிரியலின் பின்வரும் அம்சங்களை ஆய்தல்:

  1. முட்டையிடும் பருவத்தின் நேரம் மற்றும் காலம்
  2. வருடாந்த இனப்பெருக்கச் சுற்று
  3. பாலியல் வீதம்
  4. பாலியல் முதிர்ச்சியின் அளவு
  5. கருவுறும்தன்மை
  6. சேர்த்துக் கொள்ளல் முறை

- நீர்த்தேக்கத்தில் பிறநாட்டுக்குரிய சைப்பிரினிட் மீன் மூலவளங்களின் நிலைத்திருத்தலின் உச்ச உபயோகத்திற்கான பொருத்தமான முகாமைத்துவ மூலோபாயங்களைச் சிபார்சு செய்தல்

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

- மீன் முட்டை மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.
- ஆய்வுகூடத்தில் மீன் முட்டைகள் பகுப்பாயப்பட்டன.
- இனப்பெருக்க உயிரியல் சாராமாறிகள் மதிப்பிடப்பட்டன.
- நீரின் தரத்தின் சாராமாறிகள் கண்காணிக்கப்பட்டன.

**முடிவுகள்:**

- மீன் பிடிகளில் மிகவும் முதன்மையான பிறநாட்டுக்குரிய கார்ப் இனங்களாக *Catla catla* விளங்கியது.
- மீன்பிடிகளுக்கு *Catla catla*இன் பங்களிப்பு முன்னர் பதிவு செய்ததைவிட உயர்வானதாகும்.

முன்னேற்றம் (%) பௌதீக: 95% நிதிசார்: 37%

### 3. மட்டுப்படுத்தல்கள்:

களப் பணிக்கு சில மாதங்களில் வாகனங்கள் இருக்கவில்லை.

### 1. கூறு 3.2: மீன்பிடித்தலுக்கு உச்சமான சுரண்டல் மட்டங்களின் இருப்பினை மதிப்பிடுதலும், நிர்ணயித்தலும்

### 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- தெரிவுசெய்யப்பட்ட இரு நீர்த்தேக்கங்களின் மீன்பிடித்தலின் தற்போதைய நிலையை ஆய்தல்
- இரு நீர்த்தேக்கங்களின் மீன் விளைச்சலை மதிப்பிடுதல்
- இரு நீர்த்தேக்கங்களில் மீன்பிடித்தல் தீவிரத்தன்மையை மதிப்பிடுதல்
- நியம இருப்பு மதிப்பீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி, மீன்பிடித்தலுக்கான உச்ச சுரண்டல் மட்டங்களை நிர்ணயித்தல்
- கொள்கை வகுத்தலுக்காக மீன்பிடித்தொழில் அமைச்சுக்கு முடிவுகளை அனுப்பிவைத்தல்

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

- இரு நீர்த்தேக்கங்களின் மீன் நீள அடுக்குநிகழ்வு தரவின் சேகரிப்பு
- இரு நீர்த்தேக்கங்களின் மீன்பிடித் தரவுகளின் சேகரிப்பு
- இரு நீர்த்தேக்கங்களின் மீன்பிடித்தல் முயற்சி தரவுகளின் சேகரிப்பு
- கணனிகளுக்கும், நியம கையிருப்பு மதிப்பீட்டு கருவிகளுக்கும் தரவுகளை ஊட்டுதல்
- பதிவுசெய்யப்பட்ட தரவுகளை குறிப்பிட்ட வகையில் ஏற்பாடு செய்தல்

**முடிவுகள்:**

- பதிவுசெய்யப்பட்ட தரவுகளை குறிப்பிட்ட வகையில் ஏற்பாடு செய்தல் முடிக்கப்பட்டுள்ளது.

  தரவுப் பகுப்பாய்வு நடந்து கொண்டிருக்கின்றது.

முன்னேற்றம் (%) பௌதீக: 94% நிதிசார்: 94%

### 3. மட்டுப்படுத்தல்கள்:

களப் பணிக்கு சில மாதங்களில் வாகனங்கள் இருக்கவில்லை.

### 1. கூறு 3.3: பூர்வீக மீன் இனங்களின் (*Clarias clarias* மற்றும் *Opheocephalus sp.)* தூண்டப்பட்ட வளர்ப்பு

### 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

பருவகால குளங்களிலும்/சிறிய பல்லாண்டு நீர்த்தேக்கங்களிலும் முழுமையான விளைச்சலை (இறுதியான அறுவடை) மேம்படுத்துவதற்காக சேற்றுக் குட்டைகளினதும், சிறிய நாற்றுமேடைகளினதும் ஊடாக பருவகால குளங்களிலும், சிறிய பல்லாண்டு நீர்த்தேக்கங்களிலும் இருப்புச் செய்வதற்காக குஞ்சுகளை உற்பத்தி செய்தல்.

சுதேசிய மீனினங்களை வளர்ப்பதற்காக தூண்டப்பட்ட வளர்ப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

அடைகாக்குமிடத்தின் நிருமாணம் முடிக்கப்பட்டதுடன், *clarus.spp* கருவின் மாதிரிகள் கொண்டுவரப்பட்டன.

**முடிவுகள்:**

1. முன்னேற்றம் (%) பௌதீக: 80% நிதிசார்: 74%

**கருத்திட்டம் மற்றும் கூறு 3.4: ஏற்றுமதி முனைப்பிலான அலங்கார மீன் கைத்தொழிலுக்கு தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்**

**கூறு 3.4.1: இலங்கையில் ஏற்றுமதி முனைப்பிலான அலங்கார மீன் கைத்தொழிலின் உயர்தரத்திலானதும், உயர் கிராக்கியிலுமான கரு இருப்புக்களை விருத்தி செய்தல்**

**2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்**

**நோக்கங்கள்:**

- தெரிவிலான வளர்ப்பு, சூழல் முகாமைத்துவம் மற்றும் உணவூட்டல் மூலோபாயம் ஆகியவற்றின் ஊடாக உட்பிரதேசத்திற்குரியதும் மற்றும் பிறநாட்டுக்குரியதுமான உயர் தரத்திலான கரு இருப்புக்களின் உற்பத்திக்காக தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்.
- பிறநாட்டுக்குரிய மீன்களின் வளர்ச்சியையும், ஏற்றுமதி தரத்தையும் பாதிக்கும் காரணிகளை ஆய்தல்.
- சந்தைக்கு புதிய இனங்களை அறிமுகப்படுத்துதல் (2006இலிருந்து பரிசோதனைகள் தொடருகின்றன).
- ஏற்றுமதிச் சந்தைக்கு அலங்கார மீன்களின் உற்பத்தியை அதிகரித்தல்.
- உள்ளூர் வான் மீன் கையிருப்புக்களை வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் சேமித்தல்.
- புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் கிராமியச் சனசமூகங்களின் வறுமை மட்டங்களைக் குறைத்தல்.
- கைத்தொழிலுக்கு புதிதாக வருபவர்களின் செயற்றிறனை மதிப்பிடுதல்.
- நாட்டில் அலங்கார மீன் வளர்ப்போர் முகங்கொடுக்கும் பிரச்சனைகளை அடையாளம் காணுதல்.
- விசேடமாக களுகங்கை நீரேந்துபரப்புப் பகுதியில் உட்பிரதேசத்திற்குரிய மீன்களின் அபரிதமான தன்மையையும், பங்கீட்டு முறைகளையும் நிர்ணயித்தல்.
- பிடிக்கப்பட்ட வளர்ப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக கரு இருப்பு தரத்தை விருத்தி செய்வதற்கு விருப்புக்குரிய இயற்கை வாழிட தரத்தை அடையாளம் காணுதல்.
- உயர்ந்தளவில் பயமுறுத்தப்படும் உட்பிரதேசத்திற்குரிய மீன் இனங்களின் கரு இருப்புக்களைச் சேகரித்தல்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

1. **சிறைபிடித்து வளர்த்தல்** (செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரை – கலாநிதி எச்.எம்.பி.கித்சிறி)

   அ. சில உட்பிரதேசத்திற்குரியதும், வெளிநாட்டுக்குரியதுமான மீன் இனங்களின் இனப்பெருக்கச் செயற்றிறனை பாதிக்கும் காரணிகள் ஆயப்பட்டன.

2. **மீன் வளர்ப்போரின் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுத்தல்** (திருமதி பி.பி.எம்.ஹீனெட்டிகல)

   அ. அலங்கார மீன் வளர்ப்போர்களிடமிருந்து தரவுகளைச் சேகரிப்பதற்காக கேள்விக்கொத்து விருத்தி செய்யப்பட்டது.

   ஆ. அலங்கார மீன் பண்ணைகளுக்கு கள வருகை தரல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், கேள்விக்கொத்தின் உதவியுடன் மீனவர்களை நேர்முகங்காண்பதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

   இ. அலங்கார மீன் பண்ணைகள் கிட்டுகின்ற மாவட்டங்களில் கள வருகை தரல்கள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு, பொலன்னறுவை, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகியனவே அடக்கப்பட்ட மாவட்டங்களாகும்.

## 3. களத்தின் வள அளவீடு (செல்வி ஆர்.ஆர்.எ.ஆர்.ஷிராந்த)

அ. களுகங்கை நீரேந்துபரப்பில் உட்பிரதேச மீன்களின் பங்கீட்டு தொகையின் அளவுகள் மற்றும் இயற்கை வாழிட விருப்புக்கள் ஆகியன மீதான கள அளவீடு 2007 ஜுலையில் ஆரம்பிக்கப்பட்டது.

ஆ. களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் ஊடாக பாய்கின்ற மொத்தமாக 25 அருவிகள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. மாத்தளை மாவட்டத்திலுள்ள நக்கிள்ஸ் மலைப் பிராந்தியத்தில் உள்ள மொத்தமாக 5 அருவிகளும் அளவீடு செய்யப்பட்டன.

இ. அதே இடத்திலான பார்வையிலான கணக்கெடுப்பினைப் பயன்படுத்தி உட்பிரதேச மீன் இனங்களின் ஒவ்வொன்றின் அண்ணளவான எண்ணிக்கையின் அளவுகள் ஒவ்வொரு அருவியிலும் பதிவு செய்யப்பட்டன.

ஈ. அதேவேளை சில நீர் தர சாராமாறிகளும் வேறு இணை-நிகழ்வு மீன் இனங்களும் பதிவு செய்யப்பட்டன.

### முடிவுகள்:

### அ. வளர்ப்பு

1. ஒஸ்கார் மீன்களின் முட்டைகளின் அடைகாத்தல் வீதமானது 3 ppm மெதலீன் நீலம் மற்றும் 27$^{0}$C நீர் வெப்பநிலையில் முட்டைகள் அடைகாக்கப்பட்டால் மேம்படுத்தப்பட முடியும் என அவதானிக்கப்பட்டது.
2. *Puntius titteya, Puntiys nigrofaciatus* மற்றும் *Puntius cumingii* ஆகியவற்றின் உயர்வான இனப்பெருக்க செயற்றிறன் தும்பு வளர்ப்பு கீழ்ப்படையுடன் அவதானிக்கப்பட்டது.
3. *Moina* போன்ற உயிர்தீவனத்தை வழங்குவதன் மூலம் கோல்ட் மீனினதும், கார்ப் மீன் பறத்தலினதும் உயர்வான வாழ்தகவு சாதிக்கப்பட்டது.

### ஆ. மீன் வளர்ப்போரின் பிரச்சனைகளைக் கவனத்திற்கெடுத்தல்

மீன் வளர்ப்போர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகள் வருமாறு:

- உற்பத்தியின் ஆகுசெலவு (பொலித்தீன், தீவனம் மற்றும் போக்குவரத்து ஆகுசெலவு, சரீரத்தொழில் கட்டணங்கள், சிமெந்து மற்றும் மணல்) அதிகரித்துள்ளது. ஆனால், உற்பத்திக்கு (மீன்கள்) வழங்கப்பட்டுள்ள விலைகள் இன்னுமே மாற்றமடையவில்லை.
- சந்தையைக் கண்டறிவதற்கான கஷ்டம்
- ஏற்றுமதிச் சந்தையில் பிரவேசிப்பதற்கான கஷ்டம்.
- பருவமற்ற காலத்தில் உயிர்வாழ்வதற்கான கஷ்டம்
- சிறந்த தரத்திலான கருக்களை கண்டறிவதில் உள்ள கஷ்டம் மற்றும் உயர்ந்த விலை.
- மீன்களுக்கு சிறந்த தரத்திலான தீவனம் இன்மை.
- நோய் மற்றும் நீரின் தர முகாமைத்துவத்தில் அறிவு இன்மை.
- அரசாங்கத்தின் குறைந்த சம்பந்தம்
- பண்ணைகளை விஸ்தரிப்பதற்கு நிதிசார் ஆதரவை (வங்கிக் கடன்கள்) பெறுவதற்கான கஷ்டம்
- சரீரத்தொழிலாளரைப் பெறுவதில் உள்ள கஷ்டம்.

### இ. களத்தின் வள அளவீடு

தற்போதைய அளவீட்டின் போது ஐந்து வேறுபட்ட குடும்பங்களுக்குச் சொந்தமான 15 வேறுபட்ட உட்பிரதேச மீன்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும், ஹொரணயிலும், களுகங்கை வடிநிலத்தினுள் மத்துகம பகுதியிலும் உட்பிரதேச சைபிரினிட்ஸ் மிகவும் அபரிதமாகவும், பரந்தளவிலும் பங்கிடப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது. இப்பகுதிகளில் உட்பிரதேச Killi மீன்கள் மற்றும் Belontid ஆகியவற்றின் அபரிதமானதன்மையும், பங்கீடும் உயர்வாக விளங்கியதாகக் கண்டறியப்பட்டது. உட்பிரதேசத்திற்குரிய பாம்புத்தலையின் சில இளம் தனிப்பட்டவைகளும் பாதுக்கை பகுதியில் உள்ள சில அருவிகளில் பதிவுசெய்யப்பட்டன. பதுரலியவில் *Rasbora vateriforis*இன் சிறிய துண்டுகளாக்கப்பட்ட எண்ணிக்கைகள் (-1 தனிப்பட்டவை/மீ$^{2}$) இருந்தன. இவை முன்னர் பதிவு செய்யப்பட்டதை விட குறைந்த அபரிதமான தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

களு கங்கை, அபன் கங்கை, மகாவலி கங்கையின் கிளை ஆறுகள் ஆகியவற்றில் *Puntius martenstyni* தனிப்பட்டவைகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை பதிவுசெய்யப்பட்டது. எனினும், *P. srilankensis*இன் எண்ணிக்கையளவு மிக மோசமாக விளங்கியது (0.2 தனிப்பட்டவை/மீ $^2$). இது அதன் குறைந்த அபரிதமான தன்மையைக் காட்டுகின்றது. மாத்தளை மாவட்டத்தில் நக்கிள்ஸ் மலைப் பிராந்தியத்தில் மட்டுமே இது கண்டறியப்பட்டது. இவை ஒப்பீட்டுரீதியில் குளிரான நீர்களையே (18-20°C). விரும்புவதாகக் கண்டறியப்பட்டது.

களுகங்கை வடிநிலப்பகுதியில் ஆயப்பட்ட அருவிகளில் உட்பிரதேச Gobiesஇன் ஏதாவது தனிப்பட்டவைகள் பதிவுசெய்யப்படவில்லை. இது அவற்றின் மிகக் குறைந்த அபரிதமானதன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

பெருமளவு உட்பிரதேசத்திற்குரிய மீன்கள் மிகவும் நிழலிலான மணலிலிருந்து பாறையிலான கீழ்ப்படைகளுக்கான நிழலான அருவிகளையும், சிறந்த கரைந்த ஒட்சிசன் மட்டத்தையும் விரும்பின.

### 3. மட்டுப்படுத்தல்கள்:

- மீன் வளர்ப்புப் குளங்களைப் பராமரிப்பதற்கு சரீரத்தொழிலாளர்கள் இன்மை
- வாகனங்கள் இன்மை
- மழை நிலைமையினதும் மற்றும் பொருத்தமான மீன்பிடித்தல் பொறிகள் கிட்டாமையினதும் காரணமாக சில பகுதிகளில் பொருத்தமான மாதிரிப்படுத்தலை மேற்கொள்ள முடியவில்லை.
- நடைமுறையிலான நோய்களின் நிலைமையின் காரணமாக நொவம்பரிலிருந்து டிசம்பர் வரை மாதிரிப்படுத்தலும், கருக்களின் சேகரிப்பும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

முன்னேற்றம் (%) பௌதீக: 85% நிதிசார்: 100%

## கூறு 3.4.2. இலங்கையில் ஏற்றுமதி முனைப்பிலான அலங்கார மீன் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உயிர்தீவனத்தின் அதிகரிக்கப்பட்ட பன்னிலையாக்கம்

**நோக்கங்கள்:**
அலங்கார மீன் கைத்தொழிலில் *Moina micrura* என்ற உயர்ந்த போஷாக்கிலான உயிர் தீவன இனங்களின் பெரும் உற்பத்தியின் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

- *Chlorella* sp. மற்றும் *Tetraselmis* sp. ஆகிய நுண் சாதாழையின் உட்புறத்திலான வளர்ப்பு.
- *Chlorella* sp. என்ற நுண் சாதாழையின் வெளிப்புறத்திலான வளர்ப்பு.
- நுண் சாதாழையையும், சேதனப் பசளையையும் பயன்படுத்தி *Moina micrura*இன் பெரும் உற்பத்தியின் ஒப்பீட்டுரீதியான ஆய்வு.
- நீரின் தர சாராமாறிகளைக் கண்காணித்தல்
- கடோல்கலே RRCஇல் சாதாழை வளர்ப்பு அலகை விருத்தி செய்தல்

**முடிவுகள்:** *Chlorella* sp. என்ற ஒற்றைக் கலத்திலான நுண் சாதாழையுடன் உணவூட்டப்பட்ட ஊடகத்தில் பெறப்பட்ட *Moina micrura* என்ற நீர்த்தெள்ளின் குறிப்பிடத்தக்க உயர்வான அடர்த்தி (6.5 கலங்கள்/மி.லீ.) பெறப்பட்டது. அசேதன உர ஊடகத்துடன் நுண் சாதாழை துரிதமான இனப்பெருக்கத்திற்கும் *Moina*இன் வளர்ச்சிக்கும் சேதன மாட்டு பசளையை விட மிகவும் பொருத்தமானது என தற்போதைய ஆய்வு எடுத்துக்காட்டியது.

முன்னேற்றம் (%) பௌதீக : 75% நிதிசார்: 81%

**மட்டுப்படுத்தல்கள்**:
கடோல்கலே/RRCஇல் குளத்தின் நிருமாணத்தில் தாமதம்.

## 1. கூறு 3.4.3 வர்த்தக அலங்கார மீன் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் இரசாயன சிகிச்சையளிப்புக்களின் அளவீடும் மற்றும் அவற்றின் செயற்றிறனின் தரவுத்தளமொன்றை வகுத்தமைத்தலும்.

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

வர்த்தக அலங்கார மீன் பண்ணைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள் மீதான தரவுத் தளமொன்றை விருத்தி செய்தல்

நீரியல்விருத்தியில் இரசாயனச்சிகிச்சையளிப்புக்களின் செம்மையான உபயோகத்திற்கு மூலோபாயங்களை சிபார்சு செய்தல்

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்:**

1. கேள்விக்கொத்தின் தயாரிப்பு
   விசேடமாக தமது பண்ணைகளில் பதிவுசெய்யப்பட்ட நோய்கள் பற்றியும், சிகிச்சையளிப்புகளாக அந் நோய்களுக்குப் பயன்படுத்தப்பட்ட இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள் பற்றியும் அலங்கார மீன் பண்ணை உரிமையாளர்களிடமிருந்து தகவலைப் பெறுவதற்காக கேள்விக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டது.

2. தரவுகளைப் பெறுதல்
   கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், பொலன்னறுவை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலுள்ள சுமார் 125 அலங்கார மீன் பண்ணைகளுக்கு வருகைதரப்பட்டதுடன், கேள்விக்கொத்தை நிரப்புவதற்கு தகவலும் பெறப்பட்டது. சில பண்ணைகளில் குறிப்பிட்ட நோய்க்குணங்குறிகள் அடையாளம் காணப்பட்ட போது, மேலும் பகுப்பாய்வுக்காக மீன் மற்றும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டன.

3. தரவுத்தளத்தை தயாரித்தல்
   கள சுற்றுப்பயணங்களின் போது பெறப்பட்ட தகவல் மீதான அடிப்படையில் வர்த்தக அலங்கார மீன் பண்ணைகளில் பயன்படுத்தப்பட்ட இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள் தொடர்பில் தரவுத்தளமொன்று தயாரிக்கப்பட்டது. அது பின்வருவன தொடர்பான தரவுகளை உள்ளடக்குகின்றது.

   அ. அலங்கார மீன் பண்ணைகளில் முறையிடப்பட்ட நோய்கள் மற்றும் அந்நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள்

   ஆ. ஒவ்வொரு இரசாயனச்சிகிச்சையளிப்புக்கும் பிரயோகிக்கப்பட்ட மருந்தளவு, காலம், மற்றும் முறை

   இ. இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள் நோய்க்காப்பாகவா அல்லது சிகிச்சைக்குரிய சிகிச்சையளிப்புக்களாகவா பயன்படுத்தப்பட்டன?

   ஈ. இரசாயனச்சிகிச்சையளிப்புக்களின் செயற்றிறன்

4. மாதிரிகளின் பகுப்பாய்வு
   முறையிடப்பட்ட நோய்க்குணங்குறிகளுடன் (அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணப்படாத நோய்கள்) பண்ணைகளிலிருந்து மீன் மாதிரிகளும், நீர் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டதுடன், அவை மேலும் ஆய்வுகூடத்தில் பகுப்பாயப்பட்டன. 'கார்ப் நித்திரை நோய்', மைக்ரோபக்டீரியோசிஸ் போன்ற பக்டீரியா நோய்கள் மற்றும் 'வெள்ளைப் புள்ளி நோய்' போன்ற ஒட்டுண்ணி நோய்கள் ஆகியவற்றை அடையாளம் காணப்பட்ட மீன் நோய்கள் உள்ளடக்குகின்றன.

முன்னேற்றம் (%) பௌதீக: 90% நிதிசார்: 13%

## 3. மட்டுப்படுத்தல்கள்:

IARADஇன் வேறு தொடர்பான கருத்திட்டங்களுடன் களச் சுற்றுப்பயணங்கள் இணைக்கப்பட்டுள்ளதனால் நிதிசார் முன்னேற்றம் குறைவானதாகும். பாரிய அளவிலான மீன் பண்ணைகளுக்கு வெளியிலிருந்து வளர்ப்போர்களாக பணியாற்றுகின்ற பெருமளவிலான சிறு அளவிலான அலங்கார மீன் வளர்ப்போர் மீன்களின் நோய்கள் பற்றியும், பயன்படுத்தப்படும் இரசாயனச்சிகிச்சையளிப்புக்கள் பற்றியும் போதியளவு

அறிவையே கொண்டிருந்தார்கள். கேள்விக்கொத்தை நிரப்புவதற்கு தரவுகளைப் பெறும் போது இந் அறிவின்மையானது கட்டுப்பாடாக விளங்கியது.

## 1 கருத்திட்டம் 3.5 அலங்கார நீரியல் தாவரங்களின் சூழலியலினதும், இனப்பெருக்க தொழில்நுட்பங்களினதும் மீதான ஆய்வுகள்

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

1. அலங்கார நீரியல் தாவரங்களின் சூழலியலையும், வளர்ச்சி நிலைமைகளையும் மற்றும் கிட்டுகின்ற மூலவளத்தையும் மற்றும் அவற்றின் இயற்கையான வாழ்வுக்கான பயமுறுத்தல்களையும் ஆய்தல்.
2. வர்த்தகரீதியில் முக்கியமான நீரியல் தாவரங்களின் பெரும் உற்பத்திக்கான குறைந்த ஆகுசெலவிலான தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் மற்றும் குறைந்த ஆகுசெலவிலான முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிச் சந்தைக்கு பொருத்தமாக அவற்றின் தரத்தை மேம்படுத்துதல்.

**செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்:**

1. தாவரங்களின் வளர்ச்சி நிலைமைகள் மற்றும் சூழலியல்.
2. வெளிநாட்டுக்குரிய தாவரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வேறுபட்ட உரங்களைப் பயன்படுத்தி வளர்க்கப்பட்டன. உரங்களுக்கு இடையில் குறிப்பிடத்தக்க தாக்கம் அவதானிக்கப்படவில்லை. ஆனால், சில உரங்கள் நத்தை தாக்குதல்களை அதிகரித்தன.
3. கள ஆய்வுகளுக்காக வாகனங்கள் கிட்டுதலின் மீது சுதேசிய தாவரங்களுக்கான களத்தில் நிலைமைகளின் ஆய்வு தங்கியிருந்தது. *Nymphea*இன் சில இனங்கள் *Eichornia* மற்றும் *Hydrilla* போன்ற நீரியல் களைகளிலிருந்து அழுத்தத்தை தாக்குப்பிடிக்கக்கூடியதாக இருந்தன என அவதானிக்கப்பட்டது.
4. களப்பணிக்கு கிட்டுகின்ற வாகனத்தைப் பொறுத்து 'நாரா'வுக்கு இரு புதிய இனங்கள் (ஒரு உட்பிரதேசத்திற்குரிய இனம்) அறிமுகப்படுத்தப்பட்டன.
5. தேசப் படங்களினதும், சிற்றேடுகளினதும் தயாரிப்பு
6. 1 : 50000 தாள் மீது பொலன்னறுவை தாவரப் பங்கீடு மீதான தேசப்படங்கள் முடிக்கப்பட்டுள்ளதுடன், இலக்கரீதியான தேசப்படமொன்றில் அமைக்கப்படவுள்ளன. 1 : 50000 தாளொன்றின் மீது அம்பாறையில் உள்ள தாவரங்கள் பதியப்பட்டன. கடுமையான மழையினால் விளைந்த சேதத்தின் காரணமாக சிற்றேடுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட விடயதானம் தொலைந்துள்ளதுடன், தற்போது பொலன்னறுவை பகுதியிலுள்ள தாவரங்கள் மீது புதிய விடயதானம் தயாரிக்கப்படுகின்றது.

   **தரவுச் சேகரிப்பு மீது உதவி அரசாங்க அதிபருடன் கருத்துப்பரிமாறல்**
   இச் செயற்பாட்டுக்கு காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்கள் ஏதாவது பதிலிறுப்பைக் காட்டவில்லை. குருநாகல் மாவட்டத்தில் உள்ள சில உ.அ.அ. பிரிவுகள் சில தரவுகளை வழங்கின. ஆனால், ஆழமாகச் செல்வதற்கு போதிய நேரம் இருக்கவில்லையென அவை அறிவித்தன. நீரியல் தாவரங்கள் எங்கு அவதானிக்கப்பட முடியும் என்பதற்கான இடங்களின் பட்டியலொன்றையும், நீரியல் களைகள் எங்கு அவதானிக்கப்பட்டன என்பதற்கான இடங்களின் பட்டியலையும் அவை வழங்கின.

   **ஏற்றுமதி முனைப்பிலான தாவரங்களின் தரத்தை மேம்படுத்துதல்**
   பெரிய இலைகளுடனான இனங்களில் நத்தைகளைக் கட்டுப்படுத்துவதில் சிறிய அளவிலான செப்பு சல்பேற்றின் உபயோகம் உதவியளித்தது. ஆனால், சிறிய அல்லது பிரிந்துள்ள இலைகளுடனான தாவரங்கள் இரசாயனத்தின் உபயோகத்தினால் பாதிக்கப்பட்டன. உப்பின் உபயோகம் மிகவும் வெற்றிகரமானதாக இருக்கவில்லை. ஏனெனில் நீண்ட காலமொன்றுக்கு உயர்ந்தளவிலான மருந்தளவுகள் அவசியப்பட்டன. இவை தாவரங்களையும் பாதித்தன.

## 3. மட்டுப்படுத்தல்கள்:

**கள ஆய்வுகளுக்கு வாகனங்கள் இன்மை**
பரிசோதனைகளுக்கு அவசியமான இரசாயனங்களும் மற்றும் வேறு சாதனங்களும் இருக்கவில்லை.
கடுமையான மழைகளினால் விளைந்த சேதத்தின் பின்னர் பழுதுபார்த்தல்களில் தாமதங்கள்.
இவையே பாரிய மட்டுப்படுத்தல்களில் சிலவாகும்.

முன்னேற்றம் (%)　　பௌதீக: 80%　　நிதிசார்: 99%

1. **கருத்திட்டம் 3.6**

**கூறு 3.6: புத்தளம் கடலேரியில் அறிமுகப்படுத்தப்பட்ட கடல்களையான *Kapphycus alvarezii* (cottanii) வளர்ச்சிக்கான சாத்தியவளம்**

கடற்களை வளர்ப்பு சிறந்த சந்தைக் கிராக்கியைக் கொண்டுள்ளது. ஆனால், இலங்கையில் அது பிரசித்தமான நீரியல் நடைமுறையல்ல. cottanii என்ற இந்த மிகவும் உலக பிரசித்தமான கடற்களை இனங்கள் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, இலங்கையில் கடற்களை வளர்ப்பை பிரசித்தப்படுத்தும் குறிக்கோளுடனும், ஏற்றுமதி முனைப்பிலான நீரியல்விருத்தி நடைமுறையொன்றாக இவ்வினங்களை அறிமுகப்படுத்துவதற்கும் வளர்ப்பு சோதனைகளுக்காக *Kappalycus alvarezii* (cottanii) அறிமுகப்படுத்தப்பட்டது.

**செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்:**

இலக்கிய அளவீடு, அவசியப்பட்ட பொருட்களின் கொள்வனவு, அமைவிடங்களின் அளவீடு, கடற்களைகளின் சேகரிப்பு, சோதனைகளை நடத்துதல், செயலமர்வுகளை நடத்துதல், ஆராய்ச்சியை அறிக்கையிடுதல் மற்றும் கையேடு ஒன்றைத் தயாரித்தல் ஆகியனவே திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாகும்.

கற்பிட்டி பிராந்திய நிலையத்தில் நாற்றுமேடைப் பாத்திகளில் 2 வெளிநாட்டுக்குரிய கடற்களை இனங்களும், 2 உள்ளூர் இனங்களும் வளர்க்கப்பட்டன. ஏதாழையில் (கற்பிட்டி RRCஇலிருந்து 20 கி.மீ. தூரத்தில்) வளர்ச்சிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சாதகமற்ற நிலைமைகளின் காரணமாகவும், வளர்ப்பதற்கு தெரிவுசெய்யப்பட்ட இனப்பெருக்கிகள் மிகவும் முதிர்ச்சியானவை என்ற காரணமாகவும் சில குட்டையாக விளங்கின. ஏதாழையில் வளர்ச்சி வீதம் குறைவானதாகும் (30%). ஆனால், கடற்களை சிறந்த ஆரோக்கியத்துடன் விளங்கியது.

பனி-பனிநோய் (அழுகுதல்) மேலென்பு முளைகளினாலும், மீன் தாக்குதல்களினாலும் கடற்களைகள் பாதிக்கப்பட்டன. இளமையிலான கிளி மீன், முயல் மீன் மற்றும் சேர்ஜன் மீன் ஆகியன 0.5 மீ. குறைவான ஆழத்தில் கடற்களையை (50–80%) நுகர்வதாக அவதானிக்கப்பட்டது.

சகல அழுகிய தண்டுகளை அறுவடை செய்த பின்னர் வெளித்துணிக்கைகள் அகற்றப்பட்டதுடன், கடல் நீரேரி நீருடன் கழுவிய பின்னர் நிலத்தடி மட்டத்தில் கடற்களைகள் காயவிடப்பட்டு, களஞ்சியப்படுத்தப்பட்டன.

**மட்டுப்படுத்தல்கள்:**

1. இலங்கையில் கடற்களை வளர்ப்பு மீதான தற்போதைய அறிவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் அவசியமானதாகும்.
2. பணிக்கு ஆதரவளிப்பதற்காக கற்பிட்டியில் ஆராய்ச்சி உதவியாளர் இருக்கவில்லை.
3. அரசாங்க நிறுவனங்களினதும், அரச சார்பற்ற தாபனங்களினதும் மத்தியில் தொடர்பாடலும், சிறந்த புரிந்துணர்வும் குழாம் பணியை இயலச் செய்யும்.
4. வாகனமும், படகு எஞ்சினும் கிடைக்காமையினால் அது நிலையப் பகுதிக்கு வெளியே வளர்ப்பு சோதனைகளை ஒன்றுதிரட்டுவதை மட்டுப்படுத்தியது.
5. கடற்களைகளைக் கையாள்வதிலும், களஞ்சியப்படுத்துவதிலும் பதப்படுத்துவதிலும் குளிரூட்டிகளும், சூட்டடுப்புகளும் இல்லாமையினால், அவை பிரச்சனைகளை விளைவித்தன.

முன்னேற்றம் (%)　　பௌதீக: 90%　　நிதிசார்: 60%

## 1. கருத்திட்டம் 3.7 இறால் ஆரோக்கிய முகாமைத்துவக் கருத்திட்டம்

**கூறு 3.7.3: கரு இருப்பு உணவாக கடலக நண்டுகளைப் பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற உத்தேசமான ஆபத்து மீதான விசேட வலியுறுத்தலுடன் *P.mondon*இன் வைரல் பன்னிலையாக்கத்தினதும், WSSVஇன் கிடையானதும் நெடுங்குத்தானதுமான செலுத்துகையின் விஸ்தீரணத்தினதும் மீதான ஆய்வு**

**பொறுப்பதிகாரி:** பி.கே.எம்.விஜேகுணவர்தன

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- இறால் அடைகாக்குமிடங்களில் *P.monodon*இன் வேறுபட்ட வாழ்க்கைக் கட்டங்களின் வைரல் பன்னிலையாக்கத்தை ஆய்வு செய்தல் அத்துடன் அவ்வாறாக நோயின் கிடையான செலுத்துகையின் அளவை மதிப்பாய்தல்
- இறால் பண்ணைக் கைத்தொழிலில் தாக்கத்தைக் கொண்டுள்ள உத்தேசமான காவிகளின் பன்னிலையாக்கத்தை மதிப்பாய்வதற்காக WSSVக்கும் மற்றும் வேறு வைரசுகளுக்கும் வான் கிரத்தியேன்கள் (வெளியே வளர்ப்பவைகளைச் சுற்றியுள்ள உயிரினங்கள்) திரையிடுதல்.
- நண்டு தசையுடன் கருக்களை குஞ்சுகளுக்கு உணவூட்டுவதன் மீது சிபார்சுகளை வகுத்தமைப்பதற்காக கரு இருப்புக்காக தொற்றப்பட்ட நண்டின் தசையை ஊட்டுவது ஊடாக WSSVஇன் கிடையான செலுத்துகையின் சாத்தியத்தை ஆய்தல் (அடுத்த வருடம்).
- பரிசோதனைரீதியான தொற்றுதல் பரீட்சை ஒன்றுடன் கரு இருப்பு தீவனம் ஊடாக கிடையான செலுத்துகையின் முடிவுகள் செல்லுபடியாக்கப்படும் (அடுத்த வருடம்).

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

- வான், அடைகாப்பிடங்கள் மற்றும் பண்ணைகள் ஆகியவற்றில் மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.
- இரசாயனங்கள், சாதனங்கள் மற்றும் பாவனைக்குரியவை ஆகியவற்றின் கொள்வனவுக்கான கேள்வி மதிப்பாய்வு முடிக்கப்பட்டுள்ளதுடன், கொள்வனவு நடந்து கொண்டிருக்கின்றது.
- PCR ஆய்வுகூடத்தின் உட்கட்டமைப்பை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன், 2004இல் சுனாமியினால் (சுனாமியின் பின்னர் பல ஆண்டுகளாக இந்த ஆய்வுகூடம் தொழிற்படவில்லை) பாரதூரமாகப் பாதிக்கப்பட்ட ஆய்வுகூட அலுமாரிகள், நீர் முறைமைகள், காற்றுச்சீராக்கிகள் மற்றும் மின்சார விநியோகம் ஆகியவற்றை அமைப்பதை பணி உள்ளடக்கியது. கோரப்பட்ட கொள்வனவுகள் முடிக்கப்பட்ட உடனேயே ஆய்வுகூடப் பணி ஆரம்பமாகும்.

**முடிவுகள்:**

பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், இது இரு வருட கருத்திட்டம் என்பதனால் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் 2008இல் பகுப்பாயப்படும்.

முன்னேற்றம் (%) பௌதீக: 85% நிதிசார்: 2%

## 3. மட்டுப்படுத்தல்கள்:

பகுப்பாய்வுக்கு இக்கருத்திட்டத்திற்கு PCR ஆய்வுகூடமொன்று அவசியமானதாகும் என்பதுடன், 2004இல் சுனாமியின் காரணமாக இது அழிவடைந்தது. கருத்திட்டத்தை மேற்கொள்வதற்கு இது தொழிற்படும் நிலைமையில் இருக்கவில்லை. எனவே, வசதியை மீள் ஒழுங்குபடுத்துவதற்கு கருத்திட்டத்தின் முதலாவது ஆண்டு பயன்படுத்தப்பட்டது. அத்துடன் பணியை மேற்கொள்வதற்கு அவசியமான சாதனங்களும், இரசாயனங்களும் கிடைக்கவில்லை.

1. கூறு: 3.7.4 இறால் ஆரோக்கியம் மற்றும் சூழலைக் கண்காணித்தல்

2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

இறால் வளர்ப்பினால் விளைந்துள்ள குறிப்பான சூழல் பிரச்சனைகளை அடையாளம் காண்பதும், தீர்வுகளைக் காண்பதும், வளர்க்கப்பட்ட இறாலில் சிறந்த ஆரோக்கியத்தைப் பராமரிப்பதற்காக இறால் வளர்ப்பின் மூலம் வளர்ப்பு குளங்கள் மற்றும் வெளியேற்றங்கள் ஆகியவற்றில் நீர் உயிரியல் சாராமாறிகளை ஆய்வதும், மற்றும் இறால் கைத்தொழிலுக்கு புதிய சேர்ப்புக்களையும் மற்றும் கைத்தொழிலினதும் அத்துடன் சூழவுள்ள கரையோர சூழலினதும் மீது அவற்றின் தாக்கத்தையும் ஆய்வதுமே பிரதான நோக்கங்களாகும்.

**செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்:**

மாதாந்தம் வளர்ப்புக் குளங்களிலும், கழிவுக் கால்வாய்களிலும், மற்றும் பொங்குமுக முறைமையிலும் நீர் மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன. சில வேளைகளில் நைத்திரைற்றினதும், அமோனியாவினதும் உயர்வான ஏற்றங்கள் அவதானிக்கப்பட்டன. குளங்களின் தயாரிப்புக் காலங்களின் போது, பொங்குமுக முறைமையில் மீன் பலியாதல் குறித்து அவதானிக்கப்பட்டது. மழைகளின் பின்னர் பெருமளவு பிரச்சனைகள் பதிவு செய்யப்பட்டன. இரண்டாவது சுற்றின் போது பொங்குமுக முறைமையில் உவர்த்தன்மை, pH, நைத்திரைற்று ஆகியன தொடர்பில் நீரின் தரத்தில் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதுடன், இவை வளர்க்கப்பட்ட இறால்களை மறுதலையாகப் பாதித்திருக்கக்கூடும்.

சூழல் மாற்றங்கள், இறால்களின் ஆரோக்கியம் மற்றும் வளர்க்கப்பட்ட இறால்களின் பௌதீக அவதானிப்பு அத்துடன் நோய் பரவல் மீதான தகவல் ஆகியன மீது தரவுகள் சேகரிக்கப்பட்டன. சில குளங்களில் வளர்ச்சி குன்றல் குறைந்த தீவன நுகர்வு, சாதாழையை விருத்தி செய்வதில் பிரச்சனைகள், சோம்பல்தனமான இறால் மற்றும் சில கறுத்த மீன்பூவுரு நிலைமைகள் ஆகியன அவதானிக்கப்பட்டன. முதலாவது சுற்றின் போது தென் டச்சு கால்வாயிலும், முந்தல் பகுதிகளிலும் அறுவடை செய்யப்பட்ட குளங்களில் இறந்த இறால்கள் அவதானிக்கப்பட்டன. WSSV தொற்றுதல் உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது சுற்றின் ஆரம்பப் பகுதியின் போது முந்தலின் தெற்குப் புறத்தில் தொழிற்படும் பண்ணைகள் WSSVஇனால் பாதிக்கப்பட்டிருந்தன. மழைகளின் ஆரம்பத்துடன் சூழல் மாற்றங்கள் மோசமான ஆரோக்கியத்திற்கு பங்களித்ததுடன், இது ஏதாவது வேறு நோய் நிலைமையின் விளைவொன்றாகவும் இருக்கலாம்.

2007இன் போது இறால் பண்ணைகளில் பயன்படுத்தப்பட்ட செயற்கைச் சேர்ப்புக்கள் மீதான தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. குளங்களின் தயாரிப்பின் போது அவற்றைப் பரிகரிப்பதற்காக பெருமளவு வளர்ப்போர்களினால் பயன்படுத்தப்பட்ட இரசாயனம் நோய்கள் ஏற்பட்ட போது குளங்களில் இறால்களைக் கொல்வதற்கு பயன்படுத்தப்பட்ட அதே இரசாயனமாகும். இரசாயனத்தை அடக்கியுள்ள விடுவிக்கப்பட்ட நீர் கழிமுக முறைமையில் மீன் பலியாகுவதில் விளைந்திருக்கக்கூடும்.

கழிமுக முறைமையில் உயிரகப்பன்னிலையாக்கம் வானில் பிடிக்கப்பட்ட கிரத்தியேன்கள் மற்றும் WSSVக்கான நண்டு வளர்ப்புக் குளங்கள் ஆகியன மீதான தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அண்டியிருந்த பகுதிகளில் உள்ள பண்ணைகளில் WSSVஇன் (PCR சோதித்தல்) முன்னரும், அதன் போதும் மற்றும் பின்னரும் WSSVக்காக குளங்களிலிருந்து வளர்க்கப்பட்ட நண்டு (sp – *Scylla serrata*) மறுதலையாக விளங்கியது என முடிவுகள் காட்டின. கழிமுக முறைமையில் இறாலின் வர்த்தகரீதியில் முக்கியமான நான்கு இனங்கள் கண்டறியப்பட்டன. வான் பிடி இறால் மாதிரிகளிலிருந்து WSSVக்கு *Penaeus monodon* மட்டுமே சாதகமாக விளங்கியதுடன், இது அண்டியுள்ள பகுதிகளில் நோய் வெளிப்பட்ட போதே இடம்பெற்றது.

முன்னேற்றம் (%) பௌதீக: 75% நிதிசார்: 60%

1. கூறு: 3.7.5 இறால் அடைகாக்குமிடங்களில் இறால் பக்டீரியா நோய் மீதான ஆய்வு மற்றும் தெரிவு செய்யப்பட்ட பக்டீரியா நோய்க்காவிகளுக்கு நோயெதிரி கூருணர்வுச் சோதனைகள்

2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- இறால் அடைகாக்குமிடங்களில் நோய்க்காவி பக்டீரிய தாவரவினங்களை அடையாளம் காணுதல்.

- பக்டீரியாவைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போது பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைமைகளின் பயனை மதிப்பாய்தல்.
- இறால் அடைகாக்குமிடங்களில் இரசாயனச் சிகிச்சையின் தற்போதைய உபயோகத்தின் தரவுத்தளமொன்றை விருத்தி செய்தல்
- இந்த ஔடதங்களில் பயனை மதிப்பாய்தல்.
- வேறுபட்ட நோய்க்காவி பக்டீரியா இனங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மிகவும் பொருத்தமான நுண்ணுயிர்க்கொல்லியை மதிப்பாய்தல்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கருத்திட்டத்தின் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுப் பணியை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி உதவியாளர் பயிற்றுவிக்கப்பட்டார்.
- இரசாயனங்களினதும், பாவனைக்குரியவைகளினதும், சாதனங்களினதும் கொள்வனவு மீதான பணி முடிக்கப்பட்டுள்ளது.
- அடைகாப்பிடங்களிலிருந்து அவசியப்பட்ட தரவுகளைச் சேகரிப்பதற்காக கேள்விகள் விருத்தி செய்யப்பட்டன.
- வேறுபட்ட சிகிச்சையளிப்பு முறைமைகளைப் பயன்படுத்தி அடைகாப்பிடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள் பக்டீரியாவின் பிரசன்னத்திற்காக பகுப்பாயப்பட்டன.
- பருவகால மழைகளின் காரணமாக பிரிவின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் சேதமடைந்ததுடன், ஆய்வுகூடத்திலுள்ள உபகரணங்களும் சேதமடைந்தன. ஆகவே, கருத்திட்டத்தின் பகுப்பாய்வுப் பணி அட்டவணைப்படுத்தப்பட்டவாறு மேற்கொள்ளப்பட முடியவில்லை. எனினும், அடைகாப்பிடங்களில் வேறுபட்ட சிகிச்சையளிப்புக்களுக்கு (UV, குளோரினேற்றம் மற்றும் வடிப்பு) உட்பட்ட நீரின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டதுடன், கிட்டிய வசதிகளுடன் நுண்ணுயிரியல் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது.

**முடிவுகள்:**

- சில அடைகாக்குமிடங்களில் UV பரிகரிக்கப்பட்ட நீரில் பக்டீரியாக்கள் பதிவுசெய்யப்பட்டன.

முன்னேற்றம் (%) பௌதீக: 60% நிதிசார்: 05%

## 3. மட்டுப்படுத்தல்கள்:

- ஆய்வுகூடப் புதுப்பித்தல் பணியில் தாமதம்.
- சாதனங்களின் பழுதுபார்த்தல்களில் தாமதம்.
- வாகனங்கள் இன்மை.

## 1. கூறு: 3.7.6 பண்ணையிலான இறால் நோய்க்காவிகளை அடையாளம் காணுதல் மற்றும் இழையநோயியல் ஆய்வு

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- கைத்தொழிலுக்கும் மற்றும் 'நாரா'வில் கற்பித்தல் உதவிக்கும் பயனுள்ள உசாத்துணை விடயதானத்தை விருத்தி செய்தல்
- 'நாரா'வில் நோய்க்குணமறிதல் ஆற்றலளவுகளைத் தரமுயர்த்துதல்.

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்:**

**அ. ஆய்வுகூட முன்னேற்றம்**

இழையநோயியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அவசியமான தேவைகளுடன் இழையநோயியல் ஆய்வுகூடம் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

**ஆ. இரசாயனங்களினதும், பாவனைக்குரியவைகளினதும் கொள்வனவு**

இழையநோயியல் தயாரிப்புகளுக்கான அவசியமான இரசாயனங்களும், பாவனைக்குரியவைகளும் விசேட முற்பணத்தில் இருந்து பெறப்பட்டுள்ள அதேவேளை, ஏனையவை கேள்வி நடைமுறைகளின் ஊடாகப் பெறப்பட்டன.

**இ. மாதிரிப்படுத்தல்**
சிலாபம், நீர்கொழும்பு, ஹெந்தளை மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளுக்கான கள சுற்றுப் பயணங்களின் போது, இறால் கருவள மாதிரிகள் கொள்வனவு செய்யப்பட்டன. கருவளங்களின் அளவு, போக்குரீதியான அமைப்புகள், வெளிவாரியிலான அம்சங்கள் மற்றும் நோய்க் குணங்குறிகள் (ஏதுமிருந்தால்) பதிவுசெய்யப்பட்டன. அத்துடன் சேகரிப்பின் பகுதியும், முறையும் பதிவுசெய்யப்பட்டன.

அம்பகந்தவில மற்றும் இரணவில ஆகிய பகுதிகளில் தொழில்படுகின்ற அடைகாக்குமிடங்களிலிருந்து (சுமார் 25) இறால் குடம்பிக்கு முற்பட்டவை மாதிரிப்படுத்தப்பட்டன. அடைகாக்குமிடங்களிலிருந்து நோய் தீவனம் மற்றும் நீரின் தர முகாமைத்துவம் ஆகியன தொடர்பில் அடைகாக்குமிட உரிமையாளர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

முத்துபந்திய, வைரன்கட்டுவ, கறுக்குப்பனை, உடப்புவ, மதுரங்குளிய, பின்கட்டிய, புளிச்சிக்குளம், மணதீவு, மங்களஎலிய, ஆராய்ச்சிக்கட்டுவ, பொகஹவெட்டிய மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளிலிருந்து இறால் துணை – வயதுவந்தவை மாதிரிப்படுத்தப்பட்டன. பண்ணையில் வசதிகள், முகாமைத்துவ மூலோபாயம் மற்றும் ஏதாவது நோய்களின் பதிவுகள் ஆகியன தொடர்பில் வெளியில் வளர்ப்போரிடமிருந்து தரவுகள் பெறப்பட்டன.

**ஈ. மாதிரிகளின் பகுப்பாய்வு**
இறால் இழையங்களில் ஏதாவது நோய்க்குணங்குறிகளைக் கண்டறிவதற்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகளிலிருந்து இழையநோயியல் ‘சிலைட்’டுகள் தயாரிக்கப்பட்டன. ஓகஸ்ட்-டிசம்பர் நேர காலத்தில் புளிச்சிக்குளம், பின்கட்டிய, உடப்பு மற்றும் மங்களஎலிய ஆகிய பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட பெருமளவு இறால் மாதிரிகளிலிருந்து வெள்ளை புள்ளி சகச வைரசின் குணவியல்பிலான அம்சங்கள் அடையாளம் காணப்பட்டன. எதிர்கால ஆய்வுகளுக்காக உசாத்துணை விடயதானமாக இந்த ‘சிலைட்’டுகள் பயன்படுத்தப்படுகின்றன.

முன்னேற்றம் (%) பௌதீக: 85% நிதிசார்: 14%

### 3. மட்டுப்படுத்தல்கள்:

ஆய்வுகூடத்தின் நிருமாணங்களின் காரணமாக சில மாதிரிகளைப் பகுப்பாய முடியவில்லை. இது இரு வருட கருத்திட்டம் என்பதனால் அந்த மாதிரிகள் 2008இல் பகுப்பாயப்படும்.

## 1. கருத்திட்டம் மற்றும் கூறு: மேல் மகாவலி கருத்திட்டம்

**கூறு 4.4.2: மகாவலி மேல் நீரேந்து பரப்புகளின் அருவிகளில் உள்ள பூர்வீக/ உட்பிரதேசத்திற்குரிய/பயமுறுத்தப்படுகின்ற மீனினங்களினதும், வேறு பெயரந்த விலங்கினங்களினதும் அபரிதமானதன்மையையும், நீர் தரத்துடனும், சூழல் காரணிகளுடனும் அவற்றின் இணை உறவினையும் ஆய்தல்**

### 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**
1. உட்பிரதேசத்திற்குரிய/பூர்வீக மீன்களின் அபரிதமானதன்மையையும், உணவூட்டல் பழக்கங்களையும் மற்றும் மகாவலி மேல்நீரேந்து பரப்பில் தெரிவு செய்யப்பட்ட அருவிகளில் நீரின் தரத்தின் சாராமாறிகளுக்கு நீரியல் நுண் விலங்கின இணை–உறவின் பன்னிலையாக்கத்தையும் நிர்ணயித்தல்.
2. உயிரக–காட்டிகளாகக் கருதப்படக்கூடிய பொருத்தமான அங்கிகளை அடையாளம் காணுதல்.
3. மகாவலி மேல்நீரேந்து பரப்புகளின் அருவிகளில் நீரியல் உயிரப்பன்னிலையாக்கத்திற்கான, விசேடமாக உட்பிரதேசத்திற்குரிய மீன் விலங்கினத்திற்கான சாத்தியமான பயமுறுத்தல்களை அடையாளம் காணுதல்.
4. மகாவலி மேல்நீரேந்து பரப்புக்களில் நீரியல் விருத்திச் செயற்பாடுகளின் சாத்தியத்தை ஆய்தல்.

**செயற்பாடுகள்:**
1. 2007 மார்ச்சில் அமைவிடங்களின் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.
2. பதுள்ளு–ஓம ஓய உப நீரேந்துபரப்புக்கள், அகரா, நாணு மற்றும் புணு ஓய உப நீரேந்துபரப்புக்கள் மற்றும் ஹற்றன் கொத்மலை ஓய உப நீரேந்துபரப்புக்கள் ஆகிய மூன்று பாரிய உப நீரேந்துபரப்புக்களை அடக்கும் மொத்தமாக 38 மாதிரிப்படுத்தல்கள் தெரிவு செய்யப்பட்டன.
3. 2007 ஏப்ரலிலிருந்து ஒவ்வொரு மாதிரிப்படுத்தல் அமைவிடத்திற்கும் மாதாந்தம் வருகை தரப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட பகுதியினுள் சில நீரியல் விலங்கினத்தின் மீதான அதே இடத்திலான கட்புல

கணக்கெடுத்தல் செய்யப்பட்டதுடன், 5 தடவைகள் கல்தூக்குதல் முறையொன்றையும், 10 தடவைகள் மிருதுவான கண்களிலான அள்ளியெடுத்தல் வலையொன்றுடன் வலித்து இழுத்தலையும்/ அள்ளியெடுத்தலையும் பின்தொடர்ந்து மாவடை மாதிரிகள் எழுந்தமானரீதியாகச் சேகரிக்கப்பட்டன.

ஆய்வுகூடத்தில் சேகரிக்கப்பட்ட விலங்கின மாதிரிகள் அடையாளம் காணப்பட்டதுடன், சாத்தியமானளவு தாச்சாவும், அதன் பின்னர் தொகைரீதியான பகுப்பாய்வும் (அபரிதமானதன்மை) மேற்கொள்ளப்பட்டன.

**முடிவுகள்:**
தற்போதைய ஆய்வின் போது, ஐந்து வேறுபட்ட சாதிகளுக்குச் சொந்தமான வேறுபட்ட நீரியல் விலங்கின தாச்சா பதிவுசெய்யப்பட்டது. எனினும், முள்ளந்தண்டு விலங்குகளுடன் ஒப்பிடுகையில், பெயரந்த முள்ளந்தண்டற்ற விலங்கின் பன்னிலையாக்கம் உயர்ந்தளவிலும், பரந்தளவிலும் பங்கிடப்பட்டதாகக் கண்டறியப்பட்டது. நீரியல் பூச்சிகள் மிகவும் பன்னிலையிலானதாகவும், ஆதிக்கம் செலுத்துவதாகவும் கண்டறியப்பட்டது.

இலைக் குப்பைக் கூளங்களும், வேறு அழுகுகின்ற மரவருக்க பதார்த்தங்களும் உயர்வாகவுள்ள கற்களினதும், இலைகளினதும் கீழே தனித்த தேபலேரியன் பாகுபாடு (triclad) கண்டறியப்பட்டது.

ஒலிக்கோற்றாக்கள் மிகவும் சிறிதளவு பன்னிலையானவை என்பதுடன், அடிப்புற பொசிதலிலும், குப்பை கூளங்களிலும் வாழ்வதாகக் கண்டறியப்பட்டது.

பெருமளவு அருவிகளில் தொடர்ச்சியாக கணிசமானளவு எண்ணிக்கையிலான பிளெக் கொத்தேராவின் தனிப்பட்டவைகளும் (இரு வேறுபட்ட தச்சா), எபிமெரோப்ரேன்ஸும் (10க்கு மேற்பட்ட தச்சா) பதிவு செய்யப்பட்டதுடன், இவை அவற்றின் சிறந்த நீர் தரத்தையும் எடுத்துக்காட்டின.

மிதமான நீரின் தர எடுத்துக்காட்டியொன்றான ஒடொனோற்றாவின் (தும்பி மற்றும் தாம்செல்ஈ) பன்னிலையாக்கம் தெளிவான விதத்தில் உயர்வாக விளங்கியதுடன், அடர்த்தியான பிசுபிசுப்பான இலைக் கழிவுகளையும், வேறு உக்குகின்ற பதார்த்தங்களையும் உள்ளடக்குகின்ற நீரியல் மர வருக்கங்கள் உள்ள நுண்-இயற்கை வாழிடங்களில் பெருகியுள்ளன.

மூன்று இரு செட்டையுள்ள குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டதுடன், புதுளுஓய-உம ஓய மற்றும் அகரா, அபேவெவ–புன ஓய உப நீரேந்துபரப்புக்களில் 10 மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் கிரேனோமிட்டுக்கள் கண்டறியப்பட்டன. எனினும், சாணம் மற்றும் வேறு கோழிக் கழிவுகள் ஆகியவற்றினால் தொடர்ச்சியான மாசுபடுகின்ற அபேவெல நீர்த்தேக்கத்தின் மேலுள்ள வெளிவாயில் அபேவெல ஓயவினுள் வெற்றாக்குவதுடன், அதிகளவு அடர்த்தியைக் கொண்ட கிரேனோமிட்டு குடம்பியைக் கொண்டிருந்ததாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது 2007 மே மாதத்தில் 43.75 தனிப்பட்டவைகள்/மீ$^2$ ஆகும்.

புதுளு ஓய வாயில் ஒரு மாதிரிப்படுத்தல் அமைவிடத்தில் Palaemonidae (*Macrobrachium* sp.) குடும்பத்தின் தசக்காலி கிரத்தியேன்கள் பதிவு செய்யப்பட்டதுடன், ஐந்து மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் Atyidae இறால் *Caridina* பதிவு செய்யப்பட்டது. இது மேல் மகாவலி நீரேந்து பரப்புப் பகுதியினுள் அவற்றின் மிதமான குறைந்த பங்கீட்டு முறையை எடுத்துக்காட்டுகின்றது.

வேறுபட்ட மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் hemipterans (நீர் மூட்டைப்பூச்சிகள்), coeleopterans (வண்டுகள்), lepidopterans (அந்துகள் மற்றும் வண்ணாத்திப் பூச்சிகள்), tricopterans (கடிசு ஈ), மற்றும் நீரியல் arachnidans ஆகியவற்றின் வேறுபட்ட தச்சா பதிவுசெய்யப்பட்டதுடன், இவை மகாவலி மேல் நீரேந்து பரப்புப் பகுதியில் அவற்றின் பன்னிலையிலான பங்கீட்டு முறைகளை எடுத்துக்காட்டுகின்றன.

நானு, அகரா, புன ஓய மற்றும் அபேவெவ உப நீரேந்துபரப்புக்களில் மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் *Garra ceylonensis* மட்டுமே பதிவுசெய்யப்பட்ட உட்பிரதேசத்திற்குரிய மீன் இனமாகும். *Puntius nigrofasciatus*, *P. cumingii*, *P. singhala* மற்றும் *Clarias bracysoma* ஆகிய வேறு உட்பிரதேசத்திற்குரிய சில சைபிரினிட்ஸ் ஹற்றன் - கொத்மலை ஓய உப நீரேந்து பரப்புகளில் பதிவுசெய்யப்பட்டன. எனினும், அவற்றின் எண்ணிக்கை அளவுகளும், பங்கீடும் மிகவும் குறைவானதாகவும், மோசமானதாகவும் விளங்குவதாகத் தோன்றுகின்றது.

மணல் மற்றும் இரத்தினக்கல் அகழ்வு, கம இரசாயனங்களைப் பொருத்தமற்ற விதத்தில் பயன்படுத்துதல் மோசமான கமத்தொழில் செயற்பாடுகளின் காரணமாக மண் அரிப்பு ஆகியன மகாவலி மேல்நீரேந்து பரப்புகளின் அருவிகளில் உள்ள நீரியல் உயிரகப் பன்னிலையாக்கத்திற்கு, விசேடமாக உட்பிரதேசத்திற்குரிய மீன் விலங்கினங்களுக்கு கடுமையான பயமுறுத்தல்களை முன்வைக்கின்றன என தற்போதைய ஆய்வு குறிப்பிடுகின்றது.

முன்னேற்றம் (%) பௌதீக: 90% நிதிசார்: 55%

**மட்டுப்படுத்தல்கள்:**

1. பாதுகாப்பு நோக்கத்தின் காரணமாக வனவாழ்வுச் சரணாலயத்தின் ஊடாக ரந்தெனிகல நீர்த்தேக்கத்தினுள் வெற்றாக்கும் உம ஓய வாயிலில் பொருத்தமான மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட முடியவில்லை.
2. மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் மழை காலநிலை நிலைமை, உயர்வான பாய்வுவீதம் மற்றும் உயர் நீர் கலங்கற்றன்மை ஆகியவற்றின் காரணமாக அகர, நாணு மற்றும் புன ஓய நீரேந்துபரப்புக்களில் சில மாதிரிப்படுத்தல் அமைவிடங்களில் தோதான மாதிரிப்படுத்தலை 2007 செப்ரெம்பரிலும், ஒக்டோபரிலும் மேற்கொள்ள முடியவில்லை.
3. ஆய்வுக் காலத்தின் போது சேகரிக்கப்பட்ட சில ஆழ் நீர் தளத்துக்குரிய விலங்கினத்தின் பாகுபாட்டியல் நிலையானது நீரியல் பூச்சி அடையாளங் காணல் விளக்கங்கள் இன்மை, அவற்றின் மீது பிரத்தியேகமான ஆய்வுகள் இன்மை, மற்றும் இலங்கையில் உள்ளூர்/பிராந்திய அடிப்படையிலான உயிரக – கண்காணித்தல் ஆய்வுகள் மீதான இலக்கியங்கள் கிட்டாமை ஆகியவற்றின் காரணமாக உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.
4. ஆயப்பட்ட அமைவிடங்களில் உட்பிரதேசத்திற்குரிய மீன்களில் மிகவும் மோசமான தொகை அளவுகளின் காரணமாக கடல் அடக்கப் பகுப்பாய்வை மேற்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவை வான் தொகைகளைக் குறைப்பதற்கு/சீர்கேடடைய வைப்பதற்கு நேரடியாக இட்டுச் செல்லக்கூடும்.

## 1. கருத்திட்டம் மற்றும் கூறு 4.5: ஒன்றிணைந்த முகாமைத்துவம் ஊடாக நீர்த்தாழைகளுக் கான பேணல் மூலோபாயங்களின் முன்னேற்றம்

## 4.5.1 கரையோரச் சனசமூகங்களின் வாழ்வாதாரத்தின் மேம்படுத்தலுக்காக நீர்த்தாழை சூழலியல்முறைமைகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியவளம்

### 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- நீர்த்தாழை சூழலியல்முறைமைகளைப் பேணல்
- அபிவிருத்திக்காக சுரண்டப்படாத இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்துதல்
- கரையோரச் சனசமூகங்களுக்கு ஜீவனோபாயத்தை மேம்படுத்துதல்

இலக்கிய அளவீடு மேற்கொள்ளப்பட்டது. பூர்வாங்க அளவீட்டின் விளைவொன்றாக ஆய்வுக்காக ரேகாவ கஹடமோதரன, மாரவில – நயினாமடம, அம்பலாங்கொட – மாதம்பே ஏரி ஆகியன தெரிவுசெய்யப்பட்டன. இந் மூன்று ஆய்வு அமைவிடங்களில் நீர்த்தாழை மீதான சுதேசிய அறிவு மீதான தரவுகளின் சேகரிப்புக்கா கேள்விக்கொத்து அளவீடு மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. இந்த அமைவிடங்களில் தரவுகளினது மாதிரிகளினதும் மாதாந்தச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பகுதிகளில் உள்ள கரையோரச் சனசமூகங்க தமது ஜீவனோபாயங்களை உயர்த்துவதற்காக நீர்த்தாழைச் சூழலியல்முறைமைகளைப் பயன்படுத்துவதில்லை எ முடிவுகள் எடுத்துக்காட்டின. நீர்த்தாழை சூழலியல்முறைமைகளிலிருந்து ஆய்வு அமைவிடங்களின் கரையோர சனசமூகத்தினால் பெறப்படும் நன்மைகள் மரங்களையும், விறகையும் பெறுதல், மீன் திரளல் கருவிகளின் நிருமாண மற்றும் உணவுக்காக மொலாக்கன்கள் செதில் மீன்கள் மற்றும் சிப்பி மீன்கள் ஆகியவற்றைப் பிடித்த ஆகியனவற்றுக்கு மட்டுப்பட்டிருந்தன. *Sonneratia*இன் பழம் குளிர்பானமொன்றைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட அதேவேளை *Acrostichum aureum*இன் இலைகள் மரக்கறியாகப் பயன்படுத்தப்படுகின்றன. நயினாமடுப் பகுதியி பரிசோதனை மட்டத்தில் *Nypa fruticans*ஐப் பயன்படுத்தி கள்ளிறக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. கை.தொ.நி.உடன் பாம் க மாதிரிகளைப் பகுப்பாய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன (Brix Index, அறியப்பட்ட சீனி அடக்கங்கள் மற்று மதுசார சதவீதம்).

**முடிவுகள்:**

மொத்தமாக உண்மையான நீர்த்தாழைகளாகக் கருதப்பட்ட பதினெட்டு நீர்த்தாழை இனங்கள் உட்பட இருபத்தொன்பது நீர்த்தாழை இனங்கள் பதிவு செய்யப்பட்டன. புதர்கள் உட்பட முப்பத்திமூன்று வேறு வகையிலான தாவர வர்க்கங்கள் குறித்துக்கொள்ளப்பட்டன. உள்நாட்டை நோக்கிய ஒத்ததன்மையிலான வலயப் பங்கீட்டுடன் Rhizophoraceae, Avicenniaceae மற்றும் Combretaceae ஆகியனவே ஆகக்கூடுதலான நீர்த்தாழைகளுடனான குடும்பங்களாகும். Avicenniaceae மற்றும் Combretaceae ஆகியவற்றின் குடும்பங்களில் *Lumnitzera racemosa* மற்றும் *Avicennia marina* ஆகியன ஆதிக்கம் செலுத்தின. Rhizophoraceae குடும்பத்தில் மிகவும் அபரிதமானதாக *Rhizophora apiculata* மற்றும் *R. mucronata* ஆகியன விளங்கிய அதேவேளையில் ஏனைய உறுப்புக்களாக *Bruguiera gymnorhiza*, *B. sexangula* மற்றும் *Ceriops tagal* ஆகியன உள்ளடங்கியிருந்தன. *Premna integrifolia, Derris scandens* மற்றும் *Acanthus ilicifolius* ஆகியவற்றின் உயர்வான அபரிதமான தன்மையுடன் நிலப்பக்கத்தை நோக்கி நீர்த்தாழைத் துணைகள் கண்டறியப்பட்டன.

இந்த சூழலியல்முறைமையைச் சுற்றி குறைந்த வருமான குடும்பங்களின் உயர்வான சனத்தொகை உள்ளதுடன், சமைத்தல் நோக்கங்களுக்காக விறகைப் பெறுதல் ‘Brush–pile fishing’இல் மீன்களைக் கவர்வதற்கும்,

சிறைப்பிடிப்பதற்கும் கிளைகளை வெட்டுதல், கூரை நிருமாணத்திற்கு கம்பங்களையும், கிராதிகளையும் பெறுதல் குடிசைகளைக் கட்டுவதற்கு மரங்களை வெட்டுதல் போன்ற அழிவிலான செயற்பாடுகளுக்கு ஊறுபடத்தக்கதாகும். ஊடுருவுகின்ற அந்நிய தாவர இனங்களின் அதிகரிப்பு, பொங்குமுகத்தின் வற்றுப்பெருக்குச் செயற்பாடுகளின் காரணமாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக்குகள் போன்ற குப்பை அடைதல் ஆகியன இந்த அமைவிடத்தில் ஏனைய பயமுறுத்தல்களாக கண்டறியப்பட்டன.

27 குடும்பங்களுக்குச் சொந்தமான 35 இனங்களை மீன்கள் கொண்டிருந்தன. நன்னீர் அமைப்புக்கள், உவர் நீர் அமைப்புக்கள், உடன் உவர் நீர் அமைப்புக்கள், மற்றும் கடலக உவர் புலம்பெயர் இனங்கள் ஆகியவற்றை மீன்கள் உள்ளடக்குகின்றனன. முரல் (*Channa striata)*, நடத்தல் பூனை மீன் (*Clarias brachysoma*) ஆகியனவற்றை உருமாதிரியான நன்னீர் இனங்கள் உள்ளடக்கியிருந்தன. கடோல்கலேயில் பெருமளவு மீன் இனங்கள் அம்பசிட்ஸ் (*Ambassis commersoni*), மொனோ (*Monodactylus argenteus*), இலக்கு மீன் (*Terapon jarbua*), சேற்று ஸ்கிப்பர்(*Perioptlalmus koelreuteri*), பால்மீன் (*Chanos chanos*) போன்ற உருமாதிரியான உவர் நீர் அமைப்புக்களாக விளங்கின. புலம்பெயர் இனங்கள் "ஆற்றுப்புறவோட்டமுள்ள" இனங்களையும் (முட்டையிடுவதற்கு அல்லது தமது இளமைக் காலத்தை கழிப்பதற்கு உவர் நீர்/நன்னீரினுள் நகருகின்ற கடலக இனங்கள்) மற்றும் "கடற்புறவோட்டமுள்ள" இனங்கள் (இனப்பெருக்கத்திற்காக நன்னீரிலிருந்து கடலக நீருக்குள் புலம்பெயருகின்ற இனங்கள்) ஆகியனவற்றை உள்ளடக்குகின்றன. குறுகிய செட்டையிலான விலங்கு மீன் (*Anguilla bicolor bicolor* ) மற்றும் கடல் தோப்பி (*Lates calcarifer*) ஆகியன கடற்புறவோட்டமுள்ள இனங்கள் என்பதுடன், ஸ்னப்பர்கள் (*Lutjanus argentimaculaus*), றவலி (*Caranx spp.*), சில்வர் பிடி (*Gerres filamentosus*) பரகுடா (*Sphyraena jello*) ஆகியவற்றை ஆற்றுப்புறவோட்டமுள்ள இனங்கள் உள்ளடக்குகின்றன. (பம்பரதெனிய, 2002). கடேல்கலே நீர்த்தாழை ஒதுக்கில் மிகவும் அபரிதமான வெளிநாட்டுக்குரிய இனமாக *Oreochromis mossambicus* விளங்குகின்றது. ஓட்டுமீன் இனங்கள் 4 இறால் இனங்களையும், நன்னீர் இறாலையும் (*Macrobrachium rosenbergii)* மற்றும் நண்டு இனங்களையும் (*Scylla serrata*) பிரதிநிதிப்படுத்துகின்றன.

## 3. மட்டுப்படுத்தல்கள்:

கடுமையான மழையின் காரணமாகவும், திறன்களைக் கொண்ட சரீரஉழைப்பாளர்கள்/கள்ளிறக்குபவர்கள் இன்மையின் காரணமாகவும் சில மாதங்களில் பாம் கள்ளை (*Nypa fruticans*) இறக்கும் நடைமுறை தோல்வியடைந்தது.

முன்னேற்றம் (%) பௌதீக: 90% நிதிசார்: 49%

## 1. கூறு 4.5.2 கடல் வனப்பு முகாமைத்துவத்திற்கு மூலோபாயங்களை விருத்தி செய்தல்

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- கரையோரச் சூழலியல்முறைமைகளின் ஒன்றிணைந்த முகாமைத்துவம்
- கரையோரச் சனசமூகங்களுக்கு ஜீவனோபாயத்தை மேம்படுத்தல்

இலக்கிய அளவீடு முடிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித்தொழில்களுக்கு இடையிலான ஒன்றுடன் ஒன்றிணைந்து செயற்படுவதாக புத்தளம் கடலேரியில் கடற்புல் படுக்கைகள், முருகைக் கற்பார்த்தொடர்கள் மற்றும் நீர்த்தாழைச் சூழலியல்முறைமைகள் ஆகியன அடையாளம் காணப்படுகின்றன.

இடஞ்சார்ந்த மாறல்களையும், தற்போதைய போர்வையையும் நிர்ணயிப்பதற்காக 1மீ. X 1மீ. இருபடியைப் பயன்படுத்தி கடல்புற் படுக்கைகளின் மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. கிட்டுகின்ற விளக்கங்களைப் பயன்படுத்தி கடற்புற்களின் இனங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அவற்றுடன் இணைந்திருந்த வேறு விலங்கினங்களும், தாவரவினங்களும் பதிவு செய்யப்பட்டன. சல்லியன்பிட்டி, மொட்வரம, எறமதீவு, பிச்சன்கலிய மற்றும் அனவாசல ஆகியன உட்பட கடலேரியின் 12 அமைவிடங்கள் மாதிரிப்படுத்தப்பட்டன. கையினால் தூக்கிப்பிடிக்கப்படும் GPSஐப் பயன்படுத்தி மாதிரிப்படுத்தல் நிலையங்களின் புவியியல் அமைவிடங்கள் செம்மையாகப் பதிவுசெய்யப்பட்டன. நீரின் ஆழமும், இணைந்திருந்த விலங்கினமும் குறித்துக் கொள்ளப்பட்டன. கடற்புற்களின் பகுதியளவிலான பங்கீட்டினையும் *Enhalus acroides, Cymodocea serrulata Cymodocea rotundata* ஆகியனவே மிகவும் அபரிதமான கடற்புற்கள் என்பதையும் முடிவு எடுத்துக்காட்டுகின்றது.

மொட்டுவாரண, அனவாசல, சொத்துபிட்டிவாடிய, நரிக்குடா, மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளில் நீர்த்தாழையின் மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

கடல்புற் படுக்கைகளுடன் இணைந்துள்ள மீன்பிடியை நிர்ணயிப்பதற்கும், பிடியின் பருவகால மாற்றங்களை நிர்ணயிப்பதற்கும் புத்தளம் கடலேரியின் நீர் இறங்குதுறை அமைவிடங்கள் கண்காணிக்கப்பட்டன.

பகுதியில் செயற்படுத்தப்பட்ட மீன்பிடித்தல் கருவிகளும் கண்காணிக்கப்பட்டன. இனங்களின் தரவுகள், மொத்த நீளத்தரவுகள் மற்றும் கருவிகளின் வகைகள் ஆகியனவும் பதிவுசெய்யப்பட்டன. அனவாசலை, தொரவாடிய, வன்னிமுதலம, மண்டுலக்குடா, குருங்கன்பிட்டிய, சொத்துபிட்டிய மற்றும் பாலாவி ஆகியனவே அப்பகுதிகளாகும்.

'நாரா'வின் முருகைக் கற்பார்த்தொடர் ஆராய்ச்சித் திட்டத்தினால் கடல் வனப்பு முகாமைத்துவக் கருத்திட்டத்தின் கற்பார்த் தொடர் கூறு அடக்கப்படுகின்றது. விவரத்திற்கு முருகைக் கற்பார்த்தொடர் ஆராய்ச்சித் திட்டத்தின் அறிக்கையை தயவுசெய்து பார்க்க. முருகை வெளுறலுக்கான கண்காணித்தலுக்காக பார் கற்பார்த் தொடர் அளவீடு மேற்கொள்ளப்பட்டது.

முன்னேற்றம் (%) பௌதீக: 90% நிதிசார்: 08%

## 1. கருத்திட்டம் மற்றும் கூறு

### கூறு 4.5.3 கடோல்கெலயில் நீர்த்தாழை ஒதுக்கின் முகாமைத்துவத்திற்கான மூலோபாயங்களை விருத்தி செய்தல்

## 2. நோக்கங்கள், மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் முடிவுகள்

**நோக்கங்கள்:**

- நீர்கொழும்பு, கடோல்கலேயில் நீர்த்தாழை ஒதுக்குக்கு முகாமைத்துவத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்
- நீர்த்தாழை ஒதுக்கின் உயிரகப்பன்னிலையாக்கம் மீதான அறிவை மேம்படுத்துதல்
- பேணல் வலயமொன்றாக கடோல்கலேயின் நீர்த்தாழை ஒதுக்கைப் பிரகடனப்படுத்துவதற்கு அவசியப்படும் தகவலை வழங்குதல்

**மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:**

வேறுபட்ட இனங்களுக்கு சொந்தமான 5,000 நீர்த்தாழை தாவரங்களுடன் நீர்த்தாழை நாற்றுமேடை பராமரிக்கப்படுகின்றது. நீர்த்தாழை உயிரக பன்னிலையாக்கம் மீதான தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் நுண் ஆழ்நீர்தளத்துக்குரிய மற்றும் மேல்ஆழ்நீர்தளத்துக்குரிய விலங்கினம் மீதான மாதிரிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. 27 குடும்பங்களுக்கு சொந்தமான 35 மீன் இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், நன்னீர் இறாலும், இறால்களின் நான்கு இனங்களும் பதிவுசெய்யப்பட்டன. மூன்று குறுக்குவெட்டுமுகங்கள் நெடுகிலும் 100 மீ.$^2$ (10 மீ x 10 மீ) பாத்திகளில் தாவரவர்க்க தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு குறுக்குவெட்டுமுகங்களும் கடற்கரையோரத்திலிருந்து உள்நாட்டுக்கு நீடித்திருந்தது. தாவர வர்க்கத்தின் (உண்மையான நீர்த்தாழைகள், நீர்த்தாழைத் துணைகள், வேறு மரங்கள், புதர்கள், நாற்றுக்கள் மற்றும் கன்றுகள்) தொகைரீதியான ஆய்வு நடத்தப்பட்டதுடன், அருள்செல்வம் (1968), பின்ரோ (1986), ரொம்லின்சன் (1986), சேனாரத்ன (2001), மற்றும் டீ சில்வா மற்றும் டீ சில்வா (2006) ஆகியோரினால் வழங்கப்பட்ட விளக்கங்களையும், விவரணங்களையும் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டது.

பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற மானிடவியல்ரீதியான செயற்பாடுகள் குறித்துக்கொள்ளப்பட்டன. மொத்தமாக உண்மையான நீர்த்தாழைகளாகக் கருதப்பட்ட 18 நீர்த்தாழை இனங்கள் உட்பட 29 நீர்த்தாழை இனங்கள் பதிவுசெய்யப்பட்டன. புதர்கள் உட்பட 33 வேறு வகைகளைக் கொண்ட தாவர இனங்கள் குறித்துக் கொள்ளப்பட்டன. உள்நாட்டை நோக்கிய ஒத்ததன்மையிலான வலயப்பங்கீட்டுடன் Rhizophoraceae, Avicenniaceae மற்றும் Combretaceae ஆகியனவே நீர்த்தாழைகளின் ஆகக்கூடுதலான அபரிதமானதன்மையுடனான குடும்பங்களாகும். Combretaceae மற்றும் Avicenniaceae ஆகியனவற்றைக் கொண்ட குடும்பங்களில் *Lumnitzera racemosa* மற்றும் *Avicennia marina* ஆதிக்கம் செலுத்தின. Rhizophoraceae குடும்பத்தில் *Rhizophora apiculata* மற்றும் *R. mucronata* ஆகியனவே மிகவும் அபரிதமான தன்மையைக் கொண்டிருந்தன. அதேவேளை *Bruguiera gymnorhiza*, *B. sexangula* மற்றும் *Ceriops tagal* ஆகியனவற்றை ஏனைய உறுப்புக்கள் உள்ளடக்கியிருந்தன. *Premna integrifolia*, *Derris scandens* மற்றும் *Acanthus* ilicifolius ஆகியவற்றின் உயர்வான அபரிதமானதன்மையுடன் நிலப்பக்கத்தை நோக்கி நீர்த்தாழைத் துணைகள் கண்டறியப்பட்டன.

முன்னேற்றம் (%) பௌதீக: நிதிசார்: 32%

## 3. விஸ்தரிப்புப் பணி

1. அலங்கார மீன்வளர்ப்பும், முகாமைத்துவமும் மீதான 'நாரா' பயிற்சி நெறிக்கு விரிவுரைகள் நடத்தப்பட்டன.
2. அலங்கார மீன் வளர்ப்புக்கும், உணவு மீன் வளர்ப்புக்கும் நீர் தர சோதித்தல் சேவைகள்
3. சிறிய அளவிலானதும், நடுத்தர அளவிலானதுமான மீன்பிடிப்பவர்களுக்கு உட்பிரதேசத்திற்குரியதும், வெளிநாட்டுக்குரியதுமான மீன் கரு வள இருப்பு வழங்கப்பட்டது.
4. மீன் வளர்ப்போர்க்கு உயிர் தீவன (*Moina*) மாதிரிகள் வழங்கப்பட்டன.
5. விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் தேசிய இளம் விஞ்ஞானிகள் அரங்கின் தலைவராக பங்கெடுக்கப்பட்டது.
6. NAQDAஇனால் ஒழுங்குபடுத்தப்பட்ட PCR தொழில்நுட்பம் மீது ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் விலங்கியல் விசேட மாணவர்களுக்கு அக்குவா சேர்விசஸ் (பிறை.) லிமிற்றெற்றில் விரிவுரையும், செயன்முறை அமர்வும் மேற்கொள்ளப்பட்டன.
7. அலங்கார மீன் நோய்களுக்கான அறிமுகம் மீது NIFNE பணியாளருக்கான வள நபராகப் பங்கெடுக்கப்பட்டது – 2008 நொவம்பர் 14 – 16.
8. தெகிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் மீன் பலியாதல் மீதான 01.03.2007 திகதியிடப்பட்ட விளையாட்டு, பொது பொழுதுபோக்கு அமைச்சினால் 'நாரா' பணிப்பாளர் நாயகத்திற்கு செய்யப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வொன்றைத் தொடர்ந்து அறிக்கை தயாரிக்கப்பட்டது.
9. அலங்கார மீன் நோய்களுக்கான அறிமுகம் மற்றும் நோயை அடையாளம் காண்பதற்கான PCR தொழில்நுட்பம் ஆகியன மீது பட்டதாரி மாணவர்களுக்கான பயிற்சி
10. 'நாரா'வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அலங்கார மீன் மாதிரிகளின் நோய் கண்டறியப்பட்டதுடன், தடுப்பதன் மீதும், கட்டுப்படுத்துவதன் மீதும் ஆலோசனை வழங்கப்பட்டது.
11. பெருமளவு அலங்கார மீன்வளர்ப்போர்க்கு மாதிரிகளும், தொழில்நுட்பமும் வழங்கப்பட்டன. *Artemia* வளர்ப்பு சம்பந்தமாக ஹம்பாந்தோட்டை உப்புக் கூட்டுத்தாபனத்திற்கு தகவலும் உதவியும் வழங்கப்பட்டன.
12. மீள் நடுகைத் திட்டங்களுக்கு உதவியும், நீர்த்தாழை தாவரங்களும் வழங்கப்பட்டன (பெருமளவு அரசாங்க மற்றும் அரச சார்பற்ற தாபனங்கள்).

    "துரு மித்துரு என்ற ரூபாவாஹினி நிகழ்ச்சியில் உரைநிகழ்த்தப்பட்டது.

    'நெற் எப்.எம்' வானொலி நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தப்பட்டது.

    பொருட்காட்சிப் பணிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

## 4. வேறு செயற்பாடுகள்

1. 2007 மே மாதத்திலிருந்து மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளின் தயாரிப்பில் பங்கெடுக்கப்பட்டது.
2. வரவு செலவுத் திட்ட உரைக்கும், 'நாரா'வின் 2008 செயல் திட்டத்துக்குமான அறிக்கை.
3. 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையத்தில் பணி.
4. 2008 INTER ZOOக்கு பங்கெடுப்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக EDB தெரிவுக் குழு உறுப்பினராக சேவையாற்றப்பட்டது. (22.11.2007)
5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் உட்பிரதேசத்திற்குரியதும், வெளிநாட்டுக்குரியதுமான அலங்கார மீன் இனங்களுக்காக நுண்ணுயிரியல் கட்டுப்பாட்டு முகவரொன்றின் (*Bacillus thuringiensis*) மீன் நச்சியல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.
6. 25க்கு மேற்பட்ட கேள்வி ஆய்வுகளுக்கு TEC உறுப்பினராகப் பங்கெடுக்கப்பட்டதுடன், இரசாயனங்கள், சாதனங்கள் மற்றும் பாவனைக்குரியவை ஆகியவற்றின் கொள்வனவு மீது அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
7. AIDA கருத்திட்டத்திற்கு (ஸ்பெயினிலிருந்து மானியம்) சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கான TECஇல் பங்கெடுக்கப்பட்டது.
8. 'நாரா'வில் 25ஆவது ஆண்டுக் கொண்டாட்டங்களின் ஒழுங்குபடுத்தல் குழுவின் உறுப்பினர்
9. IARADக்கு இழையநோயியல் ஆய்வுகூடமும், PCR ஆய்வுகூடமும் விருத்தி செய்யப்பட்டன.
10. IARADஇல் உள்ள உத்தியோகத்தர்களின் நோய் குணங்குறியறிதல் திறன்கள் (நுண்ணுயிரியல் மற்றும் உயிரகத்தொழில்நுட்பம்) விருத்தி செய்யப்பட்டன.

11. IARADஇல் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்தில் தீவிரமாகப் பங்கெடுக்கப்பட்டது.

12. அடுத்த 10 வருடங்களுக்கு 'நாரா'வின் கூட்டுத்திட்டத்திற்கான கருத்துக்களும், ஆலோசனைகளும் மற்றும் 'நாரா' சீர்திருத்தங்கள் மீதான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

13. இறால் பண்பாட்டு வளர்ப்பு, இறால் பண்ணையை அங்கீகரித்தல் மற்றும் அடைகாக்குமிடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான தொழில்நுட்பக் குழுக்களிலும், இறால் பிடிப்போர் கடன் மதிப்பாய்வு குழுவிலும், இறால் வளர்ப்பு மீதான கூட்டங்களிலும் குழு உறுப்பினரொருவராகப் பங்கெடுக்கப்பட்டது.

14. ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் அலங்கார மீன் மற்றும் நீரியல் தாவர ஏற்றுமதியாளர் கூட்டங்களில் பங்கெடுக்கப்பட்டது.

15. வேண்டுகோளின் பேரில் அமைவிடச் சாத்தியவள ஆய்வுகள், மீன் பலியாதல்கள் ஆகியன மீது அறிக்கைகள் வழங்கப்பட்டன.

16. அரசாங்க திணைக்களங்களினதும், மாணவர்களினதும் மற்றும் மீன்பிடிப்போர்களினதும் வேண்டுகோளின் பேரில் அலங்கார மீன் பண்பாட்டு வளர்ப்பு, நீரியல் தாவரங்கள், இறால் பண்பாட்டு வளர்ப்பு, உணவு மீன் பண்பாட்டு வளர்ப்பு, நீரின் தர முகாமைத்துவம், மற்றும் நோய் முகாமைத்துவம் ஆகியன மீது தகவல் வழங்கப்பட்டது.

17. இலங்கையிலுள்ள முக்கியமான தாவரப் பகுதிகளுக்கு கருத்திட்ட முன்மொழிவையும், செயல்திட்டத்தையும் வகுத்தமைப்பதில் பங்கெடுக்கப்பட்டது.

18. மீன்பிடி எதிர்வுகூறல் கருத்திட்டத்தில் பணியாற்றப்பட்டது.

## 5. விழிப்பியல் திட்டங்கள்

1. 'நாரா'வினால் சாதிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை வழங்குவதற்காக சிறிய அளவிலானதும், நடுத்தர அளவிலானதுமான அலங்கார மீன்பிடிப்போர்களுக்கு இரு பத்து நாட்களைக் கொண்ட அலங்கார மீன் வளர்ப்பு, பண்பாட்டு வளர்ப்பு மற்றும் முகாமைத்துவப் பயிற்சிகள் ஆகியன நடத்தப்பட்டன (2007 ஜனவரி, நொவம்பர் மற்றும் டிசம்பர்).

2. NIFNE உத்தியோகத்தர்களுக்காக அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் நோய் முகாமைத்துவம் மீதான 3 நாட்களைக் கொண்ட பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது (2007 நொவம்பர் 14, 15, 16).

3. இலங்கை தொழில்முன்னிலைப் பயிற்சி அதிகார சபையில் பயிற்சியாளர்களுக்காக 30.11.2007 அன்று அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் பண்பாட்டு வளர்ப்பு பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

4. CARP கால்நடை, நீரியல் விருத்தி குழுக் கூட்டங்களில் பங்கெடுக்கப்பட்டது.

5. வெளியார் நிதிப்படுத்தலைப் பெறுவதற்கான சாத்தியக்கூற்றினை ஆராய்வதற்காக உள்நாட்டுக்குரிய மற்றும் பிறநாட்டுக்குரிய மீன் வளர்ப்பு மற்றும் பண்பாட்டு வளர்ப்பு மீதான ஆராய்ச்சிக் கருத்திட்டம் CARPக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

6. கள வருகை தரல்களின் போது சூழல்முறைமையின் பேணலையும், நீர்த்தாழைகளின் உபயோகத்தையும் பற்றி தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களில் இணைந்திருந்த மீன்பிடித்தல் சனசமூகங்களின் விழிப்பியல் அதிகரிக்கப்பட்டது.

7. அலங்கார மீன் பண்பாட்டு வளர்ப்பு, மற்றும் முகாமைத்துவ பயிற்சித் திட்டங்களின் விரிவுரைகளும், செயல்முறை வகுப்புக்களும் 'நாரா'வினால் நடத்தப்பட்டன.

8. பாடசாலை/பல்கலைக்கழக மாணவர்களுக்கு/அரசாங்க மற்றும் அரச சார்பற்ற தாபனங்களுக்கு விழிப்பியல் திட்டங்கள்
   கள ஆய்வு முகாம்

### வெளியீடுகள்/சாராம்சங்கள்

விஜேகுணவர்த்தன பி.கே.எம்., ஜே.எ.கௌலி மற்றும் வோர்க்கர் பி.ஜே. (2007) *Penaeus monodon* என்ற புவியியல்ரீதியில் தனிப்படுத்தப்பட்ட எண்ணிக்கைகளில் அடையாளம் காணப்பட்ட மஞ்சள் தலை வைரசின் பிறப்புரிமையமைப்பிலான மாற்றங்கொளிகளைக் கண்டறிவதற்கு ஒருப்பாட்டிலான RT – குஞ்சுபொரித்தல் PCR ஒன்றை விருத்தி செய்தல், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கி அயனமண்டல ஆராய்ச்சி மீதான் சர்வதேச மகாநாட்டின் சாராம்சங்களின் நூலில், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு மட்டக்குளிய, கொழும்பு 15, பெப்ரவரி 16, பக்கம் 08.

கொரயா ஏ.எஸ்.எல்.இ., பொலன்னறுவை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நீரியல் களைகளின் பங்கீடும், தெரிவு செய்யப்பட்ட இயற்கையான நீர் நிலைகளின் மீது அவற்றின் தாக்கமும், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கி அயனமண்டல ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாட்டின் சாராம்சங்களின் நூலில், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15, பெப்ரவரி 16

கொரயா ஏ.எஸ்.எல்.இ., இறால் ஆரோக்கியத்திற்கான விசேட மேற்கோளுடன் இறால் பண்ணைப் பெறுபேற்றிலும் பண்பாட்டு வளர்ப்பு சூழலிலும் அண்மைய போக்குகள், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கி அயனமண்டல ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாட்டின் சாராம்சங்களின் நூலில், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு மட்டக்குளிய, கொழும்பு 15, பெப்ரவரி 16.

கொரயா ஏ.எஸ்.எல்.இ., வட மேல் மாகாணத்தில் மூன்று பாரிய வெள்ளங்களின் போது அவதானிக்கப்பட்ட இறால் பண்பாட்டு வளர்ப்பில் நீரின் தரத்தில் மாற்றங்களினதும், நோய்க் குணங்குறிகளினதும் ஒப்பீடு, இலங்கை மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் சங்கத்தின் வருடாந்த அமர்வுகளின் சாராம்சங்களின் நூலில்

ஹீனட்டிகல பி.பி.எம்., புஸ்பகுமார, ஜே., மற்றும் எல்.விக்ரமசிங்க, களுத்துறைப் பகுதியில் நன்னீர் அலங்கார மீன் பண்பாட்டு வளர்ப்பு முறைகளில் சூழல் நிலைமைகள் தொடர்பான புறவொட்டுண்ணி தொற்றுதல்களின் ஆய்வு, நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கி அயனமண்டல ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாட்டின் சாராம்சங்களின் நூலில், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை, காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு 15, பெப்ரவரி 16.

தஹநாயக்க, டி.டி.ஜி.எல்., மற்றும் டபிள்யு.எ.சுமணதாச (2007) இலங்கை, கடோல்கலே, 'நாரா' நீர்த்தாழை ஒதுக்கின் தாவர இன அடக்கமும், பயிர்வர்க்க கட்டமைப்பும் மற்றும் பேணலுக்கான வழிகாட்டல்களும். இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக வனவியல், சூழல் விஞ்ஞான திணைக்களத்தின் 2007 – சர்வதேச வனவியல், சூழல் கருத்தரங்கின் கருத்துக் கோர்வை, பக்கங்கள் 25 – 26.

தஹநாயக்க, டி.டி.ஜி.எல்., எஸ்.சி.ஜயமான்ன மற்றும் எம்.ஜே.எஸ்.விஜேரத்ன, 2007 அயனமண்டல பொங்குமுக சூழலியல்முறைமையொன்றில் பொலிக்கீற்று பன்னிலையாக்கம், இலங்கை மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் சங்கத்தின் 13ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுகள் (சாராம்சம்), பக்கம் 08.

எஸ்.சி.ஜயமான்ன மற்றும் தஹநாயக்க, டி.டி.ஜி.எல்., (2007) இலங்கை, பேருவளை பாபரின் கற்பார்த்தொடரின் விலங்கினத்தினதும், தாவரவினத்தினதும் சுனாமிக்குப் பின்னரான மீட்பித்தல், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான 'நாரா'வின் 25ஆவது வருடாந்த விஞ்ஞான மகாநாட்டின் கருத்துக்கோர்வை, 2007 பெப்ரவரி 15 முதல் 16 வரை, இலங்கை, பக்கம் 34.

எம்.கம்மன்பில, (2008) நீர் அலங்கார மீன் பண்பாட்டு வளர்ப்பில் *Moina micrura* என்ற நீர்த்தெள்ளின் பெருந்திரளான உற்பத்தி, 2008 டிசம்பர் 01–06 வரை நடைபெற்ற இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் (இ.வி.ச.) 64ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுகளின் வாய்மொழியிலான சமர்ப்பணத்திற்கு சாராம்சம் அனுப்பப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சிக் கட்டுரைகள்

1. பி.பி.எம்.ஹீனட்டிகல., சி.வி.எல்.ஜயசிங்க மற்றும் ஜே.எம்.பி.கே.ஜயசிங்க. (2005) முன்பள்ளிச் சிறுவர்களுக்கு *Leognathus splendenns*, தாமரை மற்றும் கோகில ஆகியவற்றைப் பயன்படுத்தி 'சூப்' கலவையொன்றை விருத்தி செய்தல், ஜேர்னல் ஒ்.ப் நாரா, தொகுதி 37.
2. டி.டி.ஜி.எல்.தஹநாயக்க மற்றும் எஸ்.சி.ஜயமான்ன மற்றும் எஸ்.யு.பி.ஜினதாச (2007) இலங்கை, யாழ்ப்பாணத்திற்கு அப்பால் பாக்கு நீரிணையின் கடலகச் சூழலியலில் ஆழ் நீர் தளத்திற்குரிய முள்ளந்தண்டற்றவைகளினதும், அடையல் இழையத்தினதும் அபரிதமானதன்மை, பங்கீடு மற்றும் பன்னிலையாக்கம் மீதான பூர்வாங்க ஆய்வுகள், ஜேர்னல் ஒ்.ப் நாரா (ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது).

இ.வி.மு.ச. வருடாந்த வெளியீட்டுக்கு முழுமையான கட்டுரை ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

## துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சிற்றேடுகள்

"அலங்கார மீன் பண்பாட்டு வளர்ப்பில் தோன்றுகின்ற பிரச்சனைகள்" - எம்.ஜி.ஐ.எஸ்.பராக்கிரம, பி.பி.எம்.எம்.ஹீனட்டிகல

மேற்படி சிற்றேட்டின் அச்சிடுதல் பணி முடிக்கப்பட்டுள்ளதுடன், 'நாரா'வுக்கு 2,000 சிற்றேடுகள் கிடைத்துள்ளன.

இலக்கரீதியான செய்துகாட்டல் பலகைகள்.

### அறிக்கைகள்

1. தெகிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் மீன் பலியாதல் மீதான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
2. மேற்கோள் ஆய்வுகூடம் மீதான அறிக்கை (வெள்ளை வால் நோய்க்கான RRL, 2007 பெப்ரவரி 02), விலங்கு உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
3. *Chitala ornata* என்ற அந்நிய ஊடுருவலிலான மீன் இனங்களின் சாத்தியமான பயமுறுத்தல்கள் மற்றும் உணவூட்டல் உயிரியல் மீதான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, இலங்கை வனவாழ்வுப் பேணல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது.
4. வட மேல் மாகாணத்தில் நண்டு பண்பாட்டு வளர்ப்பு செயற்பாடுகளினதும், பண்பாட்டு வளர்ப்பிலான நண்டில் வெள்ளைப் புள்ளி வைரசின் தற்போதைய நிலையினதும் மீதான அறிக்கை, மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
5. வைக்காலில் ரண்வலி விடுமுறை கிராமத்தில் நீர்த்தாழை ஒதுக்கு பராமரிக்கப்பட்டது. பத்திரிகைக் கட்டுரைகள் (திவயின, மீபுர).

### செயலமர்வுகளில் பங்கெடுப்பு

- 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையமும், சமுத்திர ஆராய்ச்சி மற்றும் சூழல் பாதுகாப்பை நோக்கிய அதன் பங்களிப்பும் மீதான செயலமர்வு 2007 செப்ரெம்பர் 13 அன்று 'நாரா'வில் நடைபெற்றது.

- வருடாந்த ஆராய்ச்சித் திட்டத்தின் தயாரிப்புக்கான பங்காளர் உசாவுகைச் செயலமர்வு 2007 டிசம்பர் 14 அன்று நாராவில் நடைபெற்றது.

- இளம் விஞ்ஞானிகள் அரங்கினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இளம் விஞ்ஞானிகளுக்கான ஆராய்ச்சிக்கும், இலக்கிய மதிப்பாய்விற்குமான (விஞ்ஞானரீதியான நோக்கங்கள்) இன்டர்நெற்றின் உபயோகம் மீதான செயலமர்வு, 2007 டிசம்பர் 18.

- பேராதனையில் தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் இளம் விஞ்ஞானிகள் அரங்கினால் ஒழுங்குபடுத்தப்பட்ட இளம் விஞ்ஞானிகளுக்கான திறன்களை முன்னேற்றுதல் மீதான செயலமர்வு, 2007 ஜூலை 25.

- 2007 ஜூலை 4 முதல் 6 வரை கண்டியில் முக்கியமான தாவரப் பகுதியை அடையாளம் காணுதலும், அவற்றின் பேணலுக்காக கருத்திட்ட முன்மொழிவொன்றை விருத்தி செய்தலும் மீதான செயலமர்வு.

- கரையோரப் பேணல் திணைக்களத்தினதும், தேசிய நீரியல் அபிவிருத்தி அதிகாரசபையினதும் பொறுப்பிக்கப்படவுள்ள ஆராய்ச்சி செயற்பாடுகளினதும், ஆற்றலளவை கட்டியெழுப்புதலினதும், மீதான பங்காளர் செயலமர்வு.

- 2007 ஏப்ரல் 25–26 அன்று பெந்தோட்டை, பெந்தோட்டை பீச் ஹொட்டேலில் உலகளாவிய இயற்கை நிதியங்கள், EMACE மன்றம் மற்றும் நகினஹிரு மன்றம் ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட "நீர்த்தாழைக்குப் புத்துயிரளித்தல், ஜீவனோபாய முன்னேற்றம் மற்றும் சூழலியல்-உல்லாசப் பயணம்" மீதான சர்வதே மகாநாட்டில் பங்கெடுக்கப்பட்டது.

### பயிற்சிகள் (வெளிநாடு)

- நீர்த்தாழைச் சூழலியல்முறைமைகளில் கரையோர உயிரக பன்னிலையாக்கம் மீதான UNU-INWEH-UNESCO சர்வதேச பயிற்சி நெறி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடலக உயிரியலில் உயர் தர ஆய்வு நிலையம், பறங்கிப்பேட்டை, இந்தியா, 2007 நொவம்பர் 12–26.

### தேசிய

- இரம்பொடகல, நீரியல் விருத்தி அபிவிருத்தி நிலையத்தில் SLAFARஇனால் ஜூன் 06–08 வரை நடத்தப்பட்ட அலங்கார/உணவு மீன் கைத்தொழிலில் நோயைக் கட்டுப்படுத்துவது மீதான பயிற்சித் திட்டம்.

- ICEIDA மற்றும் மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சு ஆகியவற்றினால் செப்ரெம்பர் 27–30 வரை வாதுவையில் நடத்தப்பட்ட கருத்திட்ட சுற்று முகாமைத்துவத்தில் பயிற்சிநெறி

- GENETECH நிறுவனத்தினால் ஒக்டோபரிலும் (18, 19, 24, 26), மற்றும் நொவம்பரிலும் (1,2, 8, 9) கொழும்பில் நடத்தப்பட்ட PCR தொழில்நுட்பம் மீதான பயிற்சித் திட்டம்.

- பேராதனை பல்கலைக்கழகத்தில் 2007 செப்ரெம்பர் 19–23 வரை நீரியல் விலங்குகளில் பக்டீரியா நோயின் ஆய்வுகூட குணங்குறியறிதல் மீதான பயிற்சித் திட்டம்.

**சர்வதேசக் கருத்தரங்கு**

**தேசியக் கருத்தரங்கு**

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த அமர்வுகளில் பங்கெடுக்கப்பட்டது.

இலங்கை மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் சங்கத்தின் வருடாந்த அமர்வுகளில் பங்கெடுக்கப்பட்டது.

இலங்கை உயிரியல் நிறுவனத்தின் வருடாந்த அமர்வுகளில் பங்கெடுக்கப்பட்டது.

INFORM...
18 FEB 2010

# தகவல் தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** திரு.எ.பீ.எ.கே. குணரத்ன

## 1. ஆண்டின் கண்ணோட்டம்

நீரியல் வளங்களின் முகாமைத்துவத்திற்கும், பேணலுக்கும், அபிவிருத்திக்கும் சகல பங்காளர்கள் மத்தியில் தகவலைத் திரட்டுவதற்கும், படிநிலைப்படுத்துவதற்கும், பரிமாறுவதற்கும், பரப்புவதற்கும் தகவல் தொழில்நுட்ப மேடையொன்றை வழங்குவதற்கான பொறுப்பினை தகவல் தொழில்நுட்பப் பிரிவு கொண்டுள்ளது.

கணனிப் பிரயோக அபிவிருத்தியுடன் பணியாற்றும் பிரிவானது 'இன்டர்நெற்' சேவைகளையும், புவியியல் தகவல் முறைமைகளையும் (GIS), சேய்மை கூருணர்வுப்படுத்தலையும், மாதிரிப்படுத்தலையும், கணனிப் பிரயோகங்களில் பயிற்சியையும் வழங்குகின்றது.

இரு திறைசேரி நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களையும், இரு வெளியார் நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களையும் பிரிவு மேற்கொண்டது. இவற்றுக்கு மேலதிகமாக கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீது அமைச்சு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியிலும், சமுத்திர அவதானித்தல் நிலையம் மற்றும் உத்தேசமான மீன்பிடித்தல் எதிர்வுகூறல் கருத்திட்டம் ஆகியவற்றின் செயற்பாடுகளிலும் பிரிவு பங்கெடுத்தது.

பிரிவிலிருந்து இரு பணியாள் உறுப்பினர்கள் இராஜினாமா செய்ததுடன், திறைசேரியினால் உத்தியோகத்தர்களுக்கான பதிலீடு அனுமதிக்கப்படவில்லை.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| செயற்திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 1. த.தொ. பிரயோக முன்னேற்றமும், ஆதரவும் | 1.1 'நாரா' இணைய தளத்தையும், வேறு 'இன்டர்நெற்' சேவை களையும் முன்னேற்றுதலும், தரமுயர்த்தலும் | | எ.பீ.எ.கே.குணரத்ன | தொடர்ச்சியானது | |
| 2. GIS மற்றும் சேய்மை கூருணர்வு | 2.1 நீர்கொழும்பு கடல் ஏரியில் கூருணர்விலான பகுதியின் முகாமைத்து வத்திற்கான GIS மற்றும் சேய்மை கூருணர்வு மூலோபாயங்களை முன்னேற்றுதல் | | எ.பீ.எ.கே.குணரத்ன | 2003 | 2007 |

## 3. செயற்றிறன்

### 'நாரா' கருத்திட்டங்கள்

**கருத்திட்டம் 1.1 'நாரா' இணைய தளத்தையும், வேறு 'இன்டர்நெற்' சேவைகளையும் முன்னேற்றுதலும், தரமுயர்த்தலும்**

உலகம்பூராவிலுமான இணையதளத்தினூடாக தகவலைப் பரப்புவதும், தகவல் பரிமாறுதலை வசதிப்படுத்தும் நோக்குடன் 'நாரா'வின் விஞ்ஞான பணியாளருக்கும், அதன் பங்காளருக்கும் வேறு இன்டர் நெற் சேவைகளை வழங்குவதுமே கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். காலத்தின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்கு (100%) சாதிக்கப்பட்டது. புதிய ஈ-மெயில் முறைமை, FTP அமைவிடம், கொழும்பிலிருந்து கிரிந்த மற்றும் திருகோணமலை வற்றுப்பெருக்கு மானிகளிலிருந்து ஒன்லைன் கடல்மட்ட ஆராய்தல் வசதிகள் ஆகியனவே முடிக்கப்பட்ட பாரிய பணியாகும். அழிவொன்றின் போது தரவு மீட்பித்தலை கவனத்திற்கெடுப்பதற்காக மைய களஞ்சிய முறைமையைத் தாபித்தலும் முடிக்கப்பட்டுள்ளது. ஒன்லைன் கருத்துப்பரிமாறலிலும் தமது தகவலை வெளியிடுவதிலும் பங்கெடுப்பதற்காக பங்காளர் சனசமூகங்களை அனுமதிக்கும் இணையதள கருவி 2.0 பிரயோகிக்கும் 'நாரா' இணைய தளத்தை திரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2008 செப்ரெம்பருக்குள் இணையதளத்தின் தரமுயர்த்தப்பட்ட வாசகத்தின் அமுலாக்கம் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனிப்பட்ட கணனியைப் பழுதுபார்த்தலிலும், அவற்றை தரமுயர்த்தும் பணியிலும் பணியாளர் ஈடுபட்டிருந்தனர். CARP வலைப்பின்னலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் ஆராய்ச்சி ஆகுசெலவை மதிப்பாய்வதற்கு பயன்படுத்தப்பட்ட INFORM தரவுத்தளம்; CARP க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஆண்டின் போது 'நாரா'வில் நடைபெற்ற வேறுபட்ட செயலமர்வுக்கான அச்சிடுதல் பணியில் பிரிவு சம்பந்தப்பட்டிருந்தது.

வெளிநாட்டு பயிற்சி தொடர்பில் இடம்பெற்ற ஈ-மெயில் மோசடியின் விசாரணையின் பின்னர் இலங்கை பொலிஸ் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திலிருந்து தகவல் தொழில்நுட்பக் கொள்கையை தயாரிப்பதற்கான சிபார்சினை பிரிவு பெற்றது.

முன்னேற்றம் (%) பௌதீக: 100% நிதிசார்: 100%

**கருத்திட்டம் 2.1: நீர்கொழும்பு கடல் ஏரியில் கூருணர்விலான பகுதியின் முகாமைத்துவத்திற்கான GIS மற்றும் செய்மை கூருணர்வு மூலோபாயங்களை முன்னேற்றுதல்**

செய்மைக் கூருணர்வையும், GISஐயும் பயன்படுத்தி இலங்கையில் கரையோர வலயத் திட்டமிடலுக்கு பிரயோகிக்கப்படக்கூடிய முறைமையியல்களை விருத்தி செய்வதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. நீர் கலம் திருத்த முறைமைகளுக்கான திரிபுபடுத்தலை அறிமுகப்படுத்துவதன் மூலம் திருத்தியமைக்கப்பட்ட உப நீரியல் வலயத்தில் கூறுகளை நடத்தப்பட்ட பிரதிமை வகைப்படுத்தல் அடையாளம் கண்டது.

முன்னேற்றம் (%) பௌதீக: 100% நிதிசார்: 100%

**வெளியார் நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்கள்:**

1. **மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் பண்ணை அபிவிருத்திக்காக வலயப்படுத்தல் மீதான NAQDA நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்**
கருத்திட்டம் முடிக்கப்பட்டுள்ளது. அடைகாக்குமிடங்களையும், பண்ணைகளையும் அமைப்பதற்கு இறால் பண்பாட்டு வளர்ப்பு அபிவிருத்திக்கான பொருத்தமான பகுதியை முடிவுகள் காட்டின. இறால் பண்ணைகளாக 2,186 ஹெக்டார்கள் விருத்தி செய்யப்பட முடியும் என அடையாளம் காணப்பட்டது. இறுதியறிக்கை NAQDAக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2. **மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் பண்ணை அபிவிருத்திக்காக வலயப்படுத்தல் மீதான NAQDA நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்**
ஜூலை மாதத்தில் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பாதுகாப்பு நிலைமையினால் தரவு சேகரிப்பு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. எனினும், ஆண்டின் இறுதியில் மொத்த கருத்திட்ட முன்னேற்றம் 60% ஆகும்.

3. **வெளியீடுகள்:**
எ.பீ.எ.கே.குணரத்ன, மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் பண்ணையின் அபிவிருத்திக்கான வலயத் திட்டம், 2007 ஒக்டோபர் 14.

4. **நடத்தப்பட்ட பயிற்சி/விழிப்பியல் திட்டங்கள்**

    1. தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வலைப்பின்னல் நிருவாக சான்றுப்பத்திர திட்டத்தில் திரு.ஜானக லொக்குகமகே பங்கெடுத்தார்.

    2. ஐஸ்லாந்தில் மார்ச் 19 முதல் ஏப்ரல் 2 வரை கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீதான பயிற்சியில் திரு.எ.பீ.எ.கே.குணரத்ன பங்கெடுத்தார்.

    3. ஜப்பானில் டிசம்பர் 09 முதல் 14 வரை மரைன் எக்ஸ்புளொரர் (கடலக GIS மீதான மென்கணியம்) மீதான பயிற்சியில் திரு.எ.பீ.எ.கே.குணரத்ன பங்கெடுத்தார்.

    4. வள நபராக கருத்திட்ட சுற்று முகாமைத்துவம் மீது மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு நடத்தப்பட்ட மூன்று பயிற்சித் திட்டத்தில் பங்கெடுக்கப்பட்டது.

5. மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் பண்பாட்டு வளர்ப்பு மீதான வலயத் திட்டத்தை முடிவாக்குவது மீது பங்காளர்களினதும், பொதுமக்களினதும் கருத்துக்களைப் பெறுவதற்காக இரு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. முதலாவது செயலமர்வு 2007 ஏப்ரல் 4 அன்று உள்ளூர் நிருவாகத்தினருக்கும், பங்காளர்களுக்கும் அ.சா. தாபனங்களுக்கும், ச.அ.சா.தாபனங்களுக்கும் மற்றும் இறால் பிடிப்போருக்கும் மட்டக்களப்பில் நடத்தப்பட்டதுடன், இரண்டாவது செயலமர்வு சூழல் அம்சங்களிலும், திட்டமிடலிலும் சம்பந்தப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு நடத்தப்பட்டது.

6. IBMஇனால் ஆதரவளிக்கப்பட்ட 2007 மே 14 அன்று டொமினோ மெயில் சிஸ்டம் மீதான செய்துகாட்டலில் செல்வி நீரங்க காலசிங்க பங்கெடுத்தார்.

7. கொழும்பு ப.ஞா.ச.ம.மண்டபத்தில் 2007 மே 18 அன்று நடைபெற்ற தேசிய இடஞ்சார்ந்த தரவு உட்கட்டமைப்பு மீதான செயலமர்வில் செல்வி நீரங்க காலசிங்க பங்கெடுத்தார்.

## 5. வேறு செயற்பாடுகள்

1. கமத்தொழில் ஆய்வு கொள்கைச் சபைக்கு INFORM தரவுத் தளம் சமர்ப்பிக்கப்பட்டது.

# நூலக, தகவல் பிரிவு

## பிரிவுத் தலைவர்/பிரதம நூலகர்: திருமதி வி.ருபசிங்க

### 1. ஆண்டின் கண்ணோட்டம்

நீரியல் கைத்தொழிலில் ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பயனுள்ள தகவலைச் சேகரித்தல், பரப்புதல், மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான முக்கியமான பங்கினை நூலக, தகவல் பிரிவு வகிக்கின்றது. பிரிவின் மையமாக நூலகம் விளங்குவதுடன், பலதரப்பட்ட தகவலை வளங்களின் ஊடாக பரப்பப்பட்ட விஞ்ஞானரீதியிலான அறிவுக்கு அடைதல் மூலம் விஞ்ஞானிகளின் மனதின் புதுமாற்றத்தினாலும், செயல்நோக்கத்தினாலும் ஆராய்ச்சி ஆய்வுகளை முழுமைப்படுத்துவதில் தகவலின் சேகரிப்பு, ஒழுங்குபடுத்தல், மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் பிரதானமாக நோக்கினைக் கொண்டுள்ளது.

### 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| செயற்திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா/மி) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 1. நூலக, தகவல் பிரிவு | 1.1 இலங்கையில் நீர்வாழ் வளங்கள் துறைக்குச் சேவையாற்றுவதற்காக ஒருங்கிணைப்பு வலைப்பின்னல் நூலகத்தையும், தகவல் முறைமையையும் தாபித்தல் | 0.285 | வி.ருபசிங்க<br>எஸ்.லியனஆரச்சி<br>ஒ.கே.பி.நந்தன | 2007 ஜன. | |
| | 1.2 நூலக வளங்களைக் கையகப்படுத்தல் | 1.215 | வி.ருபசிங்க<br>எஸ்.லியனஆரச்சி<br>ஒ.கே.பி.நந்தன | | |
| 2. வெளியிடுதல் | 2.1 தொடர்ச்சியான மீன்பிடித் தொழில், நீரியல் வளங்கள் தொடர்பாக விஞ்ஞானரீதியான தகவலை 'நாரா' சஞ்சிகையில் வெளியிடுதல் | 0.4 | எஸ்.சி.ஜயமான்ன<br>என்.சுரேஷ்குமார்<br>ஒ.கே.பி.நந்தன | 2007 ஜன. | |

### 3. செயற்றிறன்

#### கருத்திட்டம் 1.1

கருத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு: (அ) தேசிய நீரியல் வளங்கள் மீதான தகவலைப் பெறுவதற்கு ஆர்வம் கொண்டுள்ள யாராவது ஒருவர் 'நாரா' நூலகத்திற்கு வராமல் அடைதலைக் கொண்டிருப்பதை இயலச் செய்தல் மற்றும் (ஆ) அவற்றின் உபயோகிப்பாளர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நூலகத்தின் 'மல்ரி மீடியா'வில் தகவலைக் கிடைக்கச் செய்தல் மற்றும் அவற்றின் குறிப்பான தேவைகளுக்குத் தொடர்பான தகவலை அடைதல்.

அக்கறையிலான தரப்புகளுக்கு 'நாரா' இணையதளம் ஊடாக கணனிமயப்படுத்தப்பட்ட நூல் விபரப்பட்டியல் தரவுத்தளத்திற்கான அடைதல் வழங்கப்பட்டது. இணைய தளம்: www.nara.ac.lk

பட்டதாரி மாணவர்களுக்கு சேவைகளை நூலகம் வழங்கியுள்ளதுடன், வேறுபட்ட பகுதிகளிலிருந்து வந்த உபயோகிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை 900 ஆகும்.

முன்னேற்றம்: பௌதீக: 60% நிதிசார்: 70%

#### கருத்திட்டம் 1.2 நூலக வளங்களைக் கையகப்படுத்தல்

சஞ்சிகைகளின் பட்டியல் கீழே வழங்கப்பட்டுள்ளது:

**சஞ்சிகைகள்**

1 Aquaculture
2 Fisheries Research
3 National Geographic
4 Marine Pollution Bulletin
5 Estuarine Coastal and Shelf Science
6 Ocean and Coastal Management

முன்னேற்றம்: பௌதீக: 50% நிதிசார்: 50%

**கருத்திட்டம் 2.1 விஞ்ஞான சஞ்சிகையை வெளியிடுதல்**

(1) NARA Journal தொகுதி 38:

தொகுதி 38இன் இறுதியான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இறுதிப் பதிப்பித்தலுக்கு வயம்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எஸ்.ரணவீரவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(2) NARA Journal தொகுதி 39:

25ஆவது ஆண்டு நிறைவு மகாநாட்டின் கருத்துக் கோர்வைகள் மீதான அடிப்படையில் NARA Journalஇன் விசேட பதிப்பை வெளியிடுவதென NARA Journalஇன் பதிப்புக் குழு தீர்மானித்தது.

முழுக்கட்டுரைகளின் சமர்ப்பணங்களை அனுப்புமாறு கட்டுரையாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

முன்னேற்றம்: பௌதீக: 70% நிதிசார்: 35%

# கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி சம்பா அமரசிறி

## 1. ஆண்டின் கண்ணோட்டம்

வாழும் கடல்சார் வளங்களின் முகாமைத்துவத்தினதும், அபிவிருத்தியினதும் மற்றும் பேணலினதும் மீது ஆராய்ச்சியை நடத்துவதற்கான பொறுப்பைக் கடல்சார் உயிரியல் வளங்கள் பிரிவு கொண்டுள்ளது. 2007இல் க.உ.வ. பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கரையோர மற்றும் கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தொழில் மீது முகாமைத்துவ முனைப்பிலான ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்
- முருகைக் கற்பார்த்தொடர்களினதும், பயமுறுத்தலிலான கடலக விலங்கினத்தினதும் பேணல்
- கடலக மீன்பிடித்தொழில் மீதான பிறப்பியல் ஆய்வுகள்

2007இல் க.உ.வ. பிரிவினால் ஒன்பது ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் நடத்தப்பட்டன. மூலவள பயன்படுத்தல் தொடர்பான பிணக்குகளை இணக்குவதில் சிபார்சுகளை வழங்குவதில் பிரிவு பங்கெடுத்தது. 2008–2010இன் போது நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கடலக மூலவள அளவீட்டுக்காக பணியாளரின் ஆற்றலளவை மேம்படுத்தும் நடைமுறையில் க.உ.வ. பிரிவு உள்ளது. இக்காலத்தின் போது இந்த மூலவள அளவீட்டினை பொறுப்பேற்பதே க.உ.வ. பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

## 2. பொறுப்பேற்கப்பட்ட செயற்பாடுகள்

| கருத்திட்டம் | | ஒதுக்கீடு | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் | |
|---|---|---|---|---|---|
| | | மில். ரூபா | | முதல் | வரை |
| 1.1 | கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித் தொழிலை கண்காணித்தல் | 1.50 | சி.அமரசிறி | 2007 , | (தொடர்ச்சியானது) |
| 1.2.1 | மேற்கு, வட மேற்கு, கிழக்கு மற்றும் தெற்குக் கரையோரங்களில் சிறிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தொழிலைக் கண்காணித்தல் | 0.80 | எஸ்.எஸ்.கே.ஹபுதந்திரி | 2005 | 2008 |
| 1.2.2 | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கரையோர மூலவளங்களில் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு ஆகக் கூடுதலான மீன்பிடித்தல் ஆற்றலளவை ஆய்தல் | 1.00 | எஸ்.எஸ்.கே.ஹபுதந்திரி | 2007 | 2007 |
| 1.3 | ரேகாவ RRCஐத் தளமாகக் கொண்டு தென் மற்றும் கிழக்கு கரையோர நீர்களில் சிங்கி இறால் பிடித்தலைக் கண்காணித்தல் | 0.450 | யு.லியனகே | 2005 | 2010 |
| 3.7.1 | இறால் வளர்ப்பு கைத்தொழிலுக்கு *P. monodon* கரு இருப்பு மூலவளங்களின் கிட்டுதலையும், பொருத்தத் தன்மையையும் மற்றும் சேகரிப்புக்காக செயற்றிறனான மீன்பிடித்தல் கருவியொன்றை விருத்தி செய்தலையும் மதிப்பிடுதல் | 0.80 | சி.அமரசிறி (ஆர்.பி.பி.கே.ஜயசிங்க) | 2007 | 2008 |
| 3.7.2 | இழைமணி கட்டுப்பாட்டு பிராந்தியத்தில் cytochrome c oxidase 1 (COI)இன் பரம்பரையலகு தொகுதிகளைப் பயன்படுத்தி இலங்கையில் வேறுபட்ட புவியியல் அமைவிடங்களில் பிடிக்கப்பட்ட (COI) *P. monodon* இறால் இருப்புக்களின் பரம்பரை பன்னிலையாக்கத்தை ஆய்தல் | 2.50 | டி.என்.எ.ரண்மடுகல | 2007 | 2008 |
| 4.2 | முருகைக் கற்பார்த்தொடர்களின் பேணலும், முகாமைத்துவமும் | 0.80 | எ.ராஜசூரிய | 2006 | 2007 |
| 4.3 | கடலகப் பாலூட்டிகளின் ஆராய்ச்சியும் பேணலும் | 0.50 | எ.ராஜசூரிய | 2007 | 2009 |
| 7.4 | கடலக நூதனசாலையைத் தரமுயர்த்துதல் | 1.00 | சி.அமரசிறி | 2007 | 2010 |

## 3. செயற்றிறன்

### கருத்திட்டம் 1: கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தலைக் கண்காணித்தல்

தரவுத்தள முகாமைத்துவத்தினதும், சுரண்டல் மட்டங்களின் மதிப்பீட்டினதும், இருப்பு மதிப்பீட்டினதும் நோக்கத்திற்காக பாரிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தல் மீது தரவைச் சேகரிப்பதே இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். ஆறு பாரிய இறங்கு துறை அமைவிடங்களில் கற்பிட்டியிலிருந்து திருகோணமலை வரை மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு கரையோரங்களில் பாரிய இறங்குதுறை அமைவிடங்களில் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. வேறுபட்ட படகு வகைகளுக்கு பிடி மற்றும் முயற்சித் தரவு, நீள அடுக்கு நிகழ்வுத் தரவு, இனங்களின் அடக்கம், மற்றும் தொடர்பான உயிரியல் தகவல் ஆகியன சேகரிக்கப்பட்டு, பாரிய விரிகடலுக்குரிய தரவுத்தளத்தில் (pelagos) பதியப்பட்டன. நடைமுறையின் போது, கடற்கரையினீங்குகின்ற பல்நாள் மற்றும் கரையோர நீண்ட தூண்டில் மீன்பிடித்தொழில் புறம்பாக கரிசனைக்கு எடுக்கப்பட்டதுடன், தரவுகள் பகுப்பாயப்பட்டு, துறைமுகரீதியாகவும், கப்பல் வகைரீதியாகவும், பகுதிரீதியாகவும் துறைமுகத்தில் கரிச்னையிலான வேறுபட்ட இனங்களுக்காக உற்பத்தி மதிப்பீடுகள் செய்யப்பட்டன. கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித் தொழிலிலிருந்து அதிகரித்த பங்களிப்புடன் மொத்த பாரிய விரிகடலுக்குரிய மீன் உற்பத்தியில் அதிகரிப்பொன்றை உற்பத்தி மதிப்பீடுகள் காட்டுகின்றன. இந்த அதிகரித்துள்ள கடற்கரையினீங்குகின்ற உற்பத்திக்கு பாரிய கூறாக ஸ்கிப் ஜக் தூனா விளங்குகின்றது. சுமார் 3,200 பல்நாள் படகுகள் செயற்பாட்டிலுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இது உள்ளூர்வாசிகளுக்கு சொந்தமான 55க்கு மேற்பட்ட நீண்ட தூண்டில்களை உள்ளடக்குவதுடன், ஏனையவை நீண்ட தூண்டில், பூ வலை மற்றும் வளைய வலைகள் ஆகியவற்றின் இணைப்பொன்றாக செயற்படுகின்றன. தெற்கிலுள்ள சில பகுதிகள் புறநீங்கலாக பெருமளவு விடயங்களில் பயணத்தின் காலம் கணிசமானளவு குறைவடைந்துள்ளது. செயற்பாடொன்றுக்கு 1,500 கொளுக்கிகள் வரை இந்த உள்ளூர் தூய்மையான நீண்ட தூண்டிலிடுவோர் பயன்படுத்துவதுடன் சராசரியாக 400 வரையும், ஆகக்கூடுதலாக 1,000 வரையிலானதுமான கொளுக்கிகளைப் பயன்படுத்துகின்றார்கள். MFARDக்கும், IOTCக்கும் வருடாந்த தரவு சாராம்சங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மேற்படி விடயத்திற்குப் புறம்பாக, வங்காள விரிகுடாவில் கடலக மூலவளங்களின் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவம் மீது BIMSTECஇன் இணையளவீடொன்று தென் கிழக்கு ஆசிய மீன்பிடித் தொழில் அபிவிருத்தி நிலையத்தின் M.V.SEAFDEC மீன்பிடித்தல் ஆராய்ச்சி கப்பலிலிருந்து 2007 ஒக்டோபர் 25 முதல் டிசம்பர் 20 வரை நடத்தப்பட்டது. இந்த அளவீட்டில் 'நாரா'விலிருந்து இரு விஞ்ஞானிகள் (MBRDஇலிருந்து ஒருவர், FTDஇலிருந்து இன்னொருவர்) பங்கெடுத்தனர். BIMSTEC உறுப்புக்களின் மீன்பிடி விஞ்ஞானிகள் மத்தியில் தொழில்நுட்ப இடமாற்றத்திற்கும், விஞ்ஞானரீதியான தகவலைப் பரிமாறுவதற்கும், சிறந்த புரிந்துணர்வையும், உறவினையும் விருத்திசெய்வதற்கும் பாரிய வாய்ப்பினை அளவீடு வழங்கியது.

முன்னேற்றம்: பௌதீக: 100% நிதிசார்: 90%

### கருத்திட்டம் 1.2.1. மேற்கு, வட மேற்கு, கிழக்கு மற்றும் தெற்குக் கரையோரங்களில் சிறிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தொழிலைக் கண்காணித்தல்

பூ வலை மீன்பிடித்தல் செயற்பாடுகள் மீது விசேட வலியுறுத்தலை செலுத்துவதன் மூலம் மூலவளங்களின் நிலையையும், அவற்றின் சுரண்டல் மட்டங்களும் இலங்கையின் மேற்கு, வட மேற்கு, கிழக்கு மற்றும் தெற்குக் கரையோர மீன்பிடித்தொழில் செயற்பாடுகளும் கண்காணிக்கப்பட்டன. ஹெரிங்கின் (*Amblygaster sirm*) (இலங்கையில் சிறிய கண்களிலான பூவலை மீன்பிடித்தலின் முக்கிய இலக்கு இனங்கள்) பிடிவீதங்களில் மாற்றத்திற்கு பலதரப்பட்ட இடஞ்சார்ந்த, லௌகீக மற்றும் செயற்பாட்டிலான காரணிகளின் சார்புரீதியான ஆதிக்கத்தை பரிசீலிப்பதே இப்பணியின் நோக்கங்களில் ஒன்றாகும். ஆண்டு, மாதம், படகின் வகை, மீன்பிடித்தல் நேரம், வலைத்துண்டுகளின் எண்ணிக்கை மற்றும் CPUEஉடன் மொத்த மீன்பிடித்தல் நேரம் ஆகிய விளக்கத்திலான மாறலிகளுக்கு இடையிலான உறவை நிர்ணயிப்பதற்காக கம்மா அடிப்படையிலான பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கரீதியான மாதிரி (GLM) வகுத்தமைக்கப்பட்டது. *A. sirm*இன் பிடித்தல் வீதங்களை நிர்ணயிப்பதற்கான மிகவும் முக்கியமான காரணியாக 54.8%ஐக் கொண்ட வளிவிலகுதல் மற்றும் படகின் வகை ஆகியனவே கண்டறியப்பட்டதாக மாதிரி விளக்கமளிக்கின்றது. எனினும், மிகவும் திட்டமான CPUE காட்டிகளை பெறுவதற்கு தொழிற்படுத்தக்கூடிய முயற்சியின் ஏனைய நடவடிக்கைகள் (மீன்பிடித்தல் நேரம் மற்றும் பயன்படுத்தப்பட்ட வலைத்துண்டுகளின் எண்ணிக்கை) குறிப்பிடத்தக்கதல்ல என கண்டறியப்பட்டது. தற்போதைய ஆய்வின் போது பிடிவீதங்களில் பலமான பருவகால மாறலொன்று அவதானிக்கப்பட்டது. ஹெரிங்கின் நிலையை மதிப்பாய்வதற்கும் எதிர்கால இருப்பு மதிப்பீடுகளுக்கான நீளமான அடுக்குநிகழ்வு தரவுகளைப் பெறுவதற்காக சிறந்த மாதிரிப்படுத்தல் மூலோபாயமொன்றை முன்மொழிவதற்கும் இந்த ஆய்வினால் கவனம் செலுத்தப்பட்டது.

முன்னேற்றம்: பௌதீக: 93% நிதிசார்: 108%

## கருத்திட்டம் 1.2.2. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கரையோர மூலவளங்களில் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கு ஆகக்கூடுதலான மீன்பிடித்தல் ஆற்றலளவை ஆய்தல்

2007 ஜனவரி–ஓகஸ்ட் காலத்தின் போது தங்காலை உதவி பணிப்பாளர் பிரிவில் (ஹம்பாந்தோட்டை மாவட்டம்) கரையோர மூலவளங்கள் மீது ஆய்வொன்றை க.உ..ஆ. பிரிவு நடத்தியது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கரையோர மீன்பிடித்தல் மூலவளங்களின் நிலைத்திருத்தல் அபிவிருத்திக்கான முகாமைத்துவச் சிபார்சுகளை முன்மொழிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். தற்போது பகுதியிலுள்ள கரையோர மூலவளங்கள் நிருவகிக்கப்படுவதில்லை. மூலவளம் அழிந்துபோகும் பயமுறுத்தல்களின் காரணமாக அவசியப்படும் முகாமைத்துவமாக கடுமையாக மீன்பிடிக்கப்படும் கரையோர மீன்பிடித்தொழில் மூலவளங்கள் அடையாளம் காணப்பட்டன. மீன்பிடித்தொழில் தகவல்/புள்ளிவிபரங்களின் சேகரிப்புக்காக சம்பந்தப்பட்ட மீன் இறங்கு துறைகளுக்கு கள வருகை தரல்கள் மேற்கொள்ளப்பட்டன. படகு அளவீடொன்றும் நடத்தப்பட்டது. விரிவான தகவலின் சேகரிப்புக்காக இந்த உதவிப் பணிப்பாளர் பிரிவின் மிகவும் முக்கியமான 10 பாரிய மீன் இறங்குதுறைகள் தெரிவு செய்யப்பட்டதுடன், இவை இவ்வாய்வுக்காக பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன. சுனாமியின் பின்னர் குறுகிய காலத்தினுள் கரையோர மீன்பிடிப் படகுகளின் எண்ணிக்கையில் துரிதமான அதிகரிப்பு கரையோர மூலவளங்கள் மீது மறுதலையாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எனவே தங்காலை உதவி பணிப்பாளர் பிரிவில் கரையோர மூலவளங்கள் மீது மீன்பிடித்தல் அழுத்தத்தைத் தளர்த்துமுகமாக மீன்பிடித்தல் முயற்சியை கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டது. ஆகக்குறைந்த வலையளவு ஒழுங்குவிதிகளை வினைப்படுத்தல் மற்றும் கடுமையாக மீன்பிடிக்கப்படும் கரையோர மூலவளங்களிலிருந்து குறைந்தளவு சுரண்டப்படும் மூலவளங்களுக்கு இடம் மாறுமாறு ஊக்கமளித்தல் போன்ற வேறு முன்னெடுப்புக்களும் சிபார்சு செய்யப்பட்டன.

முன்னேற்றம்: பௌதீக: 100% நிதிசார்: 78%

## கருத்திட்டம் 1.3 ரேகாவ RRCஐத் தளமாகக் கொண்டு தென் மற்றும் கிழக்கு கரையோர நீர்களில் சிங்கி இறால் பிடித்தலைக் கண்காணித்தல்

இலங்கையின் தென் கரையோரத்தில் சிறிய அளவிலான தொழில்நிபுணத்துவ மீனவர்களுக்கு பாரிய மீன்பிடித்தலில் ஒன்றாக சிங்கி இறால்களைப் பிடித்தல் அடையாளம் காணப்பட்டுள்ளது. மீன்பிடித்தொழில் ஏற்றுமதிகளின் ஊடாக நியாயமான தொகையிலான வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கு இது ஆதரவளிக்கின்றது. பிடிக்கப்படும் சிங்கிஇறால்களில் 95%இற்கு மேற்பட்டவை வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சுனாமிக்கு முன்னர் சிங்கி இறால்களைப் பிடித்தல் ஒரு வருவாயை ஈட்டுகின்ற கைத்தொழிலாகும். களுத்துறையிலிருந்து ஆமடுவ வரையிலான தென் கரையோரத்தில் காணப்படும் 6 முள்ளந்தண்டற்ற சிங்கி இறால்களில் ஒரு இனம் (*Panulirus polyphagus*) முழுமையாக சுரண்டப்பட்டுள்ளதாக ஆய்வு வெளிப்படுத்தியது. பிடியில் 85% சதவீதத்தை *Panulirus homarus* (மணல் சிங்கிஇறால்) பிரதிநிதித்துவப்படுத்தியது. ஏனைய இனங்கள் தனிப்பட்டரீதியில் மொத்தப் பிடியின் 3–6% வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சராசரி வருடாந்தப் பிடியில் 31%ஆனது குறைந்தளவிலான சிங்கி இறாலைக் கொண்டுள்ளது. மொத்த பிடியின் 7%-20%ஆனவை முட்டையிடுபவற்றை அடக்கியுள்ளன. 90%க்கு மேற்பட்ட சிங்கி இறால் பிடிப்பவர்கள் உத்தரவுப்பத்திரமின்றி சட்டவிரோதமாகவே பிடிக்கின்றார்கள். படகொன்றின் சராசரி பிடி நாளொன்றுக்கு 2.6 கி.கி. ஆகும். மூலவளத்தின் நிலைத்திருத்தல் பயன்படுத்தலுக்கு நடைமுறையிலான ஒழுங்குவிதிகளை வினைப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை ஆய்வு வலியுறுத்துகின்றது.

முன்னேற்றம்: பௌதீக: 93% நிதிசார்: 85%

## கருத்திட்டம் 3.7.1 இறால் வளர்ப்பு கைத்தொழிலுக்கு *P. monodon* கரு இருப்பு மூலவளங்களின் கிட்டுதலையும், பொருத்தத்தன்மையையும் மற்றும் சேகரிப்புக்காக செயற்றிறனான மீன்பிடித்தல் கருவியொன்றை விருத்தி செய்தலையும் மதிப்பிடுதல்

கரையோர நீரியல் விருத்தியில் அதன் உபயோகத்தின் காரணமாக இலங்கை உட்பட பெருமளவு நாடுகளில் மிகவும் பொருளாதாரரீதியில் முக்கியமான இறால் இனங்களில் ஒன்றாக *P. monodon* (பெரிய ரைகர் இறால்) விளங்குகின்றது. இறால் குடம்பியைப் பெறுவதற்காக அடைகாக்குமிடங்களில் வான் கரு இருப்புக்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. இக்கருக்களின் பிடித்தல் பகுதிகள் நன்கு ஆவணப்படுத்தப்படவில்லை என்பதுடன், ஏதாவது சேதமின்றி அவற்றைச் சேகரிப்பதற்கு பொருத்தமான மீன்பிடித்தல் கருவி இல்லை.. எனவே, மீன்பிடித்தல் பகுதிகளை வரைபடமிடுதலின் மூலமும், ஆரோக்கியமான (ஆயப்படாத) கரு இருப்பினை சேகரிப்பதற்காக நடைமுறையிலான மீன்பிடித்தல் செயன்முறைகளைத் திரிபுபடுத்துவதற்கு அல்லது தோதான மீன்பிடித்தல் கருவியொன்றை வடிவமைப்பதன் மூலமும் இலங்கையின் கரையோர நீர்களில் *P. monodon*இன் பங்கீட்டினையும், அபரிதத்தன்மையையும் மதிப்பிடுவதே தற்போதைய ஆய்வின் குறிக்கோளாகும். மீன்பிடித்தல் பருவத்தை அடையாளம் காண்பதற்கும், இறால் அபரிதத்தன்மையையும், பங்கீட்டினையும் மதிப்பிடுவதற்கும் இலங்கையின் மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் *P. monodon* பிடிகளின் கண்காணித்தல் மேற்கொள்ளப்பட்டது. சில மீன்பிடித்தல் பகுதிகளின் (உதாரணம் நீர்கொழும்பு) வரைபடமிடுதல் முடிக்கப்பட்டுள்ளது. பெருமளவு விடயங்களில் இணை-பிடியொன்றாக *P. monodon* பிடிக்கப்படுகின்றது. கரு இருப்பு சேகரிப்புக்காக மும்மடி வலைகள் பயன்படுத்தப்படுவதுடன், பூவலைகளும், வீசுதல் வலைகளும் செயற்படுகின்றன. அவதானிப்பு

காலத்தின் போது (முறையே நாளொன்றுக்கு 72 மற்றும் 34 எண்ணிக்கை) நீர்கொழும்பிலும் ஹெந்தளைப் பகுதியிலும் படகு பிடிகள் மத்தியில் *P. monodon* தனிப்பட்டவைகளின் ஆகக்கூடுதலான எண்ணிக்கை அவதானிக்கப்பட்டது.

முன்னேற்றம்: பௌதீக: 65% நிதிசார்: 42%

### கருத்திட்டம் 3.7.2. இழைமணி கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தில் cytochrome c oxidase 1 (COI)இன் பரம்பரையலகு தொகுதிகளைப் பயன்படுத்தி இலங்கையில் வேறுபட்ட புவியியல் அமைவிடங்களில் பிடிக்கப்பட்ட *Penaeus monodon* இறால் இருப்புக்களின் பரம்பரை பன்னிலையாக்கத்தை ஆய்தல்

இலங்கையின் வேறுபட்ட பகுதிகளில் *Penaeus monodon*இன் இருப்புக்களுக்கு இடையில் நிலவுகின்ற பிறப்பியல் மாறலிகளை நிர்ணயிப்பதற்காக இக்கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஹெந்தளை, நீர்கொழும்பு, சிலாபம், கற்பிட்டி மற்றும் பேருவளை ஆகிய பகுதிகளிலிருந்து *P. monodon* மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்த மாதிரிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட DNA, இழையமணிக் கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தில் cytochrome c oxidase I (COI)இன் பரம்பரையலகு தொகுதிகளை இலக்குப்படுத்தும் COI-P3/COI-P4 படிமுறையைப் பயன்படுத்தி PCR பெருக்கம் உட்படுத்தப்பட்டது. இந்த PCR பெருக்கத்தைப் பயன்படுத்தி 450–500 தள ஜோடிகளைக் கொண்ட பிராந்தியமொன்று பெருக்கப்பட்டது. PCR உற்பத்திகள் தூய்மையாக்கப்பட்டு, இந்த தூய்மையாக்கப்பட்ட உற்பத்திகள் தன்னியகத்திலான தொடர்வரிசைப்படுத்தலொன்றைப் பயன்படுத்தி தொடர்வரிசைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. ஹெந்தளையிலிருந்து 2 மாதிரிகள், நீர்கொழும்பிலிருந்து 2 மாதிரிகள், சிலாபத்திலிருந்து 3 மாதிரிகள், கற்பிட்டியிலிருந்து 1 மாதிரி மற்றும் பேருவளையிலிருந்து 1 மாதிரி தொடர்வரிசைப்படுத்தப்பட்டன. CLC உயிரக தொடர்வரிசைப்படுத்தல் பகுப்பாய்வு மென்கணியத்தைப் பயன்படுத்தி தொடர்வரிசைகள் பகுப்பாயப்பட்டன. சகல தொடர்வரிசைப்படுத்தப்பட்ட மாதிரிகளில் பேணப்பட்ட 30 bp கொண்ட பிரதேசமொன்றை பெருக்குத் தொகையிலான ஒழுங்கு காட்டியது. ஹெந்தளை, நீர்கொழும்பு, சிலாபம், மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் ஒன்றாக இணைவதாக கணவரலாற்றுக்குரிய மரம் காட்டுவதுடன், பேருவளை மாதிரி புறம்பான இனமாக விளங்குகின்றது. இது மேற்கு மற்றும் வட மேற்கு பிராந்தியங்களிலுள்ள இருப்புக்களிலிருந்து பேருவளை இருப்பு பிறப்பியல்ரீதியான வேறுபாட்டினைக் கொண்டுள்ளது என்பதற்கான சிறிதளவு எடுத்துக்காட்டாக விளங்கலாம் என்பதுடன், ஆனால் ஒரேயொரு பேருவளை மாதிரி தொடர்வரிசைப்படுத்தப்பட்டதனால் இறுதியான முடிவுக்கு வருவதற்காக அதிகளவு மாதிரிகள் பகுப்பாயப்படுவது அவசியமானதாகும். GenBank NCBIஐ தரவுத்தளத்திற்கு (தேசிய உயிரகத் தொழில்நுட்ப நிலையம்) 9 *Penaeus monodon* mitochondrial DNA கட்டுப்பாட்டு பிராந்திய தொடர்வரிசைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

முன்னேற்றம்: பௌதீக: 75% நிதிசார்: 60%

### கருத்திட்டம் 4.2. முருகைக் கற்பார்த்தொடர்களின் பேணலும், முகாமைத்துவமும்

வட மேற்கு, மேற்கு மற்றும் தெற்குக் கரையோரப் பகுதிகளில் கற்பார்த்தொடர் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. பார் கற்பார்த்தொடர் கடலகச் சரணாலயம், தலவில, ஹிக்கடுவை தேசிய பூங்கா, ருமஸ்சல சரணாலயம், அஹுங்கமவுக்கு அருகிலுள்ள அரண்வல எலிகமவிலுள்ள கப்பரதோட்ட மற்றும் டொன்ராவிலுள்ள கிரளவெல ஆகியவற்றில் முருகைகளின் ஆழவளவுக்குரிய போர்வையினதும், இணைந்த கற்பார்த்தொடர் அங்கிகளினதும் விரிவான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அமைவிடங்களிலும், மற்றும் விரிவான ஆய்வுகளை நடத்த முடியாத பெருமளவு வேறு அமைவிடங்களிலும் உயிரகப்பன்னிலையாக்கல் பொருட்பட்டியல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஹபராதுவவிலுள்ள பளுத்தகஹா, கம்புரகமவில் உள்ள தலரம்பகா மற்றும் கொழும்பிலுள்ள இரு கடற்கரையினீங்குகின்ற கற்பார்த்தொடர் அமைவிடங்கள் ஆகியனவே இந்த அமைவிடங்களாகும். பார் கற்பார்த்தொடர் கடலகச் சரணலாயத்திலே ஆகக்கூடுதலான வன் முருகைப் போர்வை பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அதை கிரலவெல்ல, தலவில, அரன்வல, ஹிக்கடுவ மற்றும் கப்பரதொட்ட ஆகியன தொடர்கின்றன (அட்டவணை 1). மேலதிகமான மாதிரிகளுடன் முருகை மேற்கோள் சேகரிப்பும் புதுப்பிக்கப்பட்டது.

**அட்டவணை 1: அளவிடப்பட்ட அமைவிடங்களில் உயிருள்ள வன்முருகைப் போர்வை**

| கற்பார்த்தொடர் அமைவிடம் | உயிருள்ள வன் முருகைப் போர்வை | கருத்துக்கள் |
|---|---|---|
| பார் கற்பார்த்தொடர் கடலகச் சரணாலயம் | 70% | உயிருள்ள முருகைகளின் 75%ஐக் கொண்ட *Acropora cytherea* வரிசைப்படுத்தலினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது |
| தலவில | 44% | Faviidae குடும்பத்தின் பெரும் முருகைகளினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| ஹிக்கடுவை தேசிய பூங்கா | 26% | *Montipora aequituberculata* மற்றும் *Pocillopora damicornis* ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது |
| கப்பராதோட்ட, வெலிகம | 22% | படகுகளை நங்கூரமிடுவதன் காரணமாகவும், மீன்வளர்ப்பிட மீன்களுக்காக அழிவிலான சேகரிப்பு முறைகளின் உபயோகத்தின் காரணமாகவும் 2006இல் 52%இலிருந்து வீழ்சசியடைந்துள்ளது. |
| அரன்வல | 32% | Faviidae குடும்பத்தின் பெரும் முருகைகளினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. |
| கிரலவெல்ல | 46% | Faviidae குடும்பத்தின் பெரும் முருகைகளினால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. |

முன்னேற்றம்: பௌதீக: 88% நிதிசார்: 52%

## கருத்திட்டம் 4.3 கடலகப் பாலூட்டிகளின் ஆராய்ச்சியும், பேணலும்

கொழும்பு, பேருவளை மற்றும் வெலிகம/மிரிஸ்ஸ ஆகிய கரையோரத்திற்கு அப்பால் பார் கற்பார்த்தொடர் கடலகச் சரணாலயத்தில் கடலகப் பாலூட்டிகள் மீதான கடற்கரையினீங்குகின்ற அவதானிப்புகள் நடத்தப்பட்டன. வேறுபட்ட இனங்களின் இடம்பெறுதல் மீது தகவலைப் பெறுவதற்காக கடலகப் பாலூட்டி கண்காணிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்கள் நேர்முகங்காணப்பட்டார்கள்.

**அட்டவணை 2: கடலக பாலூட்டி கண்காணிக்கும் செயற்பாடுகளில் வேறுபட்ட இனங்களின் இடம்பெறுதல் மீதான தகவல்**

| இனங்கள் | அமைவிடம் | கருத்துக்கள் |
|---|---|---|
| *Balaenoptera musculus* (நீலத் திமிங்கிலம்) | டொன்ரா, பார் கற்பார்த்தொடர் கடலக சரணாலயத்திற்கு அருகில் | பிரதானமாக ஏப்ரல் மற்றும் மே ஆகியவற்றில் தென்மேற்கு பருவ மழையின் முன்னர் இடம்பெறுகின்றது |
| *Physeter macrocephalus* (விந்து திமிங்கிலம்) | டொன்ரா | பிரதானமாக ஏப்ரல் மற்றும் மே ஆகியவற்றில் தென் மேற்கு பருவ மழையின் முன்னர் இடம்பெறுகின்றது |
| *Stenella longirostris* (நீண்ட மூக்கு ஸ்பினர் டொல்பின்) | கொழும்பு, கண்டக்குளிய, பார் கற்பார், காலி, வெலிகம, மிரிஸ்ஸ, டொன்ரா | ஆண்டு முழுவதும் உள்ளதாக தெரிகின்றது. ஆனால், அமைதியான காலத்தின் போதே (நொவம்பர் முதல் ஏப்ரல் வரை) பிரதானமாக அவதானிப்புகளும் பதிவுகளும் இருந்தன. |

முன்னேற்றம்: பௌதீக: 80% நிதிசார்: 34%

## கருத்திட்டம் 7.4 கடலக நூதனசாலையைத் தரமுயர்த்துதல்

க.உ.வ. பிரிவில் அமைந்துள்ள நூதனசாலை மதுசாரத்தில் பேணப்பட்டுள்ள மீன் மற்றும் வேறு மாதிரிகள் ஆகிய இரு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. 2007இன் போது ஒருதொகை புதிய மீன்களும், வேறு நீரியல் விலங்குகளும் சேகரிக்கப்பட்டு, நூதனசாலை சேகரிப்புக்குச் சேர்க்கப்பட்டன. புதிய பேணல் ஊடக்ங்களுடன் நடைமுறையிலான மாதிரிகள் புதுப்பிக்கப்பட்டன. கல்வி உல்லாசப் பயணங்கள் மீது 'நாரா'வுக்கு வருகை தரும் கணிசமான எண்ணிக்கையிலான பாடசாலை சிறுவர்கள் நூதனசாலைக்கு வருகை தருகின்றனர்.

முன்னேற்றம்: பௌதீக: 50% நிதிசார்: 59%

## 4. வெளியீடுகள்

### சாராம்சங்கள்

i. ஹபுதந்திரி எஸ்.எஸ்.கே., 2007, இலங்கையில் சிறிய கண்ணிலான பூவலை மீன்பிடித்தொழில் முக்கிய இலக்கு இனங்களான Trenched Sardine *Amblygaster sirm*இன் பிடிவீதங்கள் மீதான இடஞ்சார்ந்த, லௌகீக மற்றும் செயற்பாட்டிலான தாக்கங்கள், சர்வதேச நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான மகாநாடு, 'நாரா'.

ii. திசநாயக்க, டி.சி.ரி. இ.கே.வி.சமரவீர மற்றும் சி.அமரசிறி, 2007, இலங்கையின் கிழக்கு கரையோரத்தில், கரையோர தூனா மீன்பிடித்தலின் தற்போதைய நிலை, சர்வதேச நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான மகாநாடு.

iii. கே.எ.ரி.தனஞ்சனி, எம்.டி.எஸ்.ரி.டீ குறூஸ், மற்றும் டி.சி.ரி.திசநாயக்க, 2007, இலங்கை, ஹிக்கடுவைக்கு அப்பால் சுருக்கு வலைப் பிடிகளிலிருந்து நான்கு தெரிவு செய்யப்பட்ட வளர்ப்பு இனங்களின் ஒப்பீட்டு ரீதியிலான உணவு மற்றும் உணவூட்டல் பகுப்பாய்வு, 13ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வு, இலங்கை மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் சங்கம், இலங்கை மன்றக் கல்லூரி, கொழும்பு, இலங்கை.

iv. ராஜசூரிய எ., 2007, இலங்கைக்கான புதிதாக எட்டு இனங்களை உள்ளடக்குகின்ற கல்லிலான முருகைகளின் மீளவாயப்பட்டதும், புதுப்பிக்கப்பட்டதுமான சோதனைப் பட்டியல், இலங்கை மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் சங்கத்தின் வருடாந்த அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட கட்டுரை.

### ஆராய்ச்சிக் கட்டுரைகள்

i. ஹபுதந்திரி எஸ்.எஸ்.கே., எம்.சி.எஸ்.விலன்னுவ மற்றும் ஜே.மொரயு, இலங்கையின் கரையோர சூழலியல்முறைமையில் அயனமண்டல ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதல்: ECOPATH பூர்வாங்க அணுகுமுறை, Estuarine, coastal and shelf science, 76: 304 – 318.

ii. ராஜசூரிய எ., இல்ங்கையின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு கரையோர நீர்களில் தெரிவு செய்யப்பட்ட முருகைகற்பார்த் தொடர்களின் நிலை மீதான ஓர் அறிக்கை, CORDIO, கல்மார் பல்கலைக்கழகம், சுவீடன், அச்சில்.

iii. ராஜசூரிய எ. வடக்கு கரையோரத்தின் ஒரு முருகைக் கற்பார்த் தொடர் – NARA Journal விசேட பதிப்பு. அச்சில்.

iv. ஹேரத் டி.ஆர்., 2007. இழைமணி DNA பகுப்பாய்வினால் திசைதெரியாது அலையும் திமிங்கிலமொன்றை அடையாளம் காணுதல் – www.DNA-surveillance, செயற்பாட்டில் திட்டம், Asian Fishries Science 20(3), 319-324.

### அறிக்கைகள்

i. ஹபுதந்திரி எஸ்.எஸ்.கே., இலங்கையின் கரையோர எரிங்குக்கான தரவு மாதிரிப்படுத்தல் மூலோபாயம், கருத்திட்ட அறிக்கை, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழக மீன்பிடித்தொழில் பயிற்சித் திட்டம், கடலக ஆராய்ச்சி நிறுவனம், ஐஸ்லாந்து.

ii. பெற்றோலியம் ஆராய்ச்சி தொடர்பில் மன்னார் குடாநாட்டுப் பிராந்தியத்தில் கூருணர்விலான கடலக இயற்கை வாழிடங்கள் மீது திரு.அர்ஜன் ராஜசூரியவினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டது. பெற்றோலியம் வளங்கள் செயலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

iii. முருகை கற்பார்த்தொடர்கள் மீதான பேணல் விடயங்கள் பற்றி சிங்கள மொழியில் திரு.அர்ஜன் ராஜசூரியவினால் நூலொன்று தயாரிக்கப்பட்டது. இது ஜனாதிபதி செயலகத்திற்கும், கௌரவ மீன்பிடித் தொழில் நீரியல் வளங்கள் அமைச்சருக்கும், மற்றும் அமைச்சின் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

iv. கடலக மற்றும் கரையோரப் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் முகாமைத்துவம் மீதான கருத்திட்ட வடிவமைப்புக்காக ICRAN – SACEPக்கு MCPA மீதான அறிக்கையொன்றை திரு.அர்ஜன் ராஜசூரிய வழங்கினார்.

v. இலங்கையின் கரையோர நீர்களில் கடலகப் பாலூட்டியைக் கண்காணிப்பதற்கான வழிகாட்டல்கள் திரு.அர்ஜன் ராஜசூரியவினால் தயாரிக்கப்பட்டதுடன், இது கௌரவ மீன்பிடித்தொழில் நீரியல் வளங்கள் அமைச்சருக்கும், அமைச்சுச் செயலாளருக்கும், இலங்கை மீன்பிடித்தல் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

vi. திசநாயக்க, டி.சி.ரி., சி.அமரசிறி, இ.கே.வி. சமரவீர மற்றும் எப்.பொயிசியன், 2007 வருடாந்த பாரிய விரிகடலுக்குரிய மீன் உற்பத்தி மீதான சாராம்ச அறிக்கை – 2006

## 5. பங்கெடுத்த பயிற்சிகள்/செயலமர்வுகள்

### பயிற்சிகள்

i. ஐஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் பிஎச்.டிக்காக பிஎச்.டி. முன்மொழிவை எழுதுதலும், பதிவு செய்தலும், 2007 செப்ரெம்பர் 21 முதல் ஒக்டோபர் 15 வரை, கடலக ஆராய்ச்சி நிறுவனம், ரெக்ஜாவிக், ஐஸ்லாந்து மற்றும் ஐஸ்லாந்து பல்கலைக்கழகம் - (01)

ii. ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழக மீன்பிடித்தொழில் பயிற்சித் திட்டத்தில் பங்கெடுப்பு, கடலக ஆராய்ச்சி நிறுவனம், ஐஸ்லாந்து – (01)

iii. 2007 ஒக்டோபரிலும், நொவம்பரிலும் ஐக்கிய அமெரிக்கா ஸ்கிரிப்ஸ் சமுத்திரவியல் நிறுவனத்தின் விஞ்ஞான ஆராய்ச்சி கப்பலொன்றான R.V.ரொஜர் ரிவெல் என்ற கப்பலில் ஒரு உத்தியோகத்தர் பங்கெடுத்தார். கடந்த காலநிலை மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்காக மக்கரேன் பிளட்டோ இலிருந்து முருகை மாதிரிகளை சேகரிப்பதே கப்பலின் நோக்கமாகும்.

### செயலமர்வுகள்

i. தாய்லாந்து புக்கட்டில் 2007 மே 08 – 10இன் போது மீன்பிடித்தொழில் ஒத்துழைப்பு மீதான BIMSTEC செயலமர்வு (ஓர் உத்தியோகத்தர்)

ii. பெந்தோட்டையில் 2007 ஜனவரியில் முருகை கற்பார்த்தொடர் மீளுதல் கண்காணித்தல் செயலமர்வில் பங்கெடுப்பு (ஓர் உத்தியோகத்தர்)

iii. இலங்கை பேராதனை உள்ளகப் பயிற்சி நிறுவனத்தில் 2007 மார்ச் 26 அன்று விஞ்ஞானரீதியாக எழுதுதல் மீதான செயலமர்வு (CARPஇனால் ஒழுங்குபடுத்தப்பட்டது) (ஓர் உத்தியோகத்தர்).

# சமுத்திரவியல் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி கே.அருளானந்தன்

## 1.4 விரிகடலுக்குரிய மீன்பிடித்தல் வலயத்தில் சேய்மைக் கூருணர்வுப்படுத்தலினதும், GISஇனதும் பிரயோகம்

பௌதீகச் சாதனை: 95%

இலங்கையின் ஒடுங்கிய கண்டமேடையானது சுரண்டலின் உச்சமான மட்டமாக விளங்குகின்ற கரையோர மீன்பிடித்தலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வாழிடத்தை நிலைத்திருக்கச் செய்கின்றது. எனினும், பொருளாதாரச் சாத்தியவளம் மீது உயர்வான மூலதனங்களினதும், உறுதியற்றதன்மையினதும் காரணமாக கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தல் மூலவளங்கள் குறைத்தே சுரண்டப்படுகின்றன. மீன்பிடித்தொழில் புள்ளிவிபரங்களின் பிரகாரம், அனேகமாக, கண்டமேடை நீர்களுக்கு அப்பால் (EEZஇனுள்) மீன்பிடித்தொழில் வளங்கள் முழுமையாகச் சுரண்டப்படாத அதேவேளை, சில கரையோர மீன்பிடித்தொழில் மூலவளங்கள் மிதமிஞ்சி சுரண்டப்படுகின்றன. இவ்வாறாக, கடற்கரையினீங்கின்ற மீன்பிடித்தல் செயற்பாடுகளை முறைமையாக மேம்படுத்துவது அவசியமானதாகும். உத்தேசமான மீன்பிடித்தல் பகுதிகள் மீதான தகவலை வழங்குவதன் மூலம் மீன்பிடித்தல் முயற்சியை அதிகரிப்பதே கிட்டுகின்ற மாற்று வழிகளில் ஒன்றாகும். இது அவற்றின் தேடுதல் நேரம், எரிபொருள் போன்ற செயற்பாட்டிலான ஆகுசெலவுகளைக் குறைப்பதுடன், மீன் உற்பத்தியையும் அதிகரிக்கின்றது.

இலங்கையில் பாரிய விரிகடலுக்குரிய மீன்பிடித்தொழில் துறைக்கான செய்மதி அடிப்படையிலான மீன்பிடித்தல் எதிர்வுகூறல் முறைமையொன்றை விருத்தி செய்வது மீது சமுத்திரவியல் பிரிவு பணியாற்றுகின்றது. மீன்பிடித்தல் செயற்பாடுகளுக்கு பயனுள்ள சம்பந்தப்பட்ட வேறு சமுத்திரவியல் நிலையுடன் சாதகமான மீன்பிடித்தல் பகுதிகள் மீது தகவலை முறைமை வழங்குகின்றது.

கடல் மேற்பரப்பு வெப்பநிலை, பச்சிலையம், மேற்பரப்பு வெப்பநிலைச் சரிவுகள் ஆகியனவற்றைத் தோற்றுவிப்பதற்காக உலகத் தரவுத் தளங்களிலிருந்து MODIS மற்றும் AMSRE செய்மதித் த்ரவுகள் கீழிறக்கப்படுகின்றன. மீன்பிடித்தொழில் தினக்குறிப்பொன்றை (சம்பவக் குறிப்பேடு) அறிமுகப்படுத்துவதுடன், மீன்பிடித்தொழில் தரவுகள் (பிடி மற்றும் நிலை) சேகரிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், செய்மதித் தரவுகளிலிருந்து பெறப்பட்ட சூழல் சாராமாறிகளுடன் பொருந்தச் செய்வதற்காகப் பகுப்பாயப்படுகின்றன. திட்டமான சூழல் சாராமாறிகளை நிர்ணயிப்பதன் மூலம், மீன் திரளலுக்கு உத்தேசமான பகுதிகளுக்கு பொருள் விளக்கமளிப்பதற்கு இந் நடைமுறை தொடரப்படும். 2008ஆம் ஆண்டில் ஓரளவு உண்மையான நேர செய்மதித் தரவுகளைப் பயன்படுத்தி உத்தேசமான மீன்பிடித்தல் பகுதிகளை எதிர்வுகூறுவதற்கு இச் சாராமாறிகள் பயன்படுத்தப்படும் என்பதுடன், ஏனையவற்றுக்கு பரப்பப்படுவதற்கு முன் தெரிவுசெய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து பின்னூட்டல் தரவுகளுடன் எதிர்வுகூறல் செல்லுபடியாக்கப்படும்.

பௌதீக சாதனை: 95%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்) :
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 300,000.00 செலவழிக்கப்பட்டது ரூபா 291,326.00 (97%)

## 1.5. கரையோர மீன்பிடித்தல் மீதான சமுத்திர நிலையின் தாக்கம்

பௌதீகச் சாதனை: 95%

கற்பிட்டியில் பிரதான கரையோர தூனா மீன்பிடித்தல் பகுதியாக விளங்குகின்ற தலவிலவுக்கு அப்பால் பௌதீக, இரசாயன மற்றும் உயிரியல் சமுத்திரவியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இக் கருத்திட்டத்தின் கீழ், கடலகப் பிளாந்தனின் பங்கீடு மற்றும் போஷாக்கு மாறல், வெப்பநிலை, உவர்த்தன்மை, பச்சிலையத்தின் நெடுங்குத்தான பக்கப்பார்வை ஆகியன தொடர்பில் பன்னிலையாக்கம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

முடிவுகளும், கருத்துப்பரிமாறலும்:

தலவிலவுக்கு அப்பாலுள்ள பகுதி ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்டது. ஏனெனில் இது தூனா மீன்பிடித்தலுக்கு பாரிய மீன்பிடித்தல் பகுதியாகும். 2007 ஜனவரி – நொவம்பர் வரை தலவிலவுக்கு அப்பால் கள வருகை தரல்கள் மேற்கொள்ளப்பட்டன. பதினைந்து நார்இழைக்கண்ணாடி படகுகளைப் பயன்படுத்தி கற்பிட்டி, தலவிலவுக்கு அப்பால் 7 அமைவிடங்களில் தரவுகளும், மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன. மோசமான கடல் நிலைமைகளின் காரணமாக மே முதல் ஒக்ரோபர் வரை மாதிரிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. CTD அளவீடுகளுடன் தாவரப்பிளாந்தன், அழுகல்பிளாந்தன், பச்சிலையம் மற்றும் போஷாக்குகள் (நைற்றேற், நைத்திரைற், அமோனியா மற்றும் பொஸ்பேற்) ஆகியவற்றுக்காக மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

பருவமழை காலத்திற்கு இடையில் கலப்பிலான அடுக்கு ஆழம் பெரிதுமே 10 மீட்டரினால் வேறுபடுவதுடன், பருவமழை காலத்தின் போது ஆழமாகுவதுடன், இடைப்பட்ட பருவமழைக் காலத்தின் போது ஆழம் குறைகின்றது. வெப்பநிலையும், உவர்தன்மையும் முறையே $2^{o}C$ மற்றும் 0.2 PSUஇனால் ஏறி இறங்குகின்றது. கற்பிட்டியில் வடகிழக்கு பருவமழையின் போது உயர்விலான பச்சிலைய அடக்கம் பதிவுசெய்யப்படுகின்றது. மேலும், மேற்பரப்பு நீரை விட நான்கு தடவை உயர்வாக ஆகக்கூடுதலான பச்சிலையம் (1.5 மி.கி./லீ.), வெப்பவினைக்கு சற்று மேலே பதிவுசெய்யப்பட்டது. இது பாரிய விரிகடலுக்குரிய மீன்களுக்கு விரும்பப்படும் அமைவிடத்திற்கான விளக்கமொன்றை வழங்குகின்றது. தாவரப்பிளாந்தன் மற்றும் அழுகியபிளாந்தன் அடர்த்தியைப் பொறுத்தளவில், கற்பிட்டியில், தலவிலவுக்கு அப்பால் நொவம்பரில் ஆகக்கூடுதலான ஆரம்பநிலையிலானதும், இரண்டாம் நிலையிலானதுமான உற்பத்தித்திறன்கள் அவதானிக்கப்பட்டன.

ஆகக்கூடுதலானதும் (1.0279µg/l), ஆகக்குறைந்ததுமான (0.0656µg/l) $PO_4^{3-}$- P செறிவுகள் முறையே ஜனவரியிலும், நொவம்பரிலும் பதிவுசெய்யப்பட்டன. ஏப்ரல் மாதத்தின் போது $PO_4^{3-}$- P செறிவுகள் சகல அமைவிடங்களிலும் 0.2µg/l ஐ விட குறைவானதாகும்.

$NO_2^-$ -N செறிவுகளின் ஆகக்கூடுதலானதும் (1.434µg/l), ஆகக்குறைந்ததுமான (0.000µg/l) பெறுமதி முறையே மார்ச்சிலும், நொவம்பரிலும் அறிவிக்கப்படுகின்றது. இதனிடையே நொவம்பர் மாதத்தின் போது, சகல அமைவிடங்களிலும் $NO_2^-$ -N செறிவு 0.100µg/lக்கும் குறைவானதாகும். ஏனைய மாதங்களின் போது, சகல அமைவிடங்களிலும் $NO_2^-$-N செறிவு 0.0075µg/l – 1.161µg/l க்கு இடையில் தொடர்ந்திருந்தது. எனினும், $NO_2^-$-N செறிவின் (0.634µg/l) ஆகக்கூடுதலான மாதாந்த சராசரி பெப்ரவரி மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட அதேவேளை, ஆகக் குறைந்த பெறுமதி (0.162µg/l) ஏப்ரலில் பதிவுசெய்யப்பட்டது.

பௌதீக சாதனை: 95%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்)
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 900,000.00, செலவழிக்கப்பட்டது ரூபா 795,297.00 (88%)

## 4.1 சேதுசமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டத்தைக் கண்காணித்தல்

பௌதீக சாதனை: 50%

இந்திய அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் சேதுசமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டத்தின் கீழ் அடம்ஸ் பாலப் பகுதி, மன்னார் குடா, பாக்கு நீரிணை, பாக்குக் குடா ஆகியவற்றில் சேறுவாரிகளிலிருந்தும், கொட்டுதல் செயற்பாடுகளிலிருந்தும் எழுகின்ற தாக்கங்களைக் கண்காணிப்பதற்காக சூழல் கண்காணிப்புத் திட்டமொன்று வகுத்தமைக்கப்பட்டது. சூழல் பாதுகாப்பினையும் அத்துடன்/அல்லது தணிப்பு நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கும், குறிப்பிடத்தக்க சூழல் தாக்கங்களைக் கண்காணிப்பதற்கும் மூலோபாயங்களை முன்மொழிவதற்கு பௌதீக-இரசாயன, உயிரியல், சூழல் மற்றும் சமூக-பொருளாதார நிலைமைகளைக் கொண்டுள்ள முக்கியமான எடுத்துக்காட்டிலான சாராமாறிகளைக் கண்காணிப்பதே திட்டத்தின் குறிக்கோளாகும். சூழல் கண்காணித்தல் திட்டம் பின்வருவனவற்றை உத்தேசமாகக் கொண்டுள்ளது:

- ஏதாவது மறுதலையான சூழல் தாக்கங்களை ஒழித்தல் அல்லது தணித்தல்
- எதிர்பார்க்க முடியாத மறுதலையான தாக்கங்கள் அல்லது தாக்கத்தின் போக்குகளில் திடீர் மாற்றங்கள் ஆகியன மீது முன்கூட்டிய எச்சரிக்கை வசதியை வழங்குதல்
- நெருக்கடிநிலையில் மட்டமொன்றை தாக்க எடுத்துக்காட்டி அணுகும் போதெல்லாம் (முன்தெரிவு செய்யப்பட்ட) உடனடியான எச்சரிக்கையை வழங்குதல்
- தொலைந்த சூழல் மூலவளங்களுக்கு நஷ்டஈட்டுக்கான தகவலை வழங்குதல்
- SSCP செயற்பாடுகளில் இருந்து விளைகின்ற தாக்கங்களின் ஆவணப்படுத்தலுக்கு தகவலை வழங்குதல்.

மேலும், "மன்னார் குடாவினதும், பாக்கு நீரிணையினதும் தாவரபிளாந்தனுக்கும், அழுகல்பிளாந்தனுக்குமான வழிகாட்டல்" தயாரிக்கப்படுகின்றது. சேதுசமுத்திரம் கப்பல் கால்வாய் கருத்திட்டத்தின் அமுலாக்கத்தின் காரணியாக ஏதாவது சூழல் தாக்கங்களை மதிப்பாய்வதற்கு வழிகாட்டல் பயன்படுத்தப்பட முடியும். நுண்ணுயிரியல் மிதவை அங்கிகளான தாவரபிளாந்தனும், அழுகல்பிளாந்தனும் கடலக உணவுச் சங்கிலியினதும், உற்பத்தித்திறனுக்கும், மாசுபடுத்தலுக்குமான காட்டிகளினதும் முதலாவதும், இரண்டாவதுமான மட்டங்களில் விளங்குகின்றன. பாக்குநீரிணையில் இருந்து சேகரிக்கப்பட்ட தாவரபிளாந்தன் மற்றும் அழுகல்பிளாந்தன் மாதிரிகள், அபரிதமானதன்மை, பன்னிலையாக்கம் மற்றும் பங்கீடு ஆகியவற்றுக்காகப் பகுப்பாய்வப்பட்டன. அடையாளம் காணப்பட்ட இனங்கள் பட்டியலிடப்பட்டு, புகைப்படமெடுக்கப்பட்டன. 2007 நொவம்பர் 20 – 24 வரை இந்தியா, கொல்கத்தாவில் நடைபெற்ற உயிரகப்பன்னிலையாக்கம்: பிரச்சனைகளும், கரிசனைகளும் மீதான சர்வதேச மகாநாட்டில் முடிவுகள் முன்வைக்கப்பட்டன.

பகுதியில் நிலவும் பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தம் சில களச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை.

பௌதீக சாதனை: 50%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்):
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 200,000.00, செலவழிக்கப்பட்டது ரூபா 60,878.45 (30%)

## 5.2 கரையோரத்தின் கடல் மட்டத்தைக் கண்காணித்தலும், மாதிரிப்படுத்தலும்

பௌதீக சாதனை: 95%

கரையோர வலய முகாமைத்துவம், சமுத்திர அடிப்படையிலான அபாய முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் தணிப்பு ஆகியவற்றின் பலதரப்பட்ட அம்சங்களுக்கு அவசியமான தரவுகளையும், எதிர்வுகூறல்களையும் கூட்டாக வழங்குகின்ற இரு பாரிய கூறுகளை கருத்திட்டம் கொண்டுள்ளது. கருத்திட்டக் கூறுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: (1) கடல் மட்டங்களினதும், இலங்கையின் நீர்களைச் சுற்றியுள்ள தொடர்பான சாராமாறிகளினதும் குறுகிய மற்றும் நீண்ட காலக் கண்காணித்தல் (2) பௌதீக நடைமுறைகளின் நீரியல் இயக்காற்றல் மாதிரிப்படுத்தல் மற்றும் கரையோரச் சூழலில் உயிரக – இரசாயன நடைமுறைகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதல்.

கூறு ஒன்றின் கீழ், இலங்கையில் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்குக் கரையோரத்தில் வெப்பநிலைக் கூருணரிகள் உட்பட மூன்று உண்மையான நேர நிரந்தரமான கடல் மட்ட கண்காணித்தல் நிலையங்கள் தொழிற்படுகின்றன. 2007ஆம் ஆண்டின் பருவகால கடல் மட்டச் சுற்றினைப் பரிசீலிப்பதற்காக கடல் மட்ட பதிவேடுகளை நாம் பகுப்பாயந்ததுடன், இலங்கையின் நீர்களிலும், இந்து சமுத்திரத்தின் வட பகுதியிலும் கிரமமாக எரியலைவுகளையும் அவதானித்துள்ளோம். இலங்கை கடல் மட்டக் கண்காணித்தல் நிலையங்களிலிருந்து, தரவுகளும், ஏனைய பிராந்திய நிலையங்களின் தரவுகளும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டன.

பௌதீக சாதனை: 100%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்):
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 600,000.00 செலவழிக்கப்பட்டது ரூபா 745,080.30 (124%)

## 5.3 அலைச் சக்தி நிறமாலையின் ஆய்வு

பௌதீக சாதனை: 100 %

1993இல் சமுத்திர அலைச் சக்தி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 02 வருட காலத்தின் பின்னர் முடிக்கப்பட்டது. ஒரு தசாப்தத்தின் பின்னர், இலங்கையில் மாற்றுச் சக்தி மூலத்திற்கான புதிய போக்குகளுடனும், அங்கீகாரத்துடனும் அலைச் சக்தி ஆய்வுகளுக்காக 2007இல் கருத்திட்டமொன்றை 'நாரா' வழங்கியுள்ளது. இது 'நாரா'வுக்கு ஒரு புதிய அனுபவம் என்பதுடன், இதன் காரணமாக, மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களுடன் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், முன்னைய அனுபவத்தையும், பின்னணித் தகவலையும் பயன்படுத்துவது என இத்தடவை தீர்மானிக்கப்பட்டது. .

புந்தல, பலதுபான மற்றும் பட்டனன்கல ஆகிய சகல அமைவிடங்களில் கடற்கரையோரத்தினதும், கடற்கரை பக்கவரையினதும் மாற்றங்களின் அறிவைப் பெறுவதற்கு பெருமளவு தடவைகள் கள வருகைதரல்கள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட காரணிகளையும், கள வருகைதரல்களின் போது செய்யப்பட்ட அவதானிப்புகளையும் கரிசனைக்கு எடுக்கையில், வடிவமைப்புக்கான அமைவிடமாக புந்தலவைத் தெரிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கொங்கிரீட்டு பேடகத்துடன் கடற்கரை அலைவு நீர் கலமும், காற்றுப் பொறி அல்லது மிதவைக் கருவி (உப்புத் துகில்) ஆகியவற்றுடன் இணைந்த கடற்கரையினீங்குகின்ற அலைவு நீர் கலப் பொறியும் தென் கரையோர வலயத்திற்கு மிகவும் பொருத்தமான அலை மின் பொறி வகைகள்/கருவிகள் விளங்குகின்றன. புந்தலவுக்கு கொங்கிரீட்டு பேடகத்துடனான அலைவு நீர் கலம் சிறந்த கருவி வகையாகும்.

பொறியைத் தயாரிப்பதற்கும், தொகுப்பதற்கும் அமைவிடம் சொந்தமாகவுள்ள லங்ஸ் கோல்ட்ஸ் என்ற நிறுவனத்தில் கிட்டுகின்ற உட்கட்டமைப்பினையும், வசதிகளையும் (இயந்திராதிகள், வேலைத்தலங்கள், மனித வளங்கள்) பயன்படுத்த முடியும். அலை காலநிலையையும், வேலைத்தலத்திலிருந்து அமைவிடத்திற்கான தூரத்தையும் கரிசனைக்கு எடுக்கையில், அமைவிடத்தில் அடித்தள பணியைச் செய்வதற்கும், வேலைத்தலங்களில் ஏனைய பாகங்களைப் புனைந்து, அமைவிடத்தில் இணைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அமைவிடத்தில் உள்ள அலைக் காலநிலை கடுமையானது என்பதுடன், வேலை செய்வதற்கு ஆபத்தானது என்ற காரணத்தினால், பாதுகாப்பு நடவடிக்கைகள் தரத்துடன் விளங்க வேண்டும்.

பொறியின் சகல சாத்தியமான உள்ளீட்டுடன் (அலை அசைவு) பரிமாணம் கணக்கெடுக்கப்பட்டது. கணக்கெடுத்தலுக்கு காற்றுத் தரவுகள் இன்மை பாரிய மட்டுப்படுத்தலாகும். இலங்கையில் மின்சாரத்தைத் தோற்றுவிப்பதில் பிரதான மூலமாக நீரியல் விளங்குவதுடன், இங்கு தற்போதைய வீதங்களில் உற்பத்தி ஆகுசெலவு ரூபா 4.22/kwh ஆகும். இலங்கையில் தற்போதைய சக்தி நெருக்கடிநிலையுடன் டீசல் சுழலி பொறிக்கான சாத்தியவளமான வீதமாக ரூபா 9.24/kwh ஐ இ.மி.சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

ரூபா 9.48/kwh கொண்ட உற்பத்தி ஆகுசெலவு OWC பொறிக்கு மேற்போக்காக பார்க்கும் போது, ஓரளவுக்கு உயர்வான தொகையாக தெரிகின்றது. ஆனால், கடலக விருத்தி, கடல் அரிப்பின் கட்டுப்பாடு, அலைவேலி வசதி, மீன்பிடித்தொழில் துறைமுகங்களில் ஐஸ் தொழிற்சாலைகளின் வசதி, பின்தங்கிய மீன்பிடிக் கிராமங்களுக்கான சக்தி மற்றும் சூழல் அனுகூலங்கள் ஆகியன போன்ற திரண்டுள்ள ஏனைய நன்மைகள் வேறு மாற்று மூலங்கள் மத்தியில் அதன் போட்டித்தன்மையை அதிகரிக்கும்.

இத்தகைய அறிக்கையின் அடிப்படையின் மீது நிருமாணத்திற்குச் செல்வது காலத்திற்கு முந்தியது. ஏனெனில், வேறு ஆய்வு, சாத்தியவள அறிக்கை மற்றும் சூழல் தாக்க மதிப்பீடு ஆகியன இருக்க வேண்டும். ஆனால், வர்த்தக நோக்கங்களுக்கு மேலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இணக்கமாகவுள்ள முதலீட்டாளரின் அல்லது புதிதாக அமைக்கப்பட்ட மாற்றுச்சக்தி அதிகாரசபை போன்ற அரசாங்கத் தாபனத்தின் அவசியத்தைத் திருப்திப்படுத்த வேண்டும்.

பௌதீக சாதனை: 100%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்):
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 200,000.00, செலவழிக்கப்பட்டது ரூபா 233,715.37 (117%)

## 5.4 சமுத்திர அவதானித்தலும், முன்கூட்டியே பதிலிறுத்தலும்

பௌதீக சாதனை: 100%

கருத்திட்டத்தின் கீழ், சமுத்திர அவதானித்தல் நிலையம் (ச.அ.நி.) தாபிக்கப்பட்டுள்ளது. 7 நாட்கள் என்ற அடிப்படையில் 24 மணித்தியாலங்களும் ச.அ.நி. செயற்படுவதுடன், நம்பகமான மூலங்களிலிருந்து இலங்கையின் நீர்களைச் சுற்றி உண்மையான நேரத்திலானதும், ஓரளவு உண்மையான நேரத்திலானதுமான பௌதீக சூழல் தரவுகளைக் கண்காணிப்பதுடன், ஒன்றுதிரட்டுகின்றது. புதிய தகவலைத் தோற்றவிப்பதற்கு தரவுகள் பகுப்பாயப்பட்டு, தொகுக்கப்பட்டுள்ளதுடன், விஞ்ஞான சனசமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தகவல் உற்பத்திகள் வடிவமைக்கப்படுகின்றன. சமுத்திரவியலிலும், மற்றும் வேறு ஒழுக்காற்றுகிடையிலான விஞ்ஞான ஆராய்ச்சியிலும் பயன்படுத்துவதற்கு உத்தேசத்தைக் கொண்டுள்ள தரவுகள் ச.அ.நி. தரவுத்தளத்தில் சுதந்திரமாகக் கிட்டுகின்றன. கரையோரக் கடல் மட்டம், கடல் மேற்பரப்பு இடவிளக்கவியல், சமுத்திரக் காற்று, கடல் மேற்பரப்பு வெப்பநிலை, உவர்த்தன்மை மற்றும் வெப்பநிலைப் பக்கவரைகள், பச்சிலையம், அலைக் காலநிலை மற்றும் சமுத்திர அமுத்தத் தரவுகள் ஆகியனவற்றை உற்பத்திகள் உள்ளடக்குகின்றன.

சமுத்திர அடிப்படையிலான அழிவுகள் தொடர்பில், இயற்கையான சமுத்திர அழிவுகளிலிருந்து முன்கூட்டிய எச்சரிக்கைக்கும், தாக்கங்களைத் தணிப்பதற்கும் அவசியமான தொழில்நுட்பத் தகவலையும், வழிகாட்டலையும் வழங்குவதற்காக மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சு, கழிவு முகாமைத்துவ நிலையம் மற்றும் வானிலை திணைக்களம் ஆகியவற்றுடன் கூட்டு முயற்சிகளை நிலையம் செய்துள்ளது.

பௌதீக சாதனை: 100%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்):
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 800,000.00, செலவழிக்கப்பட்டது ரூபா 892,351.83 (111%)

## 5.5 இலங்கையின் தென் கரையோரத்தின் நெடுகிலும் கடற்கரையினீங்குகின்ற கனிப்பொருள் வண்டலின் மதிப்பீட்டுக்கான புவியியல் மற்றும் புவிபௌதீகவியல் ஆய்வுகள்

பௌதீக சாதனை: 70%

1,704 கி.மீ நீளமான கரையோர வலயத்துடன் கரையோர நாடாக இலங்கை விளங்குகின்றது. அத்துடன் இது 65,000 கி.மீ$^2$ நிலப் பகுதியையும 522,000கி.மீ$^2$க்கு மேற்பட்ட கடல் பகுதியையும் கொண்டுள்ளது. நாட்டின் அதிகரித்து வரும் சனத்தொகையுடன், காணி அடிப்படையிலான மூலவளங்கள் மட்டுப்பாட்டிலானவை என்பதுடன், தற்போது மிதமிஞ்சி சுரண்டப்படுகின்றன. எனவே, எதிர்காலக் கிராக்கியைத் திருப்திப்படுத்துவதற்காக சமுத்திர அடிப்படையிலான மூலவளங்கள் மீது கவனத்தைச் செலுத்துவது முக்கியமானதாகும். மிகவும் சிக்கனமான சாத்தியவள சமுத்திர அடிப்படையிலான மூலவளங்களாக கடற்கரையினீங்குகின்ற ஆற்றுக்களிவள வண்டல்கள் விளங்குவதுடன், இவை எதிர்காலப் பொருளாதார அபிவிருத்திகளிலும் பயன்படுத்தப்படமுடியும்.

அடி மாதிரிப்படுத்தலினால் அடையாளங் காணப்பட்ட தென் கடற்கரைக்கு கிட்டிய பகுதி மீதான ஆற்றுக்களிவள வண்டல்களை அடையாளங் காண்பதும், காற்றின் பருமஅளவை மதிப்பிடுவதுமே தற்போதைய முயற்சியாகும். கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, அளவினை மதிப்பிடுவதற்கு நில அதிர்வுமறை உப அடி வரையை 'நாரா' கொண்டிருக்கவில்லை. 2007 ஏப்ரலில் ஹம்பாந்தோட்டையில் பெருமளவு சோதனை ஆய்வு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துறையில் நிபுணத்துவம் இன்மையின் காரணமாக ஆய்வு முடிவுகள் வெற்றியளிக்கவில்லை. எனவே, 2007 ஜுன் இறுதியில் ஜேர்மனியிலிருந்து இச் சாதனம் மீது பயிற்சி பெறப்பட்டது. தற்போது சமுத்திர வரைபடமிடல் மீது தனது முதுமாணிச் சான்றுப்பத்திரத்திற்காக பொறுப்பான உத்தியோகத்தர் ஐக்கிய அமெரிக்க நியூ ஹம்சயர் பல்கலைக்கழகத்தில் கற்கின்றார். தனது கற்கையின் போது அவர் இலங்கையின் தெற்கு கண்டமேடையின் இலக்கரீதியான நிலைப்பட மாதிரியை தயாரிப்பதில் சம்பந்தப்பட்டுள்ளார்.

பௌதீக சாதனை: 70%
(செயற்றிறன் காட்டிகளையும், எதிர்பார்க்கப்பட்ட விளைவையும் குறிப்பிடுதல்):
நிதிசார் சாதனை: ஒதுக்கப்பட்டது ரூபா 400,000.00, செலவழிக்கப்பட்டது ரூபா 247,589.43 (62%)

**வெளியீடுகள்**


ஜயசிறி, எச்.பீ., யாழ்ப்பாணத்திற்கு அப்பால் (பாக்குநீரிணை) தாவரபிளாந்தனினதும், அழுகல்பிளாந்தனினதும் அடக்கம், அபரிதமானதன்மை மற்றும் இடஞ்சார்ந்த மாறல். சர்வதேச உயிரகப்பன்னிலையாக்கல் மகாநாடு: பிரச்சனைகளும், கரிசனைகளும், 2007 நொவம்பர் 20 – 24, கொல்கத்தா, இந்தியா, 2007.

ஜயசிறி, எச்.பீ., இலங்கை கொக்கல கடல் ஏரியிலும், இணைந்த நீர்களிலும் உவர் நீர் ஊடுருவலும், நீரின் தர மாற்றங்களும், கழிமுகம் மீதான சர்வதேச மகாநாடு, அயனமண்டல கழிமுக முறைமைகளில் (இருமுகப்புத் தளத்துக்குரிய) கரையோரக் கடல் நீர் (முகாமைத்துவம்) ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதல், 2007 நொவம்பர் 7 – 9, பாங் செயின், தாய்லாந்து, 2007

ஜயசிறி, எச்.பீ., விஜேரத்ன இ.எம்.எஸ்., கொக்கல கடல் ஏரியில் எண்ணெய் பரம்பலும், பிளாந்தன் அங்கியின் நிலையும், நிலைத்திருத்தல் முகாமைத்துவத்தை நோக்கி அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாடு, 2007 பெப்ரவரி 15 – 16, 'நாரா' கேட்போர்கூடம், 2007.

ஜயசிறி, எச்.பீ.., இலங்கை தென் மேற்கு கரையோரத்தில், மடுகங்கை பொங்குமுகத்தில் சில நீரின் தரத்தின் சாராமாறிகள் தொடர்பில் அழுகல்பிளாந்தனின் அபரித்தன்மையும், பருவகாலத்தன்மையும், SLAFAR 13ஆவது வருடாந்த அமர்வு, 2007.

ஜயசிறி, எச்.பீ. மற்றும் விக்ரமஆரச்சி என்., "சமுத்திர அடிப்படையிலான சூழலினதும், உயிரியல் அபாயங்களினதும் தணிப்புக்கான சமுத்திர அவதானித்தல் நிலையச் செயற்பாடுகள்", 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையமும், சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கி அதன் பங்களிப்பும் மீதான செயலமர்வு, 'நாரா', 2007, செப்ரெம்பர் 13.

அருளானந்தன், கே., ஜயசிறி எச்.பீ. மற்றும் பிரியதர்ஷனி டபிள்யு.என்.சி., பருவமழை மாறல்தன்மை மீதான குறிப்பான வலியுறுத்தலுடன் இலங்கையின் நீர்களைச் சுற்றி சமுத்திரவியலைப் புரிந்து கொள்ளுதல், 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையமும், சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கி அதன் பங்களிப்பும் மீதான செயலமர்வு, 'நாரா', 2007, செப்ரெம்பர் 13.

ஜினதாச, எஸ்.யு.பி., ராஜபக்ஷ ஜே.கே., இலங்கை, மதுன் எலவில் கடற்கரையினீங்குகின்ற மணல் வண்டல்களின் அளவறிதல் மற்றும் பண்பறிதல் பகுப்பாய்வு, இயற்கை அழிவுகள் முகாமைத்துவம் மீதான சர்வதேச மகாநாடு, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை, 2007.

ஜினதாச, எஸ்.யு.பி., ராஜபக்ஷ ஜே.கே., மன்னார் குடாவில் சில மேலெழுந்தவாரியான வண்டல்களின் வண்டல் இயக்கவியல் நிலை, இலங்கை, NARA Journal, 2007.

விஜேரத்ன, இ.எம்.எஸ்., ரிட்பேர்க், எல்., வற்றுப்பெருக்கு சுற்றினையும், பாரிய அதிபர உவர் கடல் ஏரியின் பிரிகையையும், வெளியேற்றத்தையும் மாதிரிப்படுத்தல்: புத்தள கடல்ஏரி, இலங்கை, Estuarine, Coastal and Shelf Science, 74, 611-622, 2007.

விஜேரத்ன, இ.எம்.எஸ்., வூட்வேர்த் பி.எல்., ஸ்டீபனோவ் வி.என்., இலங்கையிலும், தென் இந்தியாவிலும் கடல் மட்டத்தில் பருவகாலச் சுற்று, Western Indian Ocean Journal of Marine Science, 6, 67-79, 2008 (ISI).

ரீனா லோறி, டேவிட் பக், விஜேரத்ன, இ.எம்.எஸ்., மொரிசியஸ் மற்றும ரொட்டிரிகஸ் ஆகிய தீவுகளைச் சுற்றி நீர் மட்ட மாறலின் அவதானிப்புகள், Western Indian Ocean Journal of Marine Science, 6, 32-46, 2008 (ISI)

பெரஸ்.பீ.> விஜேரத்ன, இ.எம்.எஸ்., அல்வரெஸ் ∴பென்ஜீல், வூட்வேர்த் பி.எல்., கடல் மட்டத்தில் திடீர் அலையின் உண்மையான நேர தன்னியக்க கண்டுபிடிப்பு, பொதுச் சபை, ஐரோப்பிய புவிபௌதீக ஒன்றியம், 2008

பட்டிஆராச்சி சி.பி, விஜேரத்ன, இ.எம்.எஸ்., இலங்கையிலும், மேற்கு அவுஸ்திரேலியாவிலும் 2004 – 2007 இந்து சமுத்திர சுனாமியின் வற்றுப்பெருக்கு மானி அவதானிப்புகள், சுனாமிக்கள் மீது தூய பிரயோக புவிபௌதீக தலைப்பிலான பிரச்சனை (2008), மதிப்பாய்வில்.

விஜேரத்ன, இ.எம்.எஸ்., வூட்வேர்த் பி.எல்., டேவிட் பக், இலங்கையின் கரையோரத்தின் நெடுகிலும் சூழலியல் மற்றும் உள்ளக அலைகளினால் செலுத்தப்பட்ட நீர் மட்டத்தின் மாறல்கள் (Journal of Continental Shelf Researchக்குச் சமர்ப்பிக்கப்பட்டது, 2008)

விஜேரத்ன, இ.எம்.எஸ்., வூட்வேர்த் பி.எல்., பட்டிஆராச்சி சி.பீ., இலங்கையின் நெடுகிலும் அண்மைய சுனாமியினால் தூண்டப்பட்ட நீர் மட்ட மாறல்களின் அவதானிப்பும், மாதிரிப்படுத்தலும் (தயாரிக்கப்படுகின்றது)

விஜேரத்ன, இ.எம்.எஸ்., பாக்குநீரிணையின் திருந்திய நீரியல் இயக்காற்றல் மாதிரிப் பகுத்தலுக்கான இலங்கை வற்றுப்பெருக்கு மானிகளை மட்டப்படுத்தல் (NARA Journalக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது).

ரண்மடுகல பி.எச்.எஸ்., விஜேரத்ன, இ.எம்.எஸ்., பிற்றவெல, எ., 2007, களனி ஆற்றுப் பொங்குமுகத்தில் கடல்நீர் ஊடுருவலை மாதிரிப்படுத்தல், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாடு, கொழும்பு, 2007 பெப்ரவரி 15 – 16

துஷார எச்.கே.ஆர்., விஜேரத்ன, இ.எம்.எஸ்., 2007, பலமாகக் கட்டுப்படுத்தப்பட்ட வற்றுப்பெருக்கு நுழைகுடா கடல் ஏரியில் உவர்தன்மையையும், வெளியேற்றல் நேரத்தையும் மாதிரிப்படுத்தல்: ரேகாவ கடல்ஏரி, இலங்கையின் தென் கரையோரம், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாடு, கொழும்பு, 2007 பெப்ரவரி 15 – 16

ராஜபக்ஷ, ஜே.கே., விஜேரத்ன, இ.எம்.எஸ், குணரத்ன, எ., லொக்குகமகே. ஜே., 2007, "Digital Sri Lanka"இன் கருத்துரு; இடஞ்சார் தரவுத் தளத்தினதும், தரவு பரிமாறும் வலைப்பின்னலினதும் முன்னேற்றம், நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான சர்வதேச மகாநாடு, கொழும்பு, 2007 பெப்ரவரி 15 – 16

விஜேரத்ன, இ.எம்.எஸ்., இலங்கையில் சுனாமியின் முன்கூட்டிய எச்சரிக்கையின் தற்போதைய நிலை, இயற்கை அபாயங்களின் ஆபத்தினைத் தணிப்பது மீதான சர்வதேச மகாநாட்டின் கருத்துக்கோர்வை, பேராதனை பல்கலைக்கழகம், 2007.

விஜேரத்ன, இ.எம்.எஸ்., காலநிலை மாற்றமும், கடல் மட்ட மாறல்தன்மையும், SACAP, ப.ஞா.ச.ம.ம., 2007.

விஜேரத்ன, இ.எம்.எஸ். அதுகோரள, டி.ஏ. நிஷாந்த டீ சில்வா, ரத்நாயக்க, ஜி.எ.எ., சமுத்திர அடிப்படையிலான அழிவின் முன்கூட்டிய எச்சரிக்கைகளினதும், தணிப்பினதும் மீதான சமுத்திர அவதானித்தல் நிலைச் செயற்பாடுகளின் வகிபங்கு, 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையம் மீதான செயலமர்வு அத்துடன் சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கிய அதன் பங்களிப்பு, 'நாரா', கொழும்பு – 15, 2007 செப்ரெம்பர் 13.

ராஜபக்ஷ. ஜே.கே., விஜேரத்ன, இ.எம்.எஸ்., விக்ரமஆரச்சி, டி.என். கருணாதிலக்க, கே.எம்.பீ.சி., ஜினதாஸ, எஸ்.யு.பி., வெளியேற்றத் திட்டமிடலுக்கு சுனாமி ஒருங்கமைவு மற்றும் வெள்ளப்பெருக்கு வரைபடமிடுதல், 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையம் மீதான செயலமர்வு அத்துடன் சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கிய அதன் பங்களிப்பு, 'நாரா', கொழும்பு – 15, 2007 செப்ரெம்பர் 13.

அருளானந்தன், கே. அஸ்மி. எஸ்.எ.எம்., ஜயசிறி எச்.பீ., விஜேரத்ன, இ.எம்.எஸ்., பருவகால மழை மாறல்தன்மை மீதான குறிப்பிடத்தக்க வலியுறுத்தலுடன் இலங்கையில் நீர்களைச் சுற்றி சமுத்திரவியலைப் புரிந்து கொள்ளுதல், 'நாரா'வில் சமுத்திர அவதானித்தல் நிலையம் மீதான செயலமர்வு அத்துடன் சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கிய அதன் பங்களிப்பு, 'நாரா', கொழும்பு – 15, 2007 செப்ரெம்பர் 13.

**பங்கெடுத்த பயிற்சி/இணையுரிமை மற்றும் கூட்டம்**
ஜயசிறி எச்.பீ., உயிரகப் பன்னிலையாக்கம் மீதான சர்வதேச மகாநாடு: பிரச்சனைகளும், கரிசனைகளும், 2007 நொவம்பர் 20 – 24, கொல்கத்தா, இந்தியா

கருணாதிலக்க, கே.எம்.பீ.சி., இளம் விஞ்ஞானி தரவு முகாமைத்துவ பயிற்சி நெறி; IOCக்காக IODEஇனால் ஒழுங்குபடுத்தப்பட்டது, 2007 ஜுன் 04 முதல் 09 வரை, பெல்ஜியம்.

ஜினதாஸ, எஸ்.யு.பி., GEBCO/NIPPON மன்ற புலமைப்பரிசில் திட்டம், சமுத்திர வரைபடமிடல் மீதான முதுமாணி சான்றுப்பத்திரம், கரையோர, சமுத்திர வரைபடமிடல் நிலையம், நியூ ஹம்ஷெயர் பல்கலைக்கழகம், 2007 ஓகஸ்ட் முதல், ஐக்கிய அமெரிக்கா.

தென்னக்கோன், ரி.கே.டி., இந்து சமுத்திரத்திற்கான உலகளாவிய சமுத்திர அவதானித்தல் முறைமை (IOGOOS - V), வருடாந்த மகாநாடு– V, 2007, நொவம்பர் 30 – டிசம்பர் 02, தாய்லாந்து.

தென்னக்கோன், ரி.கே.டி., அரசாங்கங்களுக்கிடையிலான சமுத்திரவியல் ஆணைக்குழு, 24ஆவது பொதுச் சபை, 40ஆவது நிறைவேற்றுக் குழுக் கூட்டம், 2007 ஜுன் 18 – 28, பாரிஸ், பிரான்ஸ்

ராஜபக்ஷ, ஜே.கே., மென்கணியப் பயிற்சி, ESL சூழல் ஒருங்கமைவு ஆய்வுகூடம், ஜப்பான், 2007 டிசம்பர் 10–13

விஜேரத்ன, இ.எம்.எஸ்., இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை, தணிப்பு முறைமைக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்புக் குழு (ICG/IOTWS IV), இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை, தணிப்பு முறைமையின் இலங்கைப் பேராளர் குழாமின் உறுப்பினராகச் சேவையாற்றினார், 2007 பெப்ரவரி 28 மார்ச் - 2, மொம்பாஸா, கென்யா

விஜேரத்ன, இ.எம்.எஸ், கடல் மட்ட விஞ்ஞானத்திலும், பிரயோகங்களிலும் IOC இந்து சமுத்திர சுனாமி எச்சரிக்கை முறைமை இணையுரிமைத் திட்டம், 2007 – 2008. காலத்தின் போது மேற்படி இணையுரிமையின் கீழ் தொழில் பயிற்சிக்காக கரிசனைக்கு எடுக்கப்பட்ட மூன்று கருப்பொருள்களாக கடல் மட்ட பகுப்பாய்வுத் தொழில்நுட்பங்கள், மற்றும் முடிவுகளின் பொருள் விளக்கம், வற்றுப்பெருக்கு மானி தொழில்நுட்பம், மற்றும் புயல் கிளம்பல்களினதும், சுனாமியினதும் மாதிரிப்படுத்தல் ஆகியன விளங்குகின்றன, 2007 செப்ரெம்பர், ஐக்கிய ராஜ்யம்.

## சமுத்திர அவதானித்தல் நிலையத்தின் செயற்பாடுகள்

"சமுத்திர அவதானித்தல் நிலையமும், சமுத்திர ஆராய்ச்சியையும், சூழல் பாதுகாப்பினையும் நோக்கிய அதன் பங்களிப்பும்" என்ற தலைப்பிலான செயலமர்வொன்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பங்காளர்களுக்கும் OOC செயற்பாடுகளையும், ஆற்றலளவுகளையும் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தையும் செய்துகாட்டுவதற்காக 'நாரா' கேட்போர்கூடத்தில் 2007 செப்ரெம்பர் 13 அன்று நடைபெற்றது. செயலமர்வின் பிரதம விருந்தினராக கௌரவ மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் விளங்கியதுடன், சம்பந்தப்பட்ட அதிகார சபைகளிலிருந்து பெருமளவு உத்தியோகத்தர்கள் இவ்வைபவத்தில் பங்கெடுத்தனர். சமுத்திர அவதானித்தல் நிலையச் செயற்பாடுகள் தொடர்பான ஒரு தொகைச் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டன. சமர்ப்பணங்களின் தலைப்புக்கள் வருமாறு:

1. ஒரு கண்ணோட்டம்: சமுத்திர அடிப்படையிலான அழிவின் முன்கூட்டிய எச்சரிக்கையினதும், தணிப்பினதும் மீது சமுத்திர அவதானித்தல் நிலையத்தின் வகிபங்கு, விஜேரத்ன, இ.எம்.எஸ், அதுகோறள டி.ஏ., நிஷாந்த டீ சில்வா, ரத்நாயக்க, ஜி.எ.எ.

2. சுனாமி ஒத்திசைவும், காலிசெய்தல் திட்டமிடலுக்கு வெள்ளப்பெருக்கு வரைபடமிடுதலும், ராஜபக்ஷ ஜே.கே. விஜேரத்ன, இ.எம்.எஸ், விக்ரமராச்சி டி.என்., கருணாதிலக்க, கே.எம்.பீ.சி., ஜினதாச, எஸ்.யு.பி.

3. இலங்கை மேற்கு கரையோரத்தின் மீது புயல் கிளம்பல்களின் முன்னேற்றங்களுக்கு வற்றுப்பெருக்கு களினதும், சமுத்திர காலநிலையினதும் தாக்கம், அதுகோறள டி.எ., ஜயசூரிய பி., லியனபதிரண, ஜே., பெர்னாண்டோ, ஆர்., ஜயசிங்க ஆர்.பி.பி.கே.

4. சமுத்திர அடிப்படையிலான அழிவு முன்கூட்டிய எச்சரிக்கையும், சமூகப் பொறுப்பும், அமரலால், கே.எச்.எம்.எல்., புண்யதேவ, என்.பி.பீ., மென்டிஸ், டி.ரி., இந்திக்க கே.டபிள்யு.

5. சமுத்திர அவதானித்தல் நிலைய தரவுத்தளமும், அதன் கட்டமைப்பும், தென்னக்கோன், கே., லொக்குகமகே ஜே., அதிகாரி யு., ரத்நாயக்க ஜி.எ.எ.

6. பருவமழை மாறல்தன்மை மீதான குறிப்பிட்ட வலியுறுத்தலுடன் இலங்கை நீர்களைச் சுற்றி சமுத்திரவியலைப் புரிந்துகொள்ளுதல், கே.அருளானந்தன், பிரியதர்ஷனி டபிள்யு.என்.சி., விஜேரத்ன, இ.எம்.எஸ்.

7. நம்பகமான புவி-இடஞ்சார்ந்த தரவுகளுக்கான 'இன்டர்நெற்' மூலங்களும், மீன்பிடித்தல் எதிர்வுகூறலுக்கு சமுத்திர அவதானித்தல் நிலையத்தின் பொறுப்பும், ராஜபக்ஷ ஜே.கே., ஜினதாச எஸ்.யு.பி., பிரியதர்ஷனி டபிள்யு.என்.சி., செனிவிரத்ன யு.

8. சமுத்திர அடிப்படையிலான சூழல் மற்றும் உயிரியல் அபாயங்களைத் தணிப்பதற்கான OOC செயற்பாடுகள், ஜயசிறி எச்.பீ., விக்ரமஆரச்சி டி.என்., அஸ்மி எஸ்.எ.எம்., மென்டிஸ் டி.ரி.

9. உலகளாவிய வெப்பமடைதலினதும், கடல் மட்ட அதிகரிப்பினதும் சவால்கள், தஹநாயக்க டி.டி.ஜி.எல்., புண்யதேவ என்.பி.பீ., மென்டிஸ் ரி.ரி., நிஷாந்த டீ சில்வா.

**கருத்துப்படம்**
OOC செயற்பாடுகளினதும், அதன் பொறுப்புக்களினதும் மீது 'வீடியோ' கருத்துப்படமொன்று தயாரிக்கப்பட்டது.

**ஜனாதிபதி இல்லத்தில் சமர்ப்பணம்**

தென்னக்கோன், ரி.கே.டி., ராஜபக்ஷ ஜே.கே., லொக்குகமகே ஜே., ரத்னாயக்க ஜி.எ.எ., அலரி மாளிகையில் 2007 ஒக்ரோபரில் அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கையின் அதி மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கும், கௌரவ அமைச்சரவை மந்திரிகளுக்கும் அதன் செயற்பாடுகளையும், பொறுப்புக்களையும் பணியாளர் சமர்ப்பித்தனர்.

**மீன்பிடித்தொழில், நீரியல் வள அமைச்சில் சமர்ப்பணம்**

தென்னக்கோன், ரி.கே.டி., ராஜபக்ஷ ஜே.கே., லொக்குகமகே ஜே., ரத்னாயக்க ஜி.எ.எ., 2007 ஒக்ரோபரில் நிறுவனங்களின் தலைவர்களின் கூட்டத்தில் மீன்பிடித்தொழில் நீரியல் வளங்கள் அமைச்சின் முகாமைத்துவத்திற்கும், பணியாளருக்கும் அதன் செயற்பாடுகளையும், பொறுப்புக்களையும் பணியாளர் சமர்ப்பித்தனர்.

**இலத்திரனியல் ஊடகப் பிரச்சாரம்**
2007இன் போது OCC செயற்பாடுகளினதும், பொறுப்புக்களினதும் மீது ஒரு தொகை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

**சமுத்திர அவதானித்தல் நிலைய இணைய தளம்**
OOC மீது 'நாரா' இணையதளத்தினுள் இணையதளப் பக்கமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**அச்சு ஊடகப் பிரச்சாரம்**
OOC செயற்பாடுகள் மீது ஒரு தொகை துண்டுப் பிரசுரங்களும், ஆவணங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

சமுத்திர அடிப்படையில் அழிவுகள் மீது செய்திப்பத்திரிகைகள் ஊடாக பெருமளவு கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன.

**மீன்பிடித்தல் வலயக் கூடத்தின் ஆற்றலளவின் செயற்பாடுகள்**

குடாவெல, மாத்தறை, திருகோணமலை, மற்றும் சிலாபம் ஆகியவற்றில் செய்மதியினால் பெறப்பட்ட சமுத்திர சாராமாறிகளுடன் தோற்றுவிக்கப்படும் மீன் எதிர்வுகூறலைச் செல்லுபடியாக்குவதற்கு சோதனை மீன்பிடித்தலுக்கு மீனவர்களை இணங்க வைப்பதற்கும், அவர்களது ஆதரவைப் பெறுவதற்கும் விழிப்பியல் திட்டங்கள் நடத்தப்பட்டன.

கணனிகள், மரத்தளபாடங்கள், புகைப்படப்பிரதியெடுத்தல் இயந்திரம், வர்ண 'பிரிண்டர்', மற்றும் மென்கணியம் ஆகியன ICEIDA நிதியங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டன. 'நாரா' வேலையை மேம்படுத்துவதற்காக, ICEIDA நிதியங்களுடன் வலைப்பின்னல் ஆளிகளும், 'ரவுட்டர்'களும் கொள்வனவு செய்யப்பட்டன.

மீன்பிடித்தொழில் தகவலைப் பதிவதற்காக "மீன்பிடித்தல் தினக்குறிப்பு" சம்பவக்குறிப்பேடு வடிவமைக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, மீனவர்கள் மத்தியில் பங்கிடப்பட்டது. ICEIDA நிதியங்களுடன் தினக்குறிப்பு அச்சிடப்பட்டது.

துறைமுக புகுமுக வழிமுனை GPS தரவு சேகரிக்கப்பட்டதுடன், வழிமுனைப்பட்டியலுடன் தேசப்படமொன்று தயாரிக்கப்பட்டது. மீன்பிடித்தல் தினக்குறிப்பில் இந்தத் தேசப்படம் உள்ளடக்கப்பட்டது.

Marine Explorer GIS என்ற மென்கணியம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், ஜப்பான் சூழல் ஒத்திசைவு ஆய்வுகூடத்தில் நடைபெற்ற மென்கணிய பயிற்சியில் பங்கெடுக்கப்பட்டது.

குடவெல மீன்பிடித்தல் எதிர்வுகூறல் கருத்திட்டங்கள் மீது விழிப்பியல் திட்டங்கள்/கூட்டங்கள் நடத்தப்பட்டன, 2007, டிசம்பர் 23.

# அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி இ.எம்.ஆர்.கே.பீ. எதிரிசிங்க

## 1. ஆண்டின் கண்ணோட்டம்

மீன்பிடித்தொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளே பிரிவின் பிரதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளாகும். உள்ளூர் மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கு ஆய்வுகூடச் சோதித்தலையும், சான்றளிப்புச் சேவைகளையும் பிரிவு வழங்குகிறது. அதாவது சோதனைச் சேவைகள், கடல் உணவு உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் நீர்வாழ் உணவு உற்பத்திகளை முன்னேற்றுதல் ஆகிய மூன்று பிரதான குழுக்களாக பிரிவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் வகைப்படுத்தப்பட முடியும். 2007ஆம் ஆண்டின் போது இப்பாரிய துறைகளின் கீழ் மூன்று ஆராய்ச்சி கருத்திட்டங்களும் (2.1, 2.2 மற்றும் 2.3), ஒரு சோதனைச் சேவைத் திட்டமும் (7.3.1.: ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல், மற்றும் வளங்களின் அபிவிருத்தி) நடத்தப்பட்டன. மேலதிகமாக, இரு வெளிநாட்டு நிதிப்படுத்தலிலான கருத்திட்டங்களும் (ICEIDA மற்றும் AIDA) மேற்கொள்ளப்பட்டன.

தரக் கட்டுப்பாடு ஆய்வுகூடத்தின் நுண்ணுயிரியல் மற்றும் இரசாயனவியல் பிரிவுகள் கைத்தொழிலுக்கு சோதித்தல் சேவைகளை நடத்தியுள்ளன. ISO 17025 தர உறுதிப்படுத்தலின் பிரகாரம் சேவைகளின் விஸ்தரிப்புடன் ஆய்வுகூடங்கள் ஈடுபட்டுள்ளன. மீன் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் துறையில் பலதரப்பட்ட பிரச்சினைகள் மீது பெருமளவு பொதுசன மற்றும் கைத்தொழில் விழிப்பியல் திட்டங்களை அ.பி.தொ.பிரிவின் பணியாளர்கள் நடத்தியுள்ளனர். சுனாமியின் பின்னர் மீன் பாவனை மீது விழிப்பியலை உயர்த்துவதை இத்திட்டங்கள் பிரதானமாக இலக்குப்படுத்தின. அறுவடைக்குப் பிந்திய கையாள்தலினதும், மீன் உற்பத்தி அபிவிருத்தியினதும் மீது இத் திட்டங்கள் பிரதானமாக இலக்கினைக் கொண்டிருந்தன. மேலதிகமாக, மீன் பதப்படுத்தல் பொறிகளின் பிரச்சினைகளைக் களைவதிலும், சுகாதாரப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும் பயிற்சித் தொழில்நுட்ப ஆளணியினரினால் கைத்தொழிலுக்கு இப்பிரிவு சேவைகளை வழங்கியது.

தற்போது 07 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், 07 ஆராய்ச்சி உதவியாளர்கள், 01 தரவுப் பதித்தல் இயக்குனர், மற்றும் 02 ஆய்வுகூடச் சிப்பந்தி மற்றும் 07 பயில்திறனிலான ஊழியர்களைக் கொண்ட வேறு ஆதரவளிக்கும் பணியாளர் ஆகியோரை பிரிவு கொண்டுள்ளது.

**பணியாளரின் பயிற்சி**

மலேஷியாவில் தனது பிஎச்.டி. திட்டத்தை முடித்த பின்னர் திருமதி எஸ்.ஆரியவன்ச (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) மீளத்திரும்பினார். ஐஸ்லாந்தில் ஆறு மாதங்களுக்கு நீரின் தரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சனைகள் மீது பயிற்சியை திருமதி பி.எஸ்.ஜயசிங்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) மேற்கொண்டிருந்ததுடன், இரு ஆராய்ச்சி உதவியாளர்கள் நுண்ணுயிரியல் மற்றும் PCR பகுப்பாய்வு ஆகியன மீது ஐஸ்லாந்தில் 2 வாரப் பயிற்சியை மேற்கொண்டனர். பிரிவின் ICEIDA நிதிப்படுத்தலிலான நீர், ஐஸ் தர கருத்திட்டத்தினால் இரு பயிற்சிகளும் நிதிப்படுத்தப்பட்டன. மேலதிகமாக 4 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும், 2 ஆராய்ச்சி உதவியாளர்களும் AIDA கருத்திட்டத்தின் கீழ் ஸ்பெயினில் 2 வாரப் பயிற்சியை மேற்கொண்டார்கள். இந்தியாவில் நடைபெற்ற ASIAN மீன்பிடித்தொழில் சங்கக் கூட்டத்தில் திருமதி பி.எஸ்.ஜயசிங்க பங்கெடுத்தார்.

2004 டிசம்பர் 26 அன்று சுனாமியினால் பிரிவு பெரிதுமே சேதமடைந்தது. சம்பவத்தினால் இரசாயனவியல், நுண்ணுயிரியல், மற்றும் போஷாக்கு ஆய்வுகூடங்கள் ஆகியனவும், பதப்படுத்தல் தொழிற்சாலையும் மோசமாகச் சேதமடைந்தன. அணுவுறிஞ்சல் நிறமாலை மானி, குவளைச் சந்துக்கள், UV நிறமாலைஒளிப்படமானி, Kjhedhal புரதப் பகுப்பாய்வுக் கருவி, குண்டு கலோரிமானி, சீவல் ஐஸ் தயாரிப்பு உபகரணம் போன்ற ஒரு தொகை உபகரணங்கள் ICEIDA உதவியின் கீழ் பெறப்பட்டன. மேலும், கோலி∴போம் நீர் தொட்டியும், வேறு சில உபகரணங்களும் FAO உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன.

சுனாமியினால் பாரதூரமாக சேதமடைந்த மீன் பதப்படுத்தல் தொழிற்சாலை ரூபா 13 மில்லியன் கொண்ட ஆகுசெலவில் ICEIDA உதவியின் கீழ் பழுதுபார்க்கப்பட்டு, 2007 பெப்ரவரி 15 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலதிகமாக ICEIDA உதவியுடன் பிரிவில் மீன் உலர்த்தல் அலகும் தாபிக்கப்பட்டது.

மேலும், 'நாரா'வின் 25ஆவது வருடாந்தப் பூர்த்தி மகாநாட்டில் பிரிவின் உத்தியோகத்தர்கள் தீவிரமாகப் பங்கெடுத்தார்கள். மகாநாட்டுப் பணிக்கு ஆதரவளிப்பதற்காக பெப்ரவரி மாதத்தின் போது ஆராய்ச்சித் திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

**விஸ்தரிப்பு திட்டங்கள்**

சுகாதாரமான மீன்களைக் கையாள்தல், மீன் உற்பத்திகளை விருத்தி செய்தல் மற்றும் சிறந்த தரத்திலான மீன்களை அடையாளம் காணுதல் ஆகியன உட்பட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தின் பலதரப்பட்ட விடயங்கள் மீது தமது பணியாளருக்கு பயிற்றுவிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை, NIFNE மற்றும்

CFC ஆகியனவற்றுடன் உடன்படிக்கைகளை பிரிவு கைச்சாத்திட்டுள்ளது. இத்திட்டத்தின் போது 50க்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். மேலும், இக்காலத்தின் போது பலதரப்பட்ட அரச சார்பற்ற தாபனங்களின் உதவியுடன் மீன் பதப்படுத்தல் மீது பாரிய தொகையிலான களப் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

பதப்படுத்தல் தொழில்நுட்பத்தைக் கைமாற்றுவதற்காக மே 16 அன்று ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் நுகசெவன நிகழ்ச்சித்திட்டத்தை 'நாரா'வும், கைத்தொழில் அபிவிருத்தி சபையும் இணைந்து நடத்தின.

***ஆசிரியர் பயிற்சித் திட்டம்***



மீன்பதப்படுத்தல் மீது கை.அ.ச. பணியாளரை பயிற்றுவிப்பதற்கான 'நாரா' – கை.அ.ச. இணைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்



தரமான ஐஸை அளவிடுதல்



மீன் உலர்த்தல் வசதி



புதுப்பிக்கப்பட்ட மீன் பதப்படுத்தல் அலகு

## 2. செயற்றிறன்

### கருத்திட்டம் 2.1: மீன் இறங்குதுறைகளின் அறுவடைக்குப் பிந்திய தரத்தை மேம்படுத்துதல்

**கூறு 1: மீன்களின் அறுவடைக்குப் பிந்திய தர இழப்புக்களைக் குறைந்தபட்சமாக்குவதற்கு இலங்கையில் மீன்பிடித்தொழில் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நீரினதும், ஐஸினதும் தரத்தை மேம்படுத்துதல் (ICEIDA நிதிப்படுத்தலிலான கருத்திட்டம்: இணைப்படி நிதியங்கள்)**

இலங்கையில் மீன்பிடித்தொழில் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நீரினதும், ஐஸினதும் தரத்தை ஆய்வதற்காக கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கருத்திட்டம் ஐஸ்லாந்து சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையினால் (ICEIDA) நிதிப்படுத்தப்பட்டுள்ளது. காலத்தின் போது பேருவளை, ஹிக்கடுவை, புராணவெல, குடாவெல, ஹம்பாந்தோட்டை, கிரிந்த மற்றும் பட்டனன்கல ஆகியன உட்பட ஒரு தொகை மாதிரி அமைவிடங்களுக்கு வருகை தரப்பட்டதுடன், மீன் மற்றும் ஐஸ் மாதிரிகள் பெறப்பட்டு தரத்திற்காக பகுப்பாயப்பட்டன. கருத்திட்டத்தின் கட்டம் முடிவடைந்துள்ளதுடன், கருத்திட்டத்திலிருந்து தரவுத் தளம் தயாரிக்கப்படுகின்றது.

ஐஸ் பதப்படுத்தலில் நீரின் தரம் மீதான விழிப்பியல் மிகவும் சிறிதளவு என்பதை முடிவுகள் காட்டின. மீன் பதப்படுத்தலில் பயன்படுத்தும் ஐஸின் தரத்தைச் சிறப்பாக்குவதற்கு பெருமளவு சிறிய திருத்தத்திலான நடவடிக்கைகளை அமுல்படுத்துவது சாத்தியமானதாகும். குழாய்க் கிணறுகளிலிருந்து அல்லது தோண்டுதற் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீரை விட குழாய் நீரானது சிறந்த நீர் மூலம் என்பது தெளிவானது. ஆனால், குழாய்க் கிணறுகளையும், தோண்டுதற் கிணறுகளையும் திருத்தியமைப்பது சாத்தியமானதாகும். உதாரணமாக, குழாய்க் கிணறுகளை ஆழமாக்குவது மூலமும், பறவைகளும், வேறு விலங்குகளும் அடைதலைக் கொண்டிருக்காத விதத்தில் தோண்டுதற் கிணறுகளை மூடுவதன் மூலமும் இது சாத்தியமாகும். ஐஸ் பதப்படுத்தல் பொறி உரிமையாளர்களையும், அவற்றில் பணியாற்றும் ஊழியர்களையும் அறிவூட்டுவது அவசியமென்பது தெளிவாகும். மாசுபடுத்தலின் ஒரு மூலமாக ஐஸ் தடாக நீர் விளங்குகின்றது. இந்நீர் குளோரினேற்றப்படுவதில்லை என்பதுடன், பக்டீரியா வளர்ச்சிக்குப் பொருத்தமானது என்பதை முடிவுகள் எடுத்துக் காட்டின. தடாகத்தில் குளோரினைப் பயன்படுத்தி, சில நாட்களினுள் அதை வடியவிடுவது அவசியமானதாகும்.

மேலும், அறுவடையின் போதும், படகுகளைக் கையாள்தலின் போதும் மாசுபடுத்தலின் மட்டத்தை ஆய்வதற்கு மேலதிகமான ஆராய்ச்சியும் ஆரம்பிக்கப்பட்டது.

முகாமைத்துவக் குழுக் கூட்டம் உட்பட ஒரு தொகை கூட்டங்களும், கருத்துப் பரிமாறல்களும் ICEID மற்றும் மீன்பிடித் தொழில் திணைக்களம் ஆகியவற்றில் நடத்தப்பட்டன. அவசியமான சாதனங்களையும், ஊடகத்தையும் மற்றும் இரசாயனங்களையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஓர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஐஸ்லாந்திற்கு 6 மாத காலங்களைக் கொண்ட பயிற்சியை மேற்கொண்டுள்ளார்.

| முன்னேற்றம் | பௌதீக% | நிதிசார்% |
|---|---|---|
| | 98 | 79 |

## கூறு 2: இலங்கையின் ஏற்றுமதிக் கைத்தொழிலில் மீன்களின் தர சீர்கேட்டுக்கான தீர்விலான நடவடிக்கைகளை ஆய்தல்

ஏற்றுமதிக் கைத்தொழில் தொடர்பான நடைமுறையிலான ஆராய்ச்சிக்குரிய பிரச்சனைகள் மீதான தகவலைத் திரட்டுதல்:

ஏற்றுமதி வழிமுறைகளின் பின்னைய கட்டங்களின் போது, மஞ்சள் செட்டை தூனாவின் துரிதமான பௌதீக தரச் சீர்கேடுகள் இறக்குமதி செய்யப்படும் நாடுகளில் அனுப்புபொருட்பொதிகளை அதிகளவு நிராகரிப்பதற்கு ஏதுவாக விளங்குவதாக அறிவிக்கப்படுகின்றது.

இது கடற்கரையினீங்குகின்ற படகுகளின் ஆரம்பநிலையிலான கையாள்தல்கள் தொடர்பிலும், பௌதீக மற்றும் இரசாயன தர சாராமாறிகளுக்கான மாதிரிகளின் பகுப்பாய்வு தொடர்பிலும் கவனத்திற்கெடுக்கப்படவுள்ளது. ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

மாதிரிகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி கருத்திட்டச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, கடந்த ஆண்டு கருத்திட்டத்திலிருந்து பின்வருவன தொடரப்படுகின்றன.

இலங்கையின் கடற்கரையினீங்குகின்ற மீன்பிடித்தல் படகுகளில் (க.மீ.ப.) உற்பத்தி செய்யப்படும் *Katsuwonus pelamis* (ஸ்கிப்ஜக்) தற்போதைய அறுவடைக்குப் பிந்திய தரத்தின் மதிப்பிறக்கத்தை ஆய்தல்:

கிட்டிய அண்மைக் காலம் முதல் க.மீ. படகுகளிலிருந்து இறக்கப்படும் ஸ்கிப்ஜக் பிரதானமாக உடன் மீனாக நுகரப்படுவதாகவும், அதேவேளை உப்பிடப்படும் மீன் கருவாட்டுக் கைத்தொழிலுக்கு பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டம் வர்த்தக மீன் தரப்படுத்தல் முறைமையைப் பொறுத்து க.மீ.படகுகளிலிருந்து இறக்கப்படும் ஸ்கிப்ஜக்கின் தர மதிப்பிறக்க சதவீதங்களின் நடைமுறையிலான மட்டங்களை ஆய்வதைத் திட்டமிடுகின்றது. க.மீ.படகுகளில் ஆரம்பநிலையிலான மீன் கையாள்தலினதும், பேணலினதும் முன்னேற்றத்தை ஆய்வதற்காக கடந்த கால அறிக்கையிடப்பட்ட தரவுகளுடன் இத் தரவுகள் ஒப்பிடப்பட முடியும். தற்போது, ஐந்து க.மீ.படகுகள் மதிப்பிடப்பட்டு, ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. க.மீ.படகுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பிடப்பட்ட கருவாட்டின் தரத்தின் மேலும் ஆய்வு சரியான உற்பத்தி வழிகளை வெளிப்படுத்துவதற்கு மேலும் ஆய்வுகளைத் தொடர்வது அவசியமானதாகும்.

மேலதிகமாக, "பேருவளை மீன்பிடித்தல் துறைமுகத்திற்கான சிறந்த மீன் நடைமுறைகள்" மீதான குரல் ஒலிநாடாவொன்று தயாரிக்கப்பட்டு, மீனவர்களுக்கு அறிவூட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

***குறுகிய கால குறித்தொதுக்கல்***

**சூரியசக்தி உலர்த்திகளைப் பயன்படுத்தி உயர் தரத்திலான கருவாட்டின் உற்பத்தி:** கண்காணித்தலுக்கு அவசியமான அடிப்படைக் கட்டமைப்பும், கருவிகளும் விருத்தி செய்யப்பட்டு, பதப்படுத்தல் சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

| முன்னேற்றம் | பௌதீக% | நிதிசார்% |
|---|---|---|
| | 95 | 84 |

**கருத்திட்டம் 2.2: கடல் உணவு உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்ப்பு**

**கூறு 1. சிறிய அளவிலான உற்பத்திக் கைத்தொழிலின் அபிவிருத்தியும், ஆகுசெலவு நன்மையிலான பகுப்பாய்வும்**

காலத்தின் போது மீன் பதப்படுத்தல் தொழிற்சாலையின் பழுதுபார்த்தல்கள் முடிக்கப்பட்டன. தொழில்நுட்ப கைமாற்றச் செயற்பாடுகள் மீது கருத்திட்டத்தின் செயற்பாடுகள் பிரதானமான செறிவினைக் கொண்டிருந்தன.

1. பத்து உற்பத்திகளை அறிமுகப்படுத்தி, பொருத்தமான குடிசை, வர்த்தகக் கைத்தொழிலுக்கு அவற்றின் பதப்படுத்தல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களுக்கு 'நாரா' மீன் பதப்படுத்தல் பொறியில் ஆறு நாள் கைத்தொழில் பயிற்சி திட்டம் மேற்கொள்ளப்பட்டது. சிப்பி 'சோஸ்', சிப்பி சிற்றுண்டி, அகர் ஷீட், ஜெலி பதப்படுத்தல், உலர்ந்த 'சூப்' கலவை, நீராவியிலான உலர்ந்த இறால், மீன் தசை உருண்டைகள், மீன் தூள், மீன் பசை மற்றும் மீன் கறி ஆகியனவே கிட்டுகின்ற உற்பத்திகளாகும்.

2. சர்வோதய மகளிர் இயக்கத்தின் வேண்டுகோளின் பேரில் மாத்தறை, தங்காலை ஆகிய மாவட்டங்களில் மூன்று விழிப்பியல் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், ஜாடி, மாசிக் கருவாடு, புளித்தீயல் மற்றும் கருவாடு ஆகியவற்றின் பதப்படுத்தல் தொழில்நுட்பத்தை அவுஸ்திரேலிய, இலங்கை நட்புறவு மன்றம் கைமாற்றியது.

பதினைந்து பதப்படுத்தல் தொழில்நுட்பங்களுடனும், கடல் உணவின் சமையல் பாகங்களுடனும் சிற்றேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், "சுயதொழில் வாய்ப்புகளுக்கான உணவு உற்பத்திகள்" மீதான 'வீடியோ' நிகழ்ச்சியின் தயாரிப்பு மீதான பூர்வாங்க வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிற்சித் திட்டங்களில் நிகழ்ச்சி பயன்படுத்தப்படும்.

மேலதிகமாக, "திலபியா மாசிக் கருவாட்டின் தயாரிப்புக்கான புதுமையான பதப்படுத்தல் தொழில்நுட்பத்திற்கான" ஆக்கவுரிமைகளைப் பெறுவதற்காக விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், AIDA கருத்திட்டத்திற்காக இலங்கையில் இறால் பதப்படுத்தல் மற்றும் பண்பாட்டு வளர்ப்புச் செயற்பாடு மீது சில துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும், கடல் களையிலிருந்து அகர் பதப்படுத்தலுக்கு முழுமையான கட்டுரையொன்று தயாரிக்கப்பட்டது.

| முன்னேற்றம் | பௌதீக% | நிதிசார்% |
|---|---|---|
| | 90 | 73 |

**கருத்திட்டம் 2.3 உள்நாட்டு மீன்பிடிக் கைத்தொழிலின் தரத்தினதும், சந்தைப்படுத்தலினதும் முன்னேற்றம்**

**கூறு 2.3.1 நன்னீர் மீன் கைத்தொழிலின் தர நிலையை ஆய்தல்**

2006இலிருந்து கருத்திட்டம் தொடருகின்றது. மீன் மற்றும் நீர் மாதிரிப் பகுப்பாய்வு தொடருகின்றது. சில பல்லாண்டுக் குளங்களின் நீர் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளத்தக்க பொழுதுபோக்கிலான நீரின் தர நியமத்திற்கு ஏற்றதாக இல்லை என முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் மனிதப் பாவனையின் நேரடி உபயோகத்தில் நோயியல் பக்டீரியாவின் காவியாக இந் நீர்கள் செயற்பட முடியும். மேலும், திருப்திகரமான மட்டமொன்றில் உள்நாட்டு மீன்பிடித்தலில் தோதான அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளைச் செயற்படுத்த முடியவில்லை. அறுவடைப் பருவத்தின் போது, கார்ப்பின் அறுவடைக்குப் பிந்திய கையாள்தல் பிரச்சனை என்பதுடன், அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைப்பதற்கு கார்ப்பின் களஞ்சிய வாழ்க்கைக்காக விருத்தி செய்யப்பட வேண்டும். முதலாவது பாகத்திலிருந்து பெறப்பட்ட முடிவுகள் மீதான அடிப்படையில், "வர்த்தக உள்நாட்டு மீன்பிடித்தலை விருத்தி செய்தல்" மீதான கருத்திட்டத்தினைத் தொடர்வதற்கு NSFஇலிருந்து மானியமொன்று பெறப்படுகின்றது.

கருத்திட்டம் இணைந்து 'நாரா'வினாலும் (PHTD மற்றும் IARAD), NAQDAஇனாலும் அமுல்படுத்தப்படுகின்றது. மீன்பிடித்தொழில் சங்கம் இல்லாததினால், சங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கருத்திட்டத்தின் முதலாவது பாகம் பிரதானமாக நீரியல் விருத்தியிலும், அதைத் தொடர்ந்து அறுவடைக்குப்

பிந்திய பதப்படுத்தலும், பெறுமதி சேர்ப்பும் விளங்குகின்றன. கருத்திட்டத்தின் ஆரம்ப வேலைக்கு செப்ரெம்பரில் நிதிப்படுத்தல் முகவராண்மையான NSF அண்ணளவாக ரூபா 250,000/= ஐ வழங்கியுள்ளது.

கருத்திட்டத்தின் மேலதிகமான பாகமாக, நன்னீர் மீனில் பாரமான உலோகங்களைப் பகுப்பாய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவசியமான சாதனமான அணு உறிஞ்சல் நிறமாலைஒளிப்படமானி ICEIDA உதவியின் கீழ் பெறப்பட்டது. சாதனத்தைப் பாரப்படுத்தல் தொடருகின்றது.

கருத்திட்ட தலைவரான செல்வி ஐ.காரியவாசம் லீவில் இருப்பதனால், செல்வி எஸ்.ஆரியரத்னவுடன் இணைந்து வேலையை மேற்கொள்வதற்காக அப்பதவி நிலைக்கு திருமதி பி.எஸ்.ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

| முன்னேற்றம் | பௌதீக% | நிதிசார்% |
|---|---|---|
| | 90 | 69 |

## பகுதி 7. ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலும், மனித வள அபிவிருத்தியும்

### கருத்திட்டம் 7.3. நிபுணத்துவ ஆய்வுகூடங்களை நிருவகரிதிப்படுத்தல்

### கூறு 7.3.1 PHTD ஆய்வுகூடங்களின் ISO 17025 சான்றளிப்பும், கைத்தொழிலுக்கான சோதனைச் சேவைகளும்

உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு மீன்களுக்கும், கடல் உணவுகளுக்கும் சான்றளிப்புச் சேவைகளை வழங்குவதற்காக திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்குரிய மீன், மீன்பிடித்தல் உற்பத்திகள், மற்றும் கைத்தொழிலிருந்து நீர் ஆகியவற்றிலிருந்து 700க்கு மேற்பட்ட மாதிரிகளைத் திட்டம் சோதித்துள்ளதுடன், தர சான்றுப்பத்திரங்களையும் வழங்கியுள்ளது. 2009 வரை ISO 17025 தத்துவமளிப்பினை தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் புதுப்பித்துள்ளது. கிட்டிய அண்மையில் ISO 17025: 2005 வாசகம் தரக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக தரமுயர்த்தப்படும். மேலும், மீன்பிடித்தொழில் திணைக்களத்தின் வருடாந்தக் கணக்காய்வுக்கு ஆய்வுகூடம் தற்போது தயார்படுத்தப்படுகின்றது. ICEIDA மற்றும் FAO உதவியின் கீழ் குளிராக்கல் அடைகாப்பான் மற்றும் கோலி.'.போம் நீர் தொட்டி ஆகியன உட்பட ஒரு தொகை சாதனங்கள் பெறப்பட்டன. இந்தப் புதுப்பித்தல்களுக்கும், கொள்வனவுக்கும் பெரிதுமே சகல நிதிசார் ஒதுக்கீடும் பயன்படுத்தப்படும்.

சேவை மேலும் நீடிக்கப்பட்டதுடன், தோற்றுவிக்கப்பட்ட வருமானம் முன்னைய ஆண்டை விட 22% உயர்வானதாகும். 2006இல் மொத்த வருமானம் ரூபா 2,695,900/- ஆகும்.

இக்காலத்தின் போது பின்வருவனவே முனைவுபடுத்தப்பட்டுள்ளன:

- பகுப்பாயப்பட்ட சாராமாறிகளின் எண்ணிக்கை : 2,658
- மொத்த சம்பாத்தியம் : ரூபா 3,297,400/-
- அறிக்கைகளின் எண்ணிக்கை : 317

| முன்னேற்றம் | பௌதீக% | நிதிசார்% |
|---|---|---|
| | 92 | 97 |

### சாதனங்களின் கொள்வனவு

2007ஆம் ஆண்டின் போது ஒரு தொகை சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மீனில் பாரமான உலோகங்களின் பகுப்பாய்வுக்கான அணு உறிஞ்சல் திருகியவொளிமானி ரூபா 6 மில்லியன் ஆகுசெலவில் ICEIDA உதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. 2007 பெப்ரவரி 15 அன்று ICEIDA நாட்டுப் பணிப்பாளர், INFOFISH பணிப்பாளர், 'நாரா' தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் உட்பட மேன்மைதங்கிய விருந்தினர்களினால் புதுப்பிக்கப்பட்ட தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டது.

## 3. ஆராய்ச்சி அறிக்கைகள்

### ஆராய்ச்சி வெளியீடுகள் / கட்டுரைகள் / சமர்ப்பணங்கள்

i. ஜி.ஜே.கனேகமஆரச்சி, ஆர்.மதன் மற்றும் என்.வீரரத்ன, (2007), பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் இறக்கப்பட்ட கடற்கரையினீங்குகின்ற மீன்பிடி படகுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உப்பிடப்பட்ட Katsuwonus pelamisஇன் (ஸ்கிப்ஜக் தூனா) தரத்தின் ஆய்வு, நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான 'நாரா'வின் 25ஆவது ஆண்டு நிறைவு விஞ்ஞான மகாநாட்டின் கருத்துக் கோர்வை, பக்கம் 15, 'நாரா', கொழும்பு 15, இலங்கை.

ii. பி.எஸ்.ஜயசிங்க, டபிள்யு.பஹலேவத்ஆரச்சி, எஸ்.சந்தானம், எ.ஜி.சி.கிரியெல்ல, (2007), "உணவு பதப்படுத்தல் கைத்தொழிலில் பயன்படுத்துவதற்கு இலங்கையில் கிட்டுகின்ற அகரோபைட்ஸின் தரத்தின் மதிப்பாய்வு", இந்தியா, கொச்சின், 8ஆவது ஆசிய மீன்பிடித்தொழில் அரங்கின் கருத்துக்கோர்வை, 2007, நொவம்பர் 21 – 24

iii. எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., கிரப்ஹாம், எ.ஜே. மற்றும் ரெயிலர் எஸ்., (2007), திண்ம, கட்ட நுண்பிரித்தெடுப்பு மற்றும் GC-MSஇனாலும், மீனின் தர சாராமாறிகளுக்கான அவற்றின் உறவினாலும் களஞ்சியத்தின் போது மஞ்சள் செட்டை தூனாவின் (Thunnus albacares) ஆவிப்பறப்புக்களின் குணவியல்பு, International Journal of Food Science and Technology, 42 (10), 1139–1147.

iv. எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., காரியவாசம், எம்.ஐ.ஜி.யு. மற்றும் சுரேஷ்குமார் என்., (2007), சுனாமியின் பின்னர் ஹம்பாந்தோட்டை, கரகன்லெவாயவின் மேற்பரப்பு நீரின் தரத்தின் ஆய்வு நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான 'நாரா'வின் 25ஆவது ஆண்டு நிறைவு விஞ்ஞான மகாநாட்டின் கருத்துக்கோர்வை, பெப்ரவரி 15-16.

v. எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., காரியவாசம், எம்.ஐ.ஜி.யு. மற்றும் ராஜசூரிய, எ. (2007). இலங்கையின் கிழக்குக் கரையோரத்திலிருந்து கடலக பஞ்சுகளின் பக்டீரியா எதிர் செயற்பாடு மீதான பூர்வாங்க ஆய்வு, நிலைத்திருத்தல் அபிவிருத்தியை நோக்கிய அயனமண்டல நீரியல் ஆராய்ச்சி மீதான 'நாரா'வின் 25ஆவது ஆண்டு நிறைவு விஞ்ஞான மகாநாட்டின் கருத்துக்கோர்வை, பெப்ரவரி 15-16.

vi. நந்தபிரகாஷ், எஸ்.ஐ., வன்னிநாயக்க, டபிள்யு.எம்.ரி.பீ. மற்றும் எதிரிசிங்க, இ.எம்.ஆர்.கே.பீ., (2007), தூய்மை கேடகற்றல் மூலம் Meretrix castaஇன் தடையிலிருந்து *Escherichia coli (E-coli)* மற்றும் சல்மொனல்லா இனங்கள் ஆகியவற்றை ஒழித்தல், மீன்பிடித்தொழில், நீரியல் வளங்களுக்கான இலங்கைச் சங்கத்தின் 13ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வின் கருத்துக்கோர்வை, கொழும்பு, இலங்கை, 2007 ஜூன் 28.

**தயாரிக்கப்பட்ட சிற்றேடுகள், அறிக்கைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள்**

i. இலங்கையில் கடற்கரையினீங்குகின்ற மீன்பிடிப் படகிலிருந்து இறக்கப்பட்ட *Katsuwonus'pelamis* (ஸ்கிப்ஜக்) அறுவடைக்குப் பிந்திய தர இழப்பு
ii. சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் OFBஇன் ஸ்கிப்ஜக் தூனாவின் முன்-பதப்படுத்தல்: இலக்குக் குழு: மீனவர்கள் மற்றும் பங்காளர்கள்
iii. சூரியசக்தி உலர்த்தியொன்றைப் பயன்படுத்தி மீனை உலரவைத்தல் (தயாரிப்பில்)
iv. சுய-தொழில் வாய்ப்புக்களுக்கு உணவு உற்பத்திகள்
v. சுய-தொழில் வாய்ப்புகளாக புளித்தீயலின் பதப்படுத்தல்
vi. இலங்கையில் இறால் பண்பாட்டு வளர்ப்பும், பதப்படுத்தலும்
vii. மீன் உற்பத்திகளைப் பதப்படுத்தல்

## 4. நடத்தப்பட்ட பயிற்சி/ விழிப்பியல் திட்டங்கள்

i. புகையூட்டப்பட்ட மீன், வாலைப் பொதிகளில் சிறிய மீன், மீன் பசை, அகர் ஷீட், அகர் டெஸேர்ட், மற்றும் அகர் தூள், மீன் தசை உருண்டைகள், மீன் தூள், உலரவைக்கப்பட்டதும், ஆவியாக்கப்பட்டதுமான இறால்கள், சிப்பி சோஸ், சிப்பி சிற்றுண்டி (சிறந்த இழையத்திற்கான திருந்திய சமையல் பாகம்), உலர்ந்த 'சூப்' கலவை, திலபியா புளித்தீயல் ஆகியன போன்ற மீன்பிடி உற்பத்திகளைப் பதப்படுத்துவது மீது IDBஇன் 30 உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

ii. இந்த 4 நாள் திட்டத்தில் மாத்தறையிலிருந்து சுமார் 35 மீனவப் பெண்கள் 2007 நொவம்பர் 20 – 23 வரை பங்கெடுத்தார்கள் - IDBஉடன் இணைத் திட்டம்
மாசிக் கருவாடு, உப்பிடப்பட்ட மீன், புகையூட்டப்பட்ட மீன், ஜாடி மற்றும் புளித்தீயல், மீன் உணவு, மீன் சைலேஜ் மற்றும் அகர் டெஸேர்ட் ஆகியனவற்றை மீன் உற்பத்திகள் திட்டம் உள்ளடக்குகின்றது.

iii. அறுவடைக்குப் பிந்திய கையாள்தலிலும், உற்பத்தி முன்னேற்றத்திலும் பாடசாலை ஆசிரியர்களின் பயிற்சி: 80 ஆசிரியர்கள் பங்குபற்றியதுடன், மாசிக் கருவாடு, உப்பிடப்பட்ட மீன், புகையூட்டப்பட்ட மீன், ஜாடி, புளித்தீயல், மீன் உணவு, மீன் சைலேஜ், அகர் டெஸேர்ட் ஆகியன உட்பட போஷாக்கு, கையாள்தல், தரம், பாதுகாப்பு, பதப்படுத்தல் ஆகியன மீது கோட்பாட்டியலிலானதும், செயற்பாட்டிலானதுமான அறிவை ஈட்டிக்கொண்டார்கள்.

iv. மீன் பதப்படுத்தல் மீது NIFNE உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி
இந்த 4 நாள் திட்டத்திற்கு 'நாரா'வில் 2007 ஒக்ரோபரில் NIFNE பயிற்சிக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 25 உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தார்கள். மாசிக்கருவாடு, உப்பிடப்பட்ட மீன், புகையூட்டப்பட்ட மீன், ஜாடி,

புளித்தீயல், மீன் உணவு, மீன் சைலேஜ், சோஸ், அகர் டெஸேர்ட் ஆகியன உட்பட 12 எண்ணிக்கைகளைக் கொண்ட பதப்படுத்தல் மீது கோட்பாட்டியலில்ரீதியாகவும், செயற்பாட்டுரீதியாகவும் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

v. ஜாதிக சவிய – கமனகும அபிவிருத்தித் திட்டம்

MOFARஉடன் இணைத் திட்டமான இதில் நீர்கொழும்பில் மாசிக்கருவாடு, உப்பிட்டு உலரவைக்கப்பட்ட மீன் ஆகியவற்றின் தயாரிப்பில் 15 மீனவப் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

vi. மீன் கையாள்தலிலும், பதப்படுத்தலிலும் பயிற்சி

தென் மாகாணத்தின் கைத்தொழில் சேவைகள் பணியகத்துடனான இணைத் திட்டம். மீன்களைக் கையாள்தலிலும், மீன்களைப் பதப்படுத்துவதிலும், அறிவை ஈட்டுவதற்கான பயிற்சித் திட்டமொன்றில் தங்காலையிலிருந்து 20 மீனவப் பெண்கள் தங்காலை, கடலக பல்கலைக்கழகத்தில் 2007 செப்ரெம்பர் 20 அன்று பங்கெடுத்தார்கள்.

vii. புளித்தீயலின் உற்பத்தி மீதான திட்டம்

சுவீடிஷ் கூட்டுறவு நிலையத்துடன் (ஹம்பாந்தோட்டை) இணைத் திட்டம்

மாத்தறை, குடாவெலவில் 2007 ஜூலை 24 அன்று புளித்தீயலின் உற்பத்தி மீதான பயிற்சியில் பகுதியில் உள்ள 25 மீனவப் பெண்கள் பங்கெடுத்தனர்.

viii. மீன் உற்பத்திகளினதும், கோழித் தீவனங்களினதும் மீதான பயிற்சித் திட்டம்

'நாரா'வில் 2007 நொவம்பர் 29 – 30 வரை பத்தங்கமவின் மீட் மெக்ஸ் ∴பாம் (பிறைவேற்) லிமிற்றெற்றின் 3 உத்தியோகத்தர்களுக்கு திட்டம் நடத்தப்பட்டது.

மீன் உணவு, மீன் சைலேஜ், மற்றும் மீன் தசை உருண்டைகள் ஆகியவற்றின் உற்பத்தி மீது பயிற்றுவிக்கப்பட்டனர்.

ix பல்நாள் கப்பல்களில் மீன்களைக் கையாள்தல் மீதான விழிப்பியல் திட்டம்

நனாசலவினாலும், ICTAஇனாலும் (தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை) 2007 டிசம்பர் 23 அன்று குடாவெலவில் விழிப்பியல் திட்டம். 40 – 50 மீனவர்கள் பங்கெடுத்தார்கள்.

## 5. பங்கெடுத்தல் பயிற்சிகள்/செயலமர்வுகள்

1. 2006 முதல் 2007 மார்ச் 09 வரை ஐஸ்லாந்தில் UNU-FTPஇனால் நடத்தப்பட்ட மீன் கையாள்தலிலும், பதப்படுத்தலிலும் தர முகாமைத்துவம் மீது நிபுணத்துவம் பெற்ற சர்வதேச பட்டத்திற்குப் பிந்திய பயிற்சித் திட்டத்தில் பங்கெடுக்கப்பட்டது. இத்திட்டத்தில் திருமதி பி.எஸ்.ஜயசிங்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) பங்கெடுத்தார்.

2. இந்தியா – கொச்சினில் இந்திய 8ஆவது ஆசிய மீன்பிடித்தொழில் அரங்கு மீதான சர்வதேச மகாநாட்டில் பங்கெடுக்கப்பட்டது. 2007 நொவம்பர் 19–23, கருத்தரங்கில் திருமதி பி.எஸ்.ஜயசிங்க (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) பங்கெடுத்தார்.

3. 'நாரா'வினதும், NAQDAஇனதும் தொழில்நுட்ப மற்றும் பயிற்சி ஆற்றலளவுகளின் மேம்படுத்தல் மற்றும் 4 வருட செயல்திட்டத்தை ஆரம்பித்தல்: PCR மற்றும் இரசாயனப் பகுப்பாய்வுத் தொழில்நுட்பங்களின் பிரயோகம் மீதான பயிற்சிச் செயலமர்வு, ஸ்பெயின் தேசிய மீன், ஓட்டுமீன் தகரத்திலடைத்தல் தயாரிப்பாளர்கள் சங்கம் (ANFACO), விகோ, ஸ்பெயின், 2007 ஏப்ரல் 23 – மே 07.

   கலாநிதி ஆர்.எதிரிசிங்க (H/PHTD), செல்வி ஜி.ஜே.கனேகமஆரச்சி (ஆராய்ச்சி உத்தியோகத்தர்), செல்வி ஐ.காரியவாசம் (ஆராய்ச்சி உத்தியோகத்தர்), திரு.பீ.கே.ஜினதாச (ஆராய்ச்சி உத்தியோகத்தர்), செல்வி கே.ஹெட்டிஆரச்சி (ஆராய்சசி உதவியாளர்) மற்றும் செல்வி எப்.நிஸ்ரீனா (ஆராய்ச்சி உதவியாளர்) ஆகியோர் திட்டத்தில் பங்கெடுத்தனர்.

4. நுண்ணுயிரியல் மற்றும் PCR நடைமுறைகள் மீதான ஆய்வுகூட நடைமுறைகள் மீதான பயிற்சி, MATIS ஆய்வுகூடம், ஐஸ்லாந்து, "இலங்கை மீன்பிடித்தொழில் துறையில் பயன்படுத்தப்பட்ட நீரினதும், ஐஸினதும் தரம்" மீதான ICEIDA நிதிப்படுத்தலிலான கருத்திட்டம், 2007 நொவம்பர் 05–16.

   செல்வி கே. ஹெட்டிஆரச்சி (ஆராய்ச்சி உதவியாளர்) மற்றும் செல்வி ரி.தஹநாயக்க (ஆராய்ச்சி உதவியாளர்) ஆகியோர் திட்டத்தில் பங்கெடுத்தனர்.

# சமூக-பொருளாதார, சந்தை ஆராய்ச்சிப் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** கலாநிதி எஸ்.சி.ஜயமான்ன (பதில்)

மீனவர்களினதும், அவர்களில் தங்கியிருப்பவர்களினதும் சேமநலன், வேறுபட்ட மீன் பங்கீட்டு முறைகளின் பகுப்பாய்வு, பாவனையாளர்கள் மீது அதன் தாக்கங்கள் ஆகியன உட்பட மீன்பிடிக் கைத்தொழிலில் சமூக, பொருளாதார மற்றும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளை பிரிவின் பிரதான செயற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

## 1. 2007ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்

i. 2006 மீன்பிடித்தொழில் ஆண்டு நூல்
ii. நடைமுறையிலுள்ள சந்தைத் தடைகள் மீது ஆய்வு செய்தலும், முறைமையைத் திருத்தியமைப்பதற்கு மூலோபாயங்களை விருத்திசெய்தலும் (கருத்திட்டம் 2.3.2)

## 2. செயற்பாடுகள்

மேற்படி இரு கருத்திட்டங்களின் கீழ், பிரிவின் ஆராய்ச்சிக் குழாமினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- தரவுச் சேகரிப்பு
- தரவுப் பகுப்பாய்வு
- அறிக்கை எழுதுதல்/வருடாந்த வெளியீடுகள்

| செயல்திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு (ரூபா) | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் |
|---|---|---|---|---|
| சமூக-பொருளாதார, மற்றும் சந்தைப்படுத்தல் | 1. 2006 - இலங்கை மீன்பிடித் தொழில் ஆண்டு நூல் (கருத்திட்டம் 6.1) | 500,000.00 | எஸ்.சி.ஜயமான்ன | ஒரு வருடம் 01.01.07 முதல் 31.12. 07 |
| | 2. நடைமுறையிலுள்ள சந்தைத் தடைகள் மீது ஆய்வு செய்தலும், முறைமையைத் திருத்தியமைப்பதற்கு மூலோபாயங்களை விருத்திசெய்தலும் (கருத்திட்டம் 2.3.2) | 400,000.00 | கே.எச்.எம்.எல்.அமரலால் | ஒரு வருடம் 01.01.07 முதல் 31.12. 07 |

## 3. முடிவுகள்:

### கருத்திட்டம் 1 (6.1)

2006 மீன்பிடித்தொழில் ஆண்டு நூலின் 400 பிரதிகளைத் தயாரித்தலும், வெளியிடுதலும் முடிக்கப்பட்டுள்ளன.

### கருத்திட்டம் 2 (2.3.2)

மீன்பிடித்தொழில் முறைமையின் சக்தியை மேம்படுத்துமுகமாக, நன்னீர் மீன்பிடித்தலின் பங்கீட்டுப் பொறிநுட்பத்தை யாரேனும் ஒருவர் மீள் ஒழுங்குபடுத்த விரும்பினால், தற்போது நிலவுகின்ற சந்தைப்படுத்தல் முறைமைகள், பலங்கள் மற்றும் பலவீனங்கள், இடைத்தரகர் செயற்பாடுகளைச் சம்பந்தப்படுத்தல் குணவியல்புகள், கைத்தொழிலின் சந்தைப்படுத்தல் ஆகுசெலவு ஓரங்கள் மற்றும் தடைகள் ஆகியன பற்றி ஆய்வது அவசியமானதாகும். எனவே, மேற்படி விடயத்தைப் பரிசீலிப்பதற்கும், கைத்தொழில் தொடர்பில் ஏதாவது மட்டுப்படுத்தல்களைத் தணிப்பதற்கான அவசியமிருந்தால் ஆலோசனைகளைச் செய்வதற்கும் இந்த ஆய்வு திட்டமிடப்பட்டுள்ளது. கேள்விக்கொத்து அளவீட்டின் அமைப்பாக ஆய்வு விளங்கியதுடன், இடைத்தரகர்களின் குணவியல்புகள், செயற்பாடுகள், ஆகுசெலவு, ஓரங்கள் மற்றும் வியாபாரத் தடைகள் ஆகியவற்றின் அடிப்படையின் மீது அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நன்னீர் மீன்பிடித்தொழிலின் நடைமுறையிலான பங்கீட்டு முறைமைகளில் சம்பந்தப்பட்டுள்ள சகல இடைத்தரகர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன.

மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் ஆதிக்கம் செலுத்துவதாகவும், அவர்களை பைசிக்கிள் வியாபாரிகள் தொடர்வதாகவும், அவர்கள் கூட்டுச் சேர ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் நன்னீர் மீன்

சந்தைப்படுத்தலின் 81 சதவீதத்திற்கும், 97 சதவீதத்திற்கும் பொறுப்பாக உள்ளதாகவும் அளவீட்டு முடிவுகள் வெளிப்படுத்தின. ஒன்றுசேர்ப்பவர்களும், வேறு வகைகளிலான இடைத்தரகர்களும் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகும். இக் குறிப்பிட்ட நீர்த்தேக்கங்களில் போதியளவு உற்பத்தித் தொகை இல்லாததன் காரணமாக பெருமளவு நீர்த்தேக்கங்களில் அவர்களது செயற்பாடுகள் இல்லை என்பதே இதற்கான காரணமாகும். அளவீட்டு முடிவுகளின் பிரகாரம், சகல இடைத்தரகர்களும் மீன் சந்தைப்படுத்தலில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், இவர்களில் மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் ஹம்பாந்தோட்டை முறைமைக்குள் சார்புரீதியில் புதிதாக வந்திருக்கிறார்கள். அதேவேளை அனுராதபுரத்தில் ஒன்றுசேர்ப்பவர்கள் விளங்குகிறார்கள்.

மேலும், ஒரு கிலோ கிராம் திலபியா, கொரளி மற்றும் வேறு வகைகள் ஆகியவற்றின் மொத்த சராசரி விற்பனை விலை முறையே ரூபா 111/- 120/-, ரூபா 101/- - 110/-, ரூபா 91/- - 100/- என வித்தியாசப்பட்டதாக அளவீட்டு முடிவுகள் வெளிப்படுத்தின. ஆனால், இடைத்தரகர்களின் வியாபாரப் போக்கினதும், மொத்த சந்தைப்படுத்தல் ஆகுசெலவினதும் காரணமாக தத்ரூபமான மாறலைக் காட்டியது. ஒரு கிலோ கிராம் கொண்ட திலபியாவுக்கு ஆகக்கூடுதலான விற்பனை விலை வீச்செல்லை ஏனைய சில்லறை விற்பனையாளரினால் ரூபா 131/- - 140/- சுமத்தப்பட்டதுடன், அவர்கள் இயக்கிய சந்தைகளில் போட்டியின்மையே உயர்வான இலாப ஓரத்திற்கான காரணியாகும். இதேபோல, கொரளிக்கு, முழுமையான சராசரி விலை ஒரு கிலோ கிராமுக்கு ரூபா 101/- - 110/- ஆகும் என்பதுடன், இது இடைத்தரர்கள் மத்தியில் வேறுபடும். இது ஒன்று சேர்ப்பவர்களினால் மிகக் குறைந்தளவே சுமத்தப்படுகின்றது. அவர்களது வியாபார முறையே இதற்குக் காரணமாகும். சில்லறைச் சந்தைகளில் சுதேசிய இனங்களை விட ஊடுருவலிலான இனங்களின் விற்பனை விலை எப்பொழுதுமே உயர்வானதாகும். பாவனையாளரின் உயர்வான விருப்பு மட்டமும், ஆரம்பநிலை மட்டச் சந்தையின் உயர்வான கொள்வனவு விலைகளுமே இதற்கான காரணமாகும்.

அளவீட்டு முடிவுகளின் பிரகாரம், நன்னீர் மீன் சந்தைப்படுத்தல் முறைமையில் இடைத்தரகர்களின் சராசரி செயற்பாட்டுச் செலவினம் நாளொன்றுக்கு ரூபா 81/- - 140/- என்பதுடன், இது வியாபாரக் காலம், பிரயாணத் தூரம், செயற்பாட்டு நேரம், மற்றும் பிரயாண முறை ஆகியவற்றின் காரணமாக இடைத்தரகர்களின் வகைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றது. ஒன்று சேர்ப்பவர்களுக்கு ரூபா 101/- - 180/-க்கு செலவு ஏற்படுவதுடன், இதில் எரிபொருள், ஐஸ் ஆகியவற்றுக்கு ஏற்படும் செலவு உள்ளடங்கியுள்ளது. உற்பத்தி இடங்களில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ள சில்லறை வியாபாரிகள் இருக்குமிடங்களுக்கு மீன்களைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. ஏனைய சந்தை சில்லறை விற்பனையாளர்களும், பைசிக்கிள் வியாபாரிகளும் போன்ற வேறு வகைகளைக் கொண்ட சில்லறை விற்பனையாளர்கள் நாளொன்றுக்கு செயற்படுவதில் நேர மட்டுப்படுத்தலினதும், எரிபொருள் ஆகுசெலவு இன்மையினதும் காரணமாக ரூபா 61/- - 100/- செலவழிக்கிறார்கள். வியாபாரிகள் பிரதானமாக எரிபொருள் ஆகுசெலவின் காரணமாக ரூபா 141/- - 160/- என்ற ஆகக்கூடுதலான தொகையை மோட்டார் சைக்கிள் வியாபாரிகள் செலவழிக்கிறார்கள்.

அளவீட்டு முடிவுகளின் பிரகாரம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு கிலோ கிராம் நன்னீர் மீனுக்கான மொத்த சந்தைப்படுத்தல் ஆகுசெலவு ரூபா 19/- - 24/- ஆகும். இதில் ஒன்றுசேர்ப்பவரின் ஆகுசெலவு ரூபா 7/- - 10/-, சில்லறை வியாபாரியின் ஆகுசெலவு ரூபா 12/- - 14/- ஆகும். ஆனால், அனுராதபுரம் மாவட்டத்தில் ஒரு கிலோ கிராம் நன்னீர் மீனுக்கு மொத்த சந்தைப்படுத்தல் ஆகுசெலவு ரூபா 16/- - 18/- ஆகும். இதில் ஒன்று சேர்ப்பவரின் ஆகுசெலவு ரூபா 6/- - 7/-, சில்லறை வியாபாரியின் ஆகுசெலவு ரூபா 10/- - 11/- ஆகும். சந்தைப்படுத்தல் ஆகுசெலவில், சில்லறை வியாபாரியின் ஆகுசெலவு ஒன்று சேர்ப்பவரின் ஆகுசெலவை விட உயர்வானதாகும். நாளொன்றுக்கு நீண்ட வியாபார நேரத்தின் காரணமாக உயர்வான குளிர்பானங்களின் செலவினமே இதற்கான காரணமாகும்.

## 4. வெளியீடுகள்

i) 2006 - இலங்கை மீன்பிடித்தொழில் ஆண்டு நூல்

ii) **அறிக்கைகள்**

இலங்கையில் அனுராதபுரம் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நன்னீர் மீன் சந்தைப்படுத்தல் முறைமையினதும், அதன் பெறுமதி சங்கிலிப் பகுப்பாய்வினதும் மீதான கருத்திட்ட அறிக்கை

iii) **சாராம்ச சமர்ப்பணங்கள்**

(அ) இலங்கை மீன்பிடித்தல் துறைமுகங்களில் மீன் சந்தைப்படுத்தல் முறைமையை மேம்படுத்துவதற்கான சாத்தியவளம் (2007இல் SLAFARஇன் 12ஆவது வருடாந்த அமர்வில் ஆராய்ச்சி முடிவுகள் முன்வைக்கப்பட்டன).

(ஆ) இலங்கையின் தென் கரையோரத்தில் நடுத்தர அளவிலான தூனா மீன்பிடித்தொழிலில் பயன்படுத்தப் படும் தொழில்நுட்பரீதியில் திருந்திய வளைய –வலையின் பொருளாதார அம்சம் (SLAFAR 13ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுகள், 2007)

(இ) இலங்கையில் கொழும்பு மாநகர சபைச் சந்தைகளில் மீன் சில்லறை விற்பனையும், விலைப் பரம்பலும் (SLAFAR 13ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுகள், 2007)

iv) **செய்திப்பத்திரிகைக் கட்டுரை**

மீனின் அதிகரிக்கின்ற விலையின் உண்மையான கதை (சிங்களம்), தினமின பத்திரிகைக் கட்டுரை - 2007.

## 5. பயிற்சித் திட்டங்கள்

இல்லை

## 6. மட்டுப்படுத்தல்கள்

சில பதிலிறுப்பாளர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் தரவுகளைச் சேகரிப்பதற்கான கஷ்டங்கள்

## 7. வேறு முன்னேற்றங்கள்

ஆண்டின் போது ஓர் ஆராய்ச்சி உதவியாளர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் வகுதிக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

# சேவை, தொழிற்பாடுகள் பிரிவு

**பிரிவுத் தலைவர்:** பிரதம எந்திரவியலாளர் டி.எ.கருணாசேன

ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு, தொழிற்பாடு, மற்றும் முன்னேற்றம் ஆகியவையே சேவை, தொழிற்பாட்டுப் பிரிவின் பிரதான பணியாகும்.

**பணியாளர்:**

2007இல் நான்கு (4) மேற்பார்வை உத்தியோகத்தர்களும், பதினொரு (11) திறன் கைவினைஞர்களும், பதினொரு (11) ஓரளவு திறன் கைவினைஞர்களும், இருபத்தியிரண்டு (22) சாரதிகளும் பிரிவில் இருந்ததுடன், எந்திரவியல் சேவைப் பிரிவின் குறிக்கோளுக்கு பங்களித்தனர்.

செயற்பாட்டுக்கும், பராமரிப்புக்கும் இரு முறைகள் பிரயோகிக்கப்பட்டதுடன், நாளாந்தப் பராமரிப்பினையும், ஆதரவளிப்புப் பணியினையும் உட்கட்டமைப்பு முன்னேற்றப் பணி கொண்டுள்ளது. பிரிவின் வேலைப் படைகளின் கிட்டுகின்ற திறமையுடனும், சில மட்டுப்படுத்தப்பட்ட மூலதனத்தன்மையிலான பணியுடனும் பிரிவின் பணியாளரினால் வேலை பொறுப்பேற்கப்பட்டது. பாரிய மூலதனத்தன்மையிலான வேலை போட்டிக்குரிய கேள்விகளை அழைப்பதன் ஊடாக தகுதிவாய்ந்த தாபனங்களுக்கு வழங்கப்படுகின்றது, அல்லது இத்தகைய குறித்தொதுக்கல்களுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் ஊடாக அமுல்படுத்தப்படுகின்றது.

இளைப்பாறுதல், வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் அத்துடன் பிரிவின் சில வெற்றிடங்கள் நிரப்பப்படாமை ஆகியவற்றின் காரணமாக தகுதிவாய்ந்த பணியாளர்கள் தொடர்ந்துமே குறைவடைந்துள்ளமையினால், சில உள்ளே ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குழப்பமடைந்ததுடன், நேரத்திற்கு முடிக்கப்படவும் முடியவில்லை.

## வெளி மூலத்திலான வேலை (மூலதன வரவு-செலவுத்திட்டத்திலிருந்து)

| செயல்திட்டம் | கருத்திட்டம் | ஒதுக்கீடு | பொறுப்பான உத்தியோகத்தர் | காலம் |
|---|---|---|---|---|
| கட்டிடங்களினதும், வாகனங்களினதும் புனரமைப்பு | | 8.4 | தலைவர், சே.தொ. பிரிவு | 2007 ஜன. – டிச. |

முன்னுரிமை அடிப்படையின் மீதான அட்டவணைப்படுத்தப்பட்ட வேலை (ரூபா மில்லியனில் ஆகுசெலவு)

| | | |
|---|---|---|
| 1.1 | தலைமையலுவலக பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு | 1.650 |
| 1.2 | 'நாரா' தலைமையலுவலகத்தின் உள்ளக வீதிகளின் புனரமைப்பு | 1.850 |
| 1.3 | சுனாமியின் போது சேதமடைந்த எல்லைச் சுவர்களின் புனரமைப்பு | 2.390* |
| 1.4 | 'நாரா'வில் கடல்பக்க காணி எல்லைக்கான வேலியிடலுக்கான பொருளின் கொள்வனவு | 0.800* |
| 1.5 | IARD அலுவலக கட்டிடத்தின் புனரமைப்பு | 0.680 |
| 1.6 | வாகனம் 62-2177 என்ஜினின் புனரமைப்பு | 0.340 |
| 1.7 | வாகனம் 62-2177 உறுப்பின் புனரமைப்பு தொங்கல், துணை முறைமை | 0.250 |
| 1.8 | 32-2951 வாகன உறுப்பின் புனரமைப்பு | 0.225 |
| 1.9 | வாகனம் 20-3224இன் புனரமைப்பு, கியர் பெட்டியுடன் R/C என்ஜினின் பதிலீடு | 0.065 |
| 1.10 | வாகனம் 61-0012இன் புனரமைப்பு, கியர் பெட்டியுடன் R/C என்ஜினின் பதிலீடு | 0.020 |
| 1.11 | வாகனம் 32-7196இன் புனரமைப்பு, கியர் பெட்டியுடன் R/C என்ஜினின் பதிலீடு | 0.030 |
| 1.12 | வாகனம் 32-3417இன் புனரமைப்பு, மின்செலுத்தல் முறைமையின் பதிலீடு | 0.085 |
| | முன்னீட்சிப்படுத்தப்பட்ட மொத்த ஆகுசெலவு | **8.385** |

* அடையாளம் காணப்பட்டு, 2007இன் 3ஆவது காலாண்டுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**2.0 சாதனங்களின் புனரமைப்பு** **1.5 மில்லியன்**

தலைவர் S&O / T.O/WA/P.O

| | | 2007 ஜன. – டிச. |
|---|---|---|
| 2.1 | 17 ½ தொன் காற்றுச்சீராக்கி பிரதான வளி கானின் புனரமைப்பு | 0.45 |
| 2.2 | 18 பிளவு வகையிலான காற்றுச்சீராக்கிகளின் புனரமைப்பு | 0.35 |
| 2.3 | PABXக்கான மின்னல் தடுத்தலை நிறுவுதல் | 0.08 |
| 2.4 | IARD & PHT பிரிவுகளின் மின்சார முறைமையின் புனரமைப்பு | 0.90 |
| | **முன்னீட்சிப்படுத்தப்பட்ட மொத்த ஆகுசெலவு** | **1.78** |

2.5. வாடகையிலான வாகனத்திற்கான குத்தகைக் கொடுப்பனவு 1.90 மில்லியன்
தலைவர் S &O/ TO. /P.O 2007
ஜன. – டிச.

**3. செயற்றிறன் - மூலதன வரவு-செலவுத் திட்டத்திலிருந்து**
(கருத்திட்டம் 1: கட்டிடங்களினதும், வாகனங்களினதும் புனரமைப்பு)

3.1.1 பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு:
பிரதான கட்டிடத்தின் ஒரு பகுதியின் கூரையும், வெளிச்சுவர்களின் வர்ணம் பூசுதலும் செய்யப்பட்டதுடன் வேலை முடிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 100% (மொத்த ஆகுசெலவு ரூபா 2.25 மில்லியன்).

குறிப்பு: 2006 டிசம்பரில் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2007 மட்டும் முன்னேற்றமடைந்து முடிக்கப்பட்டது. 2006இல் 30% கொண்ட வேலை முடிக்கப்பட்டுள்ளதுடன், 2007இல் மூலதனம் ரூபா 1.65 மில்லியனாகும்.

3.1.2 'நாரா' தலைமையலுவலகத்தின் உள்ளக வீதிகளின் புனரமைப்பு
கடந்த 15 வருடங்களாக உள்ளக வீதி கட்டமைப்பு பழுதுபார்க்கப்படவில்லை என்பதுடன், 2007 பெப்ரவரி 3ஆவது வாரத்தின் போது நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்ட 25ஆவது நிறைவு விழாவுக்கு முன்னர் முடிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் பணி திட்டமிடப்பட்டது. 2007 பெப்ரவரி நடுப்பகுதியில் பணி முடிக்கப்பட்டதுடன், 2007இல் மூலதனம் ரூபா 1.85 மில்லியனாகும்.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 100% (ரூபா 1.85 மில்லியன்)

3.1.3 'நாரா' தலைமையலுவலக காணி எல்லைச் சுவர்களின் புனரமைப்பு
2004 டிசம்பரில் சுனாமியின் போது 105 மீற்றர்கள் நீளமான வெளிச்சுவரின் பகுதியொன்று சேதமடைந்ததுடன், அரச எந்திரவியல் கூட்டுத்தாபனத்துடன் அதை புனரமைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. 2007 டிசம்பர் முதல் பணி பௌதீகரீதியில் முன்னேற்றமடைந்தது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 40% நிதிசார்: 0% (மொத்த கருத்திட்ட ஆகுசெலவு 2.5 மில்லியன்)

குறிப்பு: ஆண்டின் போது அ.எ.கூ. அனுப்புப்பொருட்பட்டியலைச் சமர்ப்பிக்கவில்லை என்பதுடன், நிதிசார் முன்னேற்றம் 0% ஆகும் என்பதுடன், அது 2008க்கு மாற்றப்பட்டது.

3.1.4. 'நாரா'வில் கடல்பக்க காணி எல்லைக்கான வேலியிடலுக்கான பொருளின் கொள்வனவு.

முன்னேற்றம்: (%) பௌதீக: 55% நிதிசார்: 45% (மொத்த ஆகுசெலவு ரூபா. 2.22 மில்லியன்).

குறிப்பு: 2007இன் போது பொருட்களின் கொள்வனவு செய்யப்பட்டதுடன், ஆண்டின் போது ஏற்பட்ட ஆகுசெலவு 45% (ஆண்டுக்கு நிதியங்கள் மட்டுப்பட்டிருந்தபடியால்) ஆகும் என்பதுடன், வேலியை பௌதீகரீதியில் நிறுவுவதற்கான அமுலாக்கம் 2008க்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

3.1.5. உள்நாட்டு நீரியல் வள பிரிவின் இரு ஆய்வுகூடங்களும், அலுவலகமும் புதுப்பிக்கப்பட்டதுடன், வேலை நடந்துகொண்டிருக்கின்றது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 90% (ரூபா 0.60 மில்லியன்)

**வாகனங்களின் புனரமைப்பு**

3.1.6. வாகனம் 62-2117 என்ஜினின் புனரமைப்பு:

வாகனத்தின் என்ஜினின் செயற்றிறன் மிகவும் மோசமானது என்பதுடன், முகவரான மிற்சுபிசி மோட்டார்ஸ் லங்கா லிமிற்றெற்றின் மதிப்பீட்டின் மீது புனரமைப்பு செய்யப்பட்டது. புனரமைப்பின் ஆகுசெலவு ரூபா 0.340 மில்லியன் ஆகும்.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 100%

3.1.7 வாகனம் 62-2177 உறுப்பின் புனரமைப்பு:

வயதினதும், உபயோகத்தினதும் காரணமாக இவ்வாகனத்தின் உறுப்பு மோசமாக சீர்கேட‌டைந்திருந்ததுடன், தகரஒட்டுதல் மற்றும் தீந்தை பூசுதல் வேலை திட்டமிடப்பட்டுள்ளது. முறைமையான கேள்வியுடன் அரசாங்க தொழிற்சாலைக்கு வேலை ஒப்படைக்கப்பட்டது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 40% நிதிசார்: 0%

குறிப்பு: அரசாங்க தொழிற்சாலையினால் உடன்பட்டவாறு 2 மாதங்களினுள் வேலையை முடிப்பதற்காக அதனுடன் வேலை ஒழுங்குசெய்யப்பட்டது. 'நாரா'வின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களின் நிமித்தம் ஆண்டினுள் வேலை முடிக்கப்படவில்லை.

3.1.8 32-2951 வாகன உறுப்பின் புனரமைப்பு:

2006இன் 4ஆவது காலாண்டின் போது இந்த பழுதுபார்த்தல் முடிக்கப்பட்டுள்ளதுடன், 2006இன் 4ஆவது காலாண்டில் நிதியங்கள் கிட்டாததினால் அனுப்புபொருட்பட்டியலின் இணக்கம் 2007க்கு தபாலிடப்பட்டது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 0% நிதிசார்: 100%

3.1.9 புதுப்பிக்கப்பட்ட டீசல் என்ஜினை நிறுவுவதன் மூலம் வாகனம் 20-3224இன் புனரமைப்பு (பெற்றோல் வாகனம்)

20-3224 என்ற இலக்க வாகனத்தின் பெற்றோல் என்ஜினதும் மோசமான செயற்றிறனினதும் உயர்ந்த தொழிற்பாட்டு ஆகுசெலவினதும் காரணமாக 2006இல் வாகனத்திற்கு புதுப்பிக்கப்பட்ட டீசல் என்ஜினை பொருத்துவதென திட்டமிடப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட என்ஜினின் கொள்வனவு 2006இல் செய்யப்பட்டதுடன், நிறுவுகை முடிக்கப்பட்டு 2007இல் இல.253-2553 என்ற புதிய பதிவு இலக்கத்துடன் பதிவு செய்யப்பட்டதுடன், பதிதல் ரூபா 0.065 மில்லியனாகும்.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 100%

3.1.10 வாகனம் 61-0012இன் புனரமைப்பு, கியர் பெட்டியுடன் R/C என்ஜினின் பதிலீடு

வாகனத்தின் மோசமான செயற்றிறனினதும், என்ஜினின் சிக்கனமற்ற பழுதுபார்த்தலினதும் காரணமாக, புதுப்பிக்கப்பட்ட என்ஜினுடனும், கியர் பெட்டியுடனும் பதிலீடு திட்டமிடப்பட்டு 2006இல் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், குறைநிரப்பு விடயங்களுக்கு ஆண்டினுள் நிதியங்கள் கிட்டாததன் காரணமாக என்ஜினைப் பொருத்துதலும், ஆரம்பித்து வைத்தலும் 2007க்கு பின்போடப்பட்டு வேலை முடிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம்: (%) பௌதீக: 100% நிதிசார்: 100%

3.1.11 வாகனம் 32-7196இன் புனரமைப்பு, கியர் பெட்டியுடன் R/C என்ஜினின் பதிலீடு

32-7196 என்ற வாகனத்திற்கான புதுப்பிக்கப்பட்ட என்ஜினினதும், கியர் பெட்டியினதும் பதிலீடு திட்டமிடப்பட்டு 2006இல் கொள்வனவு செய்யப்பட்டது. பதிலீட்டுக்கு அவசியமான குறைநிரப்பு விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2007இல் பணி முடிக்கப்பட்டது.

முன்னேற்றம் : (%)　　பௌதீக:100%　　நிதிசார்: 100%

3.1.12 வாகனம் 32-3417இன் புனரமைப்பு, மின் செலுத்தல் முறைமையின் பதிலீடு

முன்னேற்றம்: (%)　　பௌதீக: 100%　　நிதிசார்: 100%

3.1.13 PA5935 என்ற வாகனத்திற்கான குத்தகை வாடகையை விடுவித்தல்

முன்னேற்றம்: (%):　　பௌதீக:100%　　நிதிசார்: 100% (ரூபா 1.860 மில்லியன்)

## 3.2 சாதனத்தின் புனரமைப்பு

3.2.1 17½ தொன் காற்றுச்சீராக்கி பிரதான வளி கானின் புனரமைப்பு

இது புதுப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன், வேலை முடிக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றம்: (%)　　பௌதீக: 100%　　நிதிசார்: 100% (ரூபா 0.450 மில்லியன்)

3.2.2 18 பிளவு வகையிலான காற்றுச்சீராக்கிகளின் புனரமைப்பு

முன்னேற்றம்: (%)　　பௌதீக:100%　　நிதிசார்: 100%

3.2.3 PABXக்கான மின்னல் தடுத்தலை நிறுவுதல்

முன்னேற்றம்: (%)　　பௌதீக:100%　　நிதிசார்: 100%

3.2.4 IARD மற்றும் PHT பிரிவுகளின் மின்சார முறைமையின் புனரமைப்பு (கருத்திட்ட ஆகுசெலவு ரூபா 0.90 மில்லியன்)

முன்னேற்றம்: (%)　　பௌதீக: 48%　　நிதிசார்: 45%

குறிப்பு: பொருட்களின் சாதனங்களின் பகுதி கொள்வனவு செய்யப்பட்டதுடன் சகல பொருட்களும் கிட்டிய பின்னர் அமுலாக்கம் இடம்பெறும். பொருட்கள் கிட்டியுள்ளதுடன், பிரிவின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் விநியோகம் இருப்பதனால் 2008க்கு பின்போடப்பட்டுள்ளது.

## 2007 – 'நாரா'வில் ஆராய்ச்சி, அபிவிருத்தி வேலைக்கு வாகனத்தொகுதியின் தொழிற்பாடு

ஆண்டின் போது 'நாரா'வின் வாகனத் தொகுதி 451,644 கிலோ மீட்டர்களைப் பயன்படுத்தியுள்ளது. 2007ஆம் ஆண்டின் போது தொகுதியின் பராமரிப்பு ஆகுசெலவு ரூபா 3,101,700.00 என்பதுடன், இது 2006க்கு ரூபா 3,868,518.77 ஆகும்.

முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டு ஆண்டுக்கான மொத்தத் தொழிற்பாட்டு ஆகுசெலவு பின்வருமாறு கீழே வழங்கப்பட்டுள்ளது:

| வாகனத் தொகுதிகளின் செயற்றிறன் | 2007 | ருபா/ கி.மீ. | 2006 | ருபா/ கி.மீ. | மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. தொகுதியிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை (எண்.) | 18 | | 19 | | -1 |
| 2. 'நாரா' ஆராய்ச்சிக்காக மொத்த தொழிற்படுத்தப்பட்ட தூரம் (கி.மீ.) | 451,644 | | 487,678 | | - 36034 |
| 3. பராமரிப்பின் ஆகுசெலவும், தொகுதியின் பராமரிப்பும் (ருபா) | 3,101,700.00 | 6. 87 | 3,868,518.77 | 7.93 | - 1.06 |
| 4 ஆண்டின் போது எரிபொருள் உபயோகம் (மீற்றர்கள்) | 53959.50 | | 57806.76 | | |
| 5. ஆண்டுக்கான எரிபொருள் (ருபா) | 3,267,879.00 | 7. 23 | 2,744,724.65 | 5.63 | +1.60 |
| 6 தொழிற்பாட்டு, பராமரிப்பு நிருவாக ஆகுசெலவு (ருபா) | 1,939,556.00 | 4.29 | 1,699,802.53 | 3.49 | +0.80 |
| 7. சாரதிகளின் (26) வேதனாதி:<br>உணவுப்படி<br>மேலதிக நேர வேலை<br>சம்பளம்<br>**மொத்தம்** | 692,867.40<br>2,984,859.82<br>7,536,937.35<br>**11,214,664.22** | 24.83 | 526,400.85<br>2,636,205.14<br>6,384,225.64<br>**9,546,831.23** | 19.58 | +5.25 |
| **கூட்டி மொத்தம்** | **19,523,799.22** | **43.23** | **17,859,877.18** | **36.63** | **+6.60** |

2006 தொடர்பில் பராமரிப்பு ஆகுசெலவு 29%ஆல் குறைந்துள்ளதையும், ஆண்டின் போது எரிபொருள் ஆகுசெலவின் அதிகரிப்பு மற்றும் ஊழியர்களின் வேதனாதிகளில் அதிகரிப்பு போன்ற வேறு காரணிகளின் நிமித்தம் முழுமையான தொழிற்பாட்டு ஆகுசெலவு 18%ஆல் அதிகரித்துள்ளதையும் மேற்படி அட்டவணை காட்டுகின்றது.

# கொள்வனவு, விநியோகங்கள் பிரிவு

## பிரிவுத் தலைவர்: திரு.ஆனந்த அமரசிங்க

### பிரிவின் கண்ணோட்டம்

23/05/2008இலிருந்து செயற்படத்தக்கதாக கொள்வனவு, விநியோகங்கள் பிரிவு தாபிக்கப்பட்டது. பிரிவின் தொழிற்பாடுகளும், பொறுப்புக்களும் வருமாறு:

01. சகல பிரிவுகளுக்கும் தொடர்பான பொருட்களையும், சேவைகளையும் விநியோகித்தல்.
02. சகல கேள்வி வேலைகளையும் கையாள்தல்.
03. சகல பிரிவுகளுக்கும் தொடர்பான கொள்வனவு வேலைகள்.
04. விமானத்தில் ஏற்றி இறக்குதலும், பொருட்களை அப்புறப்படுத்துதலும்.
05. பிரதான களஞ்சியத்தின் நிருவாகம்.

### பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமையின் பிரிவுகளினதும், பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களினதும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளுமுகமாக கொள்வனவு வழிகாட்டல்களுக்கு அமைவாக முறைமையானதும், முறையானதுமான தன்மையில் சகல அவசியமான சேவைகளையும், விநியோகங்களையும் வழங்குவதே பிரிவின் பிரதான தொழிற்பாடாகும். மேற்படி செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் கரடுமுரடற்ற தொழிற்பாட்டுக்கு வேறு தொடர்பான சேவைகளை வழங்குதல்

### செயற்றிறன்

I. பிரதானமாக நடைமுறையிலான கருத்திட்டங்களுக்கு சாதனங்களையும், இரசாயனங்களையும் கொள்வனவு செய்தல், வாகனங்களுக்கு உதிரிப்பாகங்களைக் கையகப்படுத்தல் மற்றும் வாகனங்களைக் கேள்வுக்கு எடுத்தல் ஆகியன தோதான கேள்வி நடைமுறைகளுக்கு ஏற்ப பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- 'நாரா'வின் தேவைகளுக்கு ஏற்ப, விநியோகஸ்தர்களின் பதிவு மற்றும் தெரிவு.

- வழங்கப்பட்டுள்ள விவரக்கூற்றுக்களின்படி கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி பொருட்கள்/சாதனங்கள் /இரசாயனங்கள் ஆகியவற்றுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விகளை/கூறுவிலைகளைக் கோருதல்.

- சில்லறைப் பணக் கட்டுநிதியைப் பயன்படுத்தியும், பதிவேடுகளைப் பராமரித்தும் நாளாந்த உபயோகத்திற்கான பொருட்களைக் கொள்வனவு செய்தல்

II. நன்கொடைகளாகக் கிடைத்த பொருட்களை அப்புறப்படுத்தல், வெளிநாட்டு மூலங்களில் இருந்து பொருட்களின் கொள்வனவு அல்லது பழுதுபார்த்தலுக்காகப் பொருட்களை விமானத்தில் ஏற்றிஇறக்குதல். வெளிநாடுகளிலிருந்து மூலங்களிலிருந்து கிட்டுகின்ற பொருட்களை அப்புறப்படுத்தும் போது வரி நிவாரணத்தைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல், அத்துடன் வழமையான தபால் மற்றும் விமானக் கட்டணங்களுக்கு உட்பட்டு வெளிநாடுகளுக்கு பழுதுபார்த்தலுக்குச் சாதனங்களை அனுப்புதல்

III. தோதான கேள்வி நடைமுறைகள் ஊடாக 'நாரா'வின் சகல வாகனங்கள் /மோட்டார்-பைசிக்கிள்கள்/ சாதனங்கள் ஆகியவற்றைக் காப்புறுதி செய்தல். கடலிலும், நிலத்திலும் கடமையை மேற்கொள்ளும் ஆளணியினருக்கு காப்புறுதி மேவுகையைப் பெறுதல் (பாதுகாப்பற்ற பகுதிகள்)

IV. பிரதான களஞ்சியத்தில் பேரேடுகளைப் புதுப்பித்த பின்னர் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு இப் பிரிவினால் பெறக்கட்டளையிடப்பட்ட பொருட்களை பங்கிடுதல்.

- பிரிவுகளில் நாளாந்தத் தேவைகளுக்கு பிரதான களஞ்சியத்தில் பாவனைக்குரியவற்றின் அடிதாங்கி இருப்புக்களைப் பராமரித்தல், கொடுப்பனவுகளுக்கான ஆவணங்களைத் தயாரித்தல், கோரப்படுகின்ற போது சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தல் ஆகியனவும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- பிரிவினால் கையாளப்படுகின் வேலைகளின் செயற்றிறனுக்காக பிரிவின் சகல ஆவணப்படுத்தல் வேலையைக் கணனிமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை
## நிதிசார் நிலைமை அறிக்கை

| | குறிப்பு | 31.12.2007இல் உள்ளவாறு ரூபா சதம் | 31.12.2006இல் உள்ளவாறு ரூபா சதம் |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனம் | | 1,254,221,161.25 | 1,228,851,698 |
| நடந்து கொண்டிருக்கும் மூலதன வேலை | | | |
| கைவிடப்பட்ட கருத்திட்டம் | | 852,718.18 | 852,718 |
| | | 1,255,073,879.43 | 1,229,704,416 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| அனுப்புப்பொருட்பட்டியல்கள்/கையிருப்புக்கள் | | 3,401,648.77 | 1,856,008 |
| தொழில் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் | | 16,037,666.37 | 73,828,604 |
| முற்கொடுப்பனவுகள் | | 336,020.50 | 327,983 |
| அரசாங்க பிணையங்களில் மூலதனங்கள் | | 66,243,100.00 | - |
| பண மற்றும் பண சமப்படுத்தல்கள் | | 19,999,917.29 | 3,540,908 |
| | | 106,018,352.93 | 79,553,503 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,361,092,232.36** | **1,309,257,919** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| கொடுப்பனவுக்குரியவை | | 34,356,899.67 | 14,663,261 |
| திரண்ட செலவினங்கள் | | 16,866,120.93 | 6,000,591 |
| | | 51,223,020.60 | 20,663,852 |
| **நடைமுறை சாரா பொறுப்புக்கள்** | | | |
| கொடுப்பனவுக்குரியவை | | 2,264,562.80 | 4,502,086 |
| பின்போடப்பட்ட வருமானம் | | 862,630.77 | 862,630 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 46,240,656.51 | 36,153,145 |
| | | 49,367,850.08 | 41,517,861 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 100,590,870.68 | 62,181,713 |
| **நிகர சொத்துக்கள்/ஒப்புரவு** | | | |
| திரண்ட நிதியம் | | 987,148,386.75 | 866,974,841 |
| ஒதுக்குகள் | | 273,352,974.93 | 380,101,365 |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ஒப்புரவு** | | 1,260,501,361.68 | 1,247,076,206.00 |
| | | **1,361,092,232.36** | **1,309,257,919** |

குறிப்பிடத்தக்க கணக்கிடல் கொள்கைகளும், அதிலுள்ள குறிப்புகளும் இந்த நிதிசார் கூற்றுக்களின் முக்கியபாகத்தினை அமைக்கின்றன. அடைப்புக் குறிகளில் உள்ள எண்ணிக்கைகள் கழித்தல்களையும், மறுதலையான மாறல்களையும் எடுத்துக்காட்டுகின்றன.

அங்கீகரிக்கப்பட்டு, சபையின் சார்பில் கைச்சாத்திடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| ஒப்பமிடப்பட்டுள்ளது | ஒப்பமிடப்பட்டுள்ளது | ஒப்பமிடப்பட்டுள்ளது |
| திரு.கே.ஹபுதந்திரி | திருமதி கே.ரி.ஆர்.பிரதாபசிங்க | திருமதி ஆர்.எச்.எஸ்.பி.ரணசிங்க |
| தலைவர் | பணிப்பாளர் நாயகம் | தலைவர்/ நிதி |

# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

## நிதிசார் செயற்றிறன்

| | 31.12.2007<br>ரூபா சதம் | 31.12.2006<br>ரூபா சதம் | மாறல்<br>ரூபா சதம் |
|---|---|---|---|
| **தொழிற்படுத்தல் வருமானம்** | | | |
| மீளவரும் மான்யம் | 119,592,000.00 | 87,600,000 | 31,992,000 |
| வேறு வருமானம் | 20,417,694.63 | 12,044,215 | 8,373,480 |
| | 140,009,694.63 | 99,644,215 | 40,365,480 |
| **தொழிற்படுத்தல் செலவினங்கள்** | | | |
| ஆளணியினர் வேதனாதிகள் | 125,413,828.56 | 83,508,972 | 41,904,857 |
| பிரயாண மற்றும் உணவுப் படி | 1,215,408.03 | 1,366,746 | (151,338) |
| விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவை | 1,337,786.81 | 1,217,306 | 120,481 |
| பராமரிப்புச் செலவினம் | 5,942,102.66 | 9,259,765 | (3,317,662) |
| ஒப்பந்த சேவைகள் | 18,728,302.38 | 19,193,187 | (464,885) |
| ஆராய்ச்சி, அபிவிருத்தி செலவினம் | 36,697,598.48 | 21,380,395 | 15,317,203 |
| மதிப்பிறக்கம் மற்றும் பெறுமதியழிப்பு செலவினங்கள் | 62,255,048.00 | 56,160,022 | 6,095,026 |
| வேறு தொழிற்படுத்தல் செலவினங்கள் | 1,964,736.26 | 2,707,247 | (742,511) |
| மொத்த தொழிற்படுத்தல் செலவினங்கள் | 253,554,811.18 | 194,793,640 | 58,761,171 |
| **தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து மேன்மிகை (பற்றாக்குறை)** | (113,545,116.55) | (95,149,425) | (18,395,691) |
| **தொழிற்படாத வருமானம்/செலவினங்கள்** | | | |
| நிதிசார் ஆகுசெலவு | 1,343,535.21 | 253,484 | 1,090,051 |
| தொழிற்படாத வருமானம் | 8,140,261.73 | | 8,140,262 |
| மொத்த தொழிற்படாத வருமானம்/செலவினங்கள் | 6,796,726.52 | (253,484) | 7,050,211 |
| காலத்திற்கான நிகர மேன்மிகை(பற்றாக்குறை) | (106,748,390.03) | (95,402,909) | (11,345,481) |

# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமை

## திரண்ட பணப்புழக்கக் கூற்று

| முடிவடைந்த ஆண்டுக்கான | 31.12.2007 | | 31.12.2006 |
|---|---|---|---|
| தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **சாதாரண செயற்பாடுகளிலிருந்து மேன்மிகை(பற்றாக்குறை)** | (114,169,742) | (114,169,742) | (95,402,909) |
| **பணம் சாராத இயக்கங்கள்** | | | |
| மதிப்பிறக்கம் | 62,255,048 | | 56,103,546 |
| பின்போடப்பட்ட செலவினத்தின் பெறுமான பதிவழிப்பு | (9,273,591) | | (388,184) |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 11,792,704 | | 8,409,758 |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (2,025,766) | | (746,260) |
| வட்டி | 574,098 | | |
| கிடைக்கவேண்டிய காப்புறுதி கோரலுக்கான சீராக்கல் | | | 59,111,229 |
| கையிருப்புக்களில் அதிகரிப்பு | (1,545,641) | | 455,477 |
| வர்த்தக மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகளில் குறைப்பு | 57,685,938 | | (61,026,518) |
| முன்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு | (8,038) | | |
| கொடுப்பனவுக்குரியவைகளில் அதிகரிப்பு | 19,697,638 | | 4,100,120 |
| திரண்ட செலவினங்களில் அதிகரிப்பு | 10,568,194 | 149,720,584 | |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | | 35,550,842 | (29,383,741) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | | |
| பொறி, சாதனங்களின் கொள்வனவு | (23,150,335) | | (28,325,308) |
| திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 7,243,275 | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | | (15,907,060) | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | | (28,325,308) |
| மூலதன மானியம் | 65,051,500 | | 46,600,000 |
| கடன்பெறுதல்களின் மீள்கொடுப்பனவு | (1,993,173) | | |
| ஆராய்ச்சி மற்றும் கருத்திட்ட நிதியம் | | | (3,618,533) |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | | 63,058,327 | 42,981,467 |
| **பணம் மற்றும் பண சமப்படுத்தல்களில் நிகர அதிகரிப்பு(குறைப்பு)** | | 82,702,109 | (14,727,582) |

| | 31.12.2007 | 31.12.2006 | |
|---|---|---|---|
| **பணம் மற்றும் பணச்சமப்படுத்தல்கள்** | | | |
| அரச திறைசேரி உண்டியல்களில் மூலதனம் | 66,243,100 | | |
| வங்கியிலுள்ள பணம் | 19,999,917 | 3,540,908 | |
| | 86,243,017 | 3,540,908 | 82,702,109 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No } ஏஎவ்/ஏ/என்ஏஆர்ஏ/எவ்ஏ/07
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2008 ஆகஸ்ட் 30

தலைவர்
தேசிய நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும்
அபிவிருத்தி முகவராண்மை

**தேசிய நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2007 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான சமர்ப்பித்தலுக்காக முகாமை பொறுப்பாகவுள்ளது. இந்த பொறுப்பு நிதிக் கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான தயாரித்தலும் நியாயமான சமர்ப்பித்தலும் தொடர்பான வடிவமைப்பு, அமுல்ப்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தலும் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் என்பதுமாகும்.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA
දුරකථනය / தொலைபேசி 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பதற்கு எனக்கு பொறுப்புள்ளது. இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்றும் எனது அபிப்பிராயத்திற்கு நியாயமான அடிப்படையை கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தேசிய

நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிருத்தி முகவராண்மையானது 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தேசிய நீரகவள மூலங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிருத்தி முகவராண்மையின் 2007 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) பெறவேண்டிய கணக்குகள்

நிதி நிலைமைக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவையாகக் காட்டப்பட்ட ரூபா 16 மில்லியன் தொகையில் ரூபா 2.2 மில்லியன் தொகையான கடன்பட்டோர் ஏறத்தாழ ஒரு ஆண்டிற்கும் அதிகமான பழமை வாய்ந்ததைக் குறிக்கின்றது. அந்தக் கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| | ரூபா |
|---|---:|
| 5 ஆண்டுகளுக்கு மேல் | 1,179,431 |
| 4 முதல் 5 ஆண்டுகள் வரை | 449,688 |
| 3 முதல் 4 ஆண்டுகள் வரை | 36,350 |
| 2 முதல் 3 ஆண்டுகள் வரை | 9,320 |
| 1 முதல் 2 ஆண்டுகள் வரை | 525,306 |
| மொத்தம் | 2,200,095 |

மீதிகள் உறுதிப்படுத்தல் பெறமுடியாதிருந்த 5 ஆண்டுகளைவிட பழமைவாய்ந்த பெறவேண்டிய கணக்குகள் ரூபா 1.179 மில்லியனாகும்

ஆனால் இது தொடர்பில் நட்டக் கடன்களுக்காக போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

---

நிதி நிலைமைக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்ட ரூபா 34 மில்லியன் தொகையில் ரூபா 3 மில்லியன் தொகை 5 ஆண்டுகளுக்கும் அதிகமான பழமை வாய்ந்த பொறுப்பாகக் காட்டப்பட்டது. அந்தப் பொறுப்புக்கள் தீர்ப்பனவு செய்யாமல் வருடாந்தம் பொறுப்புக்களின் கீழ் தொடர்ந்து காட்டப்படுகிறது. அந்தப் பொறுப்புக்களின் காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| 5 ஆண்டுகளுக்கு மேல் | 3,043,103 |
| 4 முதல் 5 ஆண்டுகள் வரை | 686,391 |
| 3 முதல் 4 ஆண்டுகள் வரை | 7,212 |
| 2 முதல் 3 ஆண்டுகள் வரை | 3,776,619 |
| 1 முதல் 2 ஆண்டுகள் வரை | 4,291,574 |
| மொத்தம் | 11,804,899 |

I. 33 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களிற்காக கிடைத்த மானியங்களிலிருந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியமையால் செயற்திட்ட கடன் கொடுத்தோர்களாக கணக்குகளில் ரூபா 26.7 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. இந்தத் தொகையும் முகவராண்மையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பெறப்படவேண்டிய வருமானத்தில் உள்ளடக்கப்பட்டது.

II. பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கணக்குகளை சீராக்காமை

---

பல ஆண்டுகளுக்கு முன்பு பதவி வறிதாக்கப்பட்டிருந்த 4 உத்தியோகத்தர்களின் கோரப்படாத ரூபா 75,403 கூட்டுத்தொகையான சம்பளங்கள், மேலதிக நேரப்படி, மற்றும் ஏனைய படிகள் என்பனவற்றை அவர்களிடமிருந்து பெறவேண்டிய

ரூபா 193,431 ஆன தொகைக்கு எதிராக சரிசெய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு சரிசெய்யப்பட்டோ அல்லது சீராக்கப்பட்டோ இருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கணக்குகளின் பின்வரும் விடயங்களின் கீழ் காட்டப்பட்ட மீதிகளை ஆதாரப்படுத்துவதில் போதிய சான்றுகள் கிடைத்திருக்கவில்லை.

| | விபரங்கள் | பெறுமதி<br>ரூபா | வேண்டப்பட்ட சான்று |
|---|---|---|---|
| (அ) | றேகாவ பிராந்திய நிலையத்தின் காணிகள் | இனங்காணப் படவில்லை | உரிமையாண்மை மற்றும் அளவீட்டுத் திட்டங்கள் ஆதாரப்படுத்துவதில் உரித்துறுதி |
| (ஆ) | கட்டிடங்கள் | மேற்படி | நிருமாண மற்றும் கையளிக்கப்பட்ட கட்டிடப் படங்கள் மற்றும் கோவைகள் |
| (இ) | இயந்திர உபகரணம், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | மேற்படி | பொருளிருப்பு பதிவுப் புத்தகம் அல்லது பொருட்கள் பெறல் / வழங்கல் குறிப்புக்கள் மற்றும் வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள் |
| (ஈ) | படகுகள் மற்றும் கப்பல்கள் | 5,056,800 | படகுகள் மற்றும் கப்பல்கள் பதிவுச் சான்றிதழ் மற்றும் நாளாந்த ஓட்டப் பதிவுகள் பொருளிருப்பு விடயங்கள் மற்றும் படகுகள் மற்றும் கப்பல்களின் உபகரணங்கள், வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள் |

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப்பிரமாணம் | |
| இல 372(2)(சீ) | உத்தியோகத்தர் ஒருவர் முன்னைய முற்பணங்களில் ரூபா 3,576 ஆன தொகை தீர்ப்பனவு செய்யாது இருப்பினும் ரூபா 20,000 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தர் பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | |
| ஆத்தியாயம் II இன் பிரிவுகள் 13.2 மற்றும் 13.3 | புதவி ஒன்றின் தற்காலிக வெற்றிடத்திற்காக பதில் கடமை நியமனம் செய்யப்பட்டு பதில் கடமைச் சம்பளம் செலுத்தப்படக்கூடாது. இருந்தபோதிலும் வெற்றிங்களிற்கான உத்தியோகத்தர்களைச் சேர்க்காமல் 5 வெற்றிடப் பதவிகளுக்காக 2003 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 903,691 தொகையான பதில் கடமைச் சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) அரச நிதிச் சுற்றறிக்கை | |
| 1995 திசெம்பர் 18 இன் 340 (1) மற்றும் 353 | திருத்த முடியாத வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான 10 மோட்டார் |

சைக்கிள்கள், 02 வான்கள், 01 மோட்டார் கார், ஒரு றக் மற்றும் ஒரு டபுள்கப் என்பன கைதவிர்க்காமல் தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. நிதிசார் மீளாய்வு

#### 3.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2007 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகவராண்மையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 95,402,909 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 106,748,390 ஆன பற்றாக்குறையில் விளைந்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 11,345,481 ஆன மேலுமொரு வீழ்ச்சி காணப்பட்டது.ஊழியருடைய சம்பளங்களிலுள்ள அதிகரிப்பே பற்றாக்குறையின் அதிகரிப்புக்கு காரணமாகிறது.

#### 3.1.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையில் கீழே காட்டப்பட்டவாறு குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டது.

| | பாதீட்டு விடயங்களின் விபரங்கள் | பாதிடப்பட்ட தொகைகள் | உண்மையான தொகைகள் | முரண் | முரண் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| (அ) | ஏனைய வருமானம் | 3,500,000 | 3,186,650 | 313,350 | (8.9) |
| (ஆ) | ஆலோசனை வருமானம் | 4,500,000 | 7,953,454 | 3,453,454 | 76 |
| (இ) | சம்பளங்கள் | 78,000,000 | 94,547,128 | 16,547,128 | (21.2) |
| (ஈ) | பணிக்கொடைச் செலவுகள் | 6,000,000 | 11,792,704 | 5,792,704 | (96) |
| (உ) | பாதுகாப்புச் செலவினம் | 2,800,000 | 4,228,312 | 1,428,312 | (51) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ) | விளம்பரம் | 200,000 | 336,134 | 136,134 | (68) |
| (ஏ) | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் | 47,750,000 | 36,379,950 | 11,370,050 | (23.8) |

முகவாண்மையின் பிரதான நோக்கங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் எதிபார்க்கப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு முகவராண்மையானது தவறிவிட்டது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

மீளாய்வாண்டிற்காக ரூபா 175 மில்லியன் மீண்டெழும் பெறுவனவுகள் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 140 மில்லியன் மட்டுமே பெறப்பட்டிருந்தது அதேவேளை எதிபார்க்கப்பட்ட மீண்டெழும் செலவுகள் ரூபா 223 மில்லியனாகும். உண்மையான செலவுகள் ரூபா 252 மில்லியனாகும்.

#### 3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முகவராண்மை குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் மின்சாரப் பட்டியலை தீர்ப்பனவு செய்யத் தவறியமையால் ரூபா 12,776 ஆக நட்டம் ஏற்பட்டது.

### 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஆ) முற்பணங்கள்
(இ) சொத்துக் கட்டுப்பாடு

ஒப்பம்: எஸ் ஸ்வர்ணஜோதி
கணக்காய்வாளர் தமைமை அதிபதி
*M*

**1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் நியதிகளுக்கு அமைய 2007 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கிடல் குறைவுபாடுகள்

(அ) கிடைக்கவேண்டிய பணம் ரூபா 2,200,095.00 (இது ரூபா 2,200,145.00ஆக திருத்தப்பட வேண்டும்)

5 வருடங்களுக்கு மேல் ரூபா 1,179,431.00

கிடைக்காத கடன்கள் ரூபா 816,817.00

இது கிடைக்காத கடனொன்றாக பெறுமதியழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

பண வைப்புக்கள் ரூபா 348,500.00

இந்த வைப்புக்கள் பெறப்பட்ட தொடர்ச்சியான சேவைகளுக்கானவை என்பதுடன், அவற்றை மேலும் வைத்திருப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மிகையான கொடுப்பனவுகள் ரூபா 14,120.00

இத்தொகைகள் ஏற்கனவே இணக்கப்பட்டுள்ளன.

4 முதல் 5 வருடங்கள் வரை ரூபா 449,688.00 (அண்ணளவாக)

கிடைக்காத கடன்கள் ரூபா 4,687.50

இது கிடைக்காத கடனொன்றாகப் பெறுமதியழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

பண வைப்புக்கள் ரூபா 445,000.00

இந்த வைப்புக்கள் பெறப்பட்ட தொடர்ச்சியான சேவைகளுக்கானவை என்பதுடன், அவற்றை மேலும் வைத்திருப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

3 முதல் 4 வருடங்கள் வரை ரூபா 36,350.00

கொள்வனவுகளுக்கான முற்பணங்கள் ரூபா 34,250.00

தற்போது அது முடியும் தறுவாயில் உள்ளது.

சேவையிலிருந்து விலகிய ஊழியர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் ரூபா 2,100.00

இது கிடைக்காத கடனொன்றாக பெறுமதியழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

2 முதல் 3 வருடங்கள் வரை ரூபா 9,320.00

கருத்திட்ட கடன்தருநர்கள் ரூபா 7,820.00

இத்தொகை இணக்கப்பட்டுள்ளது.

சம்பள முற்பணங்கள் ரூபா 1,500.00

இது பணிக்கொடைக்கான சீராக்கல்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

1 முதல் 2 வருடங்கள் வரை ரூபா 525,306.00 (இது ரூபா 525,356.00ஆக (அண்ணளவாக) திருத்தப்பட வேண்டும்)

கருத்திட்ட கடன் தருநர்கள் ரூபா 415,320.00

பெருமளவு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதை 2008இல் இணக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பண வைப்புக்கள் ரூபா 50,000.00

இந்த வைப்புக்கள் பெறப்பட்ட தொடர்ச்சியான சேவைகளுக்கானவை என்பதுடன், அவற்றை மேலும் வைத்திருப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கொள்வனவு முற்பணங்கள் ரூபா 35,459.52

இது ஏற்கனவே இணக்கப்பட்டுள்ளது.

பைசிக்கிள் கடன்கள் ரூபா 1,000.00

இது ஏற்கனவே இணக்கப்பட்டுள்ளது.

சில்லறைப் பண முற்பணங்கள் ரூபா 23,576.00

கட்டாய இளைப்பாறுதலின் கீழ் அனுப்பப்பட்ட ஊழியர் ஒருவரிடமிருந்து கிடைக்க வேண்டியதே இத்தொகையாகும். பணிக்கொடையை கணக்கிட்ட பின்னரும் மீதியை கழித்த பின்னரும் கொடுப்பனவுக்குரிய தொகையொன்றாக இதைக் காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவுக்குரிய பணம் ரூபா 11,804,899.00 (இது ரூபா 11,804,890.00 ஆக திருத்தப்பட வேண்டும்)

5 வருடங்களுக்கு மேல் ரூபா 3,043,103.00 (இது ரூபா 3,043,094.00 ஆக (அண்ணளவாக) திருத்தப்பட வேண்டும்)

கருத்திட்ட கடன்வழங்குனர்கள் ரூபா 272,607.03

இது வருமானத்திற்கான சீராக்கலுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

தடுத்துவைத்தல் பணம் ரூபா 846,189.34

இது வருமானத்திற்கான சீராக்கலுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

நானாவித கடன் வழங்குனர்கள் ரூபா 1,522,230.00

இத்தொகை கொழும்பு மாநகர சபைக்கு கொடுப்பனவு செய்யவேண்டியதாகும். இதை பகுதியாக கொடுப்பனவு செய்வதற்கு உடன்படப்பட்டுள்ளதுடன், தற்போது இது தவணைகளில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

நானாவித கடன்வழங்குனர்கள் ரூபா 684.02

இது மூக்குக் கண்ணாடி கடன்களுக்காக கொடுப்பனவுக்குரிய தொகையொன்றாகும். இது வருமானத்திற்கான சீராக்கலுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

கோரப்படாத சம்பளங்கள் மற்றும் பிரயாணச் செலவினங்கள் ரூபா 7,949.50

இது தனது சேவைகளிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியரொருவருக்கு கொடுப்பனவுக்குரிய தொகையாகும். இது அவர்களுக்கு கிட்ட வேண்டிய பணத்துடன் ஒப்பிட்ட பின்னர் வருமானத்திற்கான சீராக்கல்களைச் செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது வருமானத்திற்கான சீராக்கல்கள் செய்யப்படும்.

திரண்ட செலவினங்கள் ரூபா 393,434.00

இது வருமானத்திற்கான சீராக்கலுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

4 முதல் 5 வருடங்கள் வரை ரூபா 686,391.00 (அண்ணளவாக)

கருத்திட்ட கடன் வழங்குனர்கள் ரூபா 495,344.00

இக் கொடுக்கல்வாங்கல் கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் இணக்கப்பட்டுள்ளது.

தடுத்துவைத்தல் பணம் ரூபா 191,047.00

அது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3 முதல் 4 வருடங்கள் வரை ரூபா 7,212.00

நானாவித கடன் வழங்குனர்கள் ரூபா 7,212.00

இது அவர்களுக்கு கிடைக்க வேண்டியதும், கொடுப்பனவு செய்ய வேண்டியதுமான தொகையை சீராக்குவதன் மூலம் கணக்கிடப்படும் மீதியான பணிக்கொடையை கொடுப்பனவு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

2 முதல் 3 வருடங்கள் வரை ரூபா 3,776,619.00 (அண்ணளவாக)

கருத்திட்ட கடன்தருநர்கள் ரூபா 3,736,388.00

இக்கடன்தருநர்கள் நடைமுறையிலான தீவிர கருத்திட்டங்களுக்காகும் என்பதுடன் தேவைப்பட்ட தருணங்களில் சரிவர கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

வேறு கடன்தருநர்கள் ரூபா 1,826.50

இது ஊழியர் ஒருவரின் வங்கிக் கடனாகும். அது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு அதைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கோரப்படாத கேள்வி வைப்புக்கள் ரூபா 10,000.00

இது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு அதைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கோரப்படாத ஏனையவை ரூபா 28,404.00

இது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு அதைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

1 முதல் 2 வருடங்கள் ரூபா 4,291,574.00

கருத்திட்ட கடன்வழங்குனர்கள் ரூபா 4,166,328.00

இது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு அதைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கோரப்படாத கேள்வி வைப்புக்கள் ரூபா 20,000.00

இது கோரப்படும் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் 3 வருடங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் வருமானத்திற்கு அதைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கோரப்படாத பிரயாணச் செலவுகளும், மேலதிக நேரவேலையும் ரூபா 12,269.00

இது முறைமையான ஒழுக்காற்று விசாரணையின் விளைவொன்றின் மீது கட்டாய இளைப்பாறுதல் செய்யப்பட்ட ஊழியர் ஒருவருக்கான கொடுப்பனவாகும். இதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்னும் தொழில் மன்றில் விசாரணையில் உள்ளது. அதன் இறுதி முடிவின் பிரகாரம் இது இணக்கப்படும்.

கோரப்படாத ஏனையவை ரூபா 16,471.00

இவை ஊழியர்களுக்கு சம்பந்தப்பட்டவையாகும். அவை கோரப்படும் போது கொடுப்பனவுகள் செய்யப்படும். இல்லாவிடில் வருமானத்திற்கு அதை சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரண்ட செலவினங்கள் ரூபா 76,506.00

இது 2006இல் கணக்காய்வுக் கட்டணமொன்றாகும். சிட்டைகள் அனுப்பப்படும் போது கொடுப்பனவுகள் செய்யப்படும்.

(i) கருத்திட்ட கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பொறுப்புக்களின் பாகமொன்று ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. மீதியானது அது கோரப்படும் போது கொடுப்பனவு செய்யப்படும். 3 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய வருமானங்கள் 2008இல் வருமானத்திற்கு சரிவர சீராக்கப்பட்டுள்ளது.

(ii) சேவைகளை விட்டு வெளியேறிய உத்தியோகத்தர்களின் கணக்குகளின் சீராக்கல் இன்மை

இது கிடைக்காத கடனொன்றாக பெறுமதியழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தொடர்பான சிபார்சுகளை சமர்ப்பிப்பதற்காக நி.ஒ.104இன் கீழ் குழுவொன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் கிடைக்காத கடனுக்கான சீராக்கல்கள் 2008இல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது செய்யப்படும்.

### 2.2.2 கணக்காய்வுக்கான சான்றின்மை

அ, ஆ, இ, ஈ

அவற்றில் பெரும்பான்மையானவை கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அனுப்பப்படாத ஆவணங்களை சாத்தியமானளவு விரைவில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணக்கமின்மை

(அ) நிதிசார் ஒழுங்குவிதி இல.372 (2) (ஆ)

இப் முற்பணங்கள் இரு கருத்திட்டங்களுக்கு எடுக்கப்பட்டுள்ளன. நடைமுறையாக இத்தகைய தருணங்களில் இக்கொடுப்பனவுகள் இரு கருத்திட்டங்களின் முன்னேற்றத்தைச் சாதிப்பதற்காக எடுக்கப்படவேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய கொடுப்பனவுகள் குறைந்தபட்சமாக்கப்படும்.

(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் தாபனச் சட்டக்கோவை

i. அத்தியாயம் (ii) - 13.2 மற்றும் 13.3

தற்போது ஆட்சேர்ப்புக்கள் ஒரு பதவிக்கே செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் எஞ்சியுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) பொது நிதிச் சுற்றறிக்கைகள்

1995 டிசம்பர் 18 திகதியிடப்பட்ட இல.340 (1) மற்றும் 353

இவ்வாகனங்களை விற்றுத்தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 3. நிதிசார் மற்றும் தொழில்படுத்தல் மதிப்பாய்வு

### 3.1 நிதிசார் மதிப்பாய்வு

### 3.1.1 நிதிசார் முடிவு

உடன்படப்படுகின்றது. இது ஊழியர்களின் சம்பளங்களின் அதிகரிப்பின் காரணமேயாகும்.

### 3.1.2 வரவு-செலவுத்திட்ட கட்டுப்பாடு

உடன்படப்படுகின்றது. இவற்றுக்கான பதில்கள் ஏற்கனவே கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது பொதுச் திறைசேரியின் மதிப்பீடுகள் மட்டுப்படுத்தல்களின் காரணமேயாகும்.

### 3.2 தொழிற்பாட்டு மதிப்பாய்வு

தொழிற்பாட்டு செயற்றிறன் இன்மைகள்

3.2.1 ரூபா 47.75 மில்லியன் கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஏற்பாடுகள் உட்பட நடைமுறையிலான ஆண்டில் ரூபா 175 மில்லியன் எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்படுத்தல் கூற்றில் உள்ள ரூபா 140 மில்லியனில் மீளவரும் பற்றுவரவுகள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல.30இன் பிரகாரம் சம்பளங்களின் அதிகரிப்பின் காரணமாக சம்பளங்கள் பணிக்கொடை போன்ற செலவினங்களின் அதிகரிப்பின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட மீளவரும் செலவினத்தை உண்மையான செலவினங்கள் மீறியுள்ளன. மேலதிகமாக ரூபா 253 மில்லியனாக உண்மையான செலவினம் காட்டப்படும் போது அது நாணயம் சாராத கொடுக்கல் வாங்கலான மதிப்பிறக்கத்தின் ரூபா 62 மில்லியனை உள்ளடக்குகின்றது. ஆனால் வரவு-செலவுத்திட்டமிடப்பட்ட மதிப்பிறக்கம் ரூபா 43 மில்லியனாகும். இதுவும் உண்மையானதும், வரவு-செலவுத்திட்டமிடப்பட்டதுமான மீளவரும் செலவினத்திற்கிடையிலான மாறலுக்கான காரணமொன்றாகும்.

### 3.2.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உடன்படப்படுகின்றது. திறைசேரியிலிருந்து நிதியங்களை விடுவிப்பதில் தாமதம் ஒன்று காரணமாகவே இந்த இழப்பு நிகழ்ந்துள்ளது.

## 4. முறைகளும் கட்டுப்பாடுகளும்

(அ), (ஆ), (இ), ஆகியன தொடர்பில் முன்னைய வருடங்களை விட அதிகளவு முன்னேற்றம் சாதிக்கப்பட்டுள்ளதுடன், இவை மீது காலக்கிரமத்தில் கவனம் செலுத்தப்படும். எனினும், அவசியப்படும் பணியாளர்களின் ஆட்சேர்ப்புக்களின் கஷ்டங்களினாலும், கடுமையான நடைமுறைகளினாலும் மற்றும் முறைகளினாலும் இந்த உண்மைகளை மோசமாகப் பாதித்துள்ளன. ஒரு குறிப்பிட்ட வளைந்து கொடுக்கும் தன்மையை உருவாக்குவதற்கு கவனம் செலுத்தப்படுகின்றது.

............................................

கே.ஹபுதந்திரி
தலைவர் - நாரா

LIBRARY
&
INFORMATION DIVISION
18 FEB 2010
NARA

## National Digitization Project

*National Science Foundation*

Institute : National Aquatic Resources Research and Development Agency(NARA)

1. Place of Scanning : Crow Island, Colombo 15
2. Date Scanned : ..2017...04...26.............................................................
3. Name of Digitizing Company : Sanje (Private) Ltd, No 435/16, Kottawa Rd, Hokandara North, Arangala, Hokandara
4. Scanning Officer

Name : ..chamod....Lakshan.................................................

Signature : .............................................................................

Certification of Scanning

*I hereby certify that the scanning of this document was carried out under my supervision, according to the norms and standards of digital scanning accurately, also keeping with the originality of the original document to be accepted in a court of law.*

Certifying Officer

Designation : Chief Librarian

Name : B G Sunethra Kariyawasam

Signature : .............................................................................

Date : ..2017...04...26...............

*"This document/publication was digitized under National Digitization Project of the National Science Foundation, Sri Lanka"*